# *என்னுரை*

நாவலர் நிறுவிய கோப்பாய் நாவலர் வித்தியாலயம் ஒரு காமதேனுவைப் போல நான் விரும்பிய யாவற்றையும் விரும்பிய நேரத்தில் தந்துதவுகிறது. இவ்வித்தியாலயத்தில் கடமை புரியும்போது தான் இந்நாவலை வீரகேசரி நடத்திய நாவல் போட்டிக்கு அனுப்பினேன். அதற்கு முதற்பரிசு கிடைத்தது. இங்கு பெற்ற அனுபவங்களின் தொகுப்பே இந்நாவல். அதன் பின் ஆத்திசூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதினேன். அவை மலேசியாவில் நடைபெற்ற உலகச் சைவ மகாநாட்டில் வெளியிடப்பட்டுப் பெரும்புகழை எனக்குத் தேடித் தந்தன. அதன் பின் திருக்குறள் பாக்கள் 1330 இற்கும் கதை எழுதினேன். அவை தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டு உலகெங்கும் விற்பனை செய்யப்பட்டமையால் எனக்குப் பெரும் புகழ் உண்டானது. அடுத்து பகவத்கீதையின் 700 சூத்திரங்களுக்கும் கதை எழுதினேன். அவற்றாலும் பெரும்புகழ் எனக்கு உண்டானது. இவை யாவும் எழுதக் காரணமாக இருந்தது நாவலர் தமிழ் வித்தியாலயமும் அங்கு பணிபுரிந்தோரும் தான். அதனால் அக்கல்லூரி எனது வாழ்வோடு கலந்துள்ளது. நான் இல் பதவி உயர்வு பெற்று நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்ற பின்பும் எனது மனதுள் இருந்து எனது கற்பனை ஊற்றுக் கரைபுரழக் காரணமாக இருக்கும் நாவலர் அவர்கள் செய்த பணிகள் யாவற்றையும் நானும் செய்து வருகிறேன்.

நான் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரிந்த காலத்தில், நான் எனக்குள் வகுத்த கல்வித் திட்டங்களையே நடைமுறைப்படுத்தினேன். அதனால் நாவலர் வித்தியாலயம் மாவட்டத்தில் பல சாதனைகளை உருவாக்கியது. நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்பு நான் வகுத்த கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தினேன். 2007ஆம் ஆண்டு நல்லூர்க் கல்விக்கோட்டம்தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றது. எனவே கல்வித் திட்டங்களை அவிழாத முடிச்சுக்கள் என்ற நாவலில் மயில்வாகனம் என்ற பாத்திரத்தின் மூலமும், திருக்குறள் கதைகளில் விக்னேஸ்வர மூர்த்தி என்ற பாத்திரம் மூலமும் நடைமுறைப்படுத்தினேன். வாசகர்கள் இந்நூல்களை வாசித்து இவற்றை அறிந்து கொள்ள வேண்டும். நான் நாவலர் வித்தியாலயத்தில் அன்று கண்ட கனவுகள் யாவற்றையும் நிறைவு செய்தமையால் இன்று நாவலர் வித்தியாலயம் சகல வசதிகளையும் பெற்று ஒரு தனியார் பாடசாலையைப் போல மிளிர்கிறது.

பரிசு பெற்ற இந்நாவலை பெருமனம் கொண்டு வெளியிடும் இலக்கிய வட்டத்திற்கும் அதன் தலைவர் கலாநிதி க. குணராசா அவர்களுக்கும் (செங்கையாழியன்) செயலாளர் திரு. க. கிருபானந்தா அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நன்றி.

கே. வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

## *அவிழாத முடிச்சுக்கள்*

*01*

அன்று சனிக்கிழமை நேரம் காலை பத்துப் பத்து. மனைவி கொடுத்த காலைச் சாப்பாட்டுக் கோப்பையை வலது கையால் வாங்கிக் கொண்டு இடது கையால் திருகுவலையை எடுத்துக் கொண்டு முன்கோலுக்கு வந்து, திருகுவலையை நிலத்தில் வைத்து அதில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார் மயில்வாகனம்.

இலட்சுமியம்பாள் சாப்பிடும் தனது கணவனை அன்போடு பார்த்தாள். அவளது கண்கள் லேசாகக் கலங்கின. ஒரு வருடத்திற்கு முன்பு சாப்பாட்டு மேசையில் அமர்ந்திருந்து சாப்பிட்ட தனது கணவன், திருகுவலையில் இருந்து சாப்பிடுவது அவளுக்கு வேதனையாக இருந்தது. சமீபத்தில் ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தளபாடச் சாமான்கள் தொலைந்தும் முறிந்தும் விட்டன. நான்குவருடங்களாக மயில்வாகனம் வாத நோய் காரணமாக இடது காலை மடக்க மிகவும் கஸ்டப்படுவார். நான்கு வருடமாக கொமோட் கட்டும் படி மாலதி நச்சரித்துக் கொண்டிருந்தாள்; ‘‘மூன்று பெம்பிளைப்பிள்ளைகளைப் பெத்தனான் கொமேட் கட்ட முடியுமே..?’’ என்று அவள் கூறும்போது கேட்பார்.

‘‘என்னப்பா யோசிச்சுக் கொண்டு நிக்கிறீர்...? கொஞ்சப் புட்டு போடுமன்’’ என்றபடி நிமிர்ந்த மயில்வாகனம் எதிரே நின்ற மனைவியின் கண்கள் லேசாகக் கலங்கியதைக் கண்டார். இடம்பெயர்ந்து வந்த பின்பு மனைவியின் கண்கள் அடிக்கடி கலங்குவதை அவர் அவதானித்துள்ளார். ‘கேட்டால் கரைச்சல் பாரதமே தொடங்கி விடும்’ என்பது அவருக்குத் தெரியும். இருந்தும் சாப்பிடும் நேரத்தில் இவ்வாறு மனைவி கலங்கியதை அவர் வாழ்நாளில் கண்டதில்லை. ஏதோ ஒரு பெரிய பிரச்சினையைத் தாங்க முடியாமையால் தான் அவள் இப்படிக் கலங்கியிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டார். கேட்கவும் விருப்பமில்லை. ஆனால் கேட்காமலும் விட முடியாது போல இருந்தது.

இலட்சுமி கணவன் பிட்டுக் கேட்டதும் குசினிக்குள் நுளைந்தாள். என்றுமில்லாதவாறு கணவன் சாப்பிட்ட வேளையில் கலங்கியதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நாள் தோறும் மிகவும் கஸ்டப்பட்டு உழைப்பவர். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அதுகும் எப்போவாவது ஒரு நாள் தான் காலை, பகல் சாப்பாட்டுக்கு வீட்டில் நிற்பார். மற்றும் படி இரண்டு நேரச் சாப்பாடுகளையும் கட்டிக் கொண்டு போயிடுவார். முகத்தை குசினியில் இருந்த வாளி நீரை அள்ளி அவசர அவசரமாகக் கழுவி விட்டு முந்தானையால் முகத்தை துடைத்து விட்டுப் புட்டு இருந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கோலுக்கு வந்தாள்.

மயில்வாகனம் மிக மிகப் பொறுமைசாலி. அவர் தனது பொறுமையால் தான் ஏராளமான காரியங்களைச் சாதித்துள்ளார். பிட்டு முழுவதையும் சாப்பிட்டு விட்டு நிலத்தில் கோப்பையை வைத்து விட்டு இருந்தவர், மனைவி வருவதைக் கண்டதும் கோப்பையை கையில் எடுத்துக் கொண்டார்.

இலட்சுமி பிட்டைப் போட்டு விட்டுக் கறியை விட்டாள்; ‘‘இன்றைக்கு உருளைக்கிழங்குக் குழம்பு நல்லாயிருக்கு...’’ மயில்வாகனம் குறை நிறைகளை உடனேயே சொல்லி விடுவர். இது இலட்சுமிக்குப் பழக்கம். நிறைவிருந்தால் ஏராளமான பாராட்டுக் கிடைக்கும். குறையிருந்தால் அதுகும் சோற்றில் கல்லிருந்தால் போச்சு... பதினைந்து நாளைக்கு மங்களம் தான்.

இலட்சுமி அழகாகச் சிரித்தாள்.

‘‘கொஞ்ச நேரத்துக்கு முந்தி அழுதீர், இப்ப சிரிக்கிறீர்’’ சாப்பிட்டபடியே சிரித்தார் மயில்வாகனம்.

‘‘உங்களுக்கு சாப்பிடேக்கை கதைக்கிறது பிடிக்காது’’ என்று சொன்ன இலட்சுமியை இடைமறித்துச் சொன்னார் மயில்வாகனம்; ‘‘அழுறது பிடிக்குமே?’’.

இலட்சுமியால் அதற்குப் பதில் சொல்லமுடியவில்லை; ‘‘எல்லாம் உங்களாலை தான்’’.

‘‘என்னாலையோ...?’’ ஆச்சரியமாகக் கேட்டார் மயில்வாகனம்.

‘‘ஓம்’’ அவளால் மேலே பேசமுடியவில்லை. விம்மியபடி முந்தானையால் முகத்தை மூடித் துடைத்தார்.

மயில்வாகனத்துக்குத் தர்மசங்கடமாகி விட்டது. அவரது முப்பது வருடக் குடும்ப வாழ்க்கையிலை இப்பிடி ஒரு சம்பவம் நடக்கவில்லை. ‘‘என்னம்மா...? என்ன நடந்தது..?’’ மயில்வாகனம் தடுமாறினார்.

முகத்தைத் துடைத்து விட்டு நிமிர்ந்த இலட்சுமி மயில்வாகனத்தைப் பார்த்துச் சொன்னாள்; ‘‘எழும்புங்கோ பாப்பம்...’’

மயில்வாகனத்துக்கு ஒன்றும் புரியவில்லை; ‘‘சாப்பிடும் நேரங்களில் சாதாரணமாகக் கூடக் கதைக்காத இலட்சுமி இன்று சாப்பிடும் போது எழும்புங்கோ என்றால் என்ன அர்த்தம்...?’’ புரியாமல் எழும்ப முயற்சித்தார். மிகவும் கஷ்டமாக இருந்தது. யன்னல் கம்பியைப் பிடித்து இலகுவாக எழும்புவதற்காகத் தான் அவர் சமீப காலமாகக் கோலுக்குள் இருந்து சாப்பிடுகிறார். யன்னல்க் கம்பியைப் பிடித்தார்.

‘‘வேண்டாம்.... வேண்டாம்.. எழும்பவேண்டாம்.... சாப்பிடுங்கோ...’’ இலட்சுமி அவசரமாகச் சொன்னாள்.

யன்னல் கம்பியைப் பிடித்து எழும்ப முயன்ற மயில்வாகனம் எழும்பமுடியாமையால் யன்னல் கம்பியிலிருந்த கையை எடுத்து விட்டு மீண்டும் திருகுவலையில் அமர்ந்து கொண்டார். அவருக்கு இலட்சுமியில் பேச்சு விளங்கவில்லை. சிறிது கோபம் கூட வந்தது.

‘‘உங்களாலை நிலத்திலை இருந்து சாப்பிடேலாது. எத்தணை நாளாச் சொல்லுறன் ஒரு கதிரையும் மேசையும் வாங்குங்கோ என்று... எல்லாத்தையும் ஒறுக்க முடியுமே?. தொலைஞ்சு போச்சு என்பதற்காக அத்தியாவசியப் பொருட்களைக் கூட வாங்காமல் இருக்க முடியுமே’’.

குளித்து விட்டு வந்த மாலதிக்குத் தாயாரின் குரல் உயர்ந்து ஒலிப்பது கேட்டது. நின்று கேட்டாள். தாய் சொல்வதில் நியாயம் இருப்பதை உணர்ந்தாள். தயாக்குச் சப்போட்டாகக் கதைத்து இன்றைக்கே இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டு மென்று தீர்மானித்தபடி கோலுக்கு வந்தாள்.

மகளைக் கண்டதும் இலட்சுமிக்கு கோபம் அழுகையாக மாறியது. விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

‘‘என்னம்மா...? என்னம்மா...?’’ பாசத்தால் துடிப்பதைப் போல நடித்தாள் மாலதி. மயில்வாகனத்திற்கு இக்கட்டான நிலை. தாயும் மகளும் சேர்ந்து விட்டால் அவர் பாடு அதோ கதிதான்.

‘‘ஏனம்மா அழுறியள்....? அழாதைங்கோ இப்பவே லேசாய் பிறைசர் இருக்கு உணர்ச்சிவசப்படக் கூடாது... அப்பா நெடுக இப்பிடித்தான்...’’ என்று தகப்பனைக் கோபித்தவள் திரும்பித் தாயாரை அணைத்தவாறு; ‘‘என்னம்மா... சொல்லுங்கோம்மா..’’ என்றாள்.

கோலில் நடந்த ஆரவாரத்தைக் கேட்டு சுதா, சுவர்ணா, சுந்தர்,மயூரன் எல்லோரும் கோலுக்கு வந்தனர்.

புத்திரசிகாமணிகள் எல்லோரும் கூடினால் தாயின் கை ஓங்கி விடுவது அவ்வீட்டு வழக்கம்.

‘‘நடந்த சம்பவமெல்லாம் எனக்குத் தெரியும்... நான் அம்மாவின்ரை பக்கம்...’’ என்றான் மயூரன்.

மயூரன் எந்தப் பக்கமோ எல்லாரும் அந்தப் பக்கம் தான்’’ என்றான் சுந்தர்.

“சொல்லுங்கோம்மா...” என்றாள் சுதா.

“எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு தானே நின்றனீங்கள் பிறகென்னத்தைச் சொல்லுறது”. என்றாள் இலட்சுமி.

“எண்டாலும் அம்மான்ரை வாயாலை கேட்கிறத்திலை ஒரு சுவையிருக்கு. சொல்லணை” என்ற மாலதி அவளது காதுக்குள்; “இண்டைக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. எல்லாவற்றையும் சொல்லீடு...” என்றாள்.

இலட்சுமிக்குத் தனது புத்திர செல்வங்கள் எல்லாம் ஒன்று கூடியது அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. குரலைச் செருமிச் சரிப்படுத்திக் கொண்டு; “முதலில் ஒரு டைனிங் ரேபிள் வாங்க வேணும்”.

“பிறகு” குறுக்கிட்டாள் சுதா.

“டைனிங் ரேபிளுக்கு பத்துப் பன்னிரண்டு கதிரைகள் வாங்க வேணும்....” என்றான் சுந்தர்.

“பன்னிரண்டு அங்குல ரீவியும் பற்றியும்” கடைக்குட்டி மயூரன் சொன்னான்.

“சோபா செற்றி.... வாங்க வேணும் வாறவையைப் பாய் போட்டெல்லே இருத்த வேண்டியிருக்கு” என்றாள் இலட்சுமி.

மயில்வாகனத்துக்குச் சிரிப்பு வந்தது. மூன்று பெம்பிளைப் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்க வேண்டு மென்பதற்காகத்தான் அவர் பல விடயங்களை ஒறுத்து வந்தார்.

“அப்பா எழும்பிக் கையைக் கழுவுங்கோ” என்று சொன்ன சுந்தர் அவர் எழும்புவதற்காக யன்னல் கம்பியைப் பிடிக்க முற்பட்ட போது அவரின் கையைப் பிடித்துத் தூக்கியபடி; “முதலில் கொமேட் தான் கட்ட வேணும்” என்றான்.

“எல்லாரும் சொன்னால் அப்பா மறுக்கமாட்டார்... என்னப்பா?” என்று கேட்டாள் சுவர்ணா.

“ஓமெண்டு சொல்லுங்கோ அப்பா” என்றான் மயூரன்.

“உங்கடை கோரிக்கையைப் பார்த்தால் இரண்டு லட்சம் வேணும்...” என்றார் மயில்வாகனம்.

“ஒன்றுக்கை எல்லாம் முடிச்சிர்றம்” என்றான் சுந்தர்.

சுந்தரின் பேச்சைக் கேட்டு மயில்வாகனம் மனதுக்குள்ச் சிரித்துக் கொண்டார். இரண்டு வருடமாய் டொக்ரராய் வேலை செய்கிறான். பாங்கிலை இரண்டு இலட்சம் ரூபா அவனுடைய பெயரிலை இருக்கு. அதிலை தான் எல்லாம் நடக்கப் போகுது.... யோசித்துப் பார்த்தால் அவர்கள் கூறுவதிலும் நியாயம் இருப்பதாகத் தென்பட்டது.

“அப்பா....” மாலதி சற்றுப் பலமாக அழைத்தாள்.

திடுக்கிட்டு யோசனையில் இருந்து மீண்ட மயில்வாகனம்; “சரிசரி, உங்கடை விருப்பப்படி செய்யுங்கோ...” என்றார்.

மயூரன் விசிலடித்தான்; “அப்ப அண்ணை ரீவியும் பற்றியும்....”

“டேய் .... எல்லாத்தையும் குழப்பப் போறான்....” என்று இரகசியமாகக் கூடியபடி மயூரனின் காதைத் திருகினாள் மாலதி.

எல்லாவற்றையும் அனுபவிக்கத்தான் வேணும்.. ஆனால்..... வீட்டு நிலைமையையு மெல்லோ யோசிக்க வேணும்.... மூண்டு பெம்பிளைப்பிள்ளையளுக்கும் மாப்பிளை பார்க்க வேணும்...

இதுகளைச் சிந்திச்சுத் தான் நான் மறுத்தனான்....'' மயில்வாகனம் முடிக்க முன் சுந்தர் குறுக்கிட்டான்; ''அப்பா பெம்பிளைப் பிள்ளையளைப் பற்றி நீங்கள் கவலைப்படாதைங்கோ. படிச்சு முடிந்தால்.....'' சுந்தர் பேசி முடிக்கு முன் சுவர்ணா குறுக்கிட்டாள்; ''அப்பா எங்களைப் பற்றி யோசியாதைங்கோ, நீங்கள் தந்த கல்வி அறிவு எங்களைக் கரை சேர்க்கும்...''.

''அப்ப நானேன் இருக்கிறன்...'' மயூரன் கொலரை நிமித்தியபடி முன்னே வந்தான்.

''இவர் பெரிய ஆள்'' அதட்டினாள் மாலதி.... ''அம்மா.''சிணுங்கியபடி தாயைக் கட்டிப் பிடித்தான் மயூரன்.

''நல்ல விளையாட்டுத்தான்... விடுங்கோ...'' இலட்சுமி அவனை விலக்கினாள்.

''ஏன் நான் உழைக்க மாட்டேனே?'' மயூரன் கேட்டான்.

''ஓ உழைச்சு என்ரை பிள்ளையைத் தான் கரை சேர்ப்பாய்'' பல்லைக்கடித்தாள் மாலதி.

எல்லோரும் சிரித்தனர். இலட்சுமி சுந்தரின் காதில் கிசுகிசுத்தாள்; ''சுந்தர் அப்பாவைப் பற்றித் தெரியும் தானே, ஆள் யோசிக்கிறத்துக்கிடையிலை காசை வாங்கிப் போடு''.

அவன் மெதுவாகச் சொன்னான்; ''என்னட்டை இருக்கணை... அப்பான்ரை சம்மதமெடுக்காட்டில் வாழ் முழுக்க புறுபுறுப்பர். அதுக்குத் தான்''.

''சுந்தர்... இந்தக் கையோடை மூண்டு பேருக்கும் மணிச்சங்கிலி செய்ய வேணும்...'' மெல்லச் சொன்னாள் இலட்சுமி அம்மாள்.

வாய்விட்டுச் சிரித்தான் சுந்தர்; ''அம்மா பெரிய திட்டம் வைச்சிருக்கிறா....''

இலட்சுமி சொன்னது விளங்காவிட்டாலும் காசை வாங்கச் சொல்லி சொல்லியிருப்பாள். என்று மயில்வாகனம் நினைத்தார். அதனால்; ''சுந்தர் இப்பவே செக்கைத் தாறன்'' என்றவர் செக் எழுதுவதற்காக ஒவ்விஸ் அறைக்குள்ச் சென்றார்.

''இப்ப என்னப்பா அவசரம்''

''பேசாமல் இரு அண்ணை...'' என்று அதட்டினாள் மாலதி.

''அப்பாவை நீங்கள் சரியாப் புரிஞ்சு கொள்ளேல்லை. ஓமெண்டிட்டு எப்பெண்டாலும் மாறினவரே...''

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கையில் மயில்வாகனம் செக்குடன் வந்தார்; ''இந்தா... ஒரு லட்சம் ரூபாய் எழுதியிருக்கிறன் இதுக்கு மேலை என்னைக் கேக்கக் கூடாது''.

''கேட்க மாட்டன் அப்பா...''

''சுந்தர், நீ கேட்க மாட்டாயெண்டு எனக்குத் தெரியும். ஆனால் உன்ரை கணக்கிலை இரண்டு லட்சத்துக்கு மேலை இருக்கு, அதை எடுக்காதை. நாட்டிலை நாளைக்கு என்னென்ன நடக்கு மெண்டு தெரியாது. பிறகு கஷ்டப்பட வேணும்''.

''சரி அப்பா..''

அப்போது வாசலில் மோட்டார் சைக்கில் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''சுந்தர், உன்னட்டை தான் ஆரோ வரீனை போலை கிடக்கு'' என்று கூறிவிட்டு பிற்பக்கமாகச் சென்றார் மயில்வாகனம்.

சுந்தர் வெளியே வந்தான். அப்பா படிப்பிக்கிற பருத்திமலை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் சிவலிங்கமும் இன்னு மொருவரும் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

“அதிபர் இருக்கிறாரே...?” சிவலிங்கம் கேட்டார்.

“ஓம் இருங்கோ....” என்ற சுந்தர்; “அப்பா” என்று அழைத்தான்.

“அவர் கோழிக் கூட்டுக்கை நிக்கிறார்... மயூரன் அப்பாவை வரச் சொல்லடா” என்றாள் இலட்சுமி.

மேலும் ஒரு மோட்டார் சைக்கில் வந்து நின்றது. சுந்தர் நிமிர்ந்து பார்த்தான்.

“சிவலிங்கத்தாற்றை சையிக்கில் நிக்கு, இது தான் வீடு...” என்றபடி இருவர் உள்ளே வந்தனர்.

சுந்தருக்கு அவர்களைத் தெரியவில்லை; “யாரோ அபபாவுடைய பள்ளிக் கூடக் காரராய் இருக்க வேண்டும்” என்று நினைத்தபடி; “வாங்கோ” என்றான். அப்போது இரண்டு மோட்டார் சைக்கில்கள் வந்து நின்றன; “இண்டைக்கு என்ன பிரச்சினை....? என்று யோசித்தபடி நிமிர்ந்து பார்த்தான். ஐந்து பேர் இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

பிறகும் இரண்டு மூன்று மோட்டார் சைக்கில்கள் வந்து நிற்கும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து பத்துப் பதினைந்து சைக்கிள்கள் வந்து நின்றன.

சுந்தருக்கு ஒன்றும் புரியவில்லை; “வந்தவர்களை இருத்திறத்திற்கும் கதிரைகளும் இல்லை. எத்தனையோ தடவை எல்லாவற்றையும் சொன்னதுக்குப் பிறகு தான் இன்றைக்கு அப்பா ஒத்துக் கொண்டிருக்கிறார். முந்தியெண்டால் சோபா செற்றியள், இரும்புக்கதிரைகள், மரக்கதிரைகள் என்று இருபத்தைந்து முப்பது இருந்தது. இடம்பெயர்வுக்குப் பிறகு ஒண்டும் இல்லாமல் போயிற்றுது” என்று எண்ணியபடி; “மயூரன் எல்லாப் பாய்களையும் கொண்டா” என்று பலத்துச் சொன்னபடி கோலில் இருந்த இரண்டு பாய்களையும் தட்டி விரித்தான்.

“மாஸ்ரர் வீட்டை எவ்வளவு தளபாடங்கள் இருந்தது. இப்ப எல்லாம் களவு பேயிட்டுது போலை கிடக்கு” என்றார் சிவலிங்கம். அவர் அடிக்கடி மயில்வாகனம் வீட்டுக்கு வந்து போவதால் அவர்களது வீட்டு நிலைமைகள் யாவும் தெரியும்.

“ஓம்” என்று சிரித்தான் சுந்தர்.

“தம்பி, இப்ப எங்கை வேலை செய்கிறீர்?”

“பழைய இடம் தான்”

“மாலதி கோஸ் முடிச்சிட்டாவே”

“ஓம், இன்னும் வேலை கிடைக்கேல்லை...”

“உம்முடைய கொஸ்பிற்ரலிலையே சேர்த்திட்டால் கரைச்சல் இல்லை”

“ஓம்... அங்கை தான் அனோகமாய்ப் போடுவினை..”

“மாஸ்ரர் அதிஸ்டசாலி, இரண்டு பேர் டொக்ரர். ஓராள் என்ஜினியர்.. மயூரனும் என்ர பண்ணுவான்...” என்று சிவலிங்கம் கதைத்துக் கொண்டு இருக்கையில் மயில்வாகனம் வந்தார்.

“இருங்கோ.... இருங்கோ... ஏது இவ்வளவு தூரம், கனபேர் வந்திருக்கிறியள்.... இருக்க இடமும் இல்லை...” என்றார் மயில்வாகனம்.

மயில்வாகனம் கதைத்துக் கொண்டிருக்கும் போது நாலைந்து மோட்டார் சைக்கில்களும் பதினைந்து இருபது சைக்கில்களும் வந்து நின்றன.

''எட, என்ன சிவலிங்கண்ணை அழுறியள்.....'' மயில்வாகனம் பதட்டத்துடன் கேட்டார்.

சுந்தர் நிமிர்ந்து பார்த்தான் சிவலிங்கத்தின் இரண்டு கண்களில் இருந்தும் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. முற்றத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் நின்றனர். எல்லாருடைய விழிகளும் கலங்கியிருந்தன. சிலர் பெண்களைப் போல விக்கி விசும்பி அழுதனர். சுந்தருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை; ''யாரோ இறந்து விட்டார்களோ..? அதற்கேன் இங்கு வந்து அழவேண்டும்...?'' என்று நினைத்தான்.

மேலும் பல சைக்கில்களும் மோட்டார் சைக்கில்களும் வந்து நின்றன. எதுகும் புரியாத சுந்தர்; ''அம்மா..'' என்று அழைத்தபடி உள்ளே சென்றான்.

*02*

அங்கு மயான அமைதி நிலவியது. யாரும் எதுவும் பேசவில்லை. தொடர்ந்து பலர் வந்து கொண்டிருந்தனர்.

சிவலிங்கத்துக்கு எப்படிக்கதையைத் தொடக்குவது என்று தெரியவில்லை; ''கேள்விப்பட்டது வதந்தியாய் இருந்தால் எவ்வளவு நல்லது.... ஆனால் சொன்னவர் கோட்டக்கல்வி அதிகாரியாயிற்றே''.

''சொல்லுங்கோ சிவலிங்கண்ணை....''

சிவலிங்கம் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்து விட்டுச் சொன்னார்; ''நீங்கள் இப்பிடிச் செய்வியள் என்று நாங்கள் நினைக்கேல்லை....''

சிவலிங்கம் சொன்னது சுந்தருக்கும் இலட்சுமிக்கும் தெளிவாகக் கேட்டது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்; ''அப்பா உங்களுக்கு ஏதாவது சொன்னவரே...?'' சுந்தர் கேட்டான்.

''அந்தாள் ஏதாவது சொல்லுறதே .... தான் நினைத்ததைத் தான் செய்யும்...''

''உங்களுக்கு நாங்கள் என்ன குறைவிட்டனாங்கள்... நீங்கள் கேட்டதிலை எதை மறுத்தனாங்கள். ஆசிரியர் பற்றாக்குறை அஞ்சு பேரை நியமிக்க வேணுமெண்டியள், உடனை வீடு வீடாகப் போய் ஐம்பதினாயிரம் ரூபா திரட்டித் தந்தனாங்கள்.... நாங்கள் இப்ப என்ன செய்திட்டமென்று நீங்கள் இந்த வேலை செய்தனீங்கள்.... சொல்லுங்கோ சேர்....'' சிவலிங்கத்தார் விம்மி விம்மி அழுதார். அவரால் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இன்னும் கனக்கக் கதைக்க வேண்டும் என்று தோன்றிய போது அவரால் கதைக்க முடியவில்லை.

''சிவலிங்கண்ணை நீங்கள் ஒண்டை மட்டும் தெரிந்து கொள்ள வேணும், எனக்கு டயபிற்றீஸ் இருக்கு, பிறைசர் இருக்கு, அதோடை வாதம் கால் மடக்கக் கஷ்டமாயிருக்கு... இந்த நிலமையிலை என்னாலை பத்து மைல் சைக்கிள் ஓட முடியாது''.

அப்போது தான் சிவலிங்கத்திற்கு உண்மையான தாற்பரியம் புரிந்தது. பாடசாலைக்குப் பக்கத்தில் இருக்கும் ஆசிரியர்கள் அனேகமாக பிறேயர் முடிந்த பின் தான் வருவார்கள். ஆனால் கடந்த பத்து வருடமாக மயில்வாகனம் ஏழுமணிக்கே பாடசாலையில் நிற்பார். இவ்வளவு நோய்கள் இருந்தும் ஒரு நாள்க் கூடப் பிந்தியதில்லை.

“இந்த நிலமையிலை நாளைக்கு ரோட்டிலை ஏதாவது ஒண்டு நடந்திட்டால் என்ன செய்யிற தெண்டு தான் நான் ரான்ஸ்பருக்கு அப்பிளை பண்ணினனான்.... அதுக்கிடையிலை எப்பிடி உங்களுக்குத் தெரிஞ்சது...?” ஆச்சரியப்பட்டார் மயில்வாகனம்.

“கோட்டக்கல்வி அதிகாரி தான் சொன்னவர். கோட்டத்துக்குப் பெரிய இழப்புத்தான் என்டாலும் அவற்ரை கோரிக்கை நியாயமான தென்று முதலாம் திகதி உங்களை விடுவிப்பதாயும் சொன்னார்... ஆனால் உங்களை நாங்கள் எப்பிடி வற்புறுத்துறது...”

“என்னாலை பிராயாணம் செய்யேலாமல் இருக்குச் சிவம். பொம்பர் கெலி அடிக்கிற காலத்திலை கூட நான் இடமாற்றம் பெற விரும்பேல்லை.... ஆனால் இப்ப என்னாலை ஏலாது... தயவு செய்து வற்புறுத்தாதைங்கோ....” கெஞ்சினார் மயில்வாகனம்.

“பத்து வரிசமாய் மாவட்டத்திலை முதலிடம் வகிச்ச எங்கடை பள்ளிக்கூடம்... இனி...” பெருமூச்சு விட்டார் சிவலிங்கம்.

“நீங்கள் அப்பிடிச் சொல்லக் கூடாது... சில சமயம் என்னை விடச் சிறந்த அதிபர் வரலாம்”. பயில்வாகனத்தைப் பேசவிடாது குறுக்கிட்டார் சிவலிங்கம்; “சேர் நானும் கல்வி உலகை அறிந்தவன் தான். பத்துவரிசத்துக்கு முந்தி நூறு பிள்ளையைளோடை தூங்கிக் கொண்டிருந்த பள்ளிக்கூடம் இண்டைக்கு உங்கடை திறமையாலை ஆயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்குது. பக்கத்திலை எல்லா வசதிகளோடையும் ஆயிரத்து ஐந்நூறு பிள்ளைகளோடை இருந்த பருத்திமலை மத்திய கல்லூரி இண்டைக்கு முன்நூறு பிள்ளைகளோடை இருக்கு....” தழுதழுத்த சிவலிங்கம் பின் சொன்னார்; “நீங்கள் சொன்னதற்காகச் சொன்னன்.... ஆசிரியத் தொழிலிலை அர்பணிப்பு, தியாகமும் இருக்க வேணும். இண்டைக்கு எங்கடை நாட்டிலை ஆர் தன்னை அர்பணிக்கினை. நாட்டுக் குழப்பங்களைக் காரணங் காட்டி ரான்ஸ்பர் எடுக்கிறதும் வெளிநாட்டுக்குப் போறதும் கொழும்பிலை போயிருக்கிறதும்...? இந்தநிலையிலை பள்ளிக்கூடம் எப்பிடி உருப்படும்... சேர் உங்களுக்கு பிரச்சினையெண்டால் என்ரை மோட்டார் சைக்கிலிலை உங்களை ஏத்தி இறக்கிறன்”.

“வேண்டாம்.... வேண்டாம்....” அவசரமாக மறுத்தார் மயல்வாகனம்.

“எனக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை....” கெஞ்சுவது போலச் சொன்னார் சிவலிங்கம்.

“எனக்கு பிடிக்கேல்லைச் சிவம். பிரச்சினை இல்லாமல் கொஞ்ச நாளைக்கு ஊரோடை இருக்கலாமெண்டு யோசிக்கிறன்....” மயில்வாகனத்தின் குரல் கரகரத்தது.

“எங்கடை பிள்ளைகளைக் கற்பிக்கிற உங்களுக்கு நாங்கள் எதுகும் செய்யலாம். நாகரீகம் வளந்தாப் போலை நாங்கள் பழசுகளை மறக்க முடியுமே...? முந்தி நாங்கள் படிக்கேக்கை ஆசிரியற்ரை வீட்டு வேலை முழுக்கச் செய்து கொடுத்தனாங்கள்....” கூட்டத்தில் வந்த ஒருவர் கூறினார்.

“ஓம் சேர், அது பிரச்சனை இல்லை” பலர் ஆமோதித்தனர்.

“என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ.... தயவு செய்து இந்தப் பிரச்சினையிலை தலையிடாதைங்கோ....” மயில்வாகனம் கெஞ்சுவது போலக் கேட்டார்.

மீண்டும் சிவலிங்கமே சொன்னார்; “ சேர், நல்லதொரு அதிபரை இழப்பதை நினைக்கக் கஷ்டமாக உள்ளது. உங்களையும் நாங்கள் குறைகூற முடியாது. எதற்கும் ஒருமுறை யோசித்துப் பாருங்கோ சேர். வேறை என்ன? நாங்கள் வாறம்” என்று கூறிவிட்டுச் சிவலிங்கம் எழுந்தார்.

“இருங்கோ... இருங்கோ, தேநீர் குடித்துவிட்டுப் போங்கோ..” என்ற மயில்வாகனம்; “இலட்சுமி.. இலட்சுமி” என்று கூப்பிட்டார்.

டம்ளர்களில் தேநீரை நிரப்பி ரேயில் வைத்துக் கொண்டிருந்த இலட்சுமியம்மாள் கணவன் அழைப்பதைக் கேட்டதும் ரேயைத் தூக்கிக் கொண்டு கோலுக்கு வந்தாள்.

இலட்சுமியம்மாளைக் கண்டதும் சிவலிங்கம் சொன்னார்; ''அம்மா, எங்களுக்குத் தெரியாமல் ரான்ஸ்பருக்கு சேர் அப்பிளை பண்ணீட்டார்''.

குடும்ப விடயங்கள் தவிர்ந்த வேறு விடயங்களை இலட்சுமியம்மாளுக்கு அவர் சொல்வதும் இல்லை, அவளிடம் ஆலோசனைகள் கேட்பதும் இல்லை. தட்டித்தவறி இலட்சுமியம்மாள் ஏதாவது சொன்னால் கூடக் கேட்க மாட்டார்; ''குடும்ப விசயங்களைக் கதை லட்சுமி. அதுக்கு உனக்குச் சுதந்திரமிருக்கு. தயவு செய்து பாடசாலை விஷயங்களைக் கதைக்காதை'' என்பார். எனவே இலட்சுமியம்மாள் சிவலிங்கத்தைப் பார்த்து லேசாக முறுவலித்தாள்.

''நீங்கள் தானம்மா சொல்ல வேணும், சேருக்கு பிராயாணம் செய்யிறது கஸ்டம் தான்.... நாங்கள் அதுக்கு ஒழுங்கு செய்யிறம்'' என்றார் சிவலிங்கம்.

அதைக் கேட்டு இலட்சுமியம்மாள் சிரித்தாள்; ''சிரிக்காமல் பதிலைச் சொல்லுங்கோ...'' என்றார் சிவலிங்கம்.

இலட்சுமியம்மாளுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. ரான்ஸ்பருக்கு அப்பிளை பண்ணியதே அவளுக்கு இப்பத்தான் தெரியும். அதைவிட சுந்தர் கடந்த இரண்டு மூன்று வருடகாலமாக; ''ரான்ஸ்பர் எடுத்துக் கொண்டு ஊருக்கு வாங்கோ... இல்லையெண்டால் றிரயர் பண்ணுங்கோ... உங்கடை உடல் நிலை சரியில்லை. கனதூரம் சைக்கில் ஓடக் கூடாதப்பா'' என்று நச்சரித்துக் கொண்டிருக்கிறான். இதிலை நான் ஏதாவது சொல்லப் போக அவனே பாய்வன்.. என்ன செய்வது...?'' என்று யோசித்தாள்.

''அம்மாவும் சேர்ந்து தான் செய்திருக்கிறா போலை கிடக்கு...'' என்று இழுத்தார் சிவலிங்கம்.

''தடுமாறிய இலட்சுமியம்மாள்; ''அவருக்குச் சுகமில்லை...'' என்றாள்.

''உண்மை தானம்மா, ஒத்துக் கொள்றம் அதுக்காகத் தானே பிரயாண வசதி செய்துதாறம் என்று சொல்லுறம்''.

அந்த நேரம் சமாளிக்க வேண்டும் என்பதற்காக; ''நான் அவருக்குச் சொல்லுறன்'' என்றாள்.

''சேர் பள்ளிக்கூடத்துக்குச் செய்த சேவையை நாங்கள் மறக்க மாட்டம். ஒரு காலத்திலை தேடுவாரற்றுக் கிடந்த பள்ளிக்கூடம் இன்றைக்கு மாவட்டத்திலை எதிலையும் முன்னுக்கு நிற்கு... அதுக்கெல்லாம் காரணம் சேர்தான். அவர் எங்கடை பள்ளிக்கூடத்திலை இருந்து தான் பென்சன் எடுக்க வேணும்... இது தான் எங்கடை விருப்பம்.... அம்மா... சேருக்கு வடிவாய்ச் சொல்லுங்கோ.... நாங்கள் வாறம்... வாறம் சேர்... அம்மா...'' சிவலிங்கம் எழுந்து வந்து மயில்வாகனத்தின் கரத்தைப் பற்றிய படி கூறினார்; ''எங்களை ஏமாற்றாதைங்கோ....''

மயில்வாகனம் எதுவும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை. கண்கள் கலங்கின. மெதுவாகத் தலையாட்டினார்.

வந்தவர்களெல்லாம் சென்ற பிறகு இலட்சுமியம்மாள் அவரின் அருகே வந்தாள்; ''ரான்ஸ்பருக்கு அப்பிளை பண்ணினனீங்களே..''

''ம்''...

''எனக்குச் சொல்லேல்லை''

“இதிலை சொல்ல என்ன இருக்கு. தாயும் பிள்ளைகளும் ஒவ்வொரு நாளும் தானே சொல்லுறியள்”.

“கிடைக்குமே..?”

“டிரைக்ரருக்கு என்ரை நிலமையைச் கூறி கட்டாயம் ரான்ஸ்பர் தரச் சொல்லிக் கேட்டிருக்கிறன். தருவாரென்று நினைக்கிறன்.”

“எந்தப் பள்ளிக் கூடம் தருவினை...” ஆவலோடு கேட்டாள் இலட்சுமி.

“இரண்டு மூன்று பள்ளிக்கூடம் வேக்கன்ராய் இருக்கு... எதைத் தந்தாலும் சரி....” என்றார் மயில்வாகனம்.

“டிரைக்ரரோடை கதைச்சு நல்ல பள்ளிக் கூடமாய்ப் போடுங்கோ...”

“என்ரை வாழ்நாளிலை நான் யாரிடமும் கடமைப்பட்டது கிடையது. என்ரை தகுதி, சேவை இதெல்லாம் டிரைக்ரருக்குத் தெரியும். அவர் நல்ல பள்ளிக்கூடமாய்ப் போடுவர் என்று நினைக்கிறன்” என்றார் மயில்வாகனம்.

“எங்கடை அமரிக்கன் மிசன் கல்லூரிக்கு அதிபர் இல்லைத்தானே. நாகராசான்ரை மருமோன் தான் தற்காலிகமாக அதிபராக இருக்கிறார். அவருக்கு கிரேட்டும் இல்லையாம்...” என்றாள் இலட்சுமி.

“ம்”... இவ்வளவு காலமும் நேர்மையாய் அதிகாரிகளிடம் எதுவும் கேளாமல் வாழ்ந்திட்டன். இன்னும் நாலுவரிசமிருக்கு. இனி ஏன் அடிமைப்படுவான். கடவுள் தருவதைத் தரட்டும்” என்று எண்ணினார் மயில்வாகனம்.

“என்ன யோசிக்கிறியள்...?”

“யோசிக்க என்ன இருக்கு? எனக்கெண்டால் எந்தப் பள்ளிக்கூடம் தந்தாலும் சரி.... சேவையைச் சரிவரச் செய்யுறது தான் என்ரை கடமை. ஒரு மைலுக்கை போட்டால் சரி...” என்றார் மயில்வாகனம்.

“இவ்வளவு விரைவாய் அப்பா ரான்ஸ்பர் எடுப்பர் என்று நான் நினைக்கேல்லை... பள்ளிக்கூடத்தைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டிருந்தவர், நான் நினைக்கிறன் எங்களிலும் பார்க்க பள்ளிக்கூடம் தான் அப்பாவுக்கு பெரிசு.. அங்கை இருந்து தான் றிட்டயராவர் என்று நினைச்சனான்...” என்று சிரித்தான் சுந்தரர்.

“அப்பிடித்தான் நானும் நினைச்சனான்.... ஆனால் ஏலாமல் இருக்கு” என்றார் மயில்வாகனம்.

“வாட்டிலை ஒரு கிழமை வைச்சு செக்கப்பண்ண போறன்” என்றான் சுந்தர்.

“என்ன மயில்வாகனம் அண்ணை காலமை இஞ்சை ஏராளமான சனம் வந்துது” என்றபடி வந்தார் பக்கத்து வீட்டுக் காரரான நவரத்தினம்.

“பள்ளிக்கூடக்காரர் வந்தவை, இவர் ரான்ஸ்பருக்கு அப்பிளை பண்ணீட்டார். அதைக் கான்சல் பண்ணச் சொல்லி வந்து கேட்டவை...” என்றாள் இலட்சுமியம்மாள்.

“கான்சல் பண்ணப் போறாரே...” நவரத்தினம் கேட்டார்.

“இல்லை.... இல்லை.... நாங்கள் விடமாட்டம்” என்றான் சுந்தரர்.

“ஓ, வேலை செய்யுற தெண்டால் உள்ளூருக்கை செய்யலாம் தானே. நெடுக ஏறி இழந்து செல்ல முடியுமே....?” என்ற நவரத்தினம் சுந்தரின் பக்கம் திரும்பி; “கண்ணன் பிரான்சிலை இருந்து கொஞ்சக் காசு பாங்குக்கு அனுப்பியிருக்கிறான்... வந்திட்டுதோ என்று ஒருக்கால் பாத்தந்து சொல்லுவீரே...” என்றார்.

“எப்ப அனுப்பினவன்?” சுந்தர் கேட்டான்.

“இப்ப தான் கடிதம் வந்தது... இஞ்சை பார் தம்பி...” என்று கடிதத்தை நீட்டினார் நவரத்தினம்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தான் சுந்தர்; “போனமாசம் பத்தாம் திகதி கடிதம் எழுதி இருக்கு.... ஒண்டரை மாதமாச்சு.... ம்... நாளைக்குப் பார்க்கிறன்” என்றவாறு கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தான் சுந்தர்.

நவரத்தினத்திற்கு ஐந்து ஆண்களும் இரண்டு பெண்பிள்ளைகளும் இருந்தனர். தற்பொழுது இளையவனைத் தவிர ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாட்டில் இருக்கிறார்கள். நவரத்தினத்திற்கும் மனைவிக்கும் நாலைந்து வருடமாக மயில்வாகனம் குடும்பந்தான் உதவி.

இவர்கள் கதைத்துக் கொண்டிருக்க மயில்வாகனம் பிற்பக்கமாகச் சென்றார். வீட்டுத் தேவைக்காக வளர்க்கும் கோழிக் குஞ்சுகளுக்கு முருக்கங் குழை பிடுங்கிக் கட்டவில்லை. வேலியில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கொக்கத் தடியை எடுத்துக் கொண்டு சென்றார்.

“அமரிக்கன் மிசன் கல்லூரியெண்டால் பரவாயில்லை. மற்றதெல்லாம் சின்னப்பள்ளிக்கூடங்கள்... சுந்தர் உனக்கு ஆரையன் தெரியாதே.... கொப்பர் கடைசி வரையும் ஆரையன் கண்டு கதைக்க மாட்டார். குடுத்ததை வாங்கிக் கொண்டு வருவர்” என்றாள் இலட்சுமி.

“எனக்கு ஆரையம்மா தெரியும்...? அப்பா பள்ளிக்கூடத்தோடை இருக்கிற மாதிரி நான் ஆஸ்பத்திரியோடை இருக்கிறன். அவற்றை திறமை எல்லாருக்கும் தெரியும் கட்டாயம் அமரிக்கன் மிசன் குடுப்பினை...” என்றான் சுந்தர்.

“இருந்தாலும் செல்வாக்குப் பாவிக்க வேணும் தம்பீ...” என்றாள் இலட்சுமியம்மாள்.

“மயில்வாகனத்தாருக்கு இல்லாத செல்வாக்கே.... பருத்தி மலை கிராமத்துக்கை போய் மயில்வாகனத்தைப் பற்றிக் கேட்க வேணும்... நடமாடும் தெய்வமாயெல்லே அந்தச் சனம் நினைச்சுக் கொண்டிருக்கு... எனக் கெண்டால் மயில்வாகனம் அங்கையிருந்து மாற்றம் எடுக்கிறது பிடிக்கேல்லை. மதிப்பிருக்கிற இடத்திலை தான் வேலை செய்ய வேணும். இஞ்சை ஊருக்கை உந்தப் பள்ளிக் கூடத்தை ஆர் மதிக்கினை. பணக்காரன், வசதியுள்ளவன், செல்வாக்குள்ளவன்ரை பிள்ளைகளெல்லாம் காறேறி வானேறி ரவுணுக்குப் போக இஞ்சை சப்புச் சவருகள் தானே படிக்குது.” என்றார் நவரத்தினம்.

எண்டாலும் ஊருக்கை உள்ள பெரிய பள்ளிக்கூடம் உது தானே. கொஞ்ச நாளைக்கு காலந்தள்ளட்டும்...” என்றாள் இலட்சுமியம்மாள்.

“மயில்வாகனம் உந்தப்பள்ளிக்குடத்தைக் கொண்டு நடத்த மாட்டுது. அந்தளவிலை சீரழிந்து போய்க் கிடக்கு. நாலைஞ்சு வாத்திமார் இருக்கினை. அவையைக் கட்டுப்படுத்த முடியுமே?” என்றார் நவரத்தினம்.

“எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் அப்பிடியானவை இருக்கத் தான் செய்வினை” என்றாள் இலட்சுமியம்மாள்.

“எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் அப்பிடி இருப்பினை தான். ஆனால் பிறத்தீலை எண்டால் பிரச்சனை இல்லை. இஞ்சை உள்ளவையெல்லாம் சொந்தக்காரார். கண்டிக்கப் போனால் கரைச்சல் தான் வரும். பிறகு செத்தவீடு, கலியாண வீடுகளிலையும் அவை எதிரொலிக்கும்..” என்றார் நவரத்தினம்.

“அப்ப என்ன செய்யிறது...?” என்று கேட்’டாள் இலட்சுமியம்மாள்.

“பேசாமல் ரான்ஸ்பரைக் கான்சல் செய்யச் சொல்லும். காலமை பாத்தியே நூறு சனம் துடிச்சுப் பதைச்சுக் கொண்டு வந்திட்டுது.... இஞ்சை யெண்டால்....” என்று நிறுத்திய நவரத்தினம் மூச்சை வெளியே விட்டு விட்டுச் சொன்னார்; “எட்டரைக்கு பள்ளிக்கூடம் தொடங்கிறது. பரத்தாற்றை மருமோன் ஒன்பது மணிக்குத் தான் பிள்ளையாருக்கு பூ கொண்டு போறவன். பூவைச்சு கும்பிட்டு வீட்டிலே போய் சாப்பிட்டுட்டு வெளிக்கிட்டுப் போக பத்து மணியாயிடும்.... இவனைத் திருத்த முடியுமோ....? திருத்த வெளுக்கிட்டால் மாமன் சட்டம் பேசுவர். பெட்டிசம் எழுதுவர்....” என்று சிரித்தார் நவரத்தினம்.

“அதுக்காக அந்தாள் ஒவ்வொரு நாளும் பத்துப்பன்னிரண்டு மைல் சைக்கில் ஓட முடியுமே...?” கலங்கினாள் இலட்சுமியம்மாள்.

“உண்மைதான்..... ஆனால் ஊர்ப் பள்ளிக்கூடத்தை நடத்திறது சரியான கஸ்ரம். வாசிகசாலையிலையும் கோயில்களிலையும் உந்தப் பள்ளிக் கூடத்தைப் பற்றித்தான் கதை. அதுகளை யெல்லாம் கேட்டால் தான் தெரியும்....” என்றவர் சிறிது நேரத்தின் பின்; “உதுகளுக்கெல்லாம் பயந்தால் சீவிக்கேலாது... நான் சொல்லுறதென்னெண்டால் மதிப்புள்ள இடத்திலை தான் வேலை செய்ய வேணும்....ம்... இனி உங்கடை விருப்பம்..... தோட்டத்திலை வெண்காயத்துக்குப் புல்லுப் புடுங்கச் சொன்னனான் அதை ஒருக்கால் பார்த்துக் கொண்டு வாறன்” என்று புறப்பட்டார் நவரத்தினம்.

## *03*

கஸ்தூரியார் வீதியில் சைக்கிளோடு நின்றாள் மாலதி. நேரம் பத்துமணி இருக்கும். ரோட்டில் ஒரே சனக்கூட்டம். வாகனங்கள் போக்குவரத்து விதிகளை மீறிக் கண்டபடி ஓடிக்கொண்டிருந்தன. சன நெரிசல் மிக்க அவ்வீதியால் ஓடிச் செல்ல முடியாமையால் சைக்கிலை வைத்துக் கொண்டு ஒரு ஓரமாக நின்றாள் மாலதி. சன நெரிசல் குறைந்ததும் உருட்டிக் கொண்டு போய் வின்சர் சந்திக்கு அப்பால் ஏறி ஓடலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

“நீ.... நீங்கள்..... மாலதிதானே..... மயில்வாகனம் மாஸ்ரற்றை மகள்...” மாலதிக்கு முன்பு சைக்கிலில் இருந்தபடி நிலத்தில் காலூன்றியவாறு ஒரு வாட்ட சாட்டமான இளைஞன் கேட்டான்.

மாலதி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் எங்கேயோ... எப்போதோ கண்ட முகம் போலத் தெரிந்தது. உடனே ஞாபகம் வரவில்லை.

“ஓம்....” என்றாள்.

“என்னைத் தெரியேல்லையே மாலதி... நான் தான் பிரணவன்.... ஒரு காலத்தில் உம்மோடை படிச்சனான்....”

“எட பிரணவனே... ஆளே முற்றாய் மாறீட்டீர்...” என்றாள்.

“நீர் உள்ள மாதிரித்தான் இருக்கிறீர். கொஞ்சம் வளர்ந்திருக்கிறீர்.... ஏன் யாழ்ப்பாணத்திலை உணவுப் பஞ்சமே... ?” கேட்டு விட்டுச் சிரித்தான் பிரணவன்.

“இது என்ன கனடாவே...?” என்று சிரித்த மாலதி “எப்பவந்தனீர்?” என்று கேட்டாள்.

“நேற்றுத்தான் வந்தனான்... வந்த உடனை இவ்வளவு விரைவாய் உம்மைச் சந்திப்பனென்று நினைக்கேல்லை.....”என்றான் பிரணவன்.

மாலதி பேசாமல் நின்றாள். அவளுக்கு மேற் கொண்டு என்ன கதைப்பதென்று தோன்றவில்லை. அவள் ஆண்களோடு அதிகம் கதைக்க விரும்புவதில்லை. கூச்ச சுபாவம் கொண்டவள். அதுவும் பிரணவனுடன் கதைக்க அவள் விரும்புவதில்லை. படிக்கும் போது அவனது நடத்தை அவ்வளவு நல்லதல்ல. பெண்களைச் சுற்றிக் கொண்டு திரிவதும், நக்கலடிப்பதும் அவனது இயல்பாண குணம்; ''வெளிநாட்டில் என்னவெல்லாம் செய்திருப்பன்''. என்று யோசித்தாள்.

''என்ன மாலதி யோசிக்கிறாய்...? நான் உங்கடை வீட்டையென்று தான் புறப்பட்டு வந்தனான். வீட்டையே போறீர் வாரும் கதைச்சுக் கொண்டு போவம்...''

''பிரச்சனை தான்'' என்று மனதுக்குள் நினைத்த மாலதி; ''சரி வாருங்கோ'' என்று சொல்லி விட்டுச் சைக்கிலை உருட்டினாள்.

''என்ன உருட்டிக் கொண்டே போறது.... ஏறி ஓடும்'' என்றான் பிரணவன்.

மாலதி சைக்கிலில் ஏறினாள். எதிரே ஒரு மினிவான் அவளை இடிப்பது போல வந்தது. சீற்றால் இறங்கிக் காலை நிலத்தில் ஊன்றி நின்ற மாலதி வான் சென்றதும் மீண்டும் சைக்கிலில் ஏறினாள்.

''சரியான ரவிக்... ஆனால் ஒழுங்கில்லை.. ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து பேர் ஆஸ்பத்திரிக்குப் போவினை என்று நினைக்கிறன்'' என்றான் பிரணவன்.

மாலதி பதில் சொல்லவில்லை. லேசாகச் சிரித்தாள். பிரணவனே தொடர்ந்து கதைத்தான்; ''அப்பா... அம்மா எல்லாரும் சுகமாய் இருக்கினமே...? சுந்தர்... சுவர்ணா.... சுதா... மயூரன் பாடுகள் எப்படி...?''

மாலதிக்குக் கதைத்துக் கொண்டு சைக்கில் ஓடப் பயமாக இருந்தது. சனங்களும் வாகனங்களைக் கவனியாது கண்டபடி குறுக்கே சென்று கொண்டிருந்தனர். எனவே மாலதி ஒரே சொல்லில் ''எலலாரும் சுகம்'' என்றாள்.

பிரணவன் மாலதிக்குச் சிறிது தூரம் முன்னே சென்றதால் அவளுடன் கதைக்க முடியாமல் இருந்தது. அத்துடன் அவள் சைக்கிலோடு தடுமாறுவதைக் கண்டு; 'சிறிது ரவிக் குறையக் கதைப்பம்' என்று நினைத்தான்.

பாடசாலையில் படிக்கும் நாளில் இருந்தே பிரணவனுக்கு மாலதி மீது ஒரு கண் இருந்தது. இருவரும் ஆண்டு ஒன்றிலிருந்து ஒன்றாகவே கற்று வந்தனர். வகுப்பில் எந்த விடயத்திலெண்டாலும் இருவருக்குமிடையிலும் தான் போட்டி. ஓ எல்லிலும் இரண்டு பேரும் எட்டு டீ எடுத்தவர்கள். ஓ எல் படிக்கும் காலத்தில் போட்டி பொறாமையாகவும் சண்டையாகவும் கூட வருவதுண்டு. ஆனால் ஏ எல்லுக்கு வந்தபின் பிரணவன் போட்டியில் இருந்து வாபஸ் ஆகி, அவளைச் சுற்றத் தொடங்கினான். பாடரீதியாகக் கதைக்கவும் தொடங்கினான். ஆனால் மாலதி எட்டவே நின்றாள். எவ்வளவு முயற்சித்தும் ஒரு மயக்கமான சிரிப்பைத் தன்னும் பரிசாக அவனாற் பெற முடியவில்லை. பிரணவன் சிறிது சிறிதாக அருகே செல்லச் செல்ல, அவள் தூர விலகி நின்றாள். ஒரு நாள் கெமிஸ்ரி லாப்பில் தனிமையில் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று திட்டமிட்டவாறு அவளின் அருகே சென்றான். லாப் போய் செல்லையா தூரத்தில் ரெஸ்ட்ரியூப்புக்களைத் துடைத்துக் கொண்டு நின்றார்; ''மாலதி ....'' நடுங்கிய வாறு குரல் வெளியே வந்தது. அதற்கு மேல் பேச்சு வரவில்லை. தலையைக் குனிந்து கொண்டான். போட்ட திட்டங்கள், கற்பனைகள் யாவும் ஊமையாகின.

மாலதி நிமிர்ந்து பார்த்தாள். பிரணவன் குனிந்து கொண்டான். அவளுக்குப் பிரணவனின் போக்கு அறவே பிடிக்கவில்லை. என்றவாறு ஒரு நாள் சந்தர்ப்பம் வரும் போது சூடாக நாலுவார்த்தைகள் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தவளுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது; ''பிரணவன், உங்கடை போக்கு எனக்குப் பிடிக்கேல்லை. தயவு செய்து என்னோடை கதைக்க வேண்டாம். மீறிக் கதைச்சால் பிறின்சிப்பலிட்டைச் சொல்லீடுவன்...'' சூடாக வார்த்தைகள் வெளியே வந்தன.

“மாலதி....” பெரிய தோர் சத்தம் கேட்டது. பிரணவன் ஒரு ஓட்டோவுக்குக் கீழே கிடந்தான். அவனுடைய சைக்கிலுக்கு மேலால் நாலைந்து சைக்கில்கள் ஏறி விழுந்தன.

சனங்கள் கூடி விட்டனர். பிரணவன் மெதுவாக எழுந்தான். அவனது நெற்றியில் காயம் பட்டிருந்தது. அதிலிருந்து லேசாக இரத்தம் வழிந்தது. மாலதி சைக்கிலை விட்டு விட்டு ஓடி வந்தாள்; “இஞ்சை சைக்கில் ஓடுறது பெருங் கஸ்டம். எல்லா ரோட்டையும் மூடிட்டாங்கள். சனம் ஒரு ரோட்டாலை தான் போக வேண்டியிருக்கு” என்றவள் கான் வாக்கைத் திறந்து லேஞ்சியை எடுத்து பிரணவனின் நெற்றியில் இருந்து வழிந்த இரத்தத்தைத் துடைத்தாள். பிரணவனுக்குக் காற்றில் மிதப்பது போல இருந்தது. பண்டைப் போட்டு மூடியவர்களுக்கும், ஓட்டோக்காரனுக்கும் மனதுக்குள் நன்றி சொன்னான். இப்படி ஒரு அரிய வாய்ப்பை உண்டு பண்ணிய வெள்ளெருவைப் பிள்ளையாருக்குப் பெரியதொரு? பூசை செய்வதாக நினைத்துக் கொண்டான்.

“சின்னக் காயம் தான்... பயந்திட்டியளே....” என்று கேட்டாள் மாலதி.

“நீர் பக்கத்திலை இருக்கேக்கை என்ன பயம்....” என்றவன் மாலதி ஏதாவது நினைச்சிடுவாளோ என்ற பயத்தில்; “டொக்ரரோடை, அதுகும் கூடப் படித்தவரோடை இருக்கும் போது என்ன பயம்” என்றான்.

மாலதி மனதுக்குள்ச் சிரித்துக் கொண்டாள்.

“சரி சரி போவம்” என்று புறப்பட்ட பிரணவன் முத்திரைச் சந்தி வரும்வரை எதுவும் பேசவில்லை. அவனால் பேசமுடியவில்லை; “கனடாவுக்குப் போகும் போது அவளையும் அழைத்துக் கொண்டு போக வேணும்.... அது சரி வருமா...?” அவனது மனம் குழம்பித்தவித்தது.

மாலதிக்குப் பிரணவன் கதைக்காமல் வருவது ஒரு மாதிரியாக இருந்தது. எனவே அவளாகக் கதையைத் தொடக்கினாள்; “அப்ப எந்த மட்டிலை போறியள்”.

“நேற்றுத் தானே வந்தனான். இப்ப என்ன அவசரம்?. ஆறேழு மாசத்துக்கு நிப்பம்”

“அப்ப பெரிய லீவு தான்.... தனியத்தான் வந்தனீங்களோ..”

மாலதி அப்படிக் கேட்டதும் தன்னுடைய நிலையை விளக்க சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக நினைத்த பிரணவன்; “நான் தனிக்கட்டை தான்” என்றான்.

“அதை நான் கேக்கேல்லை, அம்மா அப்பா சகோதரங்களெல்லாம் அங்கைதானே....”.

“தனியத்தான் வந்தனான். எனக்கு விருப்பமானவர்களைப் பார்த்துப் பேசி கதைச்சுச் சிரிச்சு...” பிரணவன் சிரித்தான். பிறகு சொன்னான்; “என்னோடை வர விரும்பினால் கூட்டிக் கொண்டு போகவும் தான் வந்தனான்”.

பிரணவன் என்ன சொல்கிறான் என்று மாலதிக்குப் புரிந்தது. பழைய நிலையில் இருந்து அவன் மாறவில்லை. என்று நினைத்தாள். கதையை மாற்றுவதற்காக; “ஏன் இப்ப ஏஜென்சி வேலையும் பார்க்கிறியளே....?” என்றவள் சிறிது நேரம் யோசித்துவிட்டு; “பூமணி மாமியவை கஷ்டப்படீனை, ஒரு பெடியனை யெண்டாலும் கூட்டிக் கொண்டு போங்கோ. அப்பாட்டை சொல்லிப் பணத்துக்கு ஏற்பாடு செய்யிறன்” என்றாள்.

பிரணவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. எனினும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சொன்னான்; “நீர் சொன்னால் பிறகென்னத்துக்குக் காசு...” என்று நிறுத்தியவன். மனதுக்குள் பெரு மூச்சு விட்டு விட்டுக் கேட்டான். “மாலதி, உமக்கு வெளிநாட்டுக்குப் போக விருப்பமில்லையே?”

‘‘எனக்கெண்டால் அப்பா, அம்மாவைவயை விட்டுப் பிரிஞ்சு போக விருப்பமில்லை.....’’

‘‘அப்பா அம்மாவைவயை கூட்டிக் கொண்டு போகலாம் தானே...’’

‘‘மூன்று பேர் படிக்கினை...’’ என்று சொன்ன மாலதியைக் கதைக்கவிடாமல் குறுக்கிட்டுச் சொன்னான்; ‘‘பொல்லாத படிப்பு.... நிம்மதியில்லாமல் இவ்வளவு பிரச்சினைகளுக்கை இருந்து கஸ்டப்பட வேணுமே? நானும் படிச்சிருந்தால் இப்ப ஒரு டொக்ரராயிருப்பன். இன்னும் ஆறு மாதத்துக்குப் பிறகு தான் தொழில் கிடைக்கும். அதுகும் மாசம் பத்துப் பன்னிரண்டாயிரம் கிடைக்கும்.... நான் இந்த அஞ்சு வரிசத்துக்கை அம்பது லட்சம் உழைச்சிட்டன்’’

‘‘என்னைப் பொறுத்த மட்டிலை காசு பெரிசில்லை.... மருத்துவத்தைப் படிச்சிட்டு நான் அங்கை கூலி வேலை செய்ய, இஞ்சை உள்ள சனங்கள் நோயாலை துன்பப்படுவதா....? பிரணவன் பணத்தைச் சம்பாதிக்கலாம். ஆனால் பட்டத்தைச் சம்பாதிக்க முடியாது. கற்ற கல்விக்கும் செய்யுற தொழிலுக்கும் சம்பந்த மிருக்க வேணும். பட்டங்களைப் பெற்றிட்டு கராஜ்சிலையும் பேக்கறியிலையும் பெற்றோல் செற்றிலும் வேலை செய்ய நான் தயாரில்லை...’’

பிரணவனால் பதில் கூற முடியவில்லை. சிறிது நேரம் பொறுத்து கேட்டான்’’ அப்ப நீர் வெளிநாட்டுக்கு வரமாட்டீர்..’’

‘‘வருவன்’’ பட்டென்று சொன்னாள் மாலதி.

பிரணவன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான்; ‘‘இன்னும் படிக்க விரும்புறன் அதுக்காகக் கட்டாயம் வருவன்..’’

பிரணவனின் மனம் சோர்ந்து போனது. திடீரென்று களைத்து விட்டதைப் போன்ற நிலை. மேற் கொண்டு என்ன பேசுவதென்று அவனுக்குத் தோன்றவில்லை; ‘‘படிக்கும் போது எத்தனையோ தடவை முயற்சியெடுத்து மூக்குடைபட்டது தான் மிச்சம். கனடாவுக்கு போன பின்பு நாலைந்து கடிதம் எழுதியும் மாலதி பதில் போடவில்லை. தற்பொழுது வந்து பார்போமெண்டு வந்தால் அதுவும் சரிவராது போல இருக்கு’’ என்று யோசித்தான். அவனால் கவலையைத் தாங்க முடியவில்லை. கண்கள் கூட லேசாகக் கலங்கின. கனடாவில் எத்தனை அழகான பெண்கள் இருக்கிறார்கள். அவர்களில் இல்லாத ஒரு கவர்ச்சி மாலதியில் குடி கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. கதைக்காமல் யோசித்தபடி வந்ததால் மாலதியினது வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கையைக் கடந்து சென்றான் பிரணவன்.

‘‘கனடாவுக்குப் போனதால் எங்கடை வீட்டு ஒழுங்கையை மறந்திட்டியள் போலை’’ மாலதியின் குரல் அவனது யோசனையைக் கலைத்தது.

‘‘நான் மறக்கேல்லை. மறக்கவும் மாட்டன்.... ஏதோ யோசனையில் வந்ததாலை கவனிக்கேல்லை...’’

பிரணவனின் ஒவ்வொரு வார்த்தையும் அவன் பழையவன் தான். பழைய நினைவுகளோடு தான் வந்திருக்கிறான் என்பதை மாலதிக்குப் புரிய வைத்தன. இருந்த போதும் அவளால் அவனை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

மாலதி கேற்றைத் திறந்து உள்ளே போனாள். அவளின் பின்னால் பிரணவன் சென்றான். முற்றத்தில் படுத்திருந்த மயில்வாகனம் மாஸ்ரரின் நாய் நிமிர்ந்து பார்த்து விட்டு வாலை ஆட்டியது. பின்னால் பிரணவன் வருவதைக் கண்டதும் பலமாகக் குரைத்தபடி பிரணவனை நோக்கி வந்தது.

‘‘ஜிம்... ஜிம்.... சும்மாயிரு...’’ மாலதி நாயை அதட்டினாள்.

‘‘இடம்பெயர்ந்து போகேக்கை நாயையும் கொண்டு போனனீங்களோ...? நல்ல கொழுப்பாயிருக்கு...’’ என்றான் பிரணவன்.

“ஓம், அப்பா சாமான் ஒண்டும் எடுக்கேல்லை. நாயையும் ஆட்டையும் தான் கொண்டு போனவர்’’.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த இலட்சுமியம்மாள் மாலதியுடன் வாட்டசாட்டமான ஓர் இளைஞன் வருவதைக் கண்டாள். அவளுக்கு அவனை யாரென்று புரியவில்லை.

முற்றத்தில் சைக்கிலை நிறுத்தி விட்டு உள்ளே வந்த பிரணவன்; “என்னைத் தெரியுமா அம்மா’’ என்று கேட்டான்.

இலட்சுமியம்மாளுக்கு அவனைத் தெரியவில்லை. யோசித்துப் பார்த்தாள். அப்படி இருந்தும் தெரியவில்லை.

“என்னம்மா அதுக்கிடையிலை என்னை மறந்திட்டியள். நான் தான்... பொன்னற்றை நடராசற்றை மூத்த மோன் பிரணவன்’’

“எடடட.... பிரணவனே.... ஆளே மாறீட்டாய்.... உள்ளுக்கு வா... இப்பிடி இருதம்பீ.....’’

பிரணவன் வெளியே சப்பாத்துக்களைக் கழட்டி விட்டு உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

“வீட்டுக்கு அவ்வளவு சேதமில்லைப் போலை கிடக்கு....’’

“ஓ.... எல்லாம் பிள்ளையார் தான் காப்பாற்றினது.... அது சரி உம்முடைய தங்கச்சிக்கு என்னுடைய அக்கான்ரை மோனைக் கேட்ட தெண்டு அஞ்சாறு மாதத்திற்கு முந்தி அக்கா எழுதினவ’’.

“ஓ.. வாற ஆவணியிலை செய்யிறதெண்டு தீர்மானிச்சிருக்கிறம்..’’ என்று நிறுத்திய பிரணவன் மாலதியை நிமிர்ந்து பார்த்தான். பின்பு இலட்சுமியம்மாவின் பக்கம் திரும்பி; “இப்ப எனக்கு நீங்கள் மாமி முறை’’ என்று கூறி விட்டு மாலதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

இலட்சுமியம்மாள் வாய் விட்டுச் சிரித்தாள்..; “ஓம் தம்பீ..... எப்பிடி அவை சுகமாய் இருக்கினையே...?’’

மாலதியின் முகத்தில் எதுவித சலனமும் இல்லை. அப்படி அவன் சொன்னதை அவள் விரும்பவில்லைப் போலும் டக்கென்று உள்ளே சென்றாள். அது பிரணவனுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

“தம்பி, அக்காவையின்ரை பாடு எப்பிடி...?’’

“அவைக்கென்ன மாமி, நல்லாயிருக்கினை... எங்கடையாக்கள் எல்லாரும் கனடாவிலை ஓகோ வெண்று இருக்கினை.... நீங்களும் அந்தப் பக்கம் வந்தாலென்ன..’’

“எனக் கெண்டால் நல்ல விருப்பம் தம்பி.... இந்தாள் ஒன்றுக்கும் ஒத்துக் கொள்ளாது.’’ பெருமூச்சு விட்டாள் இலட்சுமியம்மாள்.

“அஞ்சு பேரிலை ஒராளையெண்டாலும் அனுப்பலாம்... நான் போகேக்கை மயூரனைக் கூட்டிக் கொண்டு போகட்டே...’’ ஆவலோடு கேட்டான் பிரணவன்.

“இந்த ஆவணிக்குத்தான் ஏஎல் எடுக்கிறான் எடுத்து முடியட்டன்’’

“ஏ எல் எடுத்தால் மயூரன் கம்பஸ் என்ரபண்ணுவன் அதாவது யூனிவசிற்றிக்குப் போவன். பிறகு மாஸ்ரர் விடுவரே....’’

“அது தானே... அந்தாள் படிப்பு முடியும் வரை விடாது.... சுந்தருக்குக் கொலசிப் ஒன்று கிடைச்சிருக்கு. அனேகமாய் இரண்டு மூண்டு மாசத்துக்கை இங்கிலண்டுக்குப் போயிடுவன்.”

“சுந்தருக்கு கலியாணம் பேசேல்லையே..?”

“சுந்தருக்கு முந்தி மாலதிக்குத் தான் தம்பி முடிக்க வேணும். பெம்பிளையளை இருபத்தைஞ்சு வயதுக்கு மிஞ்சி வைச்சிருக்கக் கூடாது... இப்ப மாலதிக்கு இருபத்தெட்டாச்சு...”

“அப்ப எங்கையாவது பார்க்கேல்லையே?” ஆவலோடு கேட்டான் பிரணவன்.

குசினிக்குள் இருந்து அவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த மாலதி, தாய் ஏதாவது சொல்லி விடுவாளோ என்ற பயத்தினால்; “அம்மா, இஞ்சை ஒருக்கால் வந்திட்டுப் போங்கோ....” என்றாள்.

தாய் வந்ததும்; “கலியாணக்கதையை விட்டுட்டுத் தேத்தண்ணியைக் கொண்டு போய்க் குடுங்கோ” என்றாள்.

இலட்சுமியம்மாள் நீட்டிய தேனீர்க் கோப்பையைப் பெற்றுக் கொண்ட பிரணவன்; “தாங்ஸ்” என்றான். பின்பு தேநீரை ஒரு முறை உறிஞ்சி விட்டு, “மாலதிக்கு எங்காவது மாப்பிளை பார்த்திருக்கிறீர்களா?” என்று கேட்டான்.

இலட்சுமியம்மாளுக்குத் தர்மசங்கடமாயிருந்தது; “தெரியாத்தனமாக ஏதாவது சொல்லப் போக...ம்... என்ன சொல்லலாம்” என யோசித்தாள். ஏதாவது சொன்னால் மாலதியோடை காலந் தள்ளமுடியாது” என்ற எண்ணம் அவளை வாட்டியது..

இலட்சுமியம்மாளின் தடுமாற்றமும் யோசனையும் தான் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கத் தயங்குவதும் பிரணவனுக்கு புரிந்தது. எதுவும் பேசாமல் தேனீரைக் குடித்து விட்டு டம்பிளரை அருகில் இருந்த மேசையில் வைத்து விட்டு “நான் போயிட்டு வாறன்...” என்றான்.

“சரி தம்பி....” என்றாள் இலட்சுமியம்மாள்.

பிரணவன் எதிர் பார்ப்போடு குசினி வாசலைப் பார்த்தான். தன்னை விரும்பா விட்டாலும் ஒப்புக்காவது மாலதி வெளியே வருவாள் என எதிர் பார்த்தான். வினாடிகள் கரைந்தனவே தவிரப் பலன் இல்லை; “மாலதிக்கும் சொல்லுங்கோ, நான் போட்டு வாறனென்று” சற்று பலமாகக் குரலை உயர்த்திச் சொன்னான். வீட்டுக்குள் எந்தப் பக்கத்தில் நின்றாலும் தான் கூறுவது கேட்கும் என்ற நம்பிக்கையில் தான் அப்படிச் சொன்னான்.

“மாலதி பிரணவன் போகப் போறாராம்” இலட்சுமியம்மாள் பலமாகச் சொன்னாள்.

“சரியம்மா... நான் கையிலை அலுவலாய் இருக்கிறன். போட்டு வரச் சொல்லுங்கோ...” உள்ளிருந்தபடியே கூறினாள் மாலதி.

பிரணவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. உமிழ் நீரை விழுங்கி விட்டு; “நான் வாறனம்மா...” என்றபடி நடந்தான். இதயம் கதைத்தது; “சீ வராமல் விட்டிருக்கலாம்...” கண்கள் கலங்கிக் கன்னங்களால் கண்ணீர் வழிந்தது. அதைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் சைக்கிலை உருட்டிக் கொண்டு சென்றான்.

## *04*

இருள் மெல்லப் படியத் தொடங்கியது. யாழ்ப்பாண வானொலியில் தேனிசைத் தெரிவு நடந்து முடிந்து செய்தி ஒலிபரப்பாகு முன் ஒலிக்கும் ஒலி ஒலிக்கத் தொடங்கியது.

ஈசிச் செயரில் படுத்திருந்த நவரத்தினம் அதிலிருந்து எழுந்து சென்று மேசையில் இருந்த வானொலியைச் சிறிது கூட்டினார். அவருக்குப் புதிய பாடல்கள் பிடிப்பதில்லை. செய்திக்காக ஐந்து நிமிடம் முந்தி வானொலி மீற்றரைப் பிடித்து விட்டு, சிறிதாகக் கேட்பார். செய்தி ஒலிபரப்பாகும் ஒலி எழுந்ததும் சிறிது கூட்டிவிடுவது வழக்கம். அன்று பதினைந்து நிமிடங்களுக்கு முன்பே வானொலியைப் போட்டு விட்டுச் செய்தியைக் கேட்பதற்காகப் பரபரப்போடு காத்திருந்தார்.

அவரின் மனம் அலை மோதியது. அவரது பிள்ளைகளில் ஒருவனைத் தவிர மற்றைய எல்லாரும் வெளிநாட்டிலை இருந்தனர். கடைசி மகன் யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் ஏ எல் படித்துக்கொண்டிருந்தான். ஒரு மாதத்துக்கு முன்பு அவன் தான் வெளிநாடு செல்ல வென்று சென்று கொழும்பில் நிற்கிறான். அதுவும் நேற்றுப் போவதாக எழுதியும் இருந்தான்.

செய்தியை அறிவிப்பாளர் வாசிக்கத் தொடங்கினார்; ‘‘ஜனாதிபதி அடுத்த மாதம் குவைத் நாட்டு மன்னரின் அழைப்பை ஏற்றுச் செல்லவிருக்கிறார். இம்முறை பருவ மழை குறைவாக இருந்தாலும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படமாட்டாதென மின்சார சபை அறிவித்துள்ளது. நேற்று ஏற்பட்ட விமா விபத்தில் கொல்லப்பட்டோரில் இலங்கையைச் சேர்ந்த ஐவர் உள்ளதாக நம்பப்படுகிறது. ஜனாதிபதி திருமதி.....’’ அறிவிப்பாளர் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார்.

நவரத்தினத்திற்குக் கைகால் ஒன்றுமே ஓடவில்லை; ‘‘முத்தவனும் எல்லாம் சரியென்று எழுதியிருந்தவன். இவனும் கொழும்பிலை இருந்து நேற்றுப் புறப்படுவதாகக் காகிதம் குடுத்து விட்டவன். கடவுளே...’’ நவரத்தினத்திற்குத் தலையைச் சுற்றியது. விபரமாய்க் கேட்க இரண்டு நிமிடங்கள் பொறுத்திருக்க வேண்டும்; ‘‘முக்கியமானதை விட்டிட்டு எதையோ வெல்லாம் சொல்லுறாங்கள்’’. பரபரத்தார் நவரத்தினம்.

நவரத்தினத்தின் மனைவி திலகவதி குசினியில் ஏதோ அலுவலாக இருந்தாள். அவளுக்கு ஒரு வருடமாக இரத்த அழுத்த நோய் இருக்கிறதது. எந்த நேரமும் கவனமாய் இருக்கச் சொல்லி டொக்ரர் சொல்லியிருக்கிறார். அதனால் எதையும் அவளோடு பகிர முடியாத நிலை நவரத்தினத்திற்கு. பிள்ளைகளின் கடிதங்களையெல்லாம் தணிக்கை செய்து தான் வாசிப்பார். திலகவதிக்கு வாசிக்கத் தெரியும். இருந்தாலும் கணவன் வாசித்துச் சொல்லுவதையே அவள் விரும்புவாள். வாசித்து முடிய ‘‘வாசியுமன்’’ என்று அவர் நீட்டினாலும்; ‘‘நீங்கள் வாசித்தது தானே கிடக்கும்’’ என்பாள்.

‘‘நேற்றுச் சிங்கப்பூரில் இருந்து புறப்பட்ட விமானம் லாகோஸ் விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதி கிடையாததால் சிங்கப்பூருக்குத் திரும்பிச் சென்றது. அங்கும் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டதால் லாகோசுக்கு பயணமாகும் போது எரிபொருள் முடிந்ததால் கடலில் விழுந்ததில் அதில் பிரயாணம் செய்த இருநூற்று முப்பத்தாறு பிரயாணிகளும் கொல்லப்பட்டனர். இதில் இலங்கையைச் சேர்ந்த ஐவரும் அடங்குவரென ஏபி என் செய்தித் தாபனம் தெரிவித்துள்ளது. இவர்களின் பெயர் விபரங்களை அறிந்து கொள்வதற்காக வெளிநாட்டமைச்சு விமானக் கொம்பனியுடன் தொடர்பு கொண்டுள்ளது’’.

நவரத்தினத்திற்க்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. கோலுக்குள் அங்குமிங்கும் உலாவினார். அவருக்கு யாருடனாவது கதைக்க வேண்டும் போல இருந்தது. ‘‘இந்த இருட்டான வேளையில் எங்கை போகலாம்...? மாஸ்ரரிட்டைப் போவமோ...?’’ மாஸ்ரற்ரை வீடு அவ்வளவு தூரமில்லை. அருகில் தான் இருந்தது. ரோச்சை எடுத்துக் கொண்டு மனைவியை அழைத்தார்; ‘‘திலகம்... திலகம்...’’

‘‘என்னப்பா...’’

‘‘படுத்திட்டீரே...’’
‘‘ஓம் வாறதே...’’

“ஓம்... ஒருக்கால் வாரும். நான் ஒருக்கால் மாஸ்ரர் வீட்டை போட்டு வாறன் கதவைப் பூட்டும்”.

“மாஸ்ரர் வீட்டை போறியளோ... ஏனப்பா...? இந்த நேரத்திலை போன கிழமையும் ஆமி எங்கடை ஒழுங்கையாலை போனதெண்டவை”.

“ஒன்பது மணிக்குத் தானே கேவிபூ...அஞ்சு பத்து நிமிசத்தைப் பார்க்க மாட்டாங்கள்...”

“ரோச்சை வைச்சிட்டு அரிக்கன் லாம்பைக் கொண்டு போங்கோ. ரோச் அடிக்கக் கூடாதெண்டு சொல்லுறவை..”

“சரி சரி நீர் கதவைப் பூட்டும். நான் டக்கெண்டு வந்திடுவன்” என்றபடி லாம்பைத் தூக்கிக் கொண்டு நடந்தார் நவரத்தினம்.

இரண்டு நிமிடத்திலை மாஸ்ரரின் வீட்டுப் படலைக்கு வந்துவிட்டார். ஆனால் படலை பூட்டியிருந்தது. “கூப்பிடுவமா...? அல்லது போவோமா...” மனம் அலை மோதியது.

“வந்தனான் கூப்பிட்டுக் கதைச்சிட்டுப் போனால் ஆறுதலாக இருக்கும்” உள் மனம் கூறியது.

“மாஸ்ரர்.... மாஸ்ரர்... மாஸ்ரர்.” நவரத்தினம் கூப்பிட்டார்.

முன் கோலில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த மயில் வாகனத்திற்கு யாரோ கூப்பிடுவது கேட்டது. “ம்” யாராய் இருக்கும்?” என்று யோசித்தபடி எழுந்து முற்றத்துக்கு வந்தார். “ஆரது...” முற்றத்தில் நின்றபடியே கேட்டார்.

“நான் தான் மாஸ்ரர்...”

“நாணெண்டு...” என்று கேட்ட மயில்வாகனம் குரலை அடையாளம் கண்டு; “நவரத்தினமே...” என்றார்.

“ஓம்...”

“என்ன இந்த நேரம் வாறியள்? திலகத்திற்கு ஏதாவது....” என்று மயில்வாகனம் முடிக்கு முன்பு நவரத்தினம் சொன்னார். “திலகத்துக்கு ஒண்டுமில்லை. என்ரை கடைக்குட்டி பகீரதன் நேற்றுப் போறதெண்டு காகிதம் குடுத்து விட்டவன். ஒன்பது மணிச் செய்தி கேட்டனீங்களே...”

“விமான விபத்தைப்பற்றிச் சொல்லுறியளே... உள்ளுக்கு வாங்கோ வீட்டிலை இருந்து கதைப்பம்” என்ற மயில்வாகனம் முன்னுக்குச் செல்ல நவரத்தினம் பின்னே சென்றார்.

“செய்தியைக் கேட்ட நேரம் தொடக்கம் நெஞ்சுக்கை ஏதோ செய்யுது”

“கடிதம் எழுதுவங்கள். பிறகு போகாங்கள்... ஏஜென்சிக்காரற்ரை தில்லு முல்லு உமக்குத் தெரியும் தானே. எத்தினை பேரிலை அனுபவப்பட்டனீங்கள்.. பிறகு கடிதத்தை நம்புறியள்” என்றார் மயில்வாகனம்.

கோலில் இலட்சுமி, சுந்தர், மயூரன், மாலதி எல்லோரும் கூடி நின்றனர். நவரத்தினத்தைக் கண்டதும்; “மாமா செய்தி கேட்டவுடனை வருவரெண்டு எனக்குத் தெரியும். நான் அம்மாவுக்குச் சொன்னனான்” என்றான் மயூரன்.

“உனக்கு எப்பவும் நவரத்தினத்தோடை பகிடிதான்” என்று ஏசினாள் இலட்சுமி.
“முந்தநாள் கந்தையற்ரை மருமோன் கொழும்பாலை பிளேனிலை வந்தவர். இவன் சிங்கப்பூருக்கு போக முன்னம் சந்திச்சுக் கதைத்துக் காகிதம் குடுத்திட்டுப் போயிருக்கிறான்.

பிறகு நேற்றுச் சிங்கப்பூரிலை இருந்து ரெலிபோன் எடுத்துக் கதைச்சவனாம். அப்பதான் எல்லாம் சரியெண்டும் நேற்றுப் போற தென்றும் சொன்னவனாம்'' என்றார் நவரத்தினம்.

''எண்டாலும் ஊர்சிதமான தகவல் கிடைச்சால் தான் நம்பலாம். பிளைட்டெண்டு ஏயர் போட்டுக்குப் ஏத்திக் கொண்டு போய் எத்தினை பேரைத் திருப்பிக் கொண்டாறவங்கள். உங்கடை மூத்த மகன் எத்தினை தரம் போய்ப் போய்த் திரும்பி வந்து போனவன்'' என்றார் மயில்வாகனம்.

''ஓம், எண்டாலும் மனங்கேக்குதில்லை... மனிசிக்கும் பிறைசர். தற்செயலாக ஒண்டு நடந்திட்டால் மனிசியும் போயிடும்...'' கலங்கினார் நவரத்தினம்.

''சும்மாய் கற்பனை பண்ணாதைங்கோ. வெள்ளெருவைப் பிள்ளையார் அப்பிடி நடக்க விட மாட்டார்'' என்றாள் இலட்சுமி.

''நான் பிள்ளையாரை நம்புறன். ஆனால் பகீரதன் போறது மனிசிக்கு துப்பரவாய் விருப்பமில்லை. நான் தான் வற்புறுத்தி அனுப்பினனான்''. நவரத்தினத்தின் குரல் லேசாகக் கரகரத்தது.

''மயூரன் நெடுகச் சொல்லுவன், பகீரதன் தன்னிலும் பார்க்கக் கெட்டிக்காரனென்று. நீங்கள் அவனை யெண்டாலும் படிப்பிச்சிருக்கலாம்'' என்றாள் இலட்சுமி.

''ஓமக்கா.... நான் செய்தது பிழையெண்டு இப்ப தெரியுது... எங்களைப் பார்க்க மேய்க்கவும் ஆளில்லை. பகீரதன் இருக்கேக்கை வீட்டு வேலைகளில் பெரும் பகுதியைச் செய்தவன். இப்ப நான் தானே முறிய வேண்டியிக்கு. அதோடை மனிசிக்கும் அவன் போனாப் போலை வருத்தம் அதிகரிச்சிட்டுது''

''திலகத்திற்கும் பகீரதனை அனுப்புறது விருப்பமில்லை. நெடுக இஞ்சை வந்து உனக்கு புத்திமதி சொல்லிப் பகீரதனை அனுப்பாமல் செய்யுங்கோ''. என்று சொல்லுவள். ஆனால் நான் சொன்னதை நீ கேக்கேல்லை..'' என்றார் மயில்வாகனம்.

''நடந்து முடிஞ்ச பிரச்சினையைப் பற்றி கதைச்சு இனி என்ன லாபம். பகீரதனுக்கு ஒன்றும் நடக்காது. நீங்கள் வீட்டை போங்கோ அங்கை திலகம் தனிய...'' என்றாள் இலட்சுமி.

''நான் வாறனக்கா... மாஸ்ரர்'' என்று கூறி விட்டு லாம்புடன் புறப்பட்டார் நவரத்தினம்.

படலை வரை வந்த மயில்வாகனம்; ''எல்லாம் விதிப்படி நடக்கும். வீணாய்க் கற்பனை பண்ணி மனதைக் கெடுக்காதை'' என்றார்.

செய்தி முடிவடைந்து இதயராகம் ஆரம்பமாகி இருந்தது. மயில்வாகனம் மாஸ்ரரின் வீட்டுக்கு அருகில் பேரம்பலத்தின் வீடு இருந்தது. அவரின் வீட்டிலிருந்து பாடும் வானொலியின் சத்தம் நவரத்தினம் வீடு போகும் வரையும் கேட்டது. அவ்வளவு அமைதி அங்கு நிலவியது.

கேற்றைத் திறந்து உள்ளே சென்ற நவரத்தினத்தை அவரது நாய் வீமன் மகிழ்ச்சியோடு ஊழையிட்டு, வரவேற்றது; ''நன்றியுள்ள சீவன். எனக்கு நீதான் துணை.... வா... நீதான் எனக்கு கொள்ளி வைக்கிறதோ தெரியாது''.

''ஆரோடை கதைச்சுக் கொண்டு வாறியள்'' கதவைத் திறந்தபடி திலகம் கேட்டாள்.

''நான் கதைக்க... அதுகும் இரவிலை கதைக்க வீமனைத் தவிர ஆர் இருக்கினை..'' சிரித்தார் நவரத்தினம்.

''உதுக்குத் தான் நான் சொன்னனான் பகீரதனை அனுப்ப வேண்டாமெண்டு... தற்செயலாய் இரவிலை ஒண்டு நடந்தால்...'' திலகத்தின் குரல் துயரத்தால் கரகரத்தது.

‘‘அப்பிடி ஒண்டும் நடக்காது. நடக்கப் பிள்ளையார் விட மாட்டார். இரவிலை ஏதும் நடந்தால் பகீரதனை வெளீலை விட முடியுமே.. விசர்க்கதை கதைக்காமல் போய்ப்படும்.’’ அதட்டினார் நவரத்தினம். இப்படி அதட்டினால் பேசாமல் திலகம் படுத்து விடுவாள் என்பது நவரத்தினத்தின் நினைப்பு. ஆனால் திலகத்தின் மனதுள் துயரம் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது என்பதை அவர் உணரவில்லை.

‘‘வாழ்க்கையிலை நான் சொல்லி எதைக் கேட்டனீங்கள்? இந்த ஊரிலை எத்தினை இலட்சம் சனம் இருக்குது. அதுகளெல்லாம் சந்தோசமாய்த் தானே சீவிக்குது’’ அழுதாள் திலகம்.

‘‘எல்லாரும் சந்தோசமாய்ச் சீவிக்கிறதாய்க் காட்டிக் கொள்ளீனை. இதுக்கெல்லாம் காரணம் இயலாமை தான். இண்டைக்கு வெளீலை போறதெண்டால் பத்துலட்சம் வேணும்.. காசில்லாதவை தான் கனக்கக் கதைக்கிறது’’. நவரத்தினத்தின் பேச்சில் லேசான கடுமை தெரிந்தது.

‘‘காசு தான் வாழ்க்கை எண்டு நினைக்கிறியளே..?’’ சாதரணமாகக் கேட்டாள் திலகம்.

‘‘காசில்லாமல் வாழ முடியுமே..?’’ பட்டெண்டு கேட்டார் நவரத்தினம். திலகம் எதுவும் பேசவில்லை. எத்தனையோ வார்த்தைகள் இதயத்துள்த் துடித்தன. ஆனால் எதைச் சொல்வதிலும் பிரயோசனமில்லை. பிறகேன் சொல்லுவான். என மனதைத் தேற்றினாள் திலகம். எந்த விடயத்திலும் நவரத்தினம் விட்டுக் கொடுக்க மாட்டாரென்பது அவளுக்குத் தெரியும். அதனால் அவள் கதையை வளர்க்க விரும்புவதில்லை.

‘‘நான் சுருட்டு சுத்தின காலத்தை நினைச்சுப் பாரப்பா... அந்த நேரம் எங்களை ஆர்மதிச்சவை? எங்களுக்கு ஆர்கடன் தந்தவை? பொடியள் போனப் பிறகு தானே தலை நிமிர்ந்தனாங்கள். கொண்ணர் கூட எழுபத்தைஞ்சாம் ஆண்டு தோட்ட உறுதியை வாங்கிக் கொண்டு தானே இருபதினாயிரம் தந்தவர்...’’ கோபப்பட்டார் நவரத்தினம்.

‘‘இப்ப ஏனப்பா பழங்கதைகள்... ஏழு பிள்ளைகளிலை ஒண்டை யெண்டாலும் எங்களுக்குத் துணையாய் வைச்சிருக்கலாமெண்டு சொன்னனான். அது தப்பெண்டால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ...’’ கண்களில் உருண்டு திரண்ட கண்ணீர் கன்னங்களால் வழிய, திலகம் சேலைத் தலைப்பால் அதைத் துடைத்தாள்.

‘‘இப்ப என்னத்துக்கப்பா அழுறாய்...’’ நவரத்தினத்திற்கும் ஆறுதல் தேவையாக இருந்தது. டொக்டர் ‘உணர்ச்சிவசப்படக்கூடாதென்று’ கூறினவர். என்பதை நினைத்த நவரத்தினம்; ‘‘அழாதையப்பா உனக்குப் பகீரதனைத் தானே வேணும். நாளைக் காலமை எழும்பினவுடனை யாழ்ப்பாணம் போய் ரெலிபோனிலை கதைச்சு அவனைக் கூப்பிர்றன்’’

‘‘உண்மையாயே...? விடிய எழும்பிப் போங்கோ...’’ என்றவள் சிறிது யோசித்து விட்டுச் சொன்னாள்; ‘‘அவன் நேற்றுப் போறதாய்க் கந்தையற்ரை மருமோன் கொண்டந்த கடிதத்திலை எழுதினவனெல்லே..’’

‘‘ம், உப்பிடி எத்தினை கடிதங்கள் எழுதிப் போட்டான். எனக்கெண்டால் நம்பிக்கை இல்லை. கொழும்பிலை நிக்கேக்கை கடிதம் குடுத்தவன், பிறகு சிங்கப்பூரிலை இருந்து ரெலிபோன் பண்ணி நேற்றுப் போகாட்டில் அடுத்த மாதம் தான் போற தெண்டவனாம்’’.

‘‘நீங்கள் ரெலிபோன் பண்ண வருவனே’’ சந்தோசத்துடன் கேட்டாள் திலகம்.

‘‘அவனுக்கும் போக விருப்பமில்லைத்தானே. நான் தானே கரைச்சல் குடுத்து அனுப்பினனான். வரச் சொன்னால் வருவன். இஞ்சை வந்து படிக்கட்டன். எங்கடை பரம்பரையிலையும் டொக்ரர் ஒருத்தன் வரட்டன்’’ உற்சாகமாகக் கூறினார் நவரத்தினம்.

“எவ்வளவு கெட்டித்தனமாய்ப் படிச்சவன். அவனைப் படிப்பிக்கிற மாஸ்ரர் மார் ஒருத்தருக்கும் அவன் வெளீலை போறது விருப்பமில்லை. போறத்துக்கு முதல் நாள் கெமிஸ்ரி படிப்பிக்கிற மாஸ்ரர் வந்து என்னோடை கதைச்சவர்...

“என்ன?.. என்ன?... உன்னோடை கதைச்சவரோ...? நீர் எனக்குச் சொல்லேல்லை..”

“சொல்லி என்ன பிரியோசனமென்று சொல்லாமல் இருந்திட்டன். உங்களோடை கதைக்க வேணுமெண்டு தான் வந்தவர். நீங்கள் சித்தங்கேணிக்குப் போனதாலை காத்திருந்திட்டுப் போட்டார்..”

“அப்படியே..? அவர் என்ன சொன்னவர்?” ஆவலோடு கேட்டார் நவரத்தினம்.

“மயில்வாகனம் மாஸ்ரற்றை மயூரனிலும் பார்க்கக் கெட்டிக்காரன். கட்டாயம் ஒரு டொக்ரராய் வருவன் என்றும், ஏழுபிள்ளைகள் வெளிநாட்டிலை இருக்கிறத்தாலை பகீரதனைப் படிப்பியுங்கோ” என்றும் சொன்னவர்..”

நவரத்தினம் பெருமூச்சு விட்டார். தான் ஆராயாமல் தவறான முடிவு எடுத்து விட்டதாக எண்ணத் தொடங்கினார்; “பிள்ளையாரே அவனைக் காப்பாற்று, எப்பிடியும் அவனைக் காப்பாற்று. அவனைக் கூட்டி வந்ததும் பெரிய தொரு அபிசேகம் செய்வன். அதோடை இந்த வருசம் தேருக்கு காவடி எடுப்பன்” என்று மனதுக்குள் நேர்ந்து கொண்டார்.

“என்னப்பா யோசிக்கிறியள்?”

“யோசிக்க என்ன இருக்கு? நீர் போய்ப்படும். காலமை நாலுமணிக்கு எழும்பினால் தான் நேரத்தோடை போய் ரெலிபோன் எடுக்கலாம்..” என்றார்.

திலகத்திற்கு என்றுமில்லாத மகிழ்ச்சியாக இருந்தது. பிள்ளையார் தான் அவருடைய மனத்தை மாற்றியதாக நினைத்து; “இந்த முறை திருவிழாக்குப் பத்து நாட்களும் அடியழிப்பேன்” என்று நேர்ந்து கொண்டான்..

சாமக் கோழி எங்கோ கூவியது. நாய்கள் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தன. “இப்ப அனேகமான வீடுகளிலை ஆட்கள் இல்லை. ஆர் ஆற்ரை வீட்டு ஓடுகளைக் கழட்டுறாங்களோ ஆருக்குத் தெரியும்” என்று மனதுக்குள் நினைத்தவாறு கட்டிலில் புரண்டார். நித்திரை வர மறுத்தது.

பீ.பீ.சியில் மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஆங்கிலத்தில் செய்தி ஒலிபரப்புவார்களென்று நவரத்தினம் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் அவருக்கு ஆங்கிலம் தெரியாது. தான் படிக்காததை நினைத்துக் கவலைப்பட்டார். எல்லாப் பிள்ளைகளும் ஆறாம், ஏழாம் வகுப்புக்களோடை கப்பல் ஏறப் பகீரதன் தான் ஏஎல் வரை படிச்சவன். அவனைப் படிப்பிச்சிருக்கலாம் என்று எண்ணினார்; “இப்ப என்ன காலம் போயிட்டுதே காலமை போய்வரச் சொன்னால் ஒருகிழமையிலை வந்திடுவன். அவன் படிக்குமட்டும் படிப்பிக்க வேண்டும்” என்று நினைத்தார். மனம் லேசாகி இருப்பது போல இருந்தது.

## *05*

மயில்வாகனத்திற்கு ஊரில் உள்ள சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்திற்கு இடமாற்றம் கிடைத்திருந்தது. ஊரில் வண்ஏபீ – வண் சீ பாடசாலைகள் வெற்றிடமாக இருந்தும் அவருக்கு அப்பாடசாலைகளில் ஒன்று கிடைக்காது வருத்தமாக இருந்தது. அவரை விட அவரது மனைவியும் பிள்ளைகளும் தான் அதிகம் கவலைப்பட்டார்கள். இலட்சுமியம்மாள் அமரிக்கன் மிசன் கல்லூரியைக் கேட்கும் படி வற்புறுத்தியும் மயில்வாகனம் கேட்கவில்லை. இல்லாவிட்டால் இடமாற்றத்தை இரத்துச் செய்து விட்டுப் பழைய பாடசாலைக்குச் செல்லும் படி கெஞ்சிக் கேட்டாள். மயில்வாகனம் பிடிவாதமாக மறுத்து விட்டார்; “வீட்டில் இருந்து நூறு யார் தூரத்தில் வேலை செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்றார்.

வண்சீ பாடசாலையில் அதிபராக இருந்த அவர், ஒரு இரண்டாம் தரப் பாடசாலையில் அதிபராக இருப்பது இலட்சுமியம்மாளுக்கு அவமானமாக இருந்தது. அதோடு வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பிள்ளைகள் பலர் அங்கு படிப்பதால் வேண்டாத பிரச்சினைகள் பல உருவாகுமெனப் பயந்தாள். அத்துடன் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அப்பாடசாலையில் கற்பிப்பதே அவமானமென நினைத்து அவ்வூர் ஆசிரியர்கள் பலர் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டனர். அதோடு அப்பாடசாலைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் ஏதோ பணிஸ்மன்ட்டில் வந்திருக்கிறார்களென்று ஊரில் கதை அடிபடும். அப்படியான பாடசாலைக்கு மயில்வாகனம் அதிபராக நியமிக்கப்பட்டது அக்குடும்பத்தில் ஒருவருக்கும் பிடிக்கவில்லை.

வழக்கம் போல எந்த விதமான மாறுதலும் இல்லாமல் மயில்வாகனம் பாடசாலைக்குப் புறப்பட்டார். இலட்சுமியம்மாள் தண்ணீர்ப் போத்தல், பிளாஸ்க் அடங்கிய வாக்கை ஏற்கனவே சைக்கிலில் கொழுவி இருந்தாள். ஒப்பிஸ் வாக்குடன் வெளியே வந்த மயில்வாகனம் மனைவி கொழுவிய வாக்குக்கு அருகில் ஒவ்விஸ் வாக்கைக் கொழுவி விட்டுச் சைக்கிலை எடுத்துக் கொண்டு மனைவியைப் பார்த்து; ‘வாறன்’ என்றார்.

மனதுள்ப் பொங்கியெழுந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கியபடி தலையை ஆட்டினாள். இலட்சுமியம்மாள்.

சைக்கிலை உருட்டிக் கொண்டு ஒழுங்கைக்கு வந்த மயில்வாகனம் திரும்பிப் பார்த்தார் இலட்சுமியம்மாள் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது; “அவள் படும் வேதனை நியாயமானது தான். ஆனால் என்னால் என்ன செய்ய முடியும்...?” அவர் கல்விப் பணிப்பாளரை அமெரிக்கன் மிசன் கல்லூரியைத் தனக்குத் தருமாறு கேட்ட போது அவர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. “மிஸ்ரர் மயில்வாகனம், நீர் கெட்டிக்காரன் தான். பள்ளிக்கூடத்தை நடத்துவீர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஆனால் நீர் கிரேட்ரூ தானே. தற்செயலாக ஒரு கிரேட் வண் காரன் அக்கல்லூரியைக் கேட்டால் நான் குடுக்க வேணும். அப்ப உம்முடைய நிலை என்ன?” .

“சரியான பதில் தான். அதில் நியாயம் இருப்பதாக மயில்வாகனம் நினைத்தார். ஊரில் தான் கிரேட் வண் அதிபர் இல்லை. தற்செயலாக யாராவது இடம் மாறி வந்தவர்கள் கேட்டால் கரைச்சல். சின்னப் பாடசாலையோ பெரிய பாடசாலையோ கடமையைச் செய்வம்” என நினைத்துக் கொண்டார்.

பாடசாலைக்கு வரும் வரை முதல் நாள் நடந்த உரையாடல்கள் அவரது செவிகளில் ஒலித்தது. பாடசாலை கேற் அருகில் இறங்கினார். கேற் சாத்தப்பட்டிருந்தது. கேற்றால் தான் பாடசாலைக்குள் போக வேண்டு மென்றில்லை கேற்றைத் தவிர மற்றெல்லா இடமும் திறந்த வெளியாய் இருந்தது. மயில்வாகனம் மெதுவாகக் கேற்ரைத் திறந்து உள்ளே சென்றார். அவரைத் தவிர வேறு யாரும் அங்கில்லை. மணிக்கூட்டைப் பார்த்தார். ஏழு நாற்பது. எட்டுப் பதினைந்துக்குத் தான் பாடசாலை ஆரம்பிப்பதாகத் தற்பொழுது கடமையாற்றும் அதிபர் சொன்னார். இன்னும் முப்பத்தைந்து நிமிடங்கள் இருக்கிறது” என்று நினைத்த மயில்வாகனம் சைக்கிலை நிறுத்தி விட்டுத் திறந்த படி இருந்த ஒரு வகுப்பறையினுள்ச் சென்று நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார். அவரது மனம் பழைய பாடசாலைக்குச் சென்றது.

பருத்திமலை மகாவித்தியாலயமும் பத்து வருடங்களுக்கு முன்பு இந்தநிலையில் தானே இருந்தது. அங்கு அவர் சென்ற முதல் நாள் காலை இந்நேரம் தான் இருக்கும். உள்ளே சென்ற அவரை வயதான காவலாளி குமாரசாமி வரவேற்றான். “வாங்கோ சேர்.... வாங்கோ சேர்... நீங்கள் தானே புது அதிபர்?

“ஓம், நீர் ஆர்”

“நான் தான் வாச்சர் குமாரசாமி. அடுத்த மாதம் பென்சன் எடுக்கப் போறன். அறுபது வயதாச்சு”

“இஞ்சை எத்தினை வரிசமாய் வேலை செய்யிறீர்..?”

“இஞ்சை இருபது வரிசமாய்க் கசுவலாய் வேலை செய்தனான். பேமனன்ராகி பதினைஞ்சு வரிசம்” குமாரசாமி சிரித்தார்.

“அப்ப முப்பத்தைஞ்சு வரிச சேவிஸ்”.

“ஓம் சேர்....” குமாரசாமி சிரித்தான். பற்களில் வெற்றிலைக் காவி படிந்திருந்தது. சவரம் செய்து ஒரு மாதத்துக்கு மேல் இருக்கும் போல இருந்தது. பல இடங்களில் கிழிந்து தைக்கப்பட்ட சாரம். எப்போதாவது ஒரு முறை சவர்காரத்தைக் காணும் ஒரு அரைக் கைசேட்.

“எப்பிடிப் பள்ளிக்கூடம்...?”

குமாரசாமி ஒன்றும் பேசவில்லை. முகத்தில் பலவித உணர்வுகள் ஓடின.

“உண்மையை நீர் பயமில்லாமல் சொல்லும்...”

“குமாரசாமி எங்கை போறாய்? இஞ்சை வா, உனக்கு எத்தினை தரம் சொல்லுறது. நேற்று நீ எங்கை போனனீ...?” இப்படியான வார்த்தைகளோடு பழகிய குமாரசாமிக்கு மயில்வாகனத்தின் பணிவான அன்பொழுகும் பேச்சு இதமாக இருந்தது.

“பரவாயில்லைச் சேர்.... எல்லாம் அதிபரைப் பொறுத்தது. அஞ்சு வரிசத்துக்கு முன்னம் ஏகாம்பரம் எண்டொருத்தர் அதிபராக இருந்தார். அப்ப நல்லாய் இருந்தது...” என்று நிறுத்தினான் குமாரசாமி.

“இப்ப...”

“நான் எப்பிடிச் சேர் சொல்லுறது. இன்னும் ஒரு மணித்தியாலத்திலை நீங்களே புரிஞ்சு கொள்ளுவியள்” என்றான் குமாரசாமி.

குமாரசாமியின் பேச்சிலிருந்து பாடசாலையின் நிலமையை ஓரளவு புரிந்து கொண்டார் மயில்வாகனம். அதற்குகு மேல் அவனிடம் பாடசாலையைப் பற்றி கேட்க முடியாது. எனவே; “உமக்கு எத்தினை பிள்ளைகள்” என்று கேட்டார்.

“மூன்று பெம்பிளைப் பிள்ளையள் சேர்”

“பிள்ளைகள் கலியாணம் கட்டிட்டினையே..”

“இரண்டு பேர் கட்டீற்றினை”

“இவர் தான் எங்கடை புது அதிபர்” சத்தம் வந்த திசையைப் பார்த்தார் மயில்வாகனம். நாலைந்து மாணவர்களும், அப்பாடசாலையில் தற்காலிகமாக அதிபர் பதவி வகிக்கும் நடராசாவும் நின்றனர்.

பழைய பாடசாலை நினைவுகளில் இருந்து மீண்ட மயில்வாகனம் நேரத்தைப் பார்த்தார். எட்டுப் பத்து.

“எட்டுப் பத்தாகிறது பிள்ளைகளையோ ஆசிரியர்களையோ காணவில்லை.”

“இது ஊர்தானே சேர்... அப்பிடி இப்பிடித் தான் வருவினை” என்றார் நடராசா.

“எத்தினை மணிக்கு பள்ளிக்கூடம் தொடங்கிறது”

“எட்டுப் பதினைந்துக்கு” என்றார் நடராசா; “அதை நான் கேட்கேல்லை. ஆசிரியர்கள் பிள்ளைகளெல்லாம் வந்து வகுப்புத் தொடங்க எத்தினை மணியாகும்” மயில்வாகனம் கேட்டார்.

“ஒன்பது மணி செல்லும் சேர்” என்றார் நடராசா. நடராசாவுக்கு மயில்வாகனத்தைப் பற்றித் தெரியும். மிகமிகக் கண்டிப்பானவர்; ஆனால் இரக்கம் மிக்கவர்; அன்பானவர்; கடமையில் இருந்து தவறாதவர். இப்பிடியானவருக்குக் கீழை எங்கடை வாத்திமார் என்ன பாடு படப் போயினை” என்பதை நினைத்துச் சிரித்துக் கொண்டார்.

“உமக்கு நான் இஞ்சை வாறது விருப்பமே?” மயில்வாகனம் கேட்டார்.

“ஓம் ஓம் சரியான விருப்பம். நான் தான் நெடுக அதிபரைப் போடுங்கோ என்று டிரைக்ரருக்குக் கரைச்சல் குடுத்தனான்” அவசரமாகச் சொன்னார் நடராசா.

“ஏன் உமக்கு அதிபர் பதவியிலை விருப்பமில்லையே..?”

“எனக்கெண்டால் துப்பரவாக விருப்பமில்லை. இது பெரிய சுமை பாருங்கோ. இதை எல்லோராலும் சுமக்கேலாது. ஆசைப்பட்டுத் தலைவலியைத் தூக்கி வைச்சுக் கொண்டு திண்டாடுறதை விடச் சாதாரண ஆசிரியராய் இருந்து கடமையைச் செய்வதைத்தான் நான் விரும்புறன். மூன்று மாதத்துக்கு முந்தி இங்கு கடமையாற்றிய அதிபர் இளைப்பாறியவுடனை என்னைப் பொறுப்பேற்கச் சொன்னவை. நான் மறுத்திட்டன். பிறகு ஒரு அதிபரை நியமிக்கும் வரை பொறுப்பேருங்கோ என்று சொன்னதாலை தான் பொறுப்பேற்றனான். இப்ப நீங்கள் வந்தது பெரிய சந்தோசம்.” என்றார் நடராசா.

“வாங்கோ உள்ளுக்கு” என்ற நடராசா வாக்கில் இருந்து ஒவ்விஸ் அறைத்திறப்பை எடுத்து அறையைத் திறந்தார். உள்ளே ஒரு அதிபருக்கான மேசையும் மூன்று கதிரைகளும் இருந்தன. சுவரில் பிள்ளையார், கந்தசாமியார், சத்திய சாய்பாபா ஆகியோரது படங்கள் இருந்தன. நடராசா முதல் நாள் படங்களுக்கு வைத்த பூக்களை எடுத்து விட்டு, அன்று கொண்டு வந்த பூக்களைப் படங்களுக்கு வைத்தார். பின்பு எனக்குப் பாபாவிலை நம்பிக்கை இருக்கு. அதனால் பாபாவின்ரை படத்தை வைச்சனான். உங்களுக்கு விருப்பமில்லாட்டில் கழட்டி ஸ்ராவ்ரூமிலை கொழுவுறன்..” என்றார்.

“இல்லை அது இருக்கட்டும்” என்றார் மயில்வாகனம்.

நடராசாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது; “இருங்கோ சேர்” என்றவர் இன்று நல்ல நாள் இன்றே எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைச்சிர்றன்” என்றார்.

மயில்வாகனம் பதிலேதும் கூறவில்லை, சிறிது நேரம் ஏதோ யோசித்தார்; “இங்கு எத்தினை ஆசிரியர்கள் இருக்கினை?” என்று கேட்டார்.

“மூண்டு தொண்டர் ஆசிரியர்களும் பதின்நான்கு நிரந்தர ஆசிரியர்களும்..” என்றார் நடராசா.

“தொண்டர் ஆசிரியர்களுக்குக் காசு குடுக்கிறனீங்களே”

“ம்... என்னத்தைப் பிடிச்சுச் சேர் குடுக்கிறது. வசதிக்கட்டணமே கட்டாதுகள்”

எட்டுப் பதினைந்துக்குப் பாடசாலை ஆரம்பமாகும் மணி அடித்தது. அது வரை மயில்வாகனம், நடராசா உட்பட நான்கு ஆசிரியர்களே வந்திருந்தனர்.

“வாருங்கோ பிறேயருக்குப் போவம்” நடராசா எழுந்தார்.

“எத்தினை பிள்ளைகள் படிக்கினை” மயில்வாகனம் கேட்டார்.

“இடாப்பிலை இருநூற்றுத் தொண்ணூற்றாறு இருக்கு. ஒரு நூற்றி எழுபத்தைந்து தான் வரும்” என்றார் நடராசா.

பிரார்த்தனை மண்டபத்தில் மாணவர்கள் வரிசையாக நின்றனர். மயில்வாகனத்தை ஏற்கனவே மாணவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால் அவர்கள் பரபரப்படையவில்லை. அத்துடன் மயில்வாகனம் அதிபராக வரும் செய்தியை முதல் நாளே அவர்கள் அறிந்து விட்டனர்.

காலை ஆராதனை தொடங்கியது. பஞ்சபுராணங்களைப் பண்ணுடன் ஓதிய பின்பு, காயத்திரி மந்திரம் ஓதப்பட்டது. நடராசா மயில்வாகனத்தை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த பின் பேசும்படி அழைத்தார்.

மயில்வாகனம் மேடையில் நின்றவாறு மாணவர்களின் முகத்தைப் பார்த்தார். அனேகமானவை கண்ட முகங்கள்; ‘‘அன்பான மாணவர்களே! ஆசிரியர்களே! உங்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கம். நான் இவ்வளவு காலமும் வெளியூரில் கடமையாற்றி விட்டு இன்று சொந்த ஊருக்கு இடம் மாறி வந்துள்ளேன். இப்பொழுது தான் நினைக்கிறேன் நாலைந்து வருடங்களுக்கு முன்பு நான் இப்பாடசாலைக்கு வந்திருக்கலாமென்று. கல்வி கற்பிப்பது எமது பொறுப்பு. கல்வி கற்பது உங்கள் கடமை. நல்ல முறையில் கல்வி கற்க வேண்டுமானால் தினமும் பாடசாலைக்கு வரவேண்டும், நேரத்திற்கு வரவேண்டும். இந்த இரண்டு விடயங்களிலும் நான் மிகவும் கண்டிப்பாக இருப்பேன். நீங்கள் நல்ல முறையில் கல்வி கற்க உதவியாக இருப்பேன். வணக்கம்’’ என்று கூறி விடை பெற்றார் மயில்வாகனம்.

மாணவர்கள் கலைந்து வகுப்பறைகளுக்குச் சென்றனர்.

பகல் ஒரு மணி இருக்கும் மயில்வாகனமும் நடராசாவும் அலுவலக அறையில் கோவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது வசந்திரீச்சர் பரபரப்போடு அங்கே வந்தார்.

அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்த நடராசா; ‘‘என்ன ரீச்சர்?’’ என்று கேட்டார்.

‘‘சேர்’’ என்ற வசந்தி, புதிய அதிபர்; ‘‘என்ன நினைக்கிறாரோ’’ என்று நினைத்து மௌனமாக நின்றார்.

‘‘சொல்லுங்கோ ரீச்சர்’’ என்றார் நடராசா.

‘‘வந்து நவரத்தினத்தாற்ரை மகன் பகீரதன் விமான விபத்திலை செத்துப் போனானாம்.’’

‘‘உமக்கு ஆர் சொன்னது’’ அதிர்ச்சியோடு கேட்டார் நடராசா.

‘‘பன்னிரண்டே முக்கால் செய்தீலை சொன்னதாம். தம்பி வந்து சொல்லிப் போட்டுப் போறான். அது தான் போக வேணும்’’ என்றாள் வசந்தி.

‘‘விசர் மனிசன். ஆறேழு பிள்ளைகள் வெளீலை இருக்கு இவனையும் அனுப்ப வேணுமே? காசுப்பிசாசு அந்தாளைப் பிடிச்சு ஆட்டுது’’ என்ற நடராசா, வசந்தியைப் பார்த்து; சேரைக் கேட்டுட்டுப் போம்’’ என்றார்.

‘‘லீவு கடிதத்தை எழுதித் தந்திட்டுப் போங்கோ ரீச்சர்’’ என்ற மயில்வாகனம், நடராசாவைப் பார்த்துச் சொன்னார்; ‘‘செய்தியை கேட்டிட்டு இராத்திரி நவரத்தினம் வீட்டை வந்திட்டுது. ஒரு மாதிரிச் சமாளிச்சு அனுப்பினனான். திலகத்திற்குக் கைபிறசர் என்னென்ன நடக்கப் போகுதோ’’ என்று கவலைப்பட்டார்.

‘‘அப்ப நீங்கள் போகேல்லையே சேர்’’ என்று கேட்டார் நடராசா.

‘‘இப்பென்ன பிரேதம் இருக்கே? பள்ளிக் கூடம் விட்ட பிறகு போவம்’’ என்றார் மயில்வாகனம்

‘‘நீர் தான் எல்லா உதவிகளும் செய்ய வேணும். நான் அதிகாரங்களைப் பங்கீடு செய்து தான் பாடசாலையை நடத்திறது வழக்கம். ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்களைப் பங்கீடு செய்து குடுத்திட்டால் நான் சும்மாய் இருக்கலாம்’’ என்று சிரித்தார். ‘‘பின் இங்கு உள்ள பிரச்சினையான வாத்திமார் ஆர்’’ என்று கேட்டார்.

நடராசாவுக்குத் தர்மசங்கடமாயிருந்தது; "ஆள் பொல்லாத ஆள்" என்று கேள்விப்பட்டிருக்கிறார்; "அது வந்த உடனேயே பல விடயங்களில் தெரிகிறது" என்று நினைத்தார்.

"நான் யாருக்கும் சொல்ல மாட்டன். பிரச்சினைகளை அணுக முன்னம் அதைப்பற்றித் தெரிந்திருக்கிறது நல்லதில்லையா?" என்றவர் நடராசாவின் முகத்தைச் சிலகணங்கள் உற்றுப் பார்த்தார். பின்பு சொன்னார்; "குறை நிறைகளை அறிந்து கொள்ள விரும்புறனே தவிரத் தண்டிக்க விரும்பேல்லை. ஒவ்வொருவருக்கும் பல்வேறு பிரச்சினைகள், குறைகள் இருக்கும் அதை நாம் நிவர்த்தி செய்திட்டால் கடமையைச் சரியாய்ச் செய்வினை. இதை அனுபவத்திலை நான் கண்டனான்".

மயில்வாகனத்தின் குரலில் ஒரு மந்திர சக்தி இருப்பது போலிருந்தது. நடராசா எதுவும் பேசத் தோன்றாமல் இருந்தார்.

"சிவராசா எப்பிடி?"

"பிரச்சினையில் இருந்து தப்ப முடியாது" என்று தோன்றியது நடராசாவுக்கு. "பிழையில்லை கொஞ்சம் பிந்தி வருவர். அதோடை ஞாயம் கதைப்பார். முந்தின அதிபர்மார் அவரை மதிக்கிறேல்லை. அதாலை நல்ல பாடங்களொன்றும் குடுக்கிறேல்லை". என்றார் நடராசா.

"கண்மணி ரீச்சர் எப்பிடி.."

"சரியான வாய் ஒருத்தரையும் மதிக்கிறேல்லை.."

"கற்பித்தல் எப்பிடி?"

"ஒரே அலட்டல் தான்.."

"மிசிஸ் கந்தப்பு..."

வரமுன்பே பிரச்சினைக்குரியவர்களை இனங் கண்டு விசாரிக்கிற பாங்கில் இருந்து சமாளிப்பது கஷ்ரம் என நடராசா புரிந்து கொண்டார்; "தன்னுடைய பிள்ளைகளையெல்லாம் வெழுக்கிடுத்திப் பட்டினத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு அனுப்பி விட்டு இங்கு வந்து பட்டிணப் பாடசாலைகளைப் புகழுறது தான் வேலை" சிரித்தார் நடராசா.

"வசந்தி ரீச்சர் எப்படி" மயில்வாகனம் கேட்டார்.

"மிக மிக நல்லவர் போலத் தன்னை எவ்வேளையிலும் காட்டிக்கொள்வா. ஆனால் நம்பிக்கைக்குரியவரல்ல. எப்பொழுதும் தனது வேலையில் மிகவும் கவனமாக இருப்பா, வேண்டியளவு உதவிகள், ஒத்தாசைகள் செய்வா, எல்லோருக்கும் நல்லவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் புத்திசாலி. ஆசிரியர்களோடு கதைக்கும் போது அவர்களோடு சேர்ந்து அதிபரையும், அதிகாரிகளையும் குறைசொல்வா. நேரில் சிரித்துக் கதைத்து மயக்குவா. இந்தப் பள்ளிக்கூடத்திற்குத் தான் தான் அதிபராக வரவேண்டுமென்ற எண்ணம் அவவுக்கு இருந்தது. முந்திய அதிபரோடு மிகவும் அன்பாக இருந்தவா. ஆனால் பின் அவருக்குப் பிரியாவிடை வைக்கும்போது சில பெற்றாருடன் சேர்ந்து தடுத்தவா. நம்பவே கூடாது. இன்று மாலை கட்டாயம் குடும்பத்தோடை உங்கள் வீட்டை வருவா.." நடராசா சொல்லிக் கொண்டிருந்தார்.

மயில்வாகனத்தால் அதைக் கேட்கமுடியவில்லை; "தான் கேள்விப்பட்டதும் அவர் கூறுவதும் சரியென நினைத்தார். வசந்தி ரீச்சர் முதல் நாள் இரவே வீட்டுக்கு வந்துவிட்டார்" என நினைத்தவாறு கதையைத் திசை திருப்ப எண்ணினார்.

"சரி, நீங்கள் போய்ச் சிவராசா மாஸ்ரரை நான் வரச் சொன்னதாய்ச் சொல்லுங்கோ.."

நடராசா எழுந்து சென்ற சிறிது நேரத்தில் சிவராசா மாஸ்டர்; ‘‘குட்மோணிங் சேர்’’ என்றபடி உள்ளே நுழைந்தார்.

‘‘இருங்கோ..’’

சிவராசா இருந்ததும்; ‘‘நான் உங்களுக்கு ஒரு பெரிய பொறுப்புத் தரப் போறன்’’ என்று நிறுத்தி விட்டுச் சிவராசாவை உற்று நோக்கினார் மயில்வாகனம்.

சிவராசா ஆரம்பத்தில் மிகவும் திறமையான ஆசிரியராக இருந்தவர். சில பிரச்சினைகள் காரணமாக அமரிக்கன் மிசன் கல்லூரியில் இருந்து அவரது மனைவியை மாற்றிய பின்பு அதைப் பற்றி விமர்சித்ததால் ஆசிரியர்கள் அவரோடு கதைக்கப் பயப்பட்டனர். அதிபர் அவரைக் வேண்டாதவராக ஒதுக்கி விட்டார். இது நடந்தது கொத்தணி அமைப்பு இருந்த காலத்தில், ஆனால் அது இப்போதும் நடைமுறையில் இருந்தது.

‘‘என்ன சேர்....’’ ஆவலோடு கேட்டார் சிவராசா.

‘‘உம்முடைய பிரச்சினைகளெல்லாம் எனக்குத் தெரியும். இது எமது ஊர்ப் பாடசாலை. நடந்ததெல்லாத்தையும் மறந்திட்டு இந்தப் பாடசாலையை உயர்த்திற நோக்கத் தோடை நாங்கள் செயலாற்றுவம். உம்மமாலை சிறப்பாகக் கற்பிக்க முடியும் என்று நான் நம்புறன். அந்த நம்பிக்கையிலை உமக்கு ஐந்தாம் ஆண்டை தாறன். சிறப்பாகக் கற்பித்துப் பத்துப் பிள்ளைகளைப் பாஸ்பண்ணப் பண்ணும்’’.

‘‘பத்தோ’’ சிரித்தார் சிவராசா.

‘‘முயற்சித்தால் முடியும். பருத்திமலை மகாவித்தியாலயத்தின் சரித்திரத்தில் ஒரு பிள்ளை கூட ஸ்கொலசிப் பாஸ்பண்ணுறேல்லை. நான் போன பிறகு’’ என்று நிறுத்தியவர் சிறிது நேரம் தாமதித்துவிட்டுச் சொன்னார்; ‘‘போன முறை பதினொரு பேர் பாஸ்பண்ணினது. இது என்ரை கெட்டித்தனமில்லை. ஆசிரியர்களின் ஒத்துழைப்புத் தான். முயற்சி செய்து பாருங்கோ’’.

சிவராசா மௌனமாக இருந்தார். முந்தின அதிபரெண்டால் சட்ட ஞாயம் பேச ஆயிரம் வார்த்தைகள் தொடராக வரும். இப்போது ஒரு வார்த்தை கூட வரவில்லை. அது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

‘‘உங்களுக்குள்ள பிரச்சினைகளைச் சொல்லுங்கோ. என்னாலான உதவிகளைச் செய்யிறன். மனைவியைச் சைக்கிலில் கொண்டு போய் விட்டுட்டு வர கொஞ்சம் லேட்டாகும் தான். பரவாயில்லை என்ன யோசிக்கிறியள்...’’

‘‘ஒண்டு மில்லைச் சேர்.... நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்தேக்கை நான் மறுக்கிறது சரியில்லை. நான் இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளுறன்..’’ உணர்ச்சி வசப்பட்டார் சிவராசா.

‘‘நன்றி.... நன்றி... ஒருக்கால் மிசிஸ்கந்தப்புவை வரச் சொல்லுங்கோ’’

‘‘சரி சேர்....’’ என்று புறப்பட்டார் சிவராசா.

சிறிது நேரத்தில்; ‘‘வரச் சொன்னனீங்களாம் சேர்...’’ என்றபடி அலுவலக அறைக்குள் வந்தார் மிசிஸ்கந்தப்பு.

‘‘ஓம்.... இருங்கோ..... நான் இப் பாடசாலைக்கு வந்தது பட்டணத்தில் உள்ள பாடசாலைகளினுடைய தரத்திற்கு இப்பாடசாலையை உயர்த்த வேணும் என்பதற்காக. இதுக்கு நீங்களெல்லாம் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்’’

“ஓம் சேர்... ஓம் சேர், நான் என்னாலை முடிஞ்சதைச் செய்வன்” தடுமாறினார் மிசிஸ் கந்தப்பு.

“பாடசாலை தொடங்க முன்பு வாருங்கோ.... பிறர் பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானாய் வளரும் என்பினை. இந்த முறை உங்கடை மகள் ஓ எல் எடுக்கிறாளெல்லே.. விஞ்ஞான பாடத்தை நன்றாக ஆயத்தப்படுத்தினால் மகளுக்கும் நல்லது பள்ளிக்கூடத்துக்கும் நல்லது” சிரித்தார் மயில்வாகனம்.

“ஓ... ஓ” தடுமாறினார் மிசிஸ்கந்தப்பு.

“பெரிய பாடசாலை மாணவர்களைப் போலச் சிறிய பாடசாலை மாணவர்கள் ரியூற்ரறியை நம்பியிருப்பதில்லை. ஏனெண்டால் அவர்கள் வறியவர்கள் அத்துடன் அவர்களின் பெற்றோர் கல்வியில் அக்கறை இல்லாதவர்கள். எனவே அவர்களுக்கு நாங்கள் மேலதிக வகுப்புக்களை வைக்க வேண்டியிருக்கு நீங்கள் பாடசாலையை விட்ட பின்பு மேலதிக சயன்ஸ் வகுப்பு எடுக்க வேணும்”

“அதுக் கென்ன சேர்...” தலையாட்டியபடி சிரித்தார் மிசிஸ் கந்தப்பு.

“சரி.... சரி..... மிகவும் நன்றி நடராசா மாஸ்ரரை வரச் சொல்லுங்கோ”

மிசிஸ் கந்தப்பு போய்ப் பதினைந்து நிமிடங்களுக்குப் பின்பு தான் நடராசா சிரித்துக் கொண்டு வந்தார்.

“என்ன சிரிக்கிறியள்...?”

“சிவராசா மாஸ்ரரை நினைக்கச் சிரிப்பு வந்துது”.

“ஏன்...?”

“ஸ்ராவ்ரூமிலை ஒரே பிரசங்கம். இந்த முறை நடத்திக் காட்டுறன் என்கிறார்”

மயில்வாகனம் பூரிப்புடன் சிரித்தார்.

## *06*

இலட்சுமியம்மாள் நவரத்தினத்தின் வீட்டுக்கு வந்த போது, நவரத்தினத்தின் வீட்டுப் படலையில் நாலைந்து பேர் கூடிநின்றனர். இலட்சுமியம்மாளைக் கண்டதும் அவர்களுக்கு ஒரு நிம்மதி வந்தது.

“என்ன இதிலை கூடி நிக்கிறியள், உள்ளுக்குப் போகேல்லையோ?” என்று கேட்டாள் இலட்சுமியம்மாள்.

“நவரத்தினத்தாரைக் காணேல்லை. மனிசி பிறைசர்காரி. உள்ளுக்குப் போய் நாங்கள் கதைக்க ஏதாவது இசகு பிசகாய் நடந்தால் கரைச்சலெல்லே” என்றார் காசிப்பிள்ளை.

காசிப்பிள்ளை தான் அந்த ஊரின் சமூகசேவகன். எந்த வீட்டில் எது நடந்தாலும் அந்த நேரத்தில் அங்கே நிற்பார். எல்லாவற்றையும் முன் நின்று செய்வார். கடைசியாகக் கேட்பது குறை தான். இருந்தாலும் அவர் அவற்றையெல்லாம் பொருட்படுத்தியது கிடையாது. சனங்களும் அதை இதைச் சொன்னாலும் தேவைகள் ஏற்படும் வேளைகளில் அவருடைய வீட்டு வாசலில் தான் போய் நிற்பார்கள். சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரிக் கட்சிமாறி அதை இதைக் கதைத்து பேசிற இடத்தில் பேசி சிரிக்கிற இடத்தில் சிரித்துக் காரியத்தை ஒப்பேற்றிவிடுவார்.

செய்தியைக் கேட்டவுடன் காசிப்பிள்ளை நவரத்தினத்தின் வீட்டுக்கு ஓடி வந்தார். வீட்டில் ஆளரவம் இல்லாதமாதிரி இருந்ததால் வெளியே வந்து படலையடியில் நின்றார். அதற்குப் பிறகு வந்த நாலைந்து பேரையும் உள்ளே செல்ல விடாமல் தடுத்து வைத்திருந்தார்.

''இலட்சுமிஅக்கா, நீங்கள் ஒருக்கால் உள்ளுக்குப் போய் நிலமையை ஆராஞ்சு கொண்டு வாருங்கோ'' என்றார் காசிப்பிள்ளை.

இலட்சுமியம்மாள் உள்ளே சென்றாள். வெளிக்கதவு திறந்திருந்தது. உள்ளே எந்தவிதமான சத்தமும் இல்லை. வெளிக்கோலுக்கு வந்த இலட்சுமி; ''திலகம்... திலகம்..'' எனக் கூப்பிட்டாள் பதிலில்லை.

எங்கிருந்தோ குரைத்துக் கொண்டு வந்த நவரத்தினத்தின் நாய் இலட்சுமியம்மாளைக் கண்டதும் தோழமையோடு வாலாட்டியது.

''திலகம்....திலகம்'' என்று அழைத்தபடி உள்ளே சென்றாள் இட்சுமியம்மாள்.

''ஆரது...'' என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்த திலகம் இலட்சுமியம்மாளைக் கண்டதும்; ''அக்காவே... உள்ளுக்கு வாங்கோ... சாப்பிட்டுட்டு படுத்தாப் போலை அயர்ந்து போனன். வந்து கனநேரமே'' என்று கேட்டாள்.

''இல்லை, இப்பத்தான் வந்தனான்.. எங்கை நவரத்தினம?''

''அந்தாள் விடியப்புறம் எழும்பிப் போனது. தேத்தண்ணி கூடக் குடிக்கேல்லை. அங்கை ஒரே கியூவாய் இருக்கும். வர நாலைஞ்சு மணி செல்லும்'' என்றாள் திலகம்.

இலட்சுமியம்மாளுக்கு மேற்கொண்டு என்ன பேசுவதென்று தோன்றவில்லை; ''பிரச்சினையை நவரத்தினமே வந்து சொல்லட்டும்'' என்று நினைத்தாள்.

''உங்களுக்குத் தெரியுமேயக்கா. அந்தாளின்ரை மனம் மாறிப் போய்ச்சு. பிள்ளையார் தான் மாத்தினவர்'' சந்தோசத்துடன் சொன்னாள் திலகம்.

''என்ன?''

''இராத்திரி உங்கடை வீட்டாலை வந்தவுடனை பகீரதனை திருப்பிக் கூப்பிட்டுப் படிக்க விடப் போறன் என்று சொன்னவர். எனக்கு அதுக்குப் பிறகு வருத்தமே மாறீட்டுது'' மகிழ்ந்தாள் திலகம்.

''இப்படிச் சந்தோசப்படுற திலகம் நடந்ததைக் கேள்விப்பட்டால் எப்பிடி இருக்கும்?'' நினைக்கவே இலட்சுமிக்குப் பயமாக இருந்தது.

''இப்ப ஏனக்கா இந்த வெயிலுக்கிளாலை வந்தனீங்கள்''

இலட்சுமியால் பதில் சொல்ல முடியவில்லை. யோசித்தாள். உடனடியாக எதுகும் தோன்றவில்லை.

''என்னக்கா யோசிக்கிறியள்?''

பிரச்சினைக்குள் மாட்டுப்பட்ட நிலையில் தவித்தாள் இலட்சுமி. பின்; ''கந்தையன்ரை மருமோன் முந்தநாள் பிளைற்ரென்று கடிதம் கொண்டு வந்ததாய் இராத்திரி நவரத்தினம் சொன்னது. அதுதான் ஒருக்கால் விசாரிச்சுக் கொண்டு போவமெண்டு வந்தனான்''

''ஓமக்கா போனாலும் பரவாயில்லை, திருப்பிக்கூப்பிடுவமென்று சொன்னவர். அந்தாள் பிடிச்சிராவிதான். ஆனால் சொன்னபடி செய்யும்'' மகிழ்ந்தாள் திலகம்.

“அப்பநான் வாறன், நீங்கள் போய்ப் படுங்கோ” என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் இலட்சுமி.

இலட்சுமியம்மாள் ஒழுங்கைக்கு வந்த போது மேலும் நாலைந்து பேர் கூடியிருந்தனர். இலட்சுமியைக் கண்டதும் காசிப்பிள்ளை; “என்ன மாதிரி?” என்று கேட்டார்.

“திலகத்திற்குச் செய்தி தெரியாது. சாப்பிட்டுட்டு படுத்தாப் போலை நித்திரையாகீட்டாளாம். அதாலை நானொன்றும் சொல்லேல்லை. அதோடை அவள் இருக்கிற நிலையிலை இதைத் தாங்குவளோன்று எனக்குப் பயமாயிருக்கு..”

“ஏன் பிறைசர் கூடி இருக்கே?” காசிப்பிள்ளை கேட்டார்.

“நவரத்தினம் இராத்திரி செய்தி கேட்டிட்டு வீட்டை வந்து, பகீரதனுக்கு ஏதோ நடந்த மாதிரிக் கவலைப் பட்டார். நாங்கள் தான் சமாதானம் சொல்லி அனுப்பினனாங்கள். பிறகு வீட்டை போய் திலகத்திற்குப் பகீரதனைக் கூப்பிடப் போறதாய்ச் சொல்லியிருக்கிறார். இதாலை திலகம் சந்தோசமாய் இருக்கு. இப்ப இந்தச் செய்தியை எப்பிடிச் சொல்லுறது? அதாலை நான் ஒண்டும் பறையேல்லை” கவலைப்பட்டாள் இலட்சுமி.

“ம்... என்ன செய்யலாம்?” என்று யோசனையுடன் கேட்ட காசிப்பிள்ளை, பின்பு சொன்னார்; “நாங்கள் இதிலை நிக்கிறதும் சரியில்லை. இப்பவே பத்துப் பதினைஞ்சு பேர் கூடியாச்சு. தற்செயலாய் மனிசி வெளீலை வந்து பார்த்தால் கரைச்சல். வாருங்கோ வாசிகசாலை மரத்துக்குக் கீழை இருப்பம். அதுக்கிடையிலை நவரத்தினம் வந்திடும்” என்று கூறிவிட்டுக் காசிப்பிள்ளை முன்னே நடக்க மற்றயோர் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

வாசிகசாலைக்கு முன்னால் நின்ற வேப்பமரம் ஓங்கி வளர்ந்து சடைத்திருந்தது. அவ்வூர் மக்கள் வெயிற்காலத்திலும், ஓய்வான வேளையிலும் அதன் கீழிருந்து சல்லாபிப்பது வழக்கம். அண்மைக்கால இடப்பெயர்வுக்குப் பிறகு மக்கள் கூடுவது குறைவு.

வேப்ப மரத்திற்குக் கீழ் இருந்த மணலில் எல்லோரும் அமர்ந்து கொண்டனர். “இலட்சுமியக்கா, மாஸ்ரர் பள்ளிக்கூடத்தாலை வந்த உடனை அனுப்பி விடுங்கோ” என்றார் காசிப்பிள்ளை.

இலட்சுமியம்மாளுக்குச் சிரிப்புத்தான் வந்தது; “மாஸ்ரராவது வாறதாவது. தகப்பன்ரை தங்கையின் மகனின் கலியாண வீட்டுக்கே லீவு எடுக்காத மனிசன் இதுக்கு நேரத்திற்கு வரப்போகுதே..” என்று நினைத்தபடி நடந்தாள்.

பகீரதனின் மரணம் அவளை அதிக வேதனைக் குள்ளாக்கியிருந்தது. மயூரனின் நல்ல தொரு நண்பன் அவன். அவன் வெளிநாடு செல்வது அவளுக்கு விருப்பமில்லை. மயூரனோடு துணையாக இருப்பான். என்று நினைத்தாள். எல்லாம் கனவாய்ப் போய்விட்டது.

“டேய் சபாபதி, பங்கைபார் கனகராசன் போறான். விசரன், ஏதாவது அலட்டிப் போடுவன் ஓடிப் போய் கூட்டிவா” என்று காசிப்பிள்ளை கட்டளையிடச் சபாபதி எழுந்து ஓடினான்.

வாசிகசாலைக்கு எதிர்ப்பக்கமாகச் செல்லும் ஒழுங்கையால் இரண்டு மூன்று பேர் சென்று கொண்டிருந்தனர்; “சனத்துக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. படலையிலை ஆரன் ஒருத்தனை விடுவம்” என்று சுற்றிவரப் பார்த்த காசிப்பிள்ளை; “சிறீ நீர் போய்ப்படலையடீலை நிண்டு மற்றப்பக்கத்தாலை வாறவையை இஞ்சை அனுப்பும்” என்று சொல்ல சிறீ எழுந்து சென்றான்.

வாசிகசாலையில் ஆண்களும் பெண்களுமாக நூறு பேருக்கு மேல் கூடிவிட்டனர். யாருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை.

அப்பொழுது அங்கே வந்த இரத்தினசிங்கம் “இப்படி எல்லாரும் கூடி நிண்டு என்ன செய்யப் போறியள்? இப்பிடி நிண்டால்ப் போலை எல்லாம் நடந்திடுமே. ஆகவேண்டியதைக் கவனியுங்கோ” என்றான் சற்றுக்காரமாக.

“என்னத்தைக் கவனிக்கிறது. உள்ளுக்குப் போய் மனிசியைக் கொல்லச் சொல்லுறியே…” காசிப்பிள்ளை கடுமையாகக் கேட்டார்.

“நீ ஆள் தான் பெருத்திருக்கிறாயே தவிர மூளை இல்லை… இவ்வளவு நேரமும் இதிலை நிக்கிறத்திலும் பார்க்க நவரத்தினத்தைப் போய்க் கூட்டியந்திருக்கலாம் தானே” என்றான் இரத்தினசிங்கம்.

உடனே காசிப்பிள்ளை குளிர்ந்து போனார்; “இது எனக்குத் தோன்றேல்லை. இதுக்குத் தான் நான் இரத்தினசிங்கத்தைச் சேர்த்து வைச்சுக் கொண்டு காரியம் பாக்கிறனான்” சிரித்தார் காசிப்பிள்ளை.

“துரை அண்ணை போய் மோட்டார் சைக்கிலை எடுத்தாங்கோ, தம்பி இராசு அவரோடை போட்டுவா..” என்று இரத்தின சிங்கம் முடிக்கு முன்; “இராசுவை விட்டுட்டு நீ போட்டுவா. உனக்குத் தான் நல்லாய்ச் சிங்களம் தெரியும். சென்ரியளிலை நிக்காமல் கெதியாய் வந்திடுவியள்” என்றார் காசிப்பிள்ளை.

துரை என்ற துரைசிங்கமும் இரத்தினசிங்கமும் சென்ற பின்; “எதுக்கும் இரத்தினசிங்கமும் இருக்க வேணும்” என்ற காசிப்பிள்ளை நிமிர்ந்து பார்த்து விட்டு; “ஓட்டோ ஒண்டு வருது” என்றார்.

எல்லோரும் வீதியை நிமிர்ந்து பார்த்தனர். ஓட்டோ ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் மேல் ஒரு சைக்கில் வைத்துக் கட்டப்பட்டிருந்தது.

“சைக்கிலோடை வாறதைப் பார்த்தால் நவரத்தினம் தான் வருது போலை கிடக்கு. விசயத்தை அறிஞ்சிட்டான் போலை கிடக்கு. அதாலை தான் ஓட்டோவிலை வாறான்..” என்றார் காசிப்பிள்ளை.

ஓட்டோ வந்து வாசிகசாலை வேம்பின் கீழ் நின்றது. ஓட்டோச் சாரதி இறங்கி வந்து மேலே கட்டப்பட்டிருந்த கட்டுகளை அவிழ்த்துச் சைக்கிலைக் கீழே இறக்கினான். நவரத்தினம் ஓட்டோவால் இறங்கிச் சேட்பொக்கற்றுள் இருந்த நூறுரூபா நோட்டை எடுத்துக் கொடுத்து விட்டு மணலில் அமர்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதார்.

“ஐயோ… காசிப்பிள்ளை, மனிசிக்கு இதை எப்பிடிச் சொல்லுறது… இதை அறிஞ்சால் அவள் செத்துப் போவாள்… ஐயோ..” என்று குழறினார் நவரத்தினம்.

யாருக்கும் எதுவும் தோன்றவில்லை. எப்பிடி இந்தப் பிரச்சினையத் தீர்ப்பது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கும் போது நவரத்தினத்தின் வீட்டிலிருந்து; “ஐயோ… ஐயோ…” என்று கத்தும் சத்தம் கேட்டது.

எல்லோரும் திகைத்து நிற்க, காசிப்பிள்ளை தான் முதலில் நவரத்தினத்தின் வீட்டை நோக்கி ஓடினார். ஓட்டோ வந்ததும் படலையில் காவலுக்கு நின்ற சிறி வாசிகசாலைக்கு வந்து விட்டான். அந்த நேரம் வந்த பெண் ஒருத்தி தான் கத்திக் கொண்டு உள்ளே சென்றாள்.

கணநிமிடத்தில் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. காசிப்பிள்ளை உள்ளே சென்ற வேகத்தை விட கூடிய வேகத்தில் வெளியே வந்து; “ஓட்டோவைக் கொண்டாங்கோ… கொண்டாங்கோ கெதியாய்க் கொண்டாங்கோ” என்று கத்தினார்.

புறப்பட்டுச் சென்ற ஓட்டோவை சனங்களின் கத்தல் மறித்தது. ஓட்டோச் சாரதி ஓட்டோவை நிறுத்தி விட்டு, ஆசனத்தில் இருந்தபடியே திரும்பிப் பார்த்தான். திரும்பி வரும்படி கைகளைக் காட்டியபடி பலர் கத்தினர்.

அதற்கிடையில் இரண்டு மூன்று பெண்கள் மயங்கிக்கிடந்த திலகத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். ஓட்டோவில் திலகத்தை ஏற்றியதும்; “தேவி ஏறு ஏறு” என்ற படி ஓட்டோவில் ஏறிய காசிப்பிள்ளை; “நாங்கள் ஆஸ்பத்திரிக்குப் போறம், தேவையான

சாமான்களைக் கொண்டு வாங்கோ... தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து'' என்றவர் திரும்பிப் ஓட்டோச் சாரதியைப் பார்த்து; ''தம்பி ஓட்டோவை எடு'' என்றார்.

நவரத்தினத்தின் வீட்டில் கூடி நின்ற அக்கம் பக்கத்தினர் ஒவ்வொருதராக விடை பெற்றுக் கொண்டிருந்தனர். பொழுது படு முன் வீடு காலியாகி விட்டது. நவரத்தினம் சுற்றி வரப் பார்த்தார். சொந்த மென்று சொல்லித் துயரில் பங்கேற்க ஒருத்தர் கூட இல்லை. அன்று முழுவதும் சாப்பிடாததால் பசி வயிற்றைக் கிள்ளியது. ஏதாவது சமைத்துத்தான் சாப்பிட வேணும்'' என்று நினைத்துக் கொண்டார். அந்த நினைப்பே அவருக்கு நெஞ்சைப் பிளந்தது.

படலை சாத்தும் ஒலி கேட்டு நிமிர்ந்து பார்த்தார் நவரத்தினம். காசிப்பிள்ளை கையில் ஒரு பையுடன் வந்து கொண்டிருந்தார்.

''இந்தா சாப்பிடு...'' என்ற காசிப்பிள்ளை பாசல் ஒன்றைப் பையில் இருந்து எடுத்து நீட்டினார். பின்பு பையில் இருந்து இரண்டு போத்தல் கள்ளை எடுத்து வெளியே வைத்தார். பிறகு பையில் இருந்து ஒரு கோப்பையை எடுத்து கள்ளை வாத்து குடித்து விட்டுச் சொன்னார்; ''சாய், மயில்வாகனம் மாஸ்ரற்றை பொடியன் தங்கக் கம்பி... நான் பலவிசயங்களிலை பார்த்திருக்கிறன். என்ன மாதிரி ஓடிச் சுழண்டு வேலை செய்கிறான். எமஜன்சி வாட்டிலை திலகத்தை அனுமதிட்சிட்டு எவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை செய்தான்...'' என்றவர் மீண்டும் ஒரு கோப்பை கள்ளை ஊற்றிக் குடித்து விட்டுச் சுருட்டைப் பற்ற வைத்தார். பிறகு சொன்னார்; ''உந்தக் காசு... அதைச் சம்பாரிக்க நாயாய் பேயாய் அலையுறாங்கள்... இதெல்லாம் படிப்புக்கு ஈடாகுமே...'' குடிச்ச கள்ளு வேலை செய்ய ஆரம்பித்தது.

''பிறகேன் யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்? கையைக் கழுவிப் போட்டுச் சாப்பிடு....'' நவரத்தினம் அசையாது இருப்பதைக் கண்டு சற்றுக் கடுமையாக; ''எழும்பிப் போய்ச் சாப்பிடடாப்பா....'' என்றார் காசிப்பிள்ளை.

நவரத்தினம் நிலத்தில் அமர்ந்து பாசலை விரித்தார். மீன்குழம்பு, மீன்பொரியல், கீரை, வெண்டிக்காய் வெள்ளைக்கறி யோடு சோறு கட்டப்பட்டிருந்தது.

''கள்ளுக் கொஞ்சம் குடியன்..''

நவரத்தினம் யோசித்தார். கள்ளு அவருக்கு ஒத்துக் கொள்ளாமையால் அவர் சாராயம் தான் குடிப்பது வழக்கம்; ''வேண்டாம், பொறுவாறன்'' என்று உள்ளே சென்றவர் ஒரு போத்தல் சாராயத்துடனும் இரண்டு கிளாசுடனும் திரும்பி வந்து; ''கள்ளை வைச்சிட்டு இதைக்குடி'' என்று கூறிவிட்டுச் சோற்றை முன்பிருந்தபடி சுற்றிக் கட்டி வைத்து விட்டுப் போத்தலைத் திறந்து கிளாசில் சாராயத்தை நிரப்பி ஒரே மூச்சில் குடித்து விட்டுக் கிளாசைக் கீழே வைத்தார்.

''நீ செய்தது பெரிய பிழை... உனக்கிருக்கிறது ஒரே ஒரு சகோதரம். அதைப் பகைச்சிருக்கக் கூடாது. அஞ்சாறு பிள்ளையள் வெளிநாட்டிலை... கைநிறையப் பணம் இருந்தென்ன... உன்னை ஆர்மதிச்சவை... மூத்தவனுக்குச் சகுந்தலாவின்ரை பெட்டையைச் செய்திருக்கலாம். கண்ட கண்ட நாயளையெல்லாம் வீட்டை கொண்டர முடியுமோ எண்டாய், இண்டைக்கு உன்ரை மோன் கலட்டியாளைக் கட்டி பெரிசாய் வாழுறானே? சகுந்தலாவின்ரை பெட்டையைக் கட்டியிருந்தால் குடும்பத்தோடை வந்து நிண்டு சேவகம் செய்திருக்குங்கள்..''

''நான் செய்ததெல்லாம் பிழை..'' நவரத்தினத்தின் குரல் கரகரத்தது. துயர மேலீட்டாலும் உள்ளே சென்றவர் செய்த கைங்கரியத்தாலும் விக்கி, விசும்பி அழத் தொடங்கினார் நவரத்தினம்.

''இனி அழுது என்ன பிரயோசனம்?. அந்த நேரத்திமிரிலை எல்லாரையும் எடுத்தெறிந்து நடந்திட்டாய். ஒரே ஒரு சகோதரம். கலியாணம் தான் கட்டாட்டிலும் பரவாயில்லை. அந்தாள் செல்விழுந்து ஆஸ்பத்திரீலை சாகப் பிழைக்கக் கிடந்த நேரத்திலை கடைசி ஆஸ்பத்திரீலை எண்டாலும் போய்ப் பார்த்திருக்கலாம்..'' என்றார் காசிப்பிள்ளை.

நவரத்தினம் எதுவும் பேசவில்லை. சகோதரியின் கணவன் கடுமையாகக் கிடக்கும் போது காசிப்பிள்ளை எத்தனையோ தரம் வந்து வற்புறுத்திச் சொல்லியும் நவரத்தினம் போய்ப் பார்க்கவில்லை. அதோடு காசிப்பிள்ளையையும் அவர் அவமானப்படுத்தினார்.

“நான் வந்து கேக்கேக்கை என்ன சொன்னனீ....? ஞாபகம் இருக்கே... நாயளின்ரை கதையை விடு... நான் செத்தாலும் இந்த வீட்டு முத்தம் மிதிக்க வேண்டாமெண்டு சொல்லு” எண்டனி. இப்ப நான் எந்த முகத்தோடை போய்க் கதைக்கிறது. எண்டாலும் மனங்கேளாமல் போனனான்...” என்று கூறிவிட்டுக்கிளாசை எடுத்து அதிலிருந்த சாராயத்தை உறிஞ்சினார் காசிப்பிள்ளை.

“போனனியோ....?” ஆச்சரியமாகக் கேட்ட நவரத்தினம் ஆவலை அடக்க முடியாமல்; “என்ன சொன்னவள்?” என்று கேட்டார்.

காசிப்பிள்ளை அதைக் கவனிக்காதவர் போலச் சாராயத்தை கிளாசில் ஊற்றி விட்டு மடியுள் இருந்த புகையிலையை எடுத்துக் கிழித்து சுற்றினார். பின்பு அதை வாயில் வைத்து தீப்பெட்டியை எடுத்து சுருட்டைப் பற்ற வைத்துப் புகையை விட்டார். நவரத்தினத்திற்கு உடனே பதில் சொல்லாதது எரிச்சலாய் இருந்தது. இருந்தும் அதை வெளிக்காட்டாது பேசாமல் இருந்தார்.

சுருட்டை வாயால் எடுத்த காசிப்பிள்ளை எச்சிலைத் துப்பி விட்டுச் சொன்னார்; “அவள் என்ன செய்யிறது? பாவம் துடிக்கிறாள். அவனையும் சமாளிச்சுப் போடலாம். ஆனால் பொடியளைச் சமாளிக்கேலாது.”

“இளையவள் தான் வாய்க்காரி. என்னோடை பாஞ்சது அவள் தான். அவளில்லாட்டில் இவ்வளவு தூரம் முத்தியிராது” என்றார் நவரத்தினம்.

“ஓம்.... ஓம்... அவளில்லாட்டில் பேய்க்காட்டிப் போடுவாய்... அவள் சொல்லுறத்திலை என்ன பிழை இருக்கு? யூனிவசிற்றீலை படிச்சவள். படிப்பிக்கிறாள் பிழையாய்க் கதைப்பளே...”

“உந்த விசர்கதைகளை விடு. ஆர்வந்தலென்ன வராட்டிலென்ன” என்றவர். அருகில் இருந்த சோற்றுப் பாசலை எடுத்துப் பிரித்தார். பின்பு; “எனக்குப் பசிக்குது நான் சாப்பிடப் போறன்.... நீயும் கனக்கக் குடிச்சிட்டாய். இனிக் காணும். மூடி வைச்சிட்டுச் சாப்பிடு” என்றார் நவரத்தினம்.

காசிப்பிள்ளைக்கு நல்லாய் ஏறி விட்டது; “நான் நினைச்சால் எல்லாம் செய்வன்... காசிப்பிள்ளையாலை ஏலாதது ஒண்டுமில்லை” என்று புலம்பத் தொடங்கினார்.

## *07*

நேரம் எட்டு ஐம்பதைத் தாண்டி விட்டது. சிவராசாவைத் மாஸ்ரரைத் தவிர மற்றய ஆசிரியர்கள் வந்து விட்டனர். மயில்வாகனம் கண்டிப்பானவர் ஆனால் கனிவானவர். ஆசிரியர்களின் பிரச்சினைகள், குறைகள் தீர்ந்தால் அவர்கள் முழுமையாகக் கற்பித்தலில் ஈடுபடுவார்கள் என்பது அவரது நம்பிக்கை. அது இதுவரை பொய்த்ததில்லை. சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்தின் வரலாற்றில் இப்பொழுது தான் ஆசிரியர்கள் குறித்த நேரத்துக்கு வருகிறார்கள்.

நேரம் எட்டு ஐம்பத்தைந்து மாணவர்கள் காலை ஆராதனை முடித்து “கீப்இற்” செய்து கொண்டிருந்தனர். அப்போது தான் சிவராசா மாஸ்ரர் லேடீஸ்சைக்கிலில் வந்து இறங்கினார். அலுவலகத்தில் வரவு பதியும் கொப்பியில் கையொப்பமிட்டு விட்டு ஸ்ராப் ரூமை நோக்கிச் சென்றார். பதினைந்து நிமிடங்கள் பத்திரிகை வாசிப்பார். பின்பு வகுப்பறைகளுக்கு ஒரு சிறு சுற்றுலா. அதன் பின் அதிபருடன் பத்து நிமிடம் அரட்டை. ஒன்பது நாற்பதுக்குத் தான் வகுப்பறைக்குச் செல்வார்.

இதற்காக மயில்வாகனம் ஆண்டு ஐந்துக்கு முதலாம் பாடமாக ஆங்கிலத்தை போட்டுட்டுள்ளார். ஆங்கிலத்தை முதல் பாடமாய் போட்டுட்டால் கரைச்சலில்லை. தொடர்ந்து படிப்பிக்கலாம்'' என்பார் சிவராசா.

''என்ன சேர் டீஈஓ ரான்பர் ஒண்டு செய்யப் போறாராம்''.

''முதலாம் திகதி செய்யிறதாய்க் கதை அடிபடுது'' என்றார் மயில்வாகனம்.

''சில பேரை ரான்ஸ்பர்பண்ணேலாது''.

''ஏன்?'' ஆச்சரியத்துடன் கேட்டார் மயில்வாகம்.

''எல்லாம் செல்வாக்குத் தான். அமரிக்கன் மிசன் கொலிச்சிலை வசந்த நாயகி எண்டொரு ரீச்சர் இருக்கிறா. அவா கொஞ்சம் செல்வாக்குள்ளவா.. எடுபட்டது ஆரம்பக்கல்வி ஆசிரியராய். பிறகு ரெயினிங்குக்குப் போனது சயன்ஸ்சுக்கு. எக்ஸ்ரேனலாய் கிராயுவேட் பண்ணீட்டா. அதோடை ஆங்கிலமும் படிப்பிப்பா..''

''அப்படியே?''

''மாற்ற மெண்டு வந்தால் காடரைப் பொறுத்துப் பதவியை மாத்திக் கொள்ளுவா. கிராயுவேட் ரீச்சேஸ் கூடவென்டால் தான் சயன்ஸ்ரெயின்ட் என்பா. சயன்ஸ் ரீச்சேஸ் கூட வென்றால் தான் பிறைமறி என்பா. இதுகளெல்லாம் கூட வெண்டால் தான் இங்கிலிஸ் படிப்பிக்கிறனான் என்பா''.

''சகல பாடங்களும் படிப்பிக்கிற ரீச்சரை அதிபர் விடார் தானே''.

''இவா எங்கை சேர் படிப்பிக்கிறா? இதை விட பீ. ரி. நெற்போல், கயிட்ஸ் என்று எல்லாம் இவா தான். எல்லோருக்கும் ஆலோசனை சொல்லிச் செய்யிறவயையும் செய்யாமல் பண்ணுறது தான் அவான்ரை வேலை. எல்லாம் பழக்கியும் என்ன பிரியோசனம். மாவட்ட ரீதியாய் ஒரு பரிசு கூடப் பெறுவதில்லை''

அமெரிக்கன் மிசன் கல்லூரியில் கற்பித்த பட்டதாரி ஆசிரியையான சிவராசாவின் மனைவியைச் சிறியதொரு பாடசாலைக்கு மாற்றிய பின் சிவராசா அடிக்கடி ஆத்திரப்படுவதாக நடராசா கூறியிருக்கிறார். அதனால் மயில்வாகனம், சிவராசா மாஸ்ரர் உணர்ச்சி வசப்படும் போதெல்லாம் பேசாமல் இருப்பார். ஒரு வழியில் வசந்த நாயகி தான் தன்னுடைய மனைவியின் இடமாற்றத்துக்குக் காரணமாக இருந்தவர் என்பது சிவராசாவின் நினைப்பு. திருமதி சிவராசா தான் ஏ.எல் வகுப்புக்குத் தமிழ் கற்பித்து வந்தாள். வசந்தநாயகி கிராயுவேட் பண்ணியதும் ஏ.எல் வகுப்புக்கு தமிழ் கற்பிக்கும் பணி வசந்த நாயகிக்குக் கொடுக்கப்பட்டது. அது தான் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது.

''எங்களுக்கு என்னத்துக்கு உந்தப்பிரச்சினை. நாங்கள் எங்கடை பள்ளிக்கூடத் தோடை நிப்பம்...''

''நிக்கேலாது சேர். நிக்காவிடாங்கள். எந்த நாளும் எங்கடை நிர்வாகத்திலை தலையிட்ட படி. நல்லாய்ப் படிக்கிற ஒரு பிள்ளை அல்லது விளையாட்டிலை திறமையான ஒரு பிள்ளை இருந்தால் எப்பிடியும் எடுத்திடுவங்கள்''.

''இந்த நிலைமை அதிகமாக எல்லாப் பாடசாலைகளிலும் உண்டு. ஆரம்பத்தில் பருத்திமலை மகாவித்தியாலயத்திற்கு அருகில் இருந்த மத்திய கல்லூரி எவ்வளவு கரைச்சல் குடுத்தது'' என்று நினைத்தார் மயில்வாகனம்; ''இதெல்லாம் ஆரம்பத்திலை இருக்கும். அவர்களை விட நாங்கள் சிறப்பாகப் பாடசாலையை நடத்தினால் பிள்ளைகள் போகாது...'' என்றார் மயில்வாகனம்.

“மிகவும் கஸ்டமான வேலை. அவங்களுக்கு செல்வாக்கு இருக்கு. ஆளணியும் இருக்கு பணபலம் இருக்கு. இதுகளோடை நாங்கள் போட்டி போடேலாது..”

மயில்வாகனம் உரத்துச் சிரித்தார். பின்பு; “உங்கடை கவலை எனக்கு புரியுது. இரண்டு மூன்று மாதங்கழியச் சொல்லுங்கோ. இப்ப நீங்கள் அஞ்சாம் ஆண்டு அஞ்சரை மணி வரையும் நடத்துறியள். சயன்ஸ் ரீச்சர் ஓ எல்லுக்கு எக்ஸ்ரா கிளாஸ் வைக்கத் தொடங்கீற்ரா. இரண்டு மூன்று மாதத்திலை நிலமை மாறீடும். அதோடை இப்பாடசாலை நிறுவுனற்ரை பிள்ளைகள் கனடாவிலை இருந்து ஒரு இலட்சம் ரூபாய் அனுப்புறதாய் அறிவிச்சிருக்கினை. வேலியையும் அடைச்சு தண்ணீர் வசதியையும் செய்து நிறுவுனற்ரை படத்தையும் திறந்து வைப்பம்”.

மயில்வாகனத்திற்குச் சிவராசாவை நன்றாகப் பிடித்து விட்டது. ஓயாமல் கதைத்தாலும் அக்கதைகளில் நியாயம் இருப்பதாகவே அவருக்குத் தோன்றியது. பாதிப்புக்கள் வரும் போது ஒருவன் உணர்ச்சி வசப்படுவான் என்பது அவருக்குத் தெரியும்.

ஒன்பது முற்பதிற்கு முதலாம் பாடம் முடிந்ததற்கான மணி ஒலித்தது. சிவராசா மாஸ்ரர் மணி அடித்ததும் வகுப்பறையை நோக்கிச் சென்றார்.

சிவராசா சென்றதும் மயில்வாகனம் மேசையில் இருந்த கடிதங்களை எடுத்துப் பார்த்தார். கோட்டத்தில் இருந்து நான்கு கடிதங்களும் திருமதி இராமச்சந்திரனுக்குக் கனடாவிலிருந்தும், திருமதி திருநாவுக்கரசுக்கு மட்டுவிலிலிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன.

கோட்டத்தில் இருந்து வந்த கடிதங்களில் ஒன்றைப் பிரித்தார். அது கோட்டமட்ட பீ. ரீ போட்டி பற்றியது. அதைப் படித்துக் கொண்டிருக்கும் போது மதியழகன் ஆசிரியர் உள்ளே வந்தார். நிமிர்ந்து பார்த்த மயில்வாகனம்; “மதி உமக்குத் தான் கடிதம்” என்றார்.

கடிதத்தை வாங்கிப் படித்த மதி; “நாங்கள் போட்டிக்குப் போறதாக இருந்தால் வெல்ல வேணும். இல்லாட்டில் போட்டிக்குப் போவதில் பிரயோசனமில்லை” என்றார்.

“இப்ப ஆர் தோர்க்கச் சொன்னது?” மயில்வாகனம் கேட்டார்.

“இல்லை சேர்...” என்று சிரித்தமதி; “நிறையக் காசு வேணும்” என்றார்.

“உமக்கு எவ்வளவு காசு வேணும்....? காசைப்பற்றி யோசிக்க வேண்டாம்.. உற்சாகமாய்ச் செய்து வென்று கொண்டு வாரும்” என்றார்.

“நான் சயன்ஸ் ரெயின்ட் ஆனால் பீரீயிலை ஆர்வமிருக்கே தவிர சில நுட்பங்கள் தெரியாது. என்ரை நண்பர் குமாரசாமியைக் கூட்டிவந்து பழக்கலாம். அவர் பீரி ரெயின்ட். வலு கெட்டிக்காரன். வைத்தீஸ்வராக் கல்லூரியில் கற்பிக்கின்றார். நாலைந்து முறை மாவட்டச் சம்பியனாய் வந்தது.

“ஓகே, அப்பிடியே செய்யும். அவருக்கு ஏதாவது கொடுப்பனவுகள் கொடுக்க வேணுமெண்டாலும் கொடுக்கலாம்”

“அவர் அதை விரும்ப மாட்டார். மோட்டார் சைக்கிலில் வருவார். பெற்றோல் அடிச்சு விட்டால் சரி”.

“அதுக்கென்ன... வேறை என்ன செய்ய வேண்டும்...?”.

பிறைக்ரீஸ் நேரத்திலை பிள்ளைகளுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்க வேணும்...”

“என்ன குடுக்கலாம்...?”

“கடலை அவிச்சுக் கொடுக்கலாம். பாண், வாழைப்பழம், மரக்கறி இப்ப மலிவு தானே. பாணுக்கு சாம்பார் வைச்சுக் குடுக்கலாம். கோம்சயன்ஸ் ரீச்சரிட்டை சொன்னால் சரி.”

‘சரி’ எயன்றார் மயில்வாகனம்.

“அப்ப நான் வாறன் சேர்” என்று புறப்பட்டார் மதி.

‘சரி’ என்று கூறிய மயில்வாகனம் அடுத்த கடிதத்தை எடுத்து பிரித்தார். வாசலில் அரவம் தெரிந்தது. நிமிர்ந்து பார்த்தார். மதியுடன் வாட்டசாட்டமான ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரை மயில்வாகனம் பலமுறை கண்டிருக்கிறார். எனினும் யாரென்று தெரியாது. தற்பொழுது இடம் பெயர்ந்த மக்கள் பலர் அவ்வூரில் வாழ்வதால் இடம் பெயர்ந்த மக்களில் ஒருவராக இருப்பார் என நினைத்துக் கொண்டார்.

“இவர் மிஸ்ரர் குணரட்ணம். கே.கே.எஸ்.சீமெண்ட் பக்ரறீலை வேலை செய்கிறார்...”

“இருங்கோ..”

“நன்றி சேர்” என்று கூறி அமர்ந்தார் குணரட்ணம்.

“இவற்றை பிள்ளைகள் இரண்டு பேர் அஞ்சாம் ஆண்டிலை படிக்கினை..”

“:ம்”

பிரச்சினை என்வென்றால் அவை பீரீ ரீமிலை இருக்கினை. ஆனால் சிவராசா மாஸ்ரருக்கு அது விருப்பமில்லை” என்றார் மதி.

“சிவராசா மாஸ்ரர் பிறைக்ரீசுக்கு விர்றாரில்லை. அவங்கள் தாங்கள் செய்யப் போறதாய் பெரிய கரைச்சல். விட்டால் நல்லது.” குணரட்ணம் சிரித்தார்.

“இங்கே ஒழுங்காய்ச் செய்யிற பிள்ளைகள் குறைவு சேர். பேசனாலிற்ரி இல்லை. செய்யுற பிள்ளைகள் சிலதுக்குக் கைகள் சொத்தியாய் இருக்கு. கால்கள் சேப்பாய் இல்லை. பிரதீப்பும் திலீபனும் பேசனாலிற்றியான பிள்ளைகள்” என்றார் மதியழகன்.

“சிவராசா என்னவாம்”

“அந்தாள் சண்டைக்கு வருது. நான் கஸ்டப்பட்டுப் படிப்பிக்கிறன். இவங்கள் கையைக் காலை முறிச்சால் பிறகு சோதினை எழுதேலாது” என்கிறார்; “அதோடை இரண்டு பேரும் பாஸ்பண்ணுவங்களாம் அதாலை விடேலாது என்கிறார்”.

“பிரச்சினை தான்...” என்று சிரித்த மயில்வாகனம் மதியைப் பார்த்து; “வேறை பிள்ளைகளைச் சேர்க்கேலாதே” என்று கேட்டார்.

மதி பதில் சொல்லு முன் குணரட்ணம் சொன்னார்; “இரண்டு பேரும் அடம்பிடிக்கிறாங்கள். நீங்கள் விடுங்கோ. சோதினைக்கு நாங்கள் ஒரு மாதிரிக் கோச் பண்ணுறம்”.

“சரி” என்றமதி; “மற்ஸ் சிறியையும் எனக்கு உதவியாய் தாருங்கோ. அதோடை ஸ்கூல் ரைம்மிலை கொஞ்ச நேரம் பிரைக்ரீசுக்கு ஒதுக்கித்தர வேணும். பின்நேரம் ரியூசன் என்கிறாங்கள். ஆனால் டீ.ஈ.ஓ.ஸ்கூல்ரைமிலை பிரைக்ரிக்ஸ் செய்யக் கூடாதென்கிறார்” என்றார் மதி.

“அவர் தன்ரை கடமைக்காகச் சொல்கிறார். நாங்கள் எமது வெற்றிக்காக செயற்பட வேணும். நீங்கள் தேவையான நேரத்திலை சொல்லீட்டுச் செய்யுங்கோ... பிள்ளையார் கோயில் வீதி கல்லு முள்ளாய் இருக்கு. எல்லாப் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போய்த் துப்பரவு செய்ய வேணும். கிரவுண் இல்லாதத்தாலை கஸ்டமாயிருக்கு. எப்படியும் ஒரு கிரவுண்ட் வாங்க வேணும்” என்றார் மயில்வாகனம்.

அந்தப் பாடசாலைக்கு மைதானம் இல்லாததால் பிள்ளையார் கோவில் வீதியைத் தான் பயன்படுத்தி வந்தனர். விரைவில் ஒரு மைதானம் வாங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார் மயில்வாகனம்.

இடைவேளைக்கான மணி ஒலித்தது. வகுப்பில் கட்டுண்டிருந்த மாணவர்கள் கலைந்து தத்தம் அத்தியவாசிய அலுவல்களைக் கவனிக்கச் சென்றார்கள். அலுவல்களை முடித்தவர்கள் ஆங்காங்கே நிழலில் அமர்ந்திருந்தனர். இடைவேளை நேரம் மயில்வாகனம் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து முன்னால் நிற்கும் வேப்ப மரத்தின் கீழ் நிற்பது வழக்கம். அதில் இரண்டு நன்மைகள் இருந்தன. ஒன்று பிள்ளைகளைக் கண்காணித்துக் கொள்ளலாம். அடுத்தது இதமான வயற்காற்றின் குளிர்மையை அனுபவிக்கலாம்.

மயில்வாகனம் மரத்திற்குக் கீழ் நின்ற போது நவரத்தினம் அங்கே வந்தார்.

''ஆஸ்பத்திரியாலை வாறன். திலகத்தை எமஜன்சிவாட்டாலை மாத்தி பதினாலாம் வாட்டுக்கு விட்டிட்டினை.... ஆனால்....'' நிறுத்தினார் நவரத்தினம். அவரின் முகம் வாடிக் கண்கள் லேசாகக் கசிந்து இருந்தன.

''உள்ளுக்கு வாங்கோ....'' என்று அழைத்துச் சென்று அலுவலகத்தில் இருத்தினார் மயில்வாகனம்.

''எல்லாம் போச்சு, என்ரை வாழ்க்கையே அஸ்தமிச்சிட்டுது'' விம்மினார் நவரத்தினம்.

''சீ...... பள்ளிக் கூடப் பிள்ளைகள் பார்த்துக் கொண்டு நிக்கு, அழாமல் சொல்லுங்கோ...''

சுயநினைவுக்கு வந்த நவரத்தினம் சொன்னார்; ''திலகத்திற்கு இடது கையும் காலும் வழங்காமல் போயிட்டுது...'' சொன்னதை மறந்து மீண்டும் விசும்பினார்.

மயில்வாகனத்திற்குத் தர்மசங்கடமாகி விட்டது. ஏற்கனவே சுந்தர் மூலம் அவர் இச் செய்தியை அறிந்த படியால் பதட்டப்பட வில்லை; ''உங்கடை தங்கச்சி சகுந்தலாவை உதவிக்குக் கேட்டுப் பாருங்கோவன்....'' என்றார்.

சிறிது நேரம் பேசாமல் இருந்த நவரத்தினம்; ''வேறு வழியில்லை அவளைத் தான் கேட்க வேணும். காசாலை எல்லாத்தையும் சாதிக்கலா மெண்டு நினைச்சன். சீ எவ்வளவு பேய்த்தனம் எண்டு இப்பத்தான் புரியுது. அடுத்த நேரக் கஞ்சிக்கு வழியில்லாததுகளே ஆஸ்பத்திரீலை நிண்டு திலகத்தைப் பராமரிக்க மாட்ட தெண்னுதுகள்.... மூத்தாற்ரை தையலைக் கேட்டன் பிள்ளைகளை விட்டுட்டுப் போகேலாதாம்.... பூமணியைக் கேட்டால் உந்த வேலைகள் சரிப்பட்டு வராதென்கிறாள். பாருங்கோவன் காலத்தை...''

''மற்றவையை நாங்கள் குறை சொல்லேலாது. தையலுக்குக் குமர்ப்பிள்ளை யொண்டிருக்கு. குடிகாரக் கணவனை நம்பி விட்டுட்டு போக முடியுமே....? பூமணி கொஞ்சம் தடிப்புப் பிடிச்சவள் மலசலம் எடுக்க சம்மதிக்க மாட்டாள்'' என்றார் மயில்வாகனம்.

''காசுக்குத் தானே சும்மாயே கேட்கிறன்..''

''இதெல்லாம் அவரவர் மனத்தைப் பொறுத்தது. இனசனம் சகோதரமெண்டால் தான் இரத்த பாசத்துக்காக இதுகளுக்கெல்லாம் சம்மதிக்கும்... மற்றும் படி கஸ்ரம் தான்''

''ஆஸ்பத்திரீலை பரமாரிக்க ஆள் வேணுமெண்டு சொல்லீட்டினை. ஊருக்கை சரிப்படேல்லை. பிறகு சுந்தர் தான் முந்தி ஆஸ்பத்திரீலை வேலை செய்து பென்சனான ஒரு பெம்பிளையைப் பிடிச்சுத் தந்தவன். நாளொண்டுக்கு முன்நூறு ரூபாய்..''

''ஊருக்கை எல்லாரும் கௌரவம் பாப்பினை...''

''கூலிவேலை செய்யிறதில் பார்க்க இது கூடாதே...''

‘‘நாங்கள் அதைத் தீர்மானிக்கேலாது. வேலை செய்ய வாறவை தான் தீர்மானிக்க வேணும்’’.

‘‘இப்ப சமையல் பாடும் பிரச்சினையாக் கிடக்கு. எனக்கு சமையல் சரிவராது. அதோடை மூண்டு நேரமும் ஆஸ்பத்திரிக்குப் போட்டு வரவேணும்..’’

‘‘கொஞ்ச நாளைக்கு வீட்டிலை சாப்பிடன். திலகத்திற்கும் கட்டிக் கொண்டு போய்க் குடு...’’

‘‘நான் வேறை ஒரு விசயமாய் வந்தனான்...’’

‘‘சொல்லு’’

‘‘என்ரை மருமோள் கல்யாணி இஞ்சைதானே படிப்பிக்கிறாள்’’.

‘‘ஓ... அதுக்கென்ன?’’

‘‘அவள் தான் தாயை ஒற்றுமையாக விடாமல் தடுக்கிறாள். தாய் பிரச்சினை இல்லை. காசிப்பிள்ளை போய்க் கதைச்சவன். இவள் தான் அவனைப் பேசிக் கலைச்சுப் போட்டாள். இப்ப நீங்கள் தான் ஒற்றுமையாக்கி விட வேணும். வேறை வழியில்லை...’’ கலங்கினார் நவரத்தினம்.

‘‘இப்படி பிரச்சினை மாறும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை. அவரறியவே எத்தினையோ கொடுமைகளை நவரத்தினம் கல்யாணியின் குடும்பத்திற்குச் செய்திருக்கிறார். மனிதாபிமான மற்ற முறையில் நடந்திருக்கிறார். இப்பிடி இருக்க எப்படி ஒற்றுமையாக்குவது என்று சிந்தித்தார் மயில்வாகனம்.

‘‘உங்களாலை தான் இது முடியும். எனக்காகக் கட்டாயம் இதைச் செய்யுங்கோ. நான் வாறன்’’ என்று கூறி விட்டு அவருடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் எழுந்து நடந்தார் நவரத்தினம்.

இப்படித் தன்னிடத்தில் பொறுப்பைச் சுமத்தி விட்டு, தனது அபிப்பிராயத்தைக் கூடக் கேளாது நவரத்தினம் எழுந்து சொல்வாரென்று மயில்வாகனம் நினைக்கவில்லை. அவர் தனது வாழ்நாளில் சமூகப் பிரச்சினைகளில் ஈடுபட்டது குறைவு. வாசிகசாலை, கோயில, விளையாட்டுக் கழகங்களின் நிதிசேகரிப்பு, விழாக்கள் யாவும் வீட்டாரின் பொறுப்பிலே விட்டு விட்டார். ஊரவரும் அவரைத் தேவைகளுக்கு அனுகுவதில்லை. இந்த நிலையில் என்ன செய்யலாமென்று ஆலோசித்தார். அப்போது அங்கே வேறு விடயமாக நடராசா வந்தார்.

‘‘நவரத்தினம் தங்கச்சியாரை ஒற்றுமைப்படுத்தச் சொல்லி வந்திட்டுப் போகுது.’’

‘‘காசிப்பிள்ளை போய் அடிவாங்காத குறை. வேறையும் நாலைந்து பேர் போய்ச் சரிப்பட்டு வரேல்லை....’’ என்றார் நடராசா. அவருக்கு ஊர்ப் புதினங்கள் யாவும் தெரியும். ஓய்வான நேரங்களில் அவற்றை மயில்வாகத்துக்குச் சொல்வதுண்டு.

‘‘செய்யக்கூடாதவை யெல்லாத்தையும் செய்து போட்டு, தனக்கு கஷ்டமெண்டவுடனை அவையிலையைப் பிடிச்சு ஒற்றுமையாக்க நினைக்கிறார். எனக்கெண்டால் உதுகளிலை அவ்வளவு பழக்கமில்லை.... நீர் ஒருக்கால் கல்யாணியோடை கதைச்சுப் பாருமன்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘நான் காலமை கதைவிட்டுப் பார்த்தனான். அழுதாள். பின்; ‘‘தயவு செய்து இந்தப்பிரச்சினையிலை நீங்கள் தலையிடாதைங்கோ சேர்’’ என்கிறாள் இனி எப்படிக் கதைக்கிறது’’.

‘‘கதைக்காமலும் விடேலாது. பின்நேரம் வீட்டை வந்திடுவன்.... சொன்னதுக்காக ஒருக்கால் கதைப்பம். நீங்கள் கல்யாணியைப் பீறிப்பீரியட் வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கோ...’’.

## *08*

“பலமாய் இருக்கும் போது சண்டித்தனம் விடுவதும் பலவீனம் அடையும் போது விழுந்து கும்பிடுவதும் சில மனிதர்களின் இயல்பு போலும்” இப்படித்தான் மயில் வாகனத்துக்கு நினைக்கத் தோன்றியது.

கல்யாணி மயில்வாகனத்துக்கு முன் நின்றாள். அவள் வந்து பல நிமிடங்கள் கரைந்த போதும் மயில்வாகம் எதுவும் பேசவில்லை. பாடசாலை விடயமானால் உடன் பேசி அனுப்பும் மயில்வாகனத்தின் மௌனம் கல்யாணியின் சிந்தனையைத் தூண்டியது.

“பாடசாலை விடயமாக உம்மைக் கூப்பிடேல்லையம்மா. இது ஒரு தனிப்பட்ட விஷயம்” என்றார் மயில்வாகனம்.

தன்னை ஏறிட்டு நோக்கிய ஒரு சின்னப் பெண்ணான கல்யாணியின் முகத்தைப் பார்த்து கதைக்க அவரால் முடியவில்லை. தலையைக் குனிந்தபடி; “நவரத்தினம் இப்ப வந்திட்டுப் போகுது” என்றார்.

நவரத்தினம் என்ற வார்த்தையே அவளது இதயத்துள் இடியாய் இறங்கியது. கோபம் ,ஆத்திரம், வெறுப்பு ஆகியன இதயத்துள் எழுந்தன. சிரமப்பட்டு அடக்க முயன்றாள். முடியவில்லை. வேறு யாராவதாய் இருந்தால் கனல் தெறிக்கும் வார்த்தைகள் பிறந்திருக்கும். ஆனால் மயில்வாகன மென்ற படியால் அது அழுகையாகப் பீறிட்டு வெடித்தது.

“விஷயத்தைச் சொல்லு முன்பே இப்படி அழும் கல்யாணி, விசயத்தைச் சொன்னால் என்ன செய்வாள்” என்று யோசித்த மயில்வாகனம்; “சொல்லாமல் விட்டாலென்ன” என்று நினைத்தார்.

“விம்மலுக்கு மத்தியில் அவள் விக்கி விசும்பிய படி சொன்னாள்; “சேர், தயவு செய்து அந்தக் குடும்பத்தின்ரை கதையைக் கதையாதைங்கோ. எண்டைக்கோ அந்தக் குடும்பம் செத்ததாய் நினைச்சுத் தலை முழுகீட்டம்”.

“கதைக்க வேண்டாம் என்ற பிறகு கதைப்பது மனிதத்தனமில்லை. ஆனால் என்னை நம்பி சொல்லிச் சென்றுள்ள நவரத்தினம் பின்நேரம் வீட்டுக்கு வந்தால் என்ன சொல்வது? என்று சிந்தித்தார் மயில்வாகனம்.

“சேர், எல்லாத்தையும் மன்னிக்கலாம். அக்காக்குச் செய்ததை மன்னிக்க முடியுமே...?”

மயில்வாகனம் நினைத்துப் பார்த்தார்; “மனிதக் குணமே இல்லாத செயல் அது. கல்யாணி கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. அதற்கு எப்படிப் பதில் சொல்வது”.

“இளம் வயதிலை காதலிக்கிறது இயற்கை. அதுகும் மாமன்ரை மகனென்டால் உரிமை கூடுதலாய்த் தான் இருக்கும். அந்த உரிமையிலை அவை நெருங்கிப் பழகீட்டினை....” மேலே அவளால் பேசமுடியவில்லை. விம்மி விம்மி அழுதாள்.

பழைய நினைவுகள் மயில்வாகனத்தின் மனதில் படமாகத் தெரிந்தன. அப்பொழுது நவரத்தினத்தோடு அவருக்கு அவ்வளவு தொடர்பில்லை. கண்ட இடத்தில் ஒரு சிரிப்போடு சரி. இல்லாவிட்டால் தலையாட்டி விட்டுச் செல்வார். ஊர்ப் பாடசாலையில் படித்த பகீரதன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்பு பகீரதனது கல்வி விஷயமாக நாலைந்து முறை நவரத்தினமும் திலகமும் அவரது வீட்டுக்கு வந்து சென்றதால் நட்பாயிகிவிட்டது. பின் மயூரனும் பகீரதனும் பட்டணத்தில் உள்ள தேசிய பாடசாலையில் ஒன்றாகக் கல்வி கற்றுக் கொண்டிருக்கையில் வளர்ந்து தற்பொழுது விருட்சமாகியுள்ளது. எனினும் மயில்வாகனம் நவரத்தினத்தின் வீட்டுக்குச் செல்வதோ அல்லது அவருடன்

கலகலப்பாகக் கதைப்பதோ இல்லை. பொதுவாக அவர் கல்விப் புலம்சார்ந்தோருடன் தான் நட்பு வைத்திருந்தார். அந்த வகையில் பகீரதனுடன் அவர் கலகலப்பாகப் பழகினார். தேவையான உதவிகளைச் செய்தார். பகீரதன் அவரைத் தெய்வமாக மதித்தான். ஆலோசனைகளைக் கேட்பான். வீட்டிலும் அவரைப் பற்றி அதிகமாகக் கதைப்பான். இதனால் நவரத்தினமும் திலகமும் அடிக்கடி மயில்வாகனத்தின் வீட்டுக்கு வந்து சென்றனர். இதனால் இலச்சுமியினதும் திலகத்தினதும் உறவு நெருக்கமாகி விட்டது.

இந்தப் பிரச்சினைகளெல்லாம் நவரத்தினத்தோடு மயில்வாகனம் தொடர்பில்லாத காலத்தில் நடந்தது.

நவரத்தினத்தின் மூன்றாவது மகன் முகுந்தன் கல்யாணியின் அக்காவை விரும்பினான். இருவரும் வயலிலும் கோயிலிலும் சந்தித்துக் கதைத்துக் கொண்டனர். அந்த நாளில் இரு குடும்பத்திற்கும் பிரச்சினை எதுவும் இல்லாமல் இருந்ததால் இரு குடும்பத்தினரும் ஒருவர் வீட்டுக்கு இன்னொருவர் சென்று வந்தனர். திடீரென்று நவரத்தினத்தின் தாய் காலமாகக் கல்யாணியின் பெற்றோர் செய்து வந்த தோட்டத்தை விடும்படி நவரத்தினம் கேட்டுக் கொண்டார். அது தனது முதிசமென்றும் கூறினார்.

கல்யாணியின் தாய் வேலாயுதத்தைக் காதலித்து வந்தாள். அந்தக் காதலை இரு வீட்டாரும் விரும்பாததால் இருவரும் வீட்டை விட்டுப் பத்து மைல்களுக்கப்பாலுள்ள வேலாயுதத்தின் நண்பனின் வீட்டில் போய் இருந்து விட்டனர்.

இரண்டு மூன்று மாத காலம் இவர்களைத் தேடிய இருவீட்டாரும் காணாமையால் விட்டு விட்டனர். ஒரு வருடத்துக்குப் பிறகு நவரத்தினத்தின் தாய் அவர்களைத் தன்வீட்டுக்கு அழைத்து வந்தாள். இதனால் நவரத்தினத்திற்கும் தாய்க்கும் பிரச்சினை உருவானது. நவரத்தினத்தின் தாய் தனது சீதனக் காணியை மகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவளை எழுதிக் கொடுக்க நவரத்தினம் விடவில்லை.

காணியை எழுதாதபடி தாயும் இறக்க காணியைப் பற்றிய கதையே இல்லாமல் இருந்தது. இதைப் பற்றி வேலாயுதம் கவலைப்படவில்லை. வன்னியில் காணியெடுத்துக் கமம் செய்து ஓரளவு வசதியாக வாழ்ந்து வந்தான். இதுவும் நவரத்தினத்திற்குப் பிடிக்கவில்லை. தன்னை வேலாயுதம் மதிக்கவில்லை என்று நினைத்தான். அதனால் வேலாயுதத்துடன் சிறு சிறு பிரச்சினைகளுக்கும் கொழுவல் எடுத்துக் கொண்டிருந்தான்.

வேலாயுதம் அமைதியானவன். தானுண்டு தன்னுடைய குடும்பமுண்டு என்று வாழ்ந்தானே தவிர நவரத்தினத்தைப் பற்றி சிந்தித்தே பார்க்கவில்லை. மனைவி பிள்ளைகளையும் நவரத்தினத்தின் வீட்டுக்கு செல்ல வேண்டாம் என்று மறிக்கவில்லை. வேலாயுதத்தின் அமைதியான போக்கை நவரத்தினம் தவறாகக் கணித்தான். அதனால் தன்னுள்த் தானே பிரச்சினையை வளர்த்துக் கொண்டான். அது நாளாக ஆக மனதுள் வளர்ந்து விசுவரூபம் எடுத்தது.

இந்த நிலையில் தான் முகுந்தனுடைய காதல் பிரச்சினை வெளிவந்தது. நவரத்தினம் துள்ளிக் குதித்தார். வலியச் சண்டைக்குப் போனார். குடித்து விட்டுப் பொது இடங்களில் கேவலமாகப் பேசினார். திலகம் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. அவரது மூன்று பிள்ளைகள் அந்த நேரம் வெளிநாட்டில் இருந்ததால் பணம் தாராளமாக அவரிடம் பிழங்கியது. அதனால் பல நண்பர்களையும் சேர்த்துக் கொண்டார்.

முகுந்தன் தனது காதலியை கூட்டிக் கொண்டு சென்று விட்டான். நவரத்தினம் தனது நண்பர்களைச் சேர்த்தார். சாராயப் போத்தலை எடுத்தார். இரவு பகலாக காதலர்களைத் தேடும் படலம் ஆரம்பமாகியது. மூன்று நாள்கள் சென்ற பின் நவரத்தினம் ஒருவாறு மனம் திருந்தினார். ‘எங்காவது வாழட்டும்’ என்று நினைத்தார். ஆனால் குடிப்பதற்காகச் சேர்ந்த நண்பர்கள் அவரை விடவில்லை. புத்திமதிகள் கூறினர். ஒன்றைப் பத்தாகச் சொன்னார்கள். இதனால் மனம் மாறிய நவரத்தினம் மீண்டும் அவர்களைத் தேடத் தொடங்கினார். ஐந்தாம் நாள் அவர்கள் பிடிபட்டனர். உடனே நவரத்தினம் முகுந்தனை பிரித்துக் கூட்டி வந்து மறு நாள் கொழும்புக்கு கூட்டிச் சென்று விட்டார். மறு வாரம் முகுந்தன் கனடாவுக்குப் பயனமானான். இப்போ அவன் மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பன். இங்கே கல்யாணியின் அக்கா வீட்டிலே தவமிருக்கிறாள்.

மயில்வாகனத்தின் முகத்தில் வியர்வை துளிர்த்திருந்தது. கைக்குட்டையால் அழுத்தித் துடைத்தார்.

"நீ போ கல்யாணி... நான் என்றாலும் உன்ரை முடிவைத் தான் எடுப்பன். ஒரு குமர்ப்பிரச்சினை, மிருகத்தனமாய் நடந்திட்டு. இப்ப வலியவரீனை... விடக்கூடாது.." என்றார் மயில்வாகனம் உணர்ச்சி பொங்க.

கல்யாணி இதை எதிர்பார்க்கவில்லை. நவரத்தினத்துடன் ஒற்றுமையாகும் படி சொன்னால் எப்பிடி மறுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு, தனக்கு ஆதரவாக அவர் பேசியது மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவரோடு பெரிதாகப் பழகா விட்டாலும் ஊரார் பெரிய மனிசன் என்று சொன்னதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று நினைத்தாள்; "ரெம்ப நன்றி சேர் நான் வாறன்" புறப்பட்டாள் கல்யாணி.

"ஏதாவது தவறாகக் கதைச்சிருந்தால் என்னை மன்னிச்சுக் கொள்ளம்மா" என்றார்.

"நீங்கள் என்னோடை கதைக்கவே இல்லை சேர்..." சிரித்தாள் கல்யாணி.

"சரி.... சரி.... நடராசா சேரை வரச் சொல்லும்.."

நடராாசா அலுவலகத்துள் வந்த போது மயில்வாகனம் பேனையைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தார்; "சேர் வரச் சொன்னதாய்க் கல்யாணி ரீச்சர் சொன்னா..."

"ஓம் இரும்... நீர் பாடசாலையின்ரை உப அதிபர். ஏன் முப்பது பாடம் எடுக்கிறீர்... பதினைஞ்சு பாடமாய்க் குறைக்க வேணும். நிர்வாகத்திலை இருக்கிறவை கூடுதலாகப் பாடமெடுத்தால் பாடமும் நடவாது, நிர்வாகமும் ஓடாது... முப்பது பாடங்களோடை மூண்டு மாதமாய் எப்படிச் சமாளிச்சனீர்"

நடராசா பதில் சொல்லவில்லைச் சிரித்தார்.

"எனக் கெண்டால் ஒன்பது பத்து பதினொண்டுத் தமிழை வேறையாருக்காவது குடுக்கலாமென்று தோன்றுது. உமது அபிப்பிராயம் எப்பிடி".

"என்ன ஒரே சிரிப்பு... ஏதாவது விசேசமோ.... இல்லை..." மயில்வாகனம் இழுத்தார்.

"இல்லைத் தட்டிப் போட்டுதோ அப்பிடித்தானே...." என்று சிரித்த நடராசா. சிறிது நேர மெனத்தின் பின் சொன்னார்; "கனகாலமாய் நினைச்சனான். ஆரிட்டைக் குடுக்கிறது என்று தான் தெரியேல்லை..."

"பட்டதாரிகள் மூண்டு பேர் இருக்கினை. மூன்று பேரும் தமிழை ஒரு பாடமாய்ப் படிச்சிருக்கினை. ஒருத்தரிட்டைக் குடுக்கிறது தானே"

"நான் ஒரு ஜென்ரல் ரெயிண்ட்ரீச்சர். நீங்கள் பட்டதாரி அதிபர். அனுபவம் மிக்கவர். இதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறியளே..."

"இப்ப மேல் வகுப்பிலை மட்டுமில்லை கீழ்வகுப்பிலையும் தமிழை ஒழுங்காகக் கற்பிக்க சரியான ஆசிரியர் இல்லை. பருத்தி மலை மகாவித்தியாலயத்தில் ரைம்ரேபிள் போடும் போது தமிழ்ப் பாடத்தில் தான் பிரச்சினைகள் தோன்றும். அனேகமாக எல்லாப் பட்டதாரி ஆசிரியர்களும் தமிழைக் கற்பிக்க விரும்புவதில்லை. சோசல், சமய பாடங்களைக் கற்பிப்பதில் தான் ஆர்வங் காட்டுவார்கள்" இப்போது மயில்வாகனம் சிரித்தார்.

"என்ன சேர் உங்களுக்கும்...." நடரசா கேட்க மயில்வாகனம் மீண்டு சிரித்தார். பின் சொன்னார்.

“இது மிகவும் வேதனைக்குரிய விசயம். முந்தின காலத்திலை இலக்கணத்தைக் கரைச்சுக் குடிச்சவை தான் தமிழைக் கற்பிச்சவை. இப்ப ஒழுங்காய் தமிழை, பேச, எழுத, வாசிக்கத் தெரியாதவை தான் படிப்பிக்கினை. போனமாசம் டிரைக்கர் பட்டதாரிகளெல்லாம் பண்டிதர் பரீட்சை எடுக்க வேணும், இல்லாவிட்டால் பண்டிதர் பால பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தான் தமிழைக் கற்பிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்..... யதார்த்தமான பேச்சு....”

“பட்டதாரியள் மூன்று பேர் இருக்கினை. ஆனால் ஒருத்தரும் தமிழைக் கற்பிக்க விரும்பீனை இல்லை” என்றார் நடராசா.

“அனேகமாய் எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் உந்த நிலை இருக்கு. எங்கடை சமூகத்தின்ரை கல்வி பாழாய்ப் போய்ச்சு... பொதுவாய்ப் பார்க்கேக்கை கற்ற சமூகம்.... மாக்ஸ்கூட எடுத்திருக்கு எண்டெல்லாம் சொல்லீனை. ஆனால் ஆராய்ஞ்சு பாத்தால் வெறும் பீத்தலென்பதைக் கனபேர் இன்னும் உணரேல்லை... இப்ப யாழ்ப்பாணத்திலை ஆங்கிலம் கற்பிக்க ஆட்களில்லாதத் தாலை கல்விப் புலம் சாராத பென்சன் எடுத்த ஊழியரை ஆங்கிலம் கற்பிக்க நியமிக்கினை. இது வெற்றியளிக்குமே...?” என்று கேட்டார் மயில்வாகனம்.

“அடிக்கடி திட்டம் மாறுதத்தாலை றெயினிங் கொலிஜ்சுக்குப் போட்டு வந்த வாத்திமாரே பாடத்திட்டம் எழுதுறத்திலை தடுமாறீனை.. பிறகு இவை எப்பிடி எழுதுறது... எப்பிடிப் படிப்பிக்கிறது...”

“கொஞ்சக் காலம் செல்ல டொக்ரேசை வெளிநாடுகளிலை இருந்து கூப்பிற மாதிரி சில பாடங்களுக்கும் கூப்பிட வேண்டி வரும்” என்றார் மயில்வாகனம்.

நடராசா மௌனமாக இருந்தார். ‘இதில் பேச என்ன இருக்கிறது’ என்று நினைத்தார்.

“ஒன்பதாம், பத்தாம், பதினொராம் ஆண்டுகளுக்கான தமிழ்ப் பாடத்தை கல்யாணிரீச்சரிட்டைக் குடுங்கோ.. அவாவுக்கு நான் சொல்லுறன்”.

புதிதாக நியமனம் பெற்று வரும்போதே; “தமிழைத் தவிர வேறு பாடங்கள் போடுங்கோ” என்று சொல்லிக் கொண்டு வந்தவள் கல்யாணி. இப்ப தமிழைப் போட்டால்...”என்று நடராசா நினைத்தார். அவர் தான் ரைம்ரேபிள் போடுறவர்.

“சரி சேர்” என்றார். நடராசா

“தமிழ் படிப்பிக்கிறது சிரமம் தான். இளம் பிள்ளைகள் கற்பித்துப் பழக வேணும். அடுத்தவரிசம் நீர் பென்சன் எடுத்தாப் பிறகு ஆர் படிப்பிக்கிறது...?” என்று கேட்டார் மயில்வாகனம்.

“நியாயமான கேள்வி தான்” என்று நினைத்தார் நடராசா.

“பிள்ளைகளின்ரை கல்வித்தரம் மிகவும் மோசமாக இருக்கு. இதுக்கு ஏதாவது ஒன்று செய்ய வேணும்... குறைபாடுள்ள பிள்ளைகளைத் தவிர மற்றையோர் பின் தங்குவதற்கு காரணம் என்னவென்று முதலிலை ஆராய்ஞ்சு கண்டு கொண்டால் திருத்திப் போடலாம். கல்வியிலை அக்கறை இல்லாத பெற்றாரும், பணவசதி இல்லாத பெற்றாரும் தான் பொதுவாய்த் தங்கடை பிள்ளைகளை இஞ்சை விறவை. எவ்வளவு தான் சொன்னாலும் வீட்டு வேலைகள் செய்து வருதுகளில்லை. இதுக்கு பல காரணங்கள் இருக்கு. பெற்றாருக்குக் கல்வியறிவு இல்லை, வறுமை, வெளிநாட்டுப் பிரயாணம் போன்றவை” என்றார் நடராசா.

“எல்லாவற்றையும் திருத்தலாம். அதுக்கு அக்கறையும் பொறுமையும் வேணும். மாணவனில் ஆசிரியர் அன்பாக இருந்தால் மாணவனும் ஆசிரியரில் அன்பாக இருப்பான். அதனால் ஆசிரியரின் சொற்படி அவன் நடப்பான். இதனால் வீட்டிலும் சமூகத்திலும் ஆசிரியரின் மதிப்பு உயரும். மாணவனை வேண்டாத பொருளாக நினைத்தால் அவன் ஆசிரியருக்கு அருகில் வரமாட்டான்” என்றார் மயில்வாகனம்.

நடராசா மௌனமாக இருந்து மயில்வாகனம் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு சிறிய பாடசாலையான பருத்தி மலை மகாவித்தியாலயத்தின் இமாலய வளர்ச்சியைப் பற்றி ஏற்கனவே நடராசா அறிந்திருந்தமையால் மயில்வாகனத்தின் அனுபவங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கும் அவ்வித்தியாலயத்தை வளர்க்க வேண்டு மென்ற ஆவல் நெடு நாளாக இருந்தது. அதற்கான வாய்ப்பு தற்பொழுது ஏற்பட்டிருக்கிறது என்று மகிழ்ந்தார்.

''மாணவனது கல்வி வளர்சியடைய வேண்டு மானால் பெற்றோர்களை அதிபரும், ஆசிரியர்களும் அடிக்கடி சந்திக்க வேண்டும். பல முறை சொல்லும் போது ஒரு முறையேனும் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் பெற்றோருக்கு உண்டாகும். அதோடு பெற்றோர்களைச் சந்திக்கும் பொழுது பிள்ளைகளின் ஏதோ ஒரு நல்ல செயலைப் பற்றி புகழ்ந்து கூறுதல் வேண்டும். அதனூடாகப் பிள்ளைகளின் தரம், ஒழுக்கம் பற்றிக் கூறுதல் வேண்டும். புகழ்ச்சியினால் மகிழ்வுறும் பெற்றோர் மாணவனின் குறைபாடுகளை நீக்க முயற்சிப்பார்கள்''.

''எமது பாடசாலைக்கு சொல்லி விட்டாலும் பெற்றோர் வரமாட்டார்கள்'' என்றார் நடராசா.

''அப்பிடிச் சொல்லாதைங்கோ... நான் பார்த்ததிலிருந்து இங்கே பிள்ளைகளை, ஆசிரியர்கள் மதிப்பதில்லை. அந்த நிலை மாற வேண்டும். எனக்கு ஒரு பத்து நாள் அவகாசம் தாருங்கோ. எல்லா பெற்றாரையும் இஞ்சை வரவழைக்கிறன்'' என்றார் மயில்வாகனம்.

அந்தச் சக்தி மயில்வாகனத்துக்கு உண்டு என நினைத்தார் நடராசா. அவர் வந்த சில நாட்களிலேயே பாடசாலை தலைகீழாக மாறிவிட்டதை அவர் கண்டுள்ளார்.

பாடசாலை முடிவதற்கான மணி அடித்தது; ''சரி நீங்கள் போங்கோ'' என்ற மயில்வாகனம் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார். மாணவர்கள் தேவாரம் பாடினர். மீண்டும் மணி அடித்தது. மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளியேறினார்கள்.

## *09*

மாலை ஐந்துமணி இருக்கும். மயில்வாகனம் வீட்டுக்குப் பின் புறத்தே உள்ள தனது வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரது வீட்டுக்காணி எட்டுப் பரப்பு விஸ்தீரணமுடையது. வீடு போக ஐந்து பரப்பில் தனக்குத் தேவையான மரக்கறி வகைகளையும் வாழையும் நட்டிருந்தார். பாடசாலை விட்ட பின்பு தினமும் இரண்டு மணித்தியாலங்கள் அவர் தோட்டத்தில் வேலை செய்வது வழக்கம். அவருடன் அவரது நாயான ஜிம்மனும் பூனையான 'சண்ணும்' கோழிகளும் தோட்டத்தில் நிற்கும்.

வாழைகள் நன்கு செழித்து வளர்ந்திருந்தன. நல்ல பசளையிட்டு ஒழுங்காகப் பராமரித்ததால் பெரிய பெரிய குலைகளைப் போட்டிருந்தன. மயில்வாகனம் குலை போட்டு வெட்டிய வாழைக்குத்தி யொன்றை வெட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுது இலட்சுமியம்மாள் அங்கே வந்து; ''நடராசா மாஸ்ரர் வந்திருக்கிறார்'' என்றாள்.

''இஞ்சை வரச் சொல்லும்'' என்ற மயில்வாகனம் தொடர்ந்து வேலையில் கண்ணாக இருந்தார்.

ஜிம்மன் இருமியது. மயில்வாகனம்; ''வாரும் நடராசா'' என்றபடி ஜிம்மனை அதட்டினார்.

''பள்ளிக் கூடத்திலை சொல்லுறது சரியில்லை எண்டு தான் வீட்டை வந்தனான்''.

மயில்வாகனம் நடராசாவை ஏறிட்டு நோக்கினார்; ''என்னவாக இருக்கும் பள்ளிக்கூட விசயமோ'' எனச் சிந்தித்தார்.

இதை விளங்கிக் கொண்ட நடராசா சொன்னார்; ‘‘பெரிசாய் ஒண்டு மில்லை. நாளைக்கு என்ரை பேர்த்தியின்ரை மூன்றாம் திவசம். அது தான் சொல்லிப் போட்டுப் போவ மெண்டு வந்தனான்’’ சொல்லும் போதே அவரது குரல் சிறிது கரகரத்தது. கண்களில் நீர் சுரந்தது.

‘‘பள்ளிக் கூடத்திலை சொல்லியிருக்கலாம் தானே. வீணாய் மினக்கெட்டு இஞ்சை வந்திருக்கிறீர்’’

‘‘நான் பள்ளிக் கூடத்திலை ஒருத்தருக்கும் சொல்லுறேல்லை’’

‘‘அப்ப எல்லாருக்கும் வீட்டையே போய்ச் சொல்லுறனீங்களே’’.

‘‘இல்லை.... இல்லை.... என்ரை இன சனத்தோடை விட்டுர்றனான்... நீங்களும் எனக்கு அப்பற்ரை வழிலை சொந்தக்காரன். போன முறை தூரத்துச் சொந்த மெண்ட படியாலை சொல்லேல்லை. இப்ப அதிபர் அதாலை...’’ சிரித்தார் நடராசா.

‘‘பள்ளிக் கூடத்திலை ஒருத்தருக்கும் சொல்லுறேல்லையோ..?’’ மயில்வாகனம் கேட்டார்.

‘‘நான் சொல்லுறேல்லை. எனக்குச் சொன்னாலும் நானும் போறேல்லை...’’

‘‘அப்பிடியே, ஏன்...?’’

‘‘யாழ்ப்பாணச் சமூக அமைப்பு உங்களுக்குத் தெரியும் தானே. பல சாதியளும் இருக்கு. வெள்ளாள வாத்திமார் நாங்கள் சொன்னால் வராயினை. பிறகேன் எங்களுக்குச் சொல்லுவான். அதாலை நானும் சொல்லுறேல்லை. சிவராசாவுக்கு மட்டும் இரகசியமாகச் சொல்லுறனான் அந்தாள் வரும்’’.

‘‘ஊருக்கை யெண்டால் இப்பிடியான பிரச்சினைகள் வரத்தான் செய்யும்..’’ என்றார் மயில்வாகனம்.

‘‘இஞ்சை மோசம் சேர். ஒரு காலத்திலை வெள்ளாளர்களைத் தவிர இஞ்சை ஒருத்தரும் படிப்பிக்கேலாது. சிவராசா மாஸ்ரர் வந்தவுடனை என்ன வெல்லாம் செய்தவங்கள். அந்தாளுக்கு மேலிடச் செல்வாக்கிருந்த தாலை ஒண்டும் செய்யேலாமல் போச்சு..’’

‘‘இஞ்சத்தேல் ஆட்கள் கொஞ்சம் தடிப்புப் பிடிச்சவங்கள் தான்’’ என்றார் மயில்வானம்.

‘‘அவையின்ரை தடிப்பு அவையோடை இருக்கட்டன். எங்களிலை ஏன் காட்டுவான். மிசிஸ் கந்தப்பு ஒருதற்ரை நல்லது கெட்டதுக்கும் போறேல்லை. சரி கலியாணத்துக்குத் தான் போக வேண்டாம். செத்த வீட்டுக்குக் கூடப் போயினை இல்லையே. சிவராசா மாஸ்ரற்ரை மாமன் செத்தவர். அதுக்கு ஒருத்தரும் போகேல்லை. அந்தாள் ஒரு சாதி மனிசன். சந்தர்ப்பம் வரேக்கை நேருக்கு நேரை கேக்கும். மிசிஸ் கந்தப்பூன்ரை மாமன் செத்துப் போனார். நானும் சிவராசாவும் போனனாங்கள். அந்திரட்டிக்கு மிசிஸ் கந்தப்பு செத்த வீட்டுக்கு வந்தவைக்குச் சொல்லுறன் எண்டு சொல்லிச் சிவராசா மாஸ்ரருக்கு சொன்னா..’’ என்று சிரித்த நடராசா பிறகு சொன்னார்; ‘‘ரீச்சர், நாங்கள் மனிசத்தன முள்ளனாங்கள். அதாலை தான் வந்தனாங்கள். நீங்கள் எங்கடை வீட்டை வரமாட்டியள். நாங்கள் ஏன் உங்கடை வீட்டை வர வேணும்? நான் ரீச்சர், மனிசியும் ரீச்சர் என்ரை முத்தக்காவும் அத்தானும் மகளும் ரீச்சமார். மருமோன் டொக்ரர். மற்றக்கான்ரை மகன் இஞ்சினியர். உங்கடை மாமா செத்தவர், அவர் கோப்பிறேசன் கள்ளுச் சரியில்லை யெண்டு என்ரை ஒரு மச்சான் முறையான ஒருத்தன்ரை வீட்டுக் கோடிக்கை இருந்து தான் கள்ளுக் குடிக்கிறவர். இதிலை ஏன் சாதி பார்க்கிறீர்களில்லை’’ என்று கேட்டிட்டார்.

‘‘அதுக்கு மிசிஸ் கந்தப்பு என்ன சொன்னவா’’.

‘‘அவா சிரிச்சுச் சமாளிச்சிட்டா’’

அப்போது இலட்சுமியம்மாள் இரண்டு கோப்பைகளில் தேனீர் கொண்டு வந்து ஒன்றை நடராசாவிடம் கொடுத்து விட்டு மற்றதை மயில்வாகனத்திற்குக் கொடுத்து விட்டுக் கேட்டாள்; ''மோள் எப்ப போறா..?''

நடராசாவுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. மறந்த, மறக்க முற்படுற ஒரு விசயத்தை நினைப்பூட்டியதால் அவர் சற்றுத் தடுமாறிப் போனார்; ''இதெல்லாம் எங்கன்ரை கையிலேயே இருக்கு. எப்பெப்ப என்னென்ன நடக்க வேணு மெண்டு மேலை உள்ளவனெல்லோ தீர்மானிக்கிறது'' என்றார் சலிப்புடன்.

''எந்த நாட்டிலை மருமோன் நிக்கிறார்...?'' மீண்டும் இலட்சுமி கேட்டாள்.

''கனடாவிலை'' என்றார். சற்றுப் பொறுத்துச் சொன்னார்; ''எங்கடை சனத்தின்ரை தலைவிதி எப்படியெல்லாம் எழுதப்பட்டிருக்கு...'' என்றவர் மீண்டும் சில நிமிட மௌனத்தின் பின் சொன்னார்; ''எங்கடை தலைவிதியை நாங்களும் சில நேரம் எழுதுறம்.. என்ரை குடும்பப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் என்ரை பேர்த்தி செத்ததுக்குக் காரணமே என்ரை குடும்பமெண்டு தான் நான் சொல்லுவன்''.

மயில்வாகனத்தால் எதுவும் பேச முடியவில்லை. தேவையில்லாத கதையைக் கதைத்து நடராசாவின் துன்பத்தை அதிகரிக்கச் செய்த இலட்சுமியை முறாத்துப் பார்த்தார் மயில்வாகனம். அது இலட்சுமிக்கு புரிந்து விட்டது. மெல்ல நழுவினாள்.

நடராசா தொடர்ந்து சொன்னார்; ''சேர் எங்கடை ஊரிலை சிறப்பாக ஏன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரிய பாடசாலைகளுக்கு நிகராய் நடக்கிற பள்ளிக் கூடம் நாவலர் வித்தியாலயம். போன முறையும் பதினெட்டுப் பிள்ளையள் கொலசிப் பாஸ்பண்ணியது. என்ரை பேர்த்தியை அங்கை சேர்ப்ப மெண்டு எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும் தாயும் மோளும் கேக்கேல்லை. யாழ்ப்பாணத்திலை சேர்க்க வேணு மெண்டு விடாப்பிடியாய் நிண்டுதுகள். இருக்கிறது ஒரே ஒரு பிள்ளை. அதை அஞ்சு மைலுக்கங்காலை சேர்த்துப் போட்டு ஏத்தி இறக்க எவ்வளவு கஷ்டப்பட வேணுமெண்டு சொன்னான். போர்காலச் சூழ்நிலை, பொம்மர் கெலியள் வரும், உள்ளூரில் சேர்ப்பம். நானும் ஆசிரியர் தானே கவனிச்சுக் கொள்ளுவன் என்றேன். இரண்டு பேரும் கேட்கேல்லை'' அழுதார் நடராசா.

''நடந்து முடிஞ்சிட்டுது. இனிக் கதைச்சு என்ன பிரியோசனம்?'' என்றார் மயில்வாகனம்.

''அந்த நேரம் நான் கதைக்காமல் செயலிலை காட்டியிருக்க வேணும். யாழ்ப்பாணத்திலை சேர்க்கேலாது. இஞ்சை தான் சேர்க்க வேணும் என்று சொல்லியிருந்தால் அப்பிடி நடந்திராது.... இப்ப நான் எந்த விசயத்திலும் விட்டுக் குடுக்கிறேல்லை.''

''என்ரை பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திலை தானே படிச்சதுகள். அதுகளுக் கொண்டும் நிகழேல்லை..'' என்றார் மயில்வாகனம்.

''அது சரி சேர், பச்சைப் பாலனை பத்து மைல் பிரயாணம் செய்ய வைக்க வேணுமே.? கார் பஸ் ஓடினாலும் பரவாயில்லை. சைக்கிலிலை இரண்டு மூன்று பிள்ளைகளை ஏத்தி விட வேணுமோ? அதோடை இஞ்சை நல்ல பள்ளிக் கூடம் இல்லாட்டிலும் பரவாயில்லை. நாவலர் வித்தியாலயத்தை தம்பையாண்ணையின்ரை மகன் திறமாய் நடத்திறார். ஸ்கொலசிப் மட்டுமில்லை. ஆங்கிலப் போட்டிகளிலையும் மாவட்டப் பரிசுகள் பல பெற்றிருக்கு... அதை விடப் பொருளாதார ரீதியாய் பார்த்தாலும் ரவுணிலை ஆண்டொண்டு அற்மிசனுக்குப் பத்தாயிரம் வேணும். மாசம் ஏத்தி இறக்கிறவனுக்கு ஆயிரம், மற்றச் சிலவுகள்... அஞ்சாம் ஆண்டு முடிய வேறை பள்ளிக்கூடம் பார்க்க வேணும்... ஊருக்கை யெண்டால் வரிசம் பதினெட்டு ரூபா வசதிக்கட்டணமாய்க் கட்டினால் சரி''

''எல்லாரும் ஒரு மாதிரி இருக்க முடியுமே...? சிலபேர் அப்பிடி இப்பிடி இருப்பினை..'' என்றார் மயில்வாகனம்.

''எனக்கிருக்கிறது ஒரே ஒரு மகள். நான் தேடின சொத்தெல்லாம் ஆருக்கு...'' என்று அழுத நடராசாசில கணங்கள் கழித்துச் சொன்னார்; ''சேர் என்னைக் கடவுள் அளவுக்கதிகமாய்ச்

சோதிக்கிறார். ஊருக்கை நல்ல மாப்பிளை எண்டு செய்து வைச்சன். பட்டதாரி படிப்பிக்கிறான். அறிஞ்ச பையன் எண்டபடியால் தான் செய்தனான். இருந்தாப் போலை அவனுக்கு வெளியூர் மோகம் பிடிச்சிட்டுது. எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் வேலையையும் விட்டுட்டுப் போய் நாலுவரிசமாய்க் கனடாவிலை நிற்கிறான். பிள்ளையும் போயிட்டுது. இப்ப மகளை வரச் சொல்லி ஒரே கரைச்சல். மகளுக்குப் போக விருப்பம்...'' விம்மினார் நடராசா.

''கலியாணம் கட்டிக் குடுத்திட்டால் புரிசன்ரை பேச்சைக் கேட்கிறது தான் வழமை. அவளுக்கு விருப்பமெண்டால் அனுப்பி விர்றது தானே..''

''நான் ஆருக்காக இந்தச் சொத்துக்களைத் தேடினனான். எனக்கிருக்கிற சொத்து மூண்டு தலை முறைக்குக் காணும். மருமோனை இஞ்சை வரச் சொல்லி எழுதினால், அவர் மகளை அங்கை அனுப்பச் சொல்லி எழுதுறார்.'' கவலைப்பட்டார் நடராசா.

''கஷ்ரம் தான்...'' என்றார் மயில்வாகனம்; ''அவர் சொல்வதைப் போலப் பேர்த்தியை நாவலர் வித்தியாலயத்தில் சேர்ந்திருந்தால் சில சமயம் அவள் தப்பியும் இருப்பாள். என்று எண்ணினார். அது ஒரு அனியாயச் சாவு தான். பன்னிரண்டரைக்குப் பாடசாலை விட்டு வீட்டுக்கு கூலிக்கு அவளை ஏற்றும் அருணாசலத் தோடு சைக்கிலில் ஏறி முத்திரைச் சந்திக்கு வந்த போது திடீரென்று புக்காரா வர சனங்கள் பதட்டப்பட்டு வீதியால் குறுக்கே ஓட, பின்னால் வேகமாகத் தடுமாறிய படி வந்த லொறி ஒன்று அருணாசலத்தின் சைக்கிலோடு மோத அருணாசலமும், அவன் ஏற்றி வந்த மூன்று பிள்ளைகளும் அந்த இடத்திலேயே பலியாகினர்.

இதனால் மயில்வாகனமும் பதட்டப் பட்டிருந்தார். அவரும் தினமும் பத்து மைல்கள் சைக்கிலில் பயாணஞ் செய்வதால் இப்படியான நிகழ்வுகள் ஏற்படலாமெனப் பயந்தார். அதனால் பாடசாலை விட்டு சனநெரிசல் குறைந்த பின்பே பிரயாணஞ் செய்தார்; ''நடராசா சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஊருக்குள் சிறந்த பாடசாலைகளை உருவாக்கினால் ஊரை விட்டு வெளியே செல்கின்ற மாணவர்கள் குறைவார்கள்'' என்று எண்ணினார்.

அந்தக் காலத்திலை அவர் படித்த அமரிக்கன் மிசன் கல்லூரி மிகவும் பிரபல்யமான கல்லூரியாகத் திகழ்ந்தது. கொழும்பு, கண்டி, காலி, நுவரேலியா போன்ற நகரங்களில் இருந்து மாணவர்கள் வந்து கல்லூரி விடுதியில் தங்கிக் கற்றனர். வருடா வருடம் ஐம்பது அறுபது பேர் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர்... இப்ப.... அஞ்சுவரிசத்துக்கு ஒருவர் கூட பல்கலைக்கழகத்திற்குச் செல்வதில்லை... இது... ஏன்...? மயிலிவாகனம் கவலைப்பட்டார்.

''அவளை அனுப்பீட்டால் என்ரை வாழ்க்கை அஸ்தமிச்சிடும். அனுப்பாட்டில் அவளின்ரை வாழ்க்கை அஸ்தமிஸ்து விடும்'' விம்மினார் நடராசா.

''உங்களைப் பற்றிப் பாராதைங்கோ. மகளின்ரை வாழ்க்கை தான் முக்கியம். ஒரு காலத்திலை அவை இஞ்சை வரலாம். இல்லாட்டில் நீங்கள் அங்கை போகலாம்...'' என்றார் மயில்வாகனம்.

''அவளை அனுப்பத்தான் வேணும். கப்பலுக்கும் பிளேனுக்கும் பதிஞ்சிட்டன். எது முந்துதோ அதிலை கொழும்புக்குப் போறதாய் உத்தேசித்திருக்கிறன்'' என்றார்.

''ஓம், நேரகாலத்தோடை அனுப்பவேணும். ஒரு பெண் பிள்ளையையும் இழந்து புரிசனையும் பிரிஞ்சு வாழுறது கஷ்ரம். பிறகு நீங்கள் இல்லாத காலத்திலை அவளுக்கும் துணை வேணும்'' என்றார் மயில்வாகனம்.

''அதைத்தான் நானும் நினைச்சனான். பத்துலட்சம் ரூபா பாங்கிலை இருக்கு. பத்தாயிரம் ரூபாய் மாதச்சம்பளம் எடுக்கிறன். அவரும் இஞ்சை இருந்தால் மாதம் ஆறேழு எடுப்பர். இதில் பார்க்க பெரிய உழைப்பே அங்கை..''

''உதுகளை யெல்லாம் இப்பத்தேல் பொடியள் சிந்திக்குதுகளே... நாட்டின்ரை சூழ்நிலையைக் காரணங் காட்டி எல்லாம் பறக்குதுகள். நாங்கள் திரும்பி வந்தாப் பிறகு

அயலட்டையிலை உள்ள பத்துப் பதினைஞ்சு குடும்பம் வெளிநாட்டுக்குப் போக வெண்டு போய்க் கொழும்பிலை போய் நிக்கு..'' என்றார் மயில்வாகனம்.

''எல்லாம் கடவுள் விட்டவழி'' என்ற நடராசா பொக்கற்றுக்குள் கையை விட்டு லீவு கடிதத்தை எடுத்துக் கொடுத்து விட்டு; ''நான் வாறன் சேர்..'' என்று புறப்பட்டார்.

''சரி'' என்று தலையாட்டினார் மயில்வாகனம். அவருக்கு நடராசாவை நினைக்கப் பாவமாக இருந்தது; ''நேர்மையான கண்ணியம் மிக்கதொரு சிறந்த ஆசிரியர் நடராசா. அவருக்கு ஏன் கடவுள் இவ்வளவு துன்பங்களைக் கொடுத்தாரோ'' என்று எண்ணினார் மயில்வாகனம்.

## *10*

திலகம் ஆஸ்பத்திரியால் வீட்டுக்கு வந்து விட்டாள். அவளது இடது கையும் இடது காலும் செயலிழந்து விட்டதால் படுத்த படுக்கையிலேயே இருந்தாள். நவரத்தினத்தின் பாடு திண்டாட்டமாக இருந்தது. பணத்திமிரால் ஊரில் உள்ள எல்லோரையும் பகைத்துக் கொண்டமையால் பலர் ஒப்புக்கு வந்து சென்றனர். மயில்வாகனத்தின. வீட்டுக்காரர் தான் உதவி செய்து வந்தனர்.

இலட்சுமி சமையலுக்கு உதவி செய்தாள். சுந்தர் அடிக்கடி வந்து உடல் நிலையைப் பரிசோதித்து மருந்து கொடுத்தான். மாலதியும் அடிக்கடி வந்து பரிசோதித்து ஆலோசனைகள் கூறுவாள். மயூரன் பாடசாலை விட்டதும் வந்து தொட்டாட்டு வேலைகளைச் செய்து கொடுப்பான்.

திலகம் வீட்டுக்கு வந்த செய்தியை இலட்சுமியம்மாள் பல முறை சொல்லியும் மயில்வாகனம் அவளைப் பார்க்க வீட்டுக்குச் செல்லவில்லை; ''நீங்கள் எல்லாரும் அங்கை தானே இருக்கிறீர்கள். பிறகு நான் என்னத்துக்கு'' என்று சொல்வார்.

இலட்சுமி விடாப்பிடியாக வற்புறுத்தியதின் பேரில் நவரத்தினத்தின் வீட்டுக்குச் சென்றார் மயில்வாகனம். அவர் செல்லும் போது இருட்டாகி விட்டது. நவரத்தினம் விளக்குக் கொழுத்திக் கொண்டிருந்தார். மயில்வாகனத்தைக் கண்டதும்; ''வாங்கோ மாஸ்ரர்... இருங்கோ வந்திர்றன்.... இப்பத்தேல் அரிக்கன் லாம்பைக் கொழுத்திறது பெரிய கரைச்சல்'' என்றார்.

சில நிமிடங்களில் கொழுத்தப்பட்ட அரிக்கன் லாம்பைக் கொண்டு வந்து மேசையில் வைத்து விட்டு அவரின் பக்கத்தில் அமர்ந்தார். அப்போது ஒருவிளக்குடன் அங்கு வந்த காசிப்பிள்ளை சைட் அறைக்குள் கொண்டு போய் வாக்கை வைத்து விட்டு வந்து இருவருக்கும் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

நவரத்தினம் தான் பேச்சை ஆரம்பித்தார்; ''இந்த இரண்டு மூண்டு நாளையிலை சரியாய் களைச்சுப் போனன்.. பொம்பிளையள் படுத்தால் திண்டாட்டம் தான்'' என்று பெருமூச்சு விட்டார்.

''திலகம் வாய்க்கு ருசியாய்ச் சமைச்சுத்தரத் திண்டு போட்டு குசியாய் ஊர் உலாத்தினவர் இப்ப கஷ்டப்படுறார்'' என்றார் காசிப்பிள்ளை.

''நான் சொன்ன விசயத்தைக் கேட்டனீங்களே...?'' என்று கேட்ட நவரத்தினம் ஆவலோடு மயில்வாகனத்தின் முகத்தைப் பார்த்தார்.

மயில்வாகனம் மௌனமாக இருந்தார். தான் கல்யாணியோடு கதைக்கவில்லை யெண்றால் அவரது மனம் எப்படி இருக்கும் என்று யோசித்த மயில்வாகனம்; ''நான் நேற்றுக் கதைச்சனான். அவள் விரும்புறாரில்லை. நான் எப்பிடி வற்புறுத்துறது. ஒவ்வொருவருக்கும் சுதந்திரமிருக்கு, அதோடை சுதந்திரமாய் முடிவெடுக்கிற துணிவும் அவளுக்கு இருக்கு. முதலிலை தன்ரை கருத்தைச் சொன்னாள். பிறகு தன்ரை முடிவை மாற்றேலாது என்று

சொன்னாள். அதன் பிறகு நாகரீகமாய்; ‘‘சேர் தயவு செய்து இந்தப் பிரச்சினையிலை தலையிடாதைங்கோ’’ என்று சொன்னாள். அதோடை நான் கதைக்கிறத்தை விட்டுட்டன்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘அவள் சரியான சட்டக்காரி. உங்களோடையே இப்படிக் கதைச்சவள். என்னோடை எப்படிக் கதைத்திருப்பாள் தெரியுமே…?’’ என்று மூச்சு விட்டவர் தொடர்ந்து சொன்னார்; ‘‘காசிப்பிள்ளை அண்ணை, தயவு செய்து இந்தக் கதையைக் கதையாதைங்கோ’’ என்று முதலிலை சொன்னாள். இப்பிடித்தானே சொல்லுறதெண்டு நினைத்து நான்; ‘‘எல்லாத்தையும் மறந்திருங்கோ’’ என்றேன். உடனே அவள் பத்திரகாளியாய் மாறீட்டாள்; ‘‘உங்களை ஒரு மனிசன் என்று சொல்லித்தான் மதிப்புக்குடுத்தனான். தயவு செய்து எழும்பி வெளீலை போங்கோ. இல்லாட்டில்..’’ என்றாள். ‘‘இல்லாட்டில் அடிப்பியோ’’ என்று கேட்டன்; ‘‘தேவையேற்பட்டால் அதுவும் செய்யத் தயங்க மாட்டன். எழும்பி வெளீலை போங்கோ’’ எண்டுட்டாள். நான் பேசாமல் எழும்பி வந்திட்டன்…’’ அதைச் சொல்லும் போது காசிப்பிள்ளையின் முகம் கோபத்தால் துடித்தது.

‘‘இனிச் சமாதானம் பேசிறத்தை விட்டுட்டு யாரையாவது கூலிக்கு பாருங்கோ…’’ என்றார் மயில்வாகனம்.

‘‘எங்கடை ஊர்ச்சனத்துக்கு இப்ப கூலிக்கு வேலை செய்ய வெட்கமாயிருக்கு. பூமணிக்கு இரண்டு நாளாய் ஆள் விட்டும் அவள் வரேல்லை. காலமை அவளின்ரை வீட்டை போனனான்; ‘‘கூலி வேலை செய்யிறது வேறை. மலசலம் எடுக்கிறது வேறை. பணத்துக்காக உப்பிடியான வேலைகளை நான் செய்யிறதை என்ரை பிள்ளைகள் அனுமதிக்காது’’ என்றாள்; ‘‘ஒராளைப் பிடிக்குமட்டு மெண்டாலும் உதவி செய்’’ எண்டன். முந்தியொருக்கால் ஆயிரம் ரூபாய் காசு கடனாய் கேட்டு வந்தவள். நான் என்னத்தைப் பிடிச்சு திருப்பித்தருவாய் எண்டு கேட்டிட்டன். அதை மனசிலை வைச்சுக் கொண்டு கண்டபடி கதைச்சாள். நான் திரும்பி வந்திட்டன்…’’ என்றார் நவரத்தினம் பரிதாபமாக.

‘‘உனக்கு ஊரிலை மதிப்பில்லை. குடிச்சுப் போட்டு ஆட்களை மதிக்காமல் கண்டபடி கதைச்சதாலை இப்ப அந்தர மெண்டு போய் நிற்க அதுகள் லெவல் அடிக்குதுகள்’’ என்றார் காசிப்பிள்ளை.

பூமணி மயில்வாகனத்தின் நெருங்கிய உறவுக்காரி. ஏற்கனவே அவர் அவளை வீட்டுக்கு அழைத்து இப்படியான வேலைகளை ஊராருக்குச் செய்யக் கூடாதென்று சொல்லியிருந்தார். பூமணியின் மூத்தமகன் ஏ எல் சயன்ஸ் படிக்கிறான். எப்பிடியும் மெடிசின் என்ர பண்ணுவன். இளையவன் இந்த முறை ஓ எல் எடுக்கிறான். கட்டாயம் எட்டு டீ எடுப்பான். பூமணியின் கணவன் தில்லைநாதன் தோட்டம் செய்து வந்தான். வருமானத்துக்கு மிஞ்சிய குடி. இதனால் தான் பூமணி தோட்ட வேலைகளுக்குச் சென்று வந்தாள். மயில்வாகனம், தில்லைநாதனுக்குப் புத்திமதிகள் கூறிப் பார்த்தார். அவன் திருந்துவதாக இல்லை. எனவே தன்னாலான உதவிகளைப் பூமணியின் மகனுக்குச் செய்து வந்தார்.

காசிப்பிள்ளை கதிரையால் எழுந்து; ‘‘கதையுங்கோ வாறன்’’ என்று சொல்லி விட்டுச் சைட் அறைக்குள்ச் சென்றார்.

‘‘காசிருந்து என்ன பிரயோசனம்? உதவிக்கு ஆளில்லையே… ஆரைக் கேட்டாலும் குடும்பக் கௌரவம் என்கினை… பொல்லாத குடும்பக் கௌரவம்…. சாப்பிட வழியில்லை… ஊர்முழுக்கக் களவெடுக்கிறது…. அதெல்லாம் கௌரவம் நோயாளியைப் பராமரிக்கிறது தான் கௌரவமில்லை…’’ கோபமாகக் கூறினார் நவரத்தினம். அவரின் உதடுகள் துடித்தன.

மயில்வாகனத்துக்கு நவரத்தினத்தின் பேச்சுப் பிடிக்கவில்லை. அது அவரையும் ஒரு வழியில் தாக்குவது போலிருந்தது; ‘எனினும் இவனோடை என்ன பேச்சு’ என்று பேசாமல் இருந்தார்.

தோளில் இருந்த துவாயால் வாயைத் துடைத்தபடி வந்த காசிப்பிள்ளை துவாயைத் தோளில் போட்டு விட்டுக் கதிரையில் அமர்ந்தார். மயில்வாகனத்திற்கு கள்ளு நெடி வீசியது.

“கள்ளுக் குடிக்கிறத்துக்கும், குடிக்கும் போது வாய்க்கு ருசியாய் ஏதாவது வாங்கிச் சாப்பிர்றதுக்கும் சாதி சமயமில்லை. மற்றதுகளுக்குத்தான் சாதி சமயம் பார்க்கினை எங்கடை யாழ்ப்பாணத்து சாதிமான்கள்” என்று சிவராசா அடிக்கடி சொல்வது மயில்வாகனத்தின் நினைவுக்கு வந்தது; “எவ்வளவு உண்மையான பேச்சு” என்று மனதுள் நினைத்துக் கொண்டார்.

“எல்லாரும் மறுத்தால் நான் என்ன செய்யிறது? எப்பிடி திலகத்தைப் பராமரிக்கிறது..?” என்று கண்கலங்கினார் நவரத்தினம்.

“ஆறு பிள்ளைகள் வெளிநாட்டிலை இருக்குதுகள். ஒண்டைக்கூப்பிடன்” காசிப்பிள்ளை ஆலோசனை கூறினார்.

“நாலாம் அஞ்சாம் வகுப்புப் படிச்சிட்டு சுத்துக்கு வால் காட்டினவங்கள். வெளிநாடு போனதாலை ஏதோ அஞ்சைப் பத்தை உழைக்கிறாங்கள். இஞ்சை வந்து என்ன செய்யிறது...? இப்ப இஞ்சை சுருட்டுக் குடிக்க ஆட்களும் இல்லை, சுருட்டுறத்துக்குப் பொயிலையும் இல்லை...” என்றார் நவரத்தினம்.

காசிப்பிள்ளை பலமாக வாய்விட்டுச் சிரித்தார். சிரிப்பை அடக்க அவருக்குச் சில நிமிடங்கள் சென்றன; “இண்டைக்குத்தான் நவத்தார் உண்மையைச் சொல்லுறார்.... எங்கடை பக்கத்து வீடுகளிலை ஓ எல்லிலை எட்டு எவ் எடுத்தவை யெல்லாம் இங்கிலண்டிலை போய் என்ஜினியறிங்கும் மெடிசினும் கொம்பியூட்டர் கோசும் செய்யுறதாய்ச் சொல்லேக்கை நவத்தார் மட்டும்..” என்று மீண்டும் ஒரு முறை சிரித்து விட்டுச் சொன்னார்; “இண்டைக்குத்தான் நவத்தார் இப்பிடிச் சொல்லுறார் இதுக்கு முந்தி ஓகோ வென்று சொன்னார். இண்டைக்கு வேதனையோடை உள்ளுக்குப் போனவர் தான் சொல்லுறார்” சிரித்தார் காசிப்பிள்ளை.

மயில்வாகனம் ஒன்றும் பேசவில்லை. இரண்டு குடிகாரரும் பொழுது போக்காக இருந்து கதைக்கட்டும் என்று நினைத்து; “நான் வாறன் நவம்” என்று கூறிவிட்டு எழுந்தார்.

“சரி.... சரி.... போட்டு வாங்கோ... வந்த உங்களுக்கு ஒரு பேணி தண்ணிதரக் கூட ஆளில்லை” என்றார் நவரத்தினம்.

“இவள் பொன்னையற்றை சரசுவைக் கேட்டுப் பாப்பமே...”

“அவள் எனக்கொரு வழியிலை உறவெடாப்பா..... என்ணெண்டு கேக்கிறது. ஒருக்கால் வெண்காயத்துக்குப் புல்லு புடுங்கித்தரச் சொல்லிக் கேக்க; “உங்களுக்கெல்லாம் எப்ப வந்த பணம்.... சுத்துக்கு வால்கட்டேக்கை கூலிக்கு பிடிச்சே புல்லுப் புடுங்கினனீங்கள். உன்ரை மனிசி இப்ப பெரியாளாய்ப் போனாளோ?” என்று கேட்டவள். இப்ப இதுக்குக் கேட்கப் போக ஏறிப்பாய்வாள்” என்றார் நவரத்தினம்.

“அப்ப என்ன செய்யிறது. இப்பெல்லாம் கூலிக்கு வேலை செய்யிறவைக்கும் கௌரவமிருக்கு.. நிவாரண அரிசியும் பருப்பும் முடிஞ்சாப் பிறகு தான் எல்லாம் தெரியும்... முழுச் சனமுமெல்லே வன்னிக்குப் போட்டுது. இல்லாட்டில் எத்தினை பேர் அடிபடுவினை” என்ற காசிப்பிள்ளை மடிக்குள் இருந்த சுருட்டை எடுத்துப் பற்றி விட்டு ஒன்று செய்யலாம்...ம்” என்றார்.

ஆவலோடு அவரின் முகத்தைப் பார்த்தார் நவரத்தினம். குறுவழிகள் சொல்வதிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் வலு கெட்டிக்காரன் காசிப்பிள்ளை என்பது அவருக்குத் தெரியும்.

“ஒரு அரைப் போத்தில் கசிப்பு எடுக்க வேணும்...” என்றார் காசிப்பிள்ளை.

“கசிப்போ... ஏன் மெண்டிஸ் எடுப்பம்..”

“கசிப்புக் குடிக்கிறவனுக்கு மெண்டிஸ் சரிவராது. அதோடை இருபது ரூபாவோடை முடிக்கிற காரியத்துக்கு ஆயிரம் ரூபாய் ஏன் சிலவளிப்பான்” என்றார் காசிப்பிள்ளை.

“எட கசிப்பெடுக்கிறது பெரிய வேலையே....? இப்ப இஞ்சை மலிவாய்க் கிடைக்கிறது கசிப்புத்தானே. அதோடை வீட்டுக்கு வீடு விக்கிறாங்கள். குஞ்சு குருமான் எல்லாம் குடிக்கிறத்தாலை ரோட்டுக்களாலை திரியேலாமல் கிடக்கு... அதை விட்டுட்டு விசயத்துக்கு வா...” என்றார் நவரத்தினம்.

“இவன் தில்லைநாதன் ... பூமணீன்ரை புரிசன் மூக்குமுட்டக் கசிப்பைக் குடிச்சிட்டு ரோட்டு ரோட்டாய் விழுந்து கிடக்கிறான். அவனைக் கூட்டியந்து பக்குவமாய்ப் பேசி, கொஞ்சம் குடிக்கவும் குடுத்து ஏத்தி விட்டால் பூமணியை வழிக்குக் கொண்டரலாமெண்டு நினைக்கிறன்...” என்றவர் கதிரையால் எழுந்து சைற் அறைக்குள் சென்று அங்கிருந்த குறைப் போத்தில் கள்ளையும் கோப்பையையும் எடுத்து வந்து தான் இருந்த கதிரைக்கு அருகில் நிலத்தில் வைத்து விட்டுக் கதிரையில் அமர்ந்தார்.

“சரிவருமெண்டு நினைக்கிறியே” பரிதாபமாகக் கேட்டார் நவரத்தினம்.

லேசாய்ச் சிரித்த காசிப்பிள்ளை “சரிவராட்டில் சரிப்படுத்திறது தானே..” என்றார்.

“நான் நினைக்கேல்லைக் காசி, இப்பெல்லாம் முந்தின மாதிரி இல்லை. பொடியள் படிக்கிறாங்கள் மயில்வாகனம் மாஸ்ரற்றை உதவியும் இருக்கு.... தில்லைநாதன் ஏதன் கனக்கக் கதைச்சால் வெளீலை பிடிச்சு விட்டாலும் விட்டுவிடுங்கள்..” என்றார் நவரத்தினம்.

“எதுக்கும் முயற்சி எடுத்துப் பாப்பம். எனக் கெண்டால் சரிப்படும் போலை கிடக்கு” என்றார் காசிப்பிள்ளை.

தூரத்தில் நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டது.... சிறிது நேரத்தில் அக்கம் பக்கத்தில் உள்ள நாய்களும் அகோரமாகக் குரைத்தன...

“எட்டுமணிக்கு மேலையாச்சு... நீ போகப் போறியோ இல்லாட்டில் இஞ்சை படுக்கப் போறியோ? நாய் குரைக்கிறத்தைப் பார்த்தால் ஆமி போலை கிடக்கு” என்றார் நவரத்தினம். அவரின் குரல் சிறிது தளம்பியது.

“இப்பேன் பயப்பிர்றாய். ஆமிக்காரன் வந்தால் கதைக்கிறது தானே. நான் வீட்டை தான் போகப் போறன். எனக்கு ஆருக்கும் பயமில்லை... மனிசி தான் பயப்பிடும். அதோடை சாப்பிடாமல் காவல் இருக்கும்...” என்றார் காசிப்பிள்ளை.

“நாயள் விஷயமில்லாமல் குலையாது...”

“பேசாமல் இரு.... மாடு ஓடினாலும் நாய் குலைக்கும்... சாவு சும்மாய் வராது கண்டியோ.... எழுதின எழுத்துப் படி தான் வரும்...” என்றவர்; “சத்தம் அடங்கீட்டுது நான் வாறன்..” என்று கூறிவிட்டு நடந்தார்.

“கவனமாய்ப் பார்த்துப் போடாப்பா” என்றார் நவரத்தினம்.

“கற்பகவல்லி நின் பொற் பதங்கள் பிடித்தேன்” என்று பலமாகப் பாடிய படி நடந்து சென்றார் காசிப்பிள்ளை. நன்றாகக் குடித்தால் அவர் பாடுற பாட்டு இது தான். ஊர்க் கோயில்களில் திருவிழாக்களின் போது கற்பகவல்லி பாடலை நாதசுரத்தில் வாசிக்கும் படி அடிக்கடி கேட்பார். அப்படி அவருக்கு ஒரு அவாதியான விருப்பம் அப்பாடலில்.

அப்பாடலை நன்கு ரசித்து தாளம் பிசகாமல் பாடுவார் காசிப்பிள்ளை. அப்பாடலைப் பாடிக் கொண்டு ஒழுங்கையால் சென்றால் அவருக்கு நல்ல வெறி என்று எல்லோருக்கும் தெரியும். பகலில் அவர் கூடக் குடித்தால் வாசிகசாலை வேம்புக்குக் கீழே இருப்பார். நாலைந்து பேர் கூடினால் கச்சேரி தான்.

காசிப்பிள்ளை ஒழுங்கையால் பாடிக் கொண்டு செல்லும் போது நாய்கள் அமர்க்களமாகக் குரைத்தன. பின் குரைக்கும் சத்தம் சிறிது சிறிதாகக் குறைந்து, ஊழையிட ஆரம்பித்தன.

மறுநாள் காலை பதினொருமணிக்கு தில்லை நாதனையும் கூட்டிக் கொண்டு நவரத்தினத்தின் வீட்டுக்கு வந்தார் காசிப்பிள்ளை. அங்கு வரும் போதே இருவரும் குடித்திருந்தனர்.

‘‘நவம்.... நவம்...’’ கூப்பிட்டார் காசிப்பிள்ளை.

‘‘ஆரது காசிப்பிள்ளையே...? இரு இரு வாறன்..’’ உள்ளேயிருந்து சொன்னார் நவரத்தினம்.

கோலில் இருந்த நாற்காலி ஒன்றைத் தூக்கி வந்த காசிப்பிள்ளை அதை முற்றத்தில் நின்ற வேப்ப மரத்துக்குக் கீழே வைத்து விட்டு அதில் அமர்ந்தார். பின் தில்லை நாதனைப் பார்த்து; ‘‘சைக்கிலிலை கொழுவி இருக்கிற வாக்கை கழட்டியா’’ என்றார்.

தில்லைநாதனிடமிருந்து வாக்கை வாங்கிய காசிப்பிள்ளை அதனுள் இருந்த இரண்டு போத்தல்களை எடுத்து வெளியே வைத்தார் பின்; ‘‘வாறன் கோப்பையை எடுத்துக் கொண்டு’’ என்று சொல்லி விட்டு உள்ளே சென்றார்.

அவர் திரும்பி வரும் போது, அவர் வழமையாகக் கள்ளுக் குடிக்கும் கோப்பையும் ஒரு கிளாசும் அவரது கையில் இருந்த கிளாசை தில்லைநாதனிடம் கொடுத்து விட்டு கோப்பையுடன் கதிரையில் அமர்ந்தார் காசிப்பிள்ளை.

‘‘வாத்துக் குடி’’

தில்லைநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை. கண்டாலும், ‘இவனோடை கதைத்தால் தொல்லை’ என்று காணாதது போலச் செல்லும் காசிப்பிள்ளை இன்று அவனைத் தேடிச் சென்று கோப்பிரேசனில் இரண்டு போத்தல் கள்ளு வாங்கிக் கொடுத்து, குடித்த பின் ஒரு அலுவல் என்னோடை வா’’ என்று கூட்டி வந்து கசிப்பை வைத்து விட்டு; ‘‘வாத்துக் குடியெண்டால்’’ என்ன அர்த்தம் என்று புரியாமல் தடுமாறினான் தில்லைநாதன்.

‘‘என்னடாப்பா யோசிக்கிறாய்... வாத்துக்குடி....’’

‘‘ஒண்டுமில்லை’’ என்று தடுமாற்றத்துடன் கூறிய தில்லைநாதன் நிலத்தில் அமர்ந்து, போத்தலில் இருந்த கசிப்பைக் கிளாஸ் நிறைய ஊற்றி முழுவதையும் ஒரே முறையில் குடித்து விட்டுக் கிளாசை நிலத்தில் வைத்தான்.

‘‘இந்தா சுறுட்டு... பத்தவை..’’ என்ற காசிப்பிள்ளை மடியுள் இருந்த சுருட்டையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்துக் கொடுத்தார். தில்லை நாதன் அவரை ஏறிட்டு நோக்கினான். அவனது பார்வை இன்னும் கொஞ்சம் தேவை என்று சொல்வது போல இருந்தது. அதை உணர்ந்த காசிப்பிள்ளை; ‘‘உனக்குத் தான் உது ஊத்திக்குடி’’ என்றார்.

தில்லைநாதன் மீண்டும் கசிப்பைக் கிளாஸ் நிறைய ஊற்றி ஒரே தரத்தில் குடித்து விட்டுச் சுருட்டைப் பத்தினான்.

காசிப்பிள்ளை கசிப்புக் குடிக்கிறதாகக் காட்டிக் கொள்வதில்லை. அதுகும் நவரத்தினத்திற்குக் காட்டினால் பிறகு கசிப்போடு முடித்திடுவார் என்பது அவருக்குத் தெரியும்.

‘‘இவன் என்ன செய்யுறான்’’ என்று முணுமுணுத்தா காசிப்பிள்ளை; ‘‘நவம்’’ என்று கூப்பிட்டார். குடித்த ஒரு போத்தல் கள்ளுக்கு மேல் கொஞ்சம் மெண்டிஸ் விட்டால் நல்லாயிருக்கும் என்பது அவரின் எண்ணம்.

‘‘சீ என்ன வாழ்க்கை’’ என்று புறுபுறுத்தவாறு அங்கே வந்த நவரத்தினம், ‘‘எடதில்லையோடையே வந்திருக்கிறாய்’’ என்றார். பின் மனிசிக்கு இராத்திரித் தொடக்கம் மலசலம் சீலையோடை போகுது.... நாலு சீலை மாத்திப் போட்டன்... காலமை சுந்தர் வந்து பார்த்து மருந்து கொடுத்தாப் பிறகு கொஞ்சம் சுகம்’’ என்றார்.

“சீலையெல்லாம் அலம்பிப் போட்டியே..?” காசிப்பிள்ளை கேட்டார்.

“இல்லை...”

“தில்லை, ஒருக்கால் அலம்பிப் போட்டு வா...” காசிப்பிள்ளை கட்டளை இடுவது போலச் சொன்னார்.

தில்லைநாதனுக்கு நல்ல வெறியிலும் காசிப்பிள்ளை சொன்னது உறைந்தது. மனதுள் ஒரு உத்வேகம்; “காசிப்பிள்ளைக்கு அடிச்சாலென்ன..” என்றது மனம்.

“என்னடாப்பா இருக்கிறாய்... எழும்பிப் போ...” வார்த்தையை முடிக்கு முன், தில்லை நாதனின் முகத்தில் ஏறபட்ட மாறுதல்களை அவரின் அனுபவம் மிக்க கண்கள் உணர்ந்து கொண்டன. தில்லைநாதன் குடிகாரன் மட்டுமல்ல மகா முரடனும் கூட, இதனால் தான் மக்கள் அவனைச் சற்று தூரத்தில் வைத்திருந்தனர்.

“நீ தோய்காட்டில் பரவாயில்லை... இன்னுமொரு கிளாஸ் வாத்துக் குடி....” என்றார் காசிப்பிள்ளை.

தில்லைநாதன் கசிப்புப் போத்திலைத் தூக்கி எறிந்தான்; “நான் குடிக்கிறனான் தான். அதுக்காக என்ரை குடியைப் பயன்படுத்தி இப்பிடியான வேலையள் செய்விக்கலாமெண்டு நினைக்காதை காசிப்பிள்ளை”.

காசிப்பிள்ளையென்று பெயர் சொல்லி அவரை, யாரும் அழைப்பதில்லை இப்ப தில்லைநாதன் கூப்பிர்றானென்றால் என்ன அர்த்தம்?”

“முதல் தடவை யெண்டபடியாலை விர்றன். இல்லாட்டில் மூஞ்சை உடைச்சுப் போடுவன்...” என்று கத்திய தில்லைநாதன் மடியுள் இருந்த ஐம்பது ரூபா நோட்டை எடுத்து காசிப்பிள்ளையின் அரையுள்ச் செருகி விட்டு; “நான் குடிச்சகாசு” என்று கூறிவிட்டுச் சென்றான்.

நவரத்தினம் திகைத்துப் போய் நின்றார்; “ம், அவன்ரை கொழுப்பைப் பார். நான் சொன்னான்.... எனக்குத் தெரியும். அவன் சரியான தடிப்புப் பிடிச்சவன்” என்றார் நவரத்தினம்.

காசிப்பிள்ளை ஒன்றும் பேசவில்லை. போத்தலுள் இருந்த கள்ளைக் கோப்பையில் ஊற்றிக் கொஞ்சத்தைக் குடித்து விட்டு மிகுதியைக் கீழே வைத்தார். அவரது மூளை பலமாக வேலை செய்தது.

## *11*

பாடசாலைக்கு வந்து, பாடசாலை ஆரம்பிக்கு முன் எல்லா வகுப்புக்களுக்கும் சென்று எல்லா ஆசிரியர்களினதும் நாடி பிடித்துப் பார்ப்பது சிவராசா மாஸ்ரரின் தினசரி வேலை. இது பாடசாலை தொடங்கிய பின்பும் நடைபெறும். இதைத் திருத்த எவ்வளவோ முயன்றும் மயில்வாகனத்தால் முடியவில்லை.

பாடசாலைப் புதினங்கள் மட்டுமல்ல, ஊர்ப்புதினங்கள், அரசியல் கூட ஐந்து பத்து நிமிடங்களில் எல்லோருடனும் கதைத்து முடித்து விடுவார். பொதுவாகப் பாடசாலைப் பிரச்சினைகளை அவரிடம் சொல்லி விட்டால் அதிபருக்குப் போகும், அதற்கான பதிலும் அவர் மூலமாகவே கிடைக்கும் என்பது அப்பாடசாலை ஆசிரியர்களின் நம்பிக்கை.

கல்யாணி அன்று காலை தமிழ்ப் பாடம் கற்பிப்பது பற்றிப் பத்து நிமிடங்கள் சிவராசா மாஸ்ரருடன் கதைத்தாள்.

‘‘கஷ்ரம் தான்... அந்தாள் நினைச்சால் மாத்தாது..... தமிழ் படிப்பிக்க ஏன் பயப்பிர்றியள்..?’’ என்று கேட்டார் சிவராசா.

கல்யாணி ஒன்றும் கூறவில்லை. பாடசாலை தொடங்குவதற்கான மணி அடித்ததும் சென்று விட்டாள்.

ஐந்தாம் ஆண்டுக்கு முதல் பாடம் ஆங்கிலம். ஆங்கிலத்தை முடித்து விட்டால் ஏனைய பாடங்களைச் சுதந்திரமாகப் படிப்பிக்கலா மென்பது சிவராசாவின் எண்ணம். அதனால் மயில்வாகனத்திடம் சொல்லி நேர அட்டவணை போடப்பட்டிருந்தது.

வகுப்புக்கள் ஆரம்பமாகி ஐந்து நிமிடங்களின் பின்பு மெதுவாக அதிபரின் அறையுள் நுளைந்தார் சிவராசா.

தினமும் வழமையாக அங்கு வரும் சிவராசாவை பெரிதாக மயில்வாகனம் வரவேற்பதில்லை. அதற்காக ஒதுக்குவது மென்றில்லை.

‘‘கல்யாணி ரீச்சர் அழுறா....’’ மெல்லக் கதையைத் தொடங்கினார் சிவராசா.

‘‘ஏன்..?’’

‘‘ஆண்டு ஒன்பது பத்து பதினொண்டுக்கு தமிழ் படிப்பிக்கச் சொன்னியளாம்’’.

‘‘அதுக் கென்ன....?’’

‘‘என்ரை மனிசியும் கிராயுரேட் தான். தமிழ் படிப்பிக்க நல்ல விருப்பம். குருநாகரிலை ஏ-எல்லுக்கு தமிழ் படிப்பிச்சவா. நல்ல ரிசல்ட் வாறது. ஆனால் அமரிக்கன் மிசனிலை தமிழ் பாடம் குடுக்கிறேல்லை. அங்கை அதிபற்ரை ஆட்களுக்குத் தான் குடுக்கிறது. இதைக் கேட்கப் போய்த் தான் ரான்ஸ்பர் கிடைச்சது. அதுவும் ஒரு அஞ்சாம் வகுப்புப் பள்ளிக் கூடத்திற்கு... தமிழ் படிப்பிக்க விரும்புற ஆசிரியருக்குப் பாடங் குடுக்கிறேல்லை. படிப்பிக்க கஷ்டப் படுறவைக்கு குடுக்கினம். நான் உங்களைச் சொல்லேல்லை. என்ரை மனிசிக்கு ஏற்பட்ட நிலையைச் சொல்லுறன்’’ என்றார் சிவராசா.

இதைப் பல முறை மயில்வாகனம் கேட்டு விட்டார். சிவராசாவின் உள் மனதில் உறங்கிக் கொண்டிருக்கும் சில பிரச்சினைகள் அவ்வப் போது விழித்துக் கொள்வதால் இப்படியான கதைகள் வரும் என்பதனால்அதை அவர் பொருட்படுத்துவதில்லை.

‘‘தமிழ் படிப்பிக்கக் கல்யாணி ரீச்சர் கஷ்டப்படுறா. ஏணெண்டு எனக்கு விளங்கெல்லை. ஆண்டு அஞ்சுக்குக் கீழை படிப்பியுங்கோ என்றால் தாங்கள் பெரிய படிப்பு படிச்சனாங்கள் என்பினை. பெரிய வகுப்புக்குப் போட்டால் மாத்தித் தரச் சொல்லுவினை’’ என்றார் மயில்வாகனம்.

சிவராசா எப்போதும் யதார்த்தமாகக் கதைப்பவர். அதனால் அவர் மீது மயில்வாகனத்திற்கு மதிப்பு இருந்தது. சிவராசா தொடர்ந்து சொன்னாா; ‘‘கஷ்டமெண்டால் மாத்திக் குடுங்கோவன் சேர்’’

‘‘வாறவரிசம் நடராசா பென்சன் எடுக்கப் போறார். அதுக்குப் பிறகு தமிழ் படிப்பிக்க ஓராள் வேணும் அதோடை அவர் பிரதி அதிபர். வேலைப் பழுவைக் கொஞ்சம் குறைக்க வேணும். அதனால் கல்யாணி ரீச்சர் தான் தமிழ் கற்பிக்க வேணும். இல்லாட்டில் உங்கடை மனைவிக்கு ரான்ஸ்பர் கேட்டுப் பாப்பமே...’’ என்றார் மயில்வாகனம்.

‘‘இரண்டு பேரும் ஒரு இடத்திலை வேலை செய்யிறத்தை நான் விரும்பேல்லை. அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். ஒரு நல்லது கெட்டதுக்கு இரண்டு பேரும் நிக்க வேணும். தற்செயலாய் கொழும்புப் பக்கம் போனால் நீண்ட லீவு தேவை. இதனால் பள்ளிக் கூடத்திற்குப் பாதிப்பு ஏற்படும். உங்கை புரிசனும் பெண்சாதியும் படிப்பிக்கிற சில பள்ளிக்

கூடங்களிலை வீட்டுச் சண்டையின்ரை தொடர்ச்சி நடைபெறுவதாய்க் கேள்வி'' சிரித்தார் சிவராசா.

சிவராசா வேறு பாடசாலைகளெண்டு கதை தொடங்கினால் அது பின் அமரிக்கன் மிசனிலை வந்து நிற்கும். எனவே அந்தப் பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்காக; ''கல்யாணி ரீச்சர் என்னசொன்னவா'' என்று கேட்டார். மயில்வாகனம்.

''அவா தமிழ் கற்பிக்க விரும்பேல்லை...''

''பாடம் மாற்றேலாது. இல்லாவிட்டால் பள்ளிக் கூடத்தை மாற்றச் சொல்லுங்கோ..'' இழுபட்ட கதை கதைக்க மாட்டார் மயில்வாகனம். முடிவைச் சொன்னால் சொன்னது தான் இது சிவராசாவுக்குத் தெரியும்.

அப்போது நடராசா அலுவலகத்தினுள் நுளைந்தார். அதைத் தொடர்ந்து சில ஊர்கதைகளைக் கதைத்து விட்டுச் சிவராசா வகுப்பறைக்குச் சென்றார்.

''சிவராசா இல்லாட்டிலும் எங்களுக்குப் பொழுது போகாது'' என்று சிரித்தார் மயில்வாகனம்.

''அந்தாளின்ரை பெண்சாதிக்குச் செய்தது பெரிய துரோகம் தான்... ஒரு வரிசத்துக்கை மூன்று பாடசாலையளுக்கு மாத்தினால் ஆத்திரம் வரும்தான்'' என்றார் நடராசா.

''கல்யாணிக்குத் தமிழ் படிப்பிக்கிறத்திலை என்ன கஷ்டமிருக்கு?. சின்னப்பிள்ளையள் இன்னும் எவ்வளவு காலமிருக்கு. எத்தினை நாளைக்குக் கடத்துவது'' என்றார் மயில்வாகனம்.

''கல்யாணி மட்டுமில்லை பட்டதாரிகளிலை அனேகமானோர் தமிழ் படிப்பிக்கத் தயங்கீனை.. இது ஏணெண்டு எனக்குத் தெரியேல்லை... ஆங்கிலம் கஷ்ரம் கணிதம் பிரச்சனை.... தமிழ்..'' என்று கூறி விட்டு நிறுத்தினார் நடராசா.

''என்னவோ எனக்கெண்டால் இப்பத்தேல் கல்வியிலை ஏதோ பிரச்சினை இருக்கு போலை தெரியுது. மாவட்டத்திலை இந்த முறை ஓ எல்லிலை முப்பத்தொரு வீதமான மாணவர்கள் தான் தமிழ் பாஸ்பண்ணி இருக்கிறார்கள். பொடியளுக்கு கட்டுரை எழுதத் தெரியுதில்லை. வாத்திமாருக்கு ஒழுங்காய்க் கடிதம் எழுதத் தெரியுதில்லை. இது எங்கை போய் முடியப் போகுதோ..'' கவலைப்பட்டார் மயில்வாகனம்.

''கல்வியை மிசனுகளிட்டைத் திருப்பிக் குடுக்கிறது நல்லதெண்டு நான் நினைக்கிறன். முந்தின காலத்திலை பிள்ளையள் பாஸ்பண்ணாட்டில் இன்கிறி மெண்ட் இல்லை... அப்பிடியான ஒரு நிலை வரவேணும் பாருங்கோ...'' என்றார் நடராசா.

அப்பொழுது அங்கே மதி மாஸ்ரர் வந்தார். மயில்வாகனம் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். ''சேர், ஒரு மாதிரி உடற்பயிற்சிக்குழு கோட்டத்தை வென்றுவிட்டது. மாவட்டத்துக்குப் போறதாயிருந்தால் பத்தாயிர மெண்டாலும் வேணும்.''

''பத்தாயிரமோ'' வாயைப் பிளந்தார் நடராசா.

''உது பெரிய காசே...'' என்றாவாறு உள்ளே வந்தார் சிவராசா.

''ஏன் பத்தாயிரம்'' என்று கேட்டார் மயில்வாகனம்.

''உடுப்புக்கு எப்பிடியும் ஆறாயிரம் வேணும்.... ரீமிலை முப்பது பேர். ஒரு ரீசேட் வாங்கினால் இருக்கிற சோட்ஸ்சோடை சமாளிக்கலாம். சாப்பாட்டுக்கு ஒரு இரண்டாயிரம் ரூபா... போக்குவரத்து ....'' என்றார். சாப்பாட்டுக்கு இரண்டாயிரம் ஒதுக்கிறியள். உங்கை அமரிக்கன் மிசனிலை பச்சைத்தண்ணியோடை பிரக்ரீசை முடிக்கீனை'' என்றார் சிவராசா.

''உமக்கு எதுக்கும் அமரிக்கன்மிசனை இழுக்காட்டில் சரிவராது...'' என்றார் நடராசா.

‘‘உண்மை தானே சேர்.. இல்லாததை நான் கதைக்க மாட்டன். பிறின்சிப்பல் ஒன்பது மணிக்கு பிறகு தான் பள்ளிக்கூடத்துக்குப் போறார். கேட்டால் டிப்பாட் மண்டிலை வேலை என்கிறார். ஏன் ரோட்டைப் பார்த்தால் தெரியாதே..... எங்கடை பள்ளிக் கூடம் தொடங்கி அரை மணித்தியாலத்துக்குப் பிறகு தான் கந்தசாமி மாஸ்ரர் போறார். பள்ளிக் கூடம் விட முந்தி நாலைஞ்சு பேர் போயிடீனை..’’ என்று சிவராசா கூறும் போது மயில்வாகனம் இடைமறித்தார். ‘‘சும்மாய் என்னத்துக்கு உந்தக்கதை. நீர் வந்த அலுவலைச் சொல்லும்.’’

‘‘சோதினைக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கு அஞ்சாம் ஆண்டுப் பிள்ளையள் இரண்டு உடற்பயிற்சிக் குழுவில் இருக்கிறார்கள். மாவட்டத்திற்கு அவர்களைச் சேர்க்க வேண்டாம்’’ என்றார் சிவராசா.

மயில்வாகனம் மதியைப் பார்த்தார்; ‘‘ஒரு பத்து நாள்த்தானே.... பொறுத்தனீங்கள் பொறுத்துக் கொள்ளுங்கோ’’ கெஞ்சினார் மதி.

‘‘எனக்கென்ன? ஞாபகப் படுத்தினனான்.. இனி உங்கடை விருப்பம்..’’ என்றார் சிவராசா.

சிவராசாவின் பேச்சிலிருந்து அவர் சலிப்படைவதை மயில்வாகனம் கண்டு கொண்டார். ‘‘பத்து நாள்த்தானே.... இரண்டு பேரும் கெட்டிக்காரர்கள்’’ என்றார் மயில்வாகனம்.

மயில்வாகனம் மதிக்கு சப்போட் பண்ணுவது தெரிந்தது. சிவராசா எதுகும் பேசாது சிரித்தார். அவரது சிரிப்பில் சம்மதம் தெரிந்தது.

‘‘சரி பழக்கும்.... காசைப்பற்றி யோசிப்பம்...’’ என்றார் மயில்வாகனம்.

மயில்வாகனம் அதிபராகப் பொறுப்பேற்று ஆறு மாதங்களாகின்றன. அதற்குள் எல்லோரும் அவரைப் பற்றி புரிந்து வைத்திருந்தனர். அதிலும் சிவராசா பூரணமாகப் புரிந்து வைத்திருந்தார்.

‘‘யோசிப்பமெண்டால் சரி என்று தான் அர்த்தம். போய்ப் பழகுங்கோ..’’ என்றார் சிவராசா.

எதையும் சிம்பிளாய் எடுக்கும் சிவராசாவை நோக்கிய மயில்வாகனம் லேசாகச் சிரித்தார்.

‘‘நான் வாறன் சேர்’’ என்று கூறி விட்டு மதி புறப்பட்டார்.

‘‘நில்லும் மதி... உம்மோடை ஒரு விசயம் கதைக்க வேணுமென்று நினைச்சனான்..’’ என்றார் மயில்வாகனம்.

ஏதாவது இரகசியமாக இருக்குமென்று நினைத்த நடராசா; ‘‘நான் பிறகு வாறன் சேர்’’ என்றார்.

‘‘இல்லை நீரும் இரும். சிவராசா நீரும் இரும்’’ என்ற மயில்வாகனம், அவர் சிறிது யோசித்து விட்டுச் சொன்னார்; ‘‘இராத்திரி பத்து மணிக்கு நவரத்தினத்துக்கு ஏதோ கடித்து விட்டதென்று காசிப்பிள்ளையும் வேறை இரண்டு மூன்று பேரும் எங்கடை வீட்டுக்கு அவரைத் தூக்கிக் கொண்டு வந்தவை. நவரத்தினம் சரியாய்ப் பயந்து போச்சு. அனேகமான நாட்களிலை இரவில் சுந்தர் ஆஸ்பத்திரீலை தங்கிவிடுவான். இராத்திரி வீட்டிலை நிண்டபடியாலை ஒரு மாதிரிச் சமாளிச்சாச்சு..’’

‘‘இரவு பத்துமணிக்கு என்ன படுக்கையிலை...’’ நடராசா கேட்கும் போது இடைமறித்துச் சொன்னார் மயில்வாகனம்.

‘‘இல்லை... இல்லை... இப்ப திலகம் படுத்தாப் போலை நவரத்தினம் கொஞ்சம் கூடத் தண்ணி பாவிக்கிறான். காசிப்பிள்ளையும் சேர்ந்தால் சொல்ல வேணுமே....? சமூகசேவை சமூகசேவையெண்டு சும்மா சொல்லிக் கொண்டு அம்பிட்டவையை மடக்கிக் குடிக்கிறது தான் வேலை. இப்ப நவரத்தினம் அம்பிட்டிருக்கு. இராத்திரி நல்லாய்க் குடிச்சிட்டுக் கிணத்தடிப்

பக்கம் போயிருக்கிறான். அந்த நேரம் ஏதோ கடிச்சிருக்கு என்று தான் சொன்னவன் ஆனால் சுந்தர் ரெட்ஸ்பண்ணிப் பார்த்தால் கடிகாயம் இல்லை, வெட்டுக்காயம் என்றான். ஒரே அல்லோல கல்லோலம்''.

''கடிச்சதும் வெட்டினதும் தெரியாதே'' என்று கேட்டார் நடராசா.

''வெறீலை உள்ளவனுக்கு உதெல்லாம் எங்கை தெரியப் போகுது. காசிப்பிள்ளை ரோச் அடிச்சுப் பார்த்தவனாம். ஒன்றையும் காணேல்லை என்றான். சுந்தர் அத்தியவாசியமான மருந்துகள் கொஞ்சம் வைச்சிருக்கிறான். இரத்தம் இரண்டு தரம் எடுத்துப் பார்த்தவன்.இரத்தம் உறையாததாலை விசம் தீண்டேல்லை என்று சொன்னான். நவரத்தினம் பயத்திலை தன்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகச் சொல்லிக்கத்தினது...''

''ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனீங்களே...?'' நடராசா கேட்டார்.

''கேவியூ நேரம் கொண்டு போக முடியுமே...? அதோடை தேவையில்லையெண்டு சுந்தர் சொன்னபடியாலை கொண்டு போகேல்லை... திலகத்துக்கு உதவிக்கு ஆளில்லை. பிறகு மனிசி தான் போய்ப்படுத்தது'' என்றார் மயில்வாகனம்.

''உங்களுக்குத் தான் கரைச்சல். வசதிகள் வாய்ப்புக்கள் இருந்தாலும் மனிசரைத் தேவையெண்டு நடக்காட்டில் கஷ்டம்தான். இப்பநீங்கள் இல்லாட்டில்...'' நடராசா கேட்டார்.

''ஆண்டவன் ஒருத்தரையும் கைவிட மாட்டான் என்பது என்ரை எண்ணம். மனிசிக்கும் கஷ்ரம் தான் எண்டாலும் என்ன செய்யிறது....'' என்றார்.

சிவராசாவும் மதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சிவராசாவுக்கு நவரத்தினத்தோடு அவ்வளவு பழக்கமில்லை. மதி நல்லூரில் இருந்து வருபவர். எனவே தம்மை ஏன் அதிபர் இருத்தி வைத்து விட்டுத் தமது ஊரவரின் கதையைக் கதைக்கிறார் என்று எண்ணினர்.

''இப்ப என்னத்துக்கு எங்கள் மூன்று பேரையும் இருத்தி வைச்சிருக்கிறியள்'' என்று கேட்டார் நடராசா.

''இப்பத்தேல் காலத்திலை ஊரில் உள்ள எல்லாருக்கும் முதலுதவிச் சிகிட்சை முறைகள் தெரிந்திருக்க வேணும். எங்கடை ஊர் ஆஸ்பத்திரியிலை டொக்ரர் இல்லை. பனிபுலம் கிராம டொக்ரர் தான் வாரத்திலை மூன்று நாளைக்கு வாறார். ரவுண் ஆஸ்பத்திரிக்கு ஏழுமைல் போக வேணும்.... எல்லாருக்கும் முதலுதவிச் சிகிட்சை முறைகள் தெரிந்திருந்தால் ஓரளவாவது உயிர்களைக் காப்பாற்றலாம். அதாலை எங்கடை பாடசாலையிலை சென்யோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரி வொன்றைத் தொடக்கலா மெண்டு நினைக்கிறன்.'' என்று கூறி விட்டு நிறுத்தினார் மயில்வாகனம்.

மூவரும் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. சிவராசாவுக்கு விளையாட்டுத் துறைகளில் அவ்வளவு அக்கறை இல்லை. அதனால் அவர் பெரிதாக ஒன்றையும் யோசிக்கவில்லை. இருந்தாலும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையை இது பாதிக்குமோ என்று நினைத்தார். மதிக்கு இவைகளில் எல்லாம் நல்ல விருப்பம். தொடக்கினால் எப்படி நடத்தலாமென்று சிந்தித்தார். நடராசாவுக்கு எள்ளளவும் விருப்பமில்லை. முன்பு ஒரு முறை தொடங்கிய போது ஆசிரியர்களுக்கிடையே பல முரண்பாடுகள் காணப்பட்டன. பெற்றோர் சிலர் இரகசியமாகச் சண்டைக்கு வந்தனர். ஏன் வீணாண வம்பு என்று யோசித்தார்.

''என்ன யோசிக்கிறியள்....? உங்கடை நிலைப்பாட்டைச் சொல்லுங்கோ...'' என்றார் மயில்வாகனம்.

''ஸ்கொலசிப் முடியுமட்டும் என்ரை பிள்ளைகளை விடமாட்டன்..'' என்றார் சிவராசா.

மயில்வாகனம் சிரித்தார்; பின்பு ''சரி.... மதி உம்முடைய அபிப்பிராயமென்ன?'' என்று கேட்டார்.

“நல்ல விசயம் சேர்... பள்ளிக்கூடத்திலை எத்தினையோ பிள்ளைகள் காயப்படுது. இஞ்சை உள்ள ஒருத்தருக்கும் முதலுதவிச் சிகிட்சை முறை தெரியேல்லை..” என்றார் மதி.

“நடராசா நீர் சொல்லும்..”

சிறிது நேரம் யோசித்து விட்டு நடராசா சொன்னார்; “பிரச்சனை சேர்... முந்தி ஒருக்கால் தொடங்கிப் பிரச்சினைப்பட்டு விட்டனாங்கள்”.

“இதிலை என்ன பிரச்சினை இருக்கு? வைத்திய வசதிகள் குறைஞ்ச இந்தக் கிராமத்திலை ஏதாவது ஒன்று நடந்திட்டால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும் வரை சிகிட்சை செய்யலாம் தானே..” என்றார் மயில்வாகனம்.

“உங்கடை எண்ணம் நல்லது தான். அதைச் சனம் புரிஞ்சு கொள்ள வேணுமே...” என்றார் நடராசா.

“இதிலை புரிய என்ன இருக்கு? இராத்திரி நவரத்தினம் இருந்த நிலைக்குச் சுந்தர் இல்லாட்டில் என்ன நடந்திருக்கும்...ம்... தற்செயலாய் ஒரு தீ விபத்து ... வீதிவிபத்து நடந்தால் காப்பாற்றுற முறைகளை அறியுறது பிரச்சினையே...” என்றார் மயில்வாகனம்.

நடராசாவால் பதில் கூறமுடியவில்லை. பேசாமல் இருந்தார்.

“சரி பிரச்சினைக்கு உரியவர்களை விலத்தி வைப்பம்... உம்முடைய நிலைப்பாட்டைச் சொல்லும்”

“இதிலை நான் சொல்ல என்ன இருக்கு”

“நல்ல கதை... நீர் இந்தப் பள்ளிக்கூட உதவி அதிபர் உம்முடைய ஆலோசனைகள் கட்டாயம் தேவை” சிரித்தார் மயில்வாகனம்.

“நல்ல விசயம் தான் சேர் தொடங்குவம்..” என்றார் நடராசா அரை மனத்துடன்.

“உம்முடைய பேச்சில் இருந்து உமக்கு விருப்பமில்லைப் போலை தெரியுது.. எதையும் மறைக்காமல் சொல்லும்..”

“முந்தி யொருக்கால் சரவணமுத்து அதிபராய் இருக்கேக்கை தொடங்கினனாங்கள்.. அதாலை பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டு அதைக் கைவிட்டனாங்கள். ஒண்டைத் தொடங்கிப் போட்டு கைவிடக் கூடாது அது தான் யோசிக்கிறன்...” என்றார் நடராசா.

“ஏன் கைவிடுவான்? ஊருக்கு நன்மைக்காகத் தான் செய்யிறம். விருப்பமில்லாதவை விலகிப் போகட்டன். ஏன் விசர்கதை கதைப்பான்”.

“சில பாடசாலைகள் கல்வியிலோ அல்லது துணைப்பாட விதானங்களிலோ அக்கறை காட்டுவதில்லை. விழாக்களைப் பெரிதாகச் செய்து பெரும் பெரும் பிரமுகர்களை அழைத்து கௌரவப்படுத்திச் சமூகத்திற்கு தம்மை பெரிதாகக் காட்டிக் கொள்கின்றன” என்றார் சிவராசா.

நடராசா ஒன்றும் பேசவில்லை. பழைய சம்பவங்களை இரைமீட்டார். அவர்கள் தொடங்கியது இடம்பெயர்வுக்கு முன்பு. எவ்வளவோ பிரச்சினைகள்; சண்டைகள்; தகராறுகள்; வாதப்பிரதி வாதங்கள் யாவும் அவர் கண் முன் தோன்றின. இருந்தாலும் தற்போதுள்ள சூழ்நிலையில் இப்படியான அமைப்பு ஒன்று கட்டாயம் தேவை என்று அவரின் உள்மனம் கூறியது. “சரி சேர் தொடங்குவம்” என்றார் நடராசா.

“ஆரிட்டைப் பொறுப்பைக் குடுப்பம்” மயில்வாகனம் கேட்ட படி மதியைப் பார்த்தார்.

“மதீட்டையே குடுப்பம்..” என்றார் நடராசா.

மதி சரியென ஒப்புக் கொண்டார். சிவராசாவும் மதியும் அலுவலகத்தை விட்டு வெளியே சென்றனர். மயில்வாகனமும் நடராசாவும் சென்யோண்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவைத் தொடக்குவது பற்றி கதைத்துக் கொண்டு இருந்தனர்.

## *12*

சபாபதிப்பிள்ளை வித்தியாலயம் உடற்பயிற்சிப் போட்டியில் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. அதனால் மதியும் மயில்வாகனமும் மிகவும் மகிழ்வடைந்தனர். ஒரு சிறிய பாடசாலை மாவட்டத்திலே முதற் பரிசைப் பெற்றது மயில்வாகனத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஊரவர் எல்லோரும் அதைப் பாராட்டினர்.

பிள்ளையாற்ரை அருள் தான் எல்லாம் என்று நடராசா அடிக்கடி கூறுவார். கிறவுண் இல்லாதனாங்கள் பிள்ளையார் கோவில் வீதியைப் பாவித்ததற்கு நன்றிக் கடனாக வீதியைச் சுற்றி வரவுள்ள பற்றைகளையெல்லாம் வெட்டித் துப்பரவு செய்து கொடுக்க வேண்டும் என்று மயில்வாகனத்தைக் கேட்டுக் கொண்டார் நடராசா. அதற்கு மயில்வாகனம் ஒத்துக் கொண்டார்.

பருத்திமலை மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த பத்துவருட காலமும் மயில்வாகனம் அருகில் இருந்த பிள்ளையார் கோயில் திருவிழாக்காலங்களில் மாணவர்களைச் சிரமதானப் பணிகளில் ஈடுபடுத்துவது வழக்கம். வீதிகளைத் துப்பரவு செய்தல், கிணறு, கேணி முதலியவற்றை இறைத்து துப்பரவு செய்தல். தண்ணீர்ப்பந்தல் அமைத்துத் தாக சாந்தி செய்தல், சுவாமிகாவுதல் போன்றவற்றை அவர் மாணவர்களைக் கொண்டு செய்விப்பார்.

திருவிழாக் காலங்களில் பாடசாலையைப் போல கோயிலும் மிகவும் துப்புரவாகவும் குழப்படிகள் இன்றியும் காணப்படும். ஐயா் அடிக்கடி சொல்வார்; “மாஸ்ரர் வந்தாப் பிறகு எனக்கு வேலைகளே இல்லை. முந்தியெண்டால் தீத்தக் கேணியை இறைத்து விட்டால் கஞ்சல் குப்பையைப் போடுவான்கள். வாழைப்பழத்தோல், பிலாக்காய்ச் சக்கை முதலியவற்றால் எறிபடுவாங்கள், இப்ப ஒண்டுமில்லை. என்பார் அதை விட மேளகாரன் குருசாமி வந்து; “இப்ப நீங்கள் தானாம் புதிசாய் வந்த அதிபர். நான் பதினைஞ்சு வரிசமாய் பட்ட கஷ்டம் அப்பப்பா... சைக்கில் காத்தைத் திறப்பாங்கள், ரயருக்கு ஊசியாலை குத்துவங்கள், பூசை முடிய ஐயா தாற பிரசாதத்தை அவிட்டுக் கொண்டு போவாங்கள், நாதசுரம் வாசிக்கேக்கை கல்லாலை எறிவங்கள். இப்ப நீங்கள் வந்தாப் பிறகு இதுகளெல்லாம் இல்லாமல் போட்டுது.... நீங்கள் நல்லாய் இருக்க வேணும்....” என்று வாழ்த்தினான்.

பிள்ளைகள் பாடசாலையில் கல்வியை மட்டுமன்றி வாழ்க்கையில் உள்ள அத்தனை விசயங்களையும் கற்க வேண்டும் என்ற எண்ணத்தை உடையவர் மயில்வாகனம்.

பிள்ளையார் கோவில் வீதியெல்லாம் கூட்டி துப்பரவு செய்து குப்பை கூழங்களை எரித்து கோயில் மண்டபங்களைக் கழுவி முடிக்க இரவு ஏழுமணியாகி விட்டது. பிள்ளைகளை யெல்லாம் வீட்டுக்கு அனுப்பி விட்டு வீட்டுக்குச் சென்ற மயில்வாகனம் இலட்சுமியம்மாள் வைத்திருந்த சுடுநீரில் தண்ணீர் கலந்து குளித்து விட்டு இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து ஈசிச்செயரில் படுத்துக் கொண்டார்.

யாழ்ப்பாண வானொலியில் தேனிசைத்தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மயூரன் எட்டரை மணிக்குச் சாப்பிட்டு விட்டு தேனிசைத் தேர்வு கேட்டு விட்டுத் தான் படுப்பது வழக்கம். அதை விட அன்று இரவு பத்துமணிக்கு இந்தியாவில் சிவாஜிகணேசன் நடித்த வசந்தமாளிகை படம் ஒளிபரப்பப்பட இருந்தது.

முதலில் மயூரனின் விருப்பத்திற்கிணங்க பதின்நான்கு அங்குல கறுப்பு வெள்ளை ரீவியும் பற்றியும் வாங்குவதாகச் சுந்தர் தீர்மானித்திருந்தான். பின்பு மயூரனின் நண்பர்கள் நீர் இறைக்கும் யந்திரத்தில் மோட்டரும் கொன்டென்சரும் பூட்டினால் கலர் ரீவி பார்க்கலாம். வீட்டுக்கு நாலைந்து ரியூப் பல்ப்பூட்டலாமென்று ஆலோசனை கூற மயூரன் சுந்தருக்கு இவற்றைக் கூறித் தனது நண்பனின் வீட்டில் பூட்டப்பட்ட மெசினைக் கூட்டிச் சென்று

காட்டினான். சுந்தருக்கு அது பிடித்தமையால் பத்தாயிரம் ரூபாய் செலவில் அப்படி ஒரு மெசினைச் செய்வித்தான். அதனால் தற்பொழுது மயில்வாகனத்தின் வீட்டில் தினமும் ஐந்து ரியூப் பல்புகள் எரிகின்றன.

இது மயில்வாகனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சிகளைக் கொடுத்தது. பாடசாலை வேலைகள் செய்வதற்கு மினசார வெளிச்சம் இருப்பதால் மயில்வாகனம் இலகுவாக அவற்றைச் செய்தார். தினமும் நிறைய வாசித்தார்.

இலங்கை நேரம் பத்துமணியென யாழ்ப்பாண வானொலி கூறித் தனது சேவையை நிறுத்திக் கொண்டது. இந்திய தொலைக்காட்சி சேவை ரீவியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வசந்த மாளிகை படம் பார்க்க வேண்டும் என்று ஏற்கனவே மயில்வாகனம் தீர்மானித்திருந்தார். படம் தொடங்கவில்லை. விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. பொதுவாக விளம்பரதாரர் சார்பில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சியில் விளம்பரங்கள் கூடுதலாக இருக்கும். படத்தின் பொறுத்த கட்டத்தில் விளம்பரங்களை ஒளிபரப்பி மக்களைச் சோதனை செய்வது தொலைக்காட்சி நிலையத்தின் வழமையான செயல்.

வசந்தமாளிகைபடத்தை பலமுறை காசிப்பிள்ளை பார்த்திருக்கிறார். அந்தப்படத்தில் அவருக்கு ஒரு பிடிப்பு. அதனால் அவரும் அன்று படம் பார்ப்பதற்காக மயில்வாகனத்தின் வீட்டுக்கு வந்திருந்தார்.

படம் ஆரம்பமாகி விட்டது. நேரம் போவதே தெரியாதளவில் எல்லோரும் படத்தில் லயித்திருந்தனர்; ‘‘மயக்க மென்ன தயக்க மென்ன மணிமாளிகை தான் கண்ணே....’’ என்ற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. சௌந்தரராஜனின் வெண்கலக்குரல் தேனாக இனித்தது.... அந்த நேரம் ஒரு சோப் விளம்பரம் திடீரெனத் தொலைக்காட்சிப் பெட்டியை ஆக்கிரமித்தது.

‘‘சீ..... அருமந்த படத்தைக் கெடுக்கிறாங்கள்...’’ அலுத்துக் கொண்டார் காசிப்பிள்ளை.

சோப் விளம்பரத்தைத் தொடர்ந்து வேறு சில விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டன.

திடீரென்று நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. அவை அகோரமாகக் குரைத்ததால்; ‘‘ஆமி போலை கிடக்கு.. ரீவியை நிப்பாட்டுங்கோ...’’ என்றார் மயில்வாகனம்.

மயூரன் ரீவியை நிப்பாட்டாது சத்தத்தைக் கொஞ்சம் குறைத்து விட்டான். மயில்வாகனம் எழும்பி வெளிக் கோலுக்கு வந்தார். சில சமயம் இரவில் ஏதாவது நோய்வாய்ப்பட்டவர்கள் மயில்வாகனத்தின் வீட்டுக்கு வருவதுண்டு.

ஒழுங்கையில் அரிக்கன்லாம்பு வெளிச்சம் தெரிந்தது. நாலைந்து பேர் கதைத்தபடி வந்து கொண்டிருந்தனர்.

‘‘யாரோ சுகமில்லாதவை தான் வரீனை போலை கிடக்கு...’’ என்ற மயில்வாகனம்; ‘‘சுந்தரும் இல்லை..’’ என்று மனதுள் நினைத்துக் கொண்டார்.

‘‘வாத்தியார்.... வாத்தியார்....’’ யாரோ படலையில் கூப்பிடும் சத்தம் கேட்டது. ஜிம்மன் அவர்களை உள்ளே வர விடாது குரைத்துத் தடுத்துக் கொண்டு நின்றது.
மயூரன் வெளியே கட்டப்பட்டிருந்த ரியூப்லைட்டைப் போட்டான். வழவெங்கும் வெளிச்சம் பரவி ஒளிர்ந்தது.

இதற்கிடையில் காசிப்பிள்ளையும் வெளியே வந்துவிட்டார்; ‘‘ஆரெண்டு பாப்பம்’’ என்று கூறி மயில்வாகனம் கேற்றை நோக்கி நடக்க ஆரம்பித்தார். காசிப்பிள்ளையும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்.

கேற்றைத் திறந்ததும் உள்ளே வந்த ஆறுமுகம்; ‘‘எட நீ இஞ்சையே நிக்கிறாய். நாங்கள் வீட்டை போட்டு வாறம்’’ என்றார் காசிப்பிள்ளையைப் பார்த்து.

‘‘வசந்த மாளிகை படம் எண்டாப் போலை வந்தன்... என்ன விசயத்தைச் சொல்லு..’’

பலகைக் கட்டில் ஒன்றில் ஒரு பெண் படுத்திருந்தாள். கட்டிலை இருவர் தூக்கிக் கொண்டு வந்தனர். முன்னால் இருவர் அரிக்கன்லாம்புடன் வந்தனர்.

ஆறுமுகம், ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்திலும் சிறிது காலம் பணி புரிந்தவர். காசிப்பிள்ளையின் நெருங்கிய உறவினர்.

கட்டிலில் படுத்திருந்த பெண் வேதனையால் வாய்விட்டு குழறிக் கொண்டிருந்தாள்.

“என்ரை மூத்த மகள்... இது தான் பெறுமாசம்.. இன்னும் பத்து நாளிருக்கு... இருந்தாப் போலை குத்து தொடங்கீட்டுது... சுந்தரை வந்து கூட்டிக் கொண்டு போறது கரைச்சல்..... கேவியூ நேரத்திலை ஏதாவது நடந்தால்.... தெய்வம் மாதிரி இருந்து எங்கடை ஊர்ச்சனத்தைக் காப்பாற்றுறவன்..” பேசிக் கொண்டிருந்தார் ஆறுமுகம்.

“கதையை விட்டுட்டு தூக்கிக் கொண்டு உள்ளுக்கு வாருங்கோ” என்றார் காசிப்பிள்ளை.

மயில்வாகனம் கேற்ரைத் திறந்து விட வாங்குடன் பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள் உள்ளே வந்தனர்.

மயில்வாகனத்தின் மூளை பலமாகச் சிந்தித்தது; “சுந்தரும் இல்லை இப்ப என்ன செய்யிறது?”.

கட்டிலைத் தூக்கி வந்தவர்கள், கட்டிலை முற்றத்தில் வைத்தனர். ஆறுமுகத்தின் மகளான கயல்விழி வேதனையைத் தாங்க முடியாது பலமாகக் கத்தினாள்.

சத்தம் கேட்டு வெளியே வந்த மாலதி அப்பெண்ணை மெதுவாக எழுப்பி சைட் அறைக்குள் அழைத்துச் சென்றாள். படிப்பு முடிந்து மூன்று மாதங்களாகியும் அவளுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை. முன்பு படிக்கும் காலத்தில் பல முறை ஆஸ்பத்திரியில் பிரசவம் பார்த்திருக்கிறாள். டாக்டருக்குப் படிக்கும் மாணவர்கள் பத்துப் பதினைந்து பேர் கூட இருப்பார்கள். பெரிய டாக்டர் யாவற்றிற்கும் விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பார். இன்று தனியச் சிகிட்சை செய்ய வேண்டிய நிலை. மனதில் சிறிது பயமிருந்த போதும் துணிவுடன் செய்றபட்டாள் மாலதி.

விளம்பரங்கள் முடிந்து மறுபடியும் படம் ஆரம்பமாகி விட்டது; “நான் இதிலை நிண்டு என்ன செய்யிறது. படத்தைப் பார்க்கிறன். தேவையெண்டால் கூப்பிடுங்கோ” என்று சொல்லி விட்டு படம் பார்க்க உள்ளே சென்றார் காசிப்பிள்ளை.

காசிப்பிள்ளையைப் போல அப்படிச் சொல்லி விட்டு உள்ளே போக மயில்வாகனத்தால் முடியவில்லை. கோலுக்குள் இருந்த கதிரைகளைத் தூக்கி வெளியே போட்டு வந்தவர்களை அமரச் சொல்லி விட்டு தானும் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார்.

இலட்சுமியம்மாள் மாலதிக்கு உதவியாக அறையுள் இருந்தாள். என்னதான் மாலதி டொக்ரராக இருந்தாலும் அனுபவப்படவில்லையே என்று சிந்தித்துக் கொண்டிருந்தார் மயில்வாகனம்.

மாலதி, கயல்விழியை கேள்விகள் கேட்டுப் பரிசோதித்துக் கொண்டிருக்க, இலட்சுமியம்மாள் தனக்கு செய்யப்பட்ட கை வைத்திய முறைகளைப் பற்றிச் சிந்தித்தாள்.

“அந்த நாளிலை ஊரில் எல்லோரும் வீட்டிலை தானே பிறந்தவை. இப்ப தான் ஆஸ்பத்திரிக்கு....” என்று சிந்தித்தாள் இலட்சுமியம்மாள்; “இந்தக் காலத்துப் பெண்கள் கர்ப்பவதியானால் தடல்புடலான உபசாரங்கள் செய்வினை. வேலை வெட்டிகள் செய்யாமல் சும்மாய் இருப்பதால் தான் பிரசவ நேரம் கஷ்டப்பட வேண்டியுள்ளது. எங்களைப் போலை குத்தல் இடியல் எல்லாம் செய்தால் சுகமாய் பிறந்திடும். நாங்கள் எந்த ஆஸ்பத்திரிக்குப் போனனாங்கள்” என்று அடிக்கடி இலட்சுமியம்மாளின் தாய் கூறுவது. இலட்சுமியம்மாளின் நினைவுக்கு வந்தது.

தாய் செய்ததை நினைத்துப் பார்த்தாள். பிரசவ வேளையில் முருங்கைப் பூவும் வெந்தயமும் அவித்துக் கொடுத்தால் சுகப்பிரசவமாகும். என்று தாய் அடிக்கடி கூறி அவித்துத் தருவதை நினைத்தாள். அறையால் வெளியே வந்து ரோச்லைட்டையும் எடுத்துக் கொண்டு, மயூரனையும் அழைத்துக் கொண்டு பின் வாளவில் உள்ள முருங்கை மரத்தை நோக்கிச் சென்றாள் இலட்சுமியம்மாள்.

மாலதி, கயல்விழியைப் பரிசோதித்துப் பார்த்தாள். நாடித் துடிப்பு சிறிது அதிகமாக இருந்தது. பயப்பிடுவதற்கு ஒன்றுமில்லை, என்றாலும்; ''கர்ப்பிணிகளின் விடயத்தை அறுதியிட்டுக் கூற முடியாது. தெண்டித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது தான் நல்லது'' என்று பெரிய டாக்டர் கூறுவது அவளது நினைவுக்கு வந்தது.

படம் முடிந்து விட்டது. எனினும் மெசின் நிற்பாட்டப்படவில்லை. காசிப்பிள்ளை வந்து மயில்வாகனத்துக்கு அருகில் அமர்ந்து கொண்டார். ஒரு தேத்தண்ணீர் குடித்தால் நல்லது போல் அவருக்குத் தோன்றியது. எப்பிடிக் கேட்பது. என்று சிந்தித்த படி மடியுள் இருந்த சுருட்டை எடுத்து வாயில் வைத்தார்.

''தேத்தண்ணீரைக் குடிச்சிட்டுப் பத்தன் ..... தேத்தண்ணி வைக்க சொல்லியிருக்கிறன்'' என்றார் மயில்வாகனம்.

''எங்களாலை உங்களுக்கு எவ்வளவு சிரமம்.... இராவுமுழுக்க நித்திரை முழிச்சிட்டு விடிய பள்ளிக் கூடமும் போக வேண்டும்'' என்றார் ஆறுமுகம்.

''இதெல்லாம் பெரிய பிரச்சினை இல்லை.... ஆண்டவன் எம்மைப் படைச்சது பிறருக்கு உதவி செய்யுறத்துக்காக.... எந்த நிலமையிலும் எம்மாலை முடிஞ்சதை செய்ய வேணும்...''

ஆறுமுகத்துக்கு யாரோ ஓங்கிச் சவுக்கால் அடிப்பது போல இருந்தது; ''மயில்வாகனம் எங்கை..?'' என்று சிந்தித்தார்.

ஆறுமுகம் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போவதே இல்லை. ஊரின் ஒதுக்குப் புறத்தில் உள்ள ஒரு பாடசாலையில் கற்பித்தார். பாடசாலையில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரை வகுப்புக்கள் இருந்தன. மொத்த மாணவர் தொகை பதின்நான்கு மட்டும். அதில் நாலைந்து மாணவர்கள் தான் வருவார்கள். அதற்கு ஒரு தலைமை ஆசிரியரும் இருந்தார். தலைமை ஆசிரியர் சடையாகத் தண்ணி அடிப்பார். அதை நல்ல முறையில் ஆறுமுகம் பயன்படுத்தினார். பாடசாலைக்குச் சம்பள நாளன்று தவறாமல் வருவார். மற்றும்படி தோட்டம் துரவு மாடு கன்றுகள் பராமரிப்புத்தான்.

''தேத்தண்ணியை எடுங்கோ....'' மயூரன் சொன்ன பின் தான் சுய நினைவுக்குத் திரும்பினார் ஆறுமுகம்.

கயல்விழிக்கு நேரம் ஆக ஆக வேதனை அதிகரித்தது. உடலெல்லாம் வியர்த்தது. உறுதியாக இருந்த மாலதி சிறிது மனம் தளர்ந்தாள்; ''ஆஸ்பத்திரிக்குப் போறது நல்லது'' என்று மெதுவாகத் தகப்பனிடம் சொன்னாள்.

ஆறுமுகம் அதைக் கேட்டுத் தடுமாறிப் போனார்; ''இந்தச் சாமத்திலை எப்படிப் போறது? ஏழெட்டுச் சென்றி தாண்ட வேணும்'' என்று அங்கலாய்த்தார்.

''போக வேணுமெண்டால் போகத்தானே வேணும்... போய்ச் சின்னத்துரையின்ரை காறைப் பிடிச்சுக் கொண்டு வா...'' என்ற காசிப்பிள்ளை, சிறிது யோசித்து விட்டு; ''அவன் வரான்... நானும் வாறன்'' என்று சொல்லி விட்டு ஆறுமுகத்தின் பின்னே சென்றார் காசிப்பிள்ளை.

நாய்கள் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தன. ஆறுமுகத்திற்கு பயமாக இருந்தது. காசிப்பிள்ளை எதற்க்கும் பயப்பட மாட்டார். அதுகும் லேசாய்க் குடித்து விட்டால் துணிவு தலைக்கேறிவிடும்.

''நாய் குரைக்கிறத்தைப் பார்த்தால் ஆமி போலை கிடக்கு'' நடுங்கினார் ஆறுமுகம்.

‘‘சும்மாய் பயந்து சாகாதை. ஆமி நிண்டாலென்ன? போய்த்தானே தீரவேணும்.... இல்லாட்டில் அவளின்ரை பாடென்ன? எங்கடை ஆட்கள் எல்லாத்துக்கும் பயப்பிர்றதாலை தான் இந்த நிலமை’’ என்றார் காசிப்பிள்ளை சற்று ஆத்திரமாக. என்றாலும் அவரின் கோபம் தணியவில்லை; ‘‘நாயள் கண்டதுக்கெல்லாம் குலைக்கும்... ஆமிக்கும் குலைக்கும்..... இப்ப ஆமி வந்தாலென்ன?

‘‘காசிப்பிள்ளைக்கு இரவு குடித்தது முறியேல்லை’’ என்று நினைத்தார் ஆறுமுகம். ஒவ்வொரு அடி வைக்கும் போதும் அவரது கால்கள் உதறின.

சின்னத்துரையின் வீட்டுப் படலையில் அரை மணித்தியால மாகக் கத்திய பிறகு தான் சின்னத்துரை எழும்பி வந்தான்.

‘‘என்னடாப்பா உலகம் அழிஞ்சாலும் உங்களுக்குத் தெரியாது போலை கிடக்கு....’’ என்றார் காசிப்பிள்ளை கேலியாக.

‘‘உனக்கென்ன பகிடியாய்க் கிடக்கு. ஊர் இருக்கிற நிலமையிலை கூப்பிட்டவுடனை எழும்ப முடியுமே....? நான் எப்பவோ எழும்பீட்டன். ஆளை அடையாளம் காணாமல் வரமுடியுமே...? அது சரி ஏன் நடுச்சாமத்திலை வந்து நிக்கிறியள்’’ என்று கேட்டான் சின்னத்துரை.

‘‘ஆறுமுகத்தின்ரை மோளுக்கு குத்தெழும்பீட்டுது... இப்ப மூண்டு மணித்தியாலமாய் மயில்வாகனம் மாஸ்ரர் வீட்டை வைத்தியம் பார்த்தது.... கொஞ்சம் கடுமையாய்க் கிடக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேணும்...’’

‘‘ஆஸ்பத்திரிக்கோ....’’ அதிர்ச்சியுடன் கேட்டான் சின்னத்துரை.

‘‘ஓமடாப்பா.... போனகிழமையும் வடக்கை இருந்து ஆரோ கொண்டு போனதாய்க் கதைச்சவை. வா போய்ப் பார்ப்பம்..’’

‘‘விசர்க்கதை கதையாதை, என்னை நம்பி அஞ்சு பொம்பிளைப்பிள்ளையள் இருக்கு... வேணுமெண்டால் காரைக் கொண்டு போங்கோ’’ என்றான் சின்னத்துரை.

வற்புறுத்திப் பிரயோசனமில்லை என்று காசிப்பிள்ளைக்குத் தெரிந்தது; ‘‘தகப்பனே வெளீலை வரப் பயப்பிர்றான், பிறத்தியான் வருவனே’’ என்று முணுமுணுத்தபடி; ‘‘காரை ஸ்ராட் பண்ணி வெளீலை கொண்டந்து தா’’ என்றார் காசிப்பிள்ளை.

சின்னத்துரை காரைச் ஸ்ராட் பண்ணினான். அது இயங்க மறுத்தது. பல முறை முயற்சித்தான் பயனில்லை.

‘‘இவன் வேணு மெண்டு தான் செய்யுறானோ?’’ காசிப்பிள்ளை சந்தேகப்பட்டார்.

‘‘எட்டு வரிசமாய் கட்டையிலை நிண்டது. போன மாசம் தான் பதினையாயிரம் சிலவளிச்சு திருத்தினான். ஒரு மாதமாய் பிரச்சினை இல்லாமல் ஓடினது...’’ என்றான் சின்னத்துரை. பின்பு போனற்ரைத் திறந்து ஏதோ செய்தான்.

சின்னத்துரை முப்பத்தைந்து வருடங்களாகக் கார் வைத்து வாடகைக்கு ஓடுபவன். அவனுக்கு திருத்த வேலைகளும் நன்றாகத் தெரியும்.

அரைமணித்தியாலப் போராட்டத்தின் பின் கார் இயங்கத் தொடங்கியது. காரைக் கொட்டிலால் வெளியே எடுத்து ஒழுங்கையில் கொண்டு வந்த சின்னத்துரை, அதைக் காசிப்பிள்ளையிடம் கொடுத்தான்; ‘‘எப்பிடிப் போகப் போறியள்’’ என்று கேட்டான்.

“இரண்டு மூன்று பேரை கார்க் கூட்டிலை ஏத்தி அரிக்கன்லாம்பைக் குடுத்து விடுவம். மெதுவாகக் காரை ஓட்டிக் கொண்டு போவம்....” என்ற காசிப்பிள்ளை; “ஆறுமுகமண்ணை மேலை லாம்போடை ஏறி இரு” என்றார்.

“ஆறுமுகம் காரின் கூட்டின் மேல் ஏறி இருந்தார். பழைய ஏபோட்டிக் கார். கரியலும் இருந்தமையால் சுகமாக அவரால் அமர்ந்திருக்க முடிந்தது.

மெதுவாக காரை ஓட்டி வந்த காசிப்பிள்ளை, மயில்வாகனத்தின் வீட்டின் படலையடியில் காரை நிறுத்தி விட்டு உள்ளே செல்ல, குழந்தையின் அழுகுரல் கேட்டது; “பிள்ளை பிறந்திட்டுது போலை கிடக்கு” என்று பலமாகக் கூறியபடி விரைந்து சென்றார். மயில்வாகனம் முற்றத்தில் கைகளைப் பின்னே கட்டியபடி நின்றார்.

வெளியே கட்டப்பட்டிருந்த ரியூப்லைட்டின் ஒலி மயில்வாகனத்தின் முகத்தில் பட்டு ஒளிர்ந்தது. அவரின் முகம் கலவரமடைந்திருப்பது போலிருந்தது.

“பிள்ளை பிறந்திட்டுது போலை கிடக்கு... என்ன பிள்ளை?” ஆவலோடு கேட்டார் ஆறுமுகம்.

“பெம்பிளைப்பிள்ளை..” ஆனால் தயங்கினார் மயில்வாகனம்.

“சொல்லுங்கோ..” அவசரப்படுத்தினார் ஆறுமுகம்.

“கயல்விழி ....” நிறுத்தினார் மயில்வாகனம்.

“கயல்விழிக்கு என்ன...?” பரபரத்தார் ஆறுமுகம்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த மயில்வாகனம்; “கயல்விழி இறந்திட்டாள்” என்றார்.

இடி ஒன்று நெஞ்சில் விழுந்து மெதுவாக இறங்குவது போலிருந்தது ஆறுமுகத்திற்கு.

“இந்த மண்ணில் துன்பப்பட இன்னுமொரு சீவன் பிறந்திட்டுது...” என்று நினைத்தார் காசிப்பிள்ளை. அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

## *13*

மயில்வாகனம் விடிந்த பின் பிரேதத்தை எடுத்துக் கொண்டு போகும் படி வற்புறுத்திக் கூறிய போதும் ஆறுமுகம் கேளாது இரவோடு இரவாகவே கொண்டு சென்று விட்டார். அதைப் போல இரவோடு இரவாக வீடு கழுவுவதற்கு ஒழுங்குகள் செய்து கொண்டிருந்தாள் இலட்சுமியம்மாள்.

“இன்னும் இரண்டு மணித்தியாலத்திலை விடிஞ்சிடும். விடிஞ்சாப்பிறகு வீட்டைக் கழுவலாம் தானே. இப்ப ஏன் அவசரப்படுரீ. நாளைக்கு சனிக்கிழமை தானே” என்றார் மயில்வாகனம்.

“இப்ப ஆயத்தஞ் செய்தால் தான் விடிஞ்சாப்பிறகு கழுவலாம். கிடாரங்களுக்கை தண்ணீரை நிரப்பிவைப்பம்.” என்றாள் இலட்சுமியம்மாள்

மயில்வாகனத்துக்கு அசதியாக இருந்தது. கொஞ்ச நேரம் படுக்க வேண்டு மென நினைத்தார். ஆனால் எல்லா இடமும் கழுவ வேண்டும் என்று இலட்சுமி விரும்புவாள். எனவே வீட்டுள் படுக்க முடியாதென நினைத்து, ஈசிச் செயரைத் தூக்கிக் கொண்டு போய் பின்புறமாக நின்ற மாமரத்தின் கீழ் போட்டு விட்டு படுத்தார்.

வழமையாக 5.45 மணிக்கு வீட்டுக்கு வரும் சுந்தர் அன்று சிறிது தாமதமாகி வந்தான். சென்ரி ஒன்றில் சந்தைக்கு மரக்கறி கொண்டு சென்ற அத்தனை பேருடைய மூடைகளையும்

இறக்கி, நிலத்தில் கொட்டிப் பரிசோதனை செய்தால் அரை மணித்தியாலம் தாமதமாகி விட்டது.

அவன் மோட்டார் சைக்கிலை விட்டு விட்டு கோலுக்குள் நுளைந்த போது மாலதி கோலைக் கழுவிக் கொண்டிருந்தாள். தாயார் சரியான ஆசாரம் பார்ப்பவர். சுந்தர் ஆஸ்பத்திரியால் வந்து குளிக்காமல் வீட்டுக்குள் செல்வது அவளுக்குப் பிடிப்பதில்லை. பலமுறை “குளித்து விட்டு வா” என்று சொல்லிப் பார்த்தாள். சுந்தர் கேட்பதாக இல்லை. ஆஸ்பத்திரியால் வந்து சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுத்தான் குளிப்பான்; “குளிச்சிட்டு வந்து ஓய்வெடு” என்று இலட்சுமியம்மாள் பலமுறை சொல்லியும் சுந்தரரால் அப்பிடிச் செய்ய முடியவில்லை.

“இரவு முழுவதும் நித்திரை முழிச்சுக் கடமை செய்பவன், வந்தவுடனை குளிக்க முடியுமே? இப்ப ஊர் முழுக்கத் துடக்குத்தான்...” என்பார் மயில்வாகனம்.

வாய்திறந்து தனது மனநிலையைச் சொல்லாவிட்டாலும் இலட்சுமியம்மாளுக்கு சுந்தர் குளிக்காமல் வீட்டுள் நுளைவது இன்று வரை பிடிக்கவில்லை.

“என்ன இண்டைக்கு இரவோடு இரவாக வீடு கழுவுறியள்...”

“சுந்தர் மாலதியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவளது முகம் கறுத்திருந்தது. கண்கள் வீங்கிச் சிவத்திருந்தன. சுந்தரைக் கண்டதும் கண்களுள் பொங்கி நின்ற கண்ணீர் உடைப்பெடுத்துக் கன்னங்களால் வழிந்து ஓடியது.

“என்ன மாலதி..... என்ன.....?” சுந்தர் பரபரப்புடன் கேட்டான்.

மாலதி விக்கி, விசும்பி அழுதாளே தவிர ஒன்றும் பேசவில்லை.

மோட்டார் சைக்கிலின் சத்தத்தின் மூலம் சுந்தர் வந்ததை அறிந்த இலட்சுமியம்மாள் அவ்விடத்துக்கு வந்து இரவு நடந்த சம்பவத்தை அவனுக்கு விபரமாகக் கூறினாள்.

“இதுக்கெல்லாம் ஏன் அழுறாய்? நேற்றும் இதே மாதிரித்தான் ஒரு மரணம் சம்பவித்தது. அவங்கள் கஷ்டப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டந்திட்டாங்கள். என்றாலும் எங்களாலை காப்பாற்ற முடியாமல் போச்சு..” என்றான் சுந்தர்.

“இரவு பெரிய பிரச்சினை தான்” என்றாள் இலட்சுமியம்மாள்.

“இரவிலை சனம் சரியாய்க் கஷ்டப்படுது... முந்தநாள் பாம்பு கடிச்சு ஒராளைக் கொண்டந்தவை. பாம்பு பத்து மணிக்குக் கடிச்சது. ஆஸ்பத்திரிக்குக் கொண்டரேக்கை விடியப்புறம் நாலுமணி.... பெரியபிரச்சினைப்பட்டுத்தான் கொண்டந்தவை. கார்க்காரன் விட மாட்டனெண்டுட்டானாம். கூட வாறத்திற்கும் ஆட்களில்லை. தகப்பனும் மச்சான்காரனும் மனிசிக்காரியும் தான் கொண்டந்தவை. ஓ.பீ.டீயிலையே ஆள் செத்துப் போச்சு...” என்றான் சுந்தர்.

“சின்னத்துரையும் கார் விடமாட்டனெண்டுட்டுது... பிறகு காசிப்பிள்ளை தான் அவன்ரை காரை எடுத்துக் கொண்டு வந்தது” என்றாள் இலட்சுமியம்மாள்.

“இந்த நிலைமையிலை நாங்கள் ஆரையும் குறை சொல்லேலாது. எல்லாரும் பயப்பிடீனை.... இஞ்சை காசிப்பிள்ளை அண்ணை துணிஞ்சு இறங்கீட்டார். அவரைப் போற்ற வேணும்” என்றான் சுந்தர்.

“அவன் துணிந்தவன், வெறி ஏறினால் துணிவுகூடும்” என்றார் மயில்வாகனம்.

“ரவி நாளைக்கு வாறாராம். நேற்றுப் பின்நேரம் தாய் வந்து சொல்லிப் போட்டுப் போனவா.. இரவு கோல் எடுத்துக் கதைச்சவர்..” என்று கூறி விட்டு மாலதியைப் பார்த்தான் சுந்தர்.

அவளின் முகத்தில் எந்தவிதமான அசுமாற்றமும் தென்படவில்லை. கண்களால் கசிந்த கண்ணீரைக் கையால் துடைத்தாள்.

“கோஸ் முடிஞ்சுதாமே...? றிசல்ட் எப்பிடி.?” மயில்வாகனம் கேட்டார்.

“ரவி சரியான கெட்டிக்காரன் தானே. ரொப்பண்ணியிருக்கிறார். இன்னும் ஒருவரிசம் நிண்டு படிக்கச் சொல்லி சொன்னவையாம் ரவி விரும்பேல்லை. இஞ்சை வந்து இரண்டு மூன்று வரிசத்தாலை திரும்பிப் போவம் எண்டார்”.

“கையோடை முடிச்சிட்டு வாறது நல்லது தானே. இரவைக்கு கோல் எடுத்து நான் சொன்னதாய்ச் சொல்லு”

“ரவி வந்து கல்யாணஞ் செய்யப் போறதாய்ச் சொல்லுறான்” என்று கூறி விட்டு மாலதியின் முகத்தை மீண்டும் பார்த்தான். அவனால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

“பொம்பிளை பார்த்தாச்சாமே...” மயில்வாகனம் கேட்டார்.

“ரவி, பார்த்திட்டுதாம்... பெற்றோரும் விரும்புவினையாம்...” சுந்தர் கதைத்துக் கொண்டிருந்த போது மாலதி அவ்விடத்தை விட்டு உள்ளே சென்றாள்.

சுந்தரின் பேச்சு மயில்வாகனத்தை அச்சுறுத்தியது; “ரவி பார்த்திட்டுதாம். பெற்றோரும் விரும்புவினையாம்..” இதன் அர்த்தமென்ன...? மயில்வாகனம் அவனைப் பற்றி பெரிய கற்பனைக் கோட்டை ஒன்று கட்டி வைத்திருந்தார். அந்தக் கற்பனைக் கோட்டை அவன் ஏ.எல் படிக்கும் போது ஒரு முறை வெடிச்சுச் சிதறியது. பருத்திமலைக்கு அவர் அதிபராகப் பொறுப்பேற்கும் போது ரவி என்ற ரவீந்திரன் பதினொராம் ஆண்டிலே கற்றுக் கொண்டிருந்தான். ஏ.எல் வகுப்புக்குரிய அறிவு அவனிடமிருந்தது.

தகப்பன் நன்றாகக் குடிப்பார். குடித்து விட்டு அக்கம் பக்கத்தாருடன் சண்டைக்குப் போவது அவரது அன்றாட நிகழ்வு. தனக்கு மனைவியும் ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள் என்ற நினைவு அவருக்கு அறவே கிடையாது.

ரவி தொடர்ந்து நாலைந்து நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. சுகவீனமாக்கும் என்று பேசாமல் இருந்த மயில்வாகனம், பின் மாணவர்களை விசாரித்த போது அவன் சந்தியில் உள்ள தேநீர்க் கடையில் வேலை செய்வதாக மாணவர்கள் கூறினார்கள். மயில்வாகனம் அதிர்ந்து போனார். மிகவும் கெட்டிக்காரனான அவனது வாழ்க்கை இடையில் அஸ்தமித்துப் போவதை அவர் விரும்பவில்லை.

தாயை வரும்படி கடிதம் அனுப்பினார். அவள் வரவில்லை. மாணவர்களிடம் சொல்லி அனுப்பினார். அப்படியும் அவள் வரவில்லை. எனவே வீட்டுக்குச் சென்றார்.

ரவியின் தகப்பன் நன்றாகக் குடித்து விட்டு முற்றத்தில் படுத்துக் கிடந்து புலம்பிக் கொண்டிருந்தான். பக்கத்தில் நின்ற ரவியின் தாய் மயில்வாகனத்தைக் கண்டு விட்டு வீட்டினுள் சென்று விட்டாள்.

மயில்வாகனம் படலையில் நின்று பெல் அடித்தார். பதில் இல்லை பல முறை அடித்த பின்பு தான் பக்கத்து வீட்டுக்காரன் வெளியே வந்து பார்த்து விட்டு; “சேர்” என்று அழைத்தபடி அவருக்கு அருகே வந்தான்.

“நான் ஏழாம் ஆண்டு படிக்கிற பிரதீபனின் தகப்பன் சிவபாலன்” என்றான்.

“ரவீந்திரன்ரை தாய் அல்லது தகப்பனை சந்திக்க வேணும்...”

“அவன் சரியான குடிகாரன் சேர். தாய்காரி பொடியனைக் கடையாலை மறிச்சு பள்ளிக்கூடத்துக்கு விடச் சொல்லி நாலைஞ்சு நாளாய் ஒரே கரைச்சல்... அவன் மனிசிக்கு அடிஅடியெண்டு அடிக்கிறான்” என்றான் சிவபாலன்.

“சரியான கெட்டிக்காரன். அது தான் சொல்லிக் கூட்டிக் கொண்டு போவமெண்டு வந்தனான்..” என்றார் மயில்வாகனம்.

“அவனோடை இப்ப கதைச்சால் உங்களுக்கும் அடிக்க வருவன்... நீங்கள் தெய்வம் மாதிரி இந்த ஊருக்கு வந்திருக்கிறியள். இப்ப தான் எங்கடை பிள்ளையள் ஒழுங்காய்ப் படிக்குது. வேறை ஆரன் என்றால் ஆர்படிச்சாலென்ன விட்டாலென்ன எண்டிருப்பினை... நீங்கள் தேடி வந்திட்டியள். இப்ப அவன் நிக்கிற நிலமையிலை கதைக்கேலாது நீங்கள் போங்கோ... நான் எப்பிடியும் காலமை கூட்டியாறன்..” என்றான் சிவபாலன்.

சிவபாலன் கூறியது போல மறு நாள்க் காலை ரவியினுடைய தகப்பனையும் தாயையும் பாடசாலைக்குக் கூட்டி வந்தான். அதன் பின் ரவி ஒழுங்காக பாடசாலைக்கு வரத் தொடங்கினான். ரவிக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் மயில்வாகனம் செய்து வந்தார். இதனால் இரு குடும்பங்களும் நட்புறவாகின.

ஓ.எல்.பரீட்சையில் எட்டுப் பாடங்களுக்கும் டீ எடுத்து அக்கிராமத்திலேயே முதல் மாணவனாகச் சித்தியடைந்தான் ரவீந்திரன். ஏ.எல் மருத்துவம் படிப்பதற்காகப் பட்டணப் பாடசாலை ஒன்றில் அவனை மயில்வாகனம் சேர்த்து விட்டார்.

பட்டணத்துக்கு சென்ற ரவீந்திரன் நண்பர்களுடன் சேர்ந்து சிகரட் பற்றத் தொடங்கினான். இதை அறிந்த அவனது தாய் மயில்வாகனத்திற்கு அதை அறிவித்தாள். மயில்வாகனம் அவனை அழைத்துப் புத்திமதிகள் கூறினார்.

சிகரட் பழக்கம் மதுபானத்தில் வந்து நின்றது. ரவி எச்சரிக்கையாக இருந்த போதும் ஒரு நாள் தாயிடம் அகப்பட்டு விட்டான். தாய்க்கு நெடுநாளாக அவனது போக்கில் சந்தேகமிருந்தது. அதை மயில்வாகனத்திற்குச் சொல்லியிருந்தாள்.

மயில்வாகனம் ரவியை அழைத்து புத்திமதிகள் கூறினார். அவன் திருந்தவில்லை. எனவே அவனைக் அழைத்து வந்து தனது வீட்டில் வைத்திருந்தார். ரவி மயூரனுடன் சேர்ந்து பாடசாலைக்குச் சென்று வந்தான்.

திடீரென்று ஒரு கிழமையாக ரவி மயில்வாகனத்தின் வீட்டுக்கு வரவில்லை. தாய் பாடசாலைக்கு வந்து மகனைப் பற்றி சொல்லி விட்டுச் செல்வாள்.

மயில்வாகனத்தால் அமைதியாக இருக்க முடியவில்லை. எதிர்காலத்தில் ஒரு டொக்ரராக வரக்கூடியவன் இப்படி ஏன் கெட்டழிந்து போறான் எனச் சிந்தித்தார்.

அன்று மாலை பாடசாலை முடிந்ததும் ரவியின் வீட்டுக்குப் போனார் மயில்வாகனம். திண்ணையில் இருந்த ரவியின் தகப்பன் சுந்தரலிங்கம் மயில்வாகனத்தைக் கண்டதும் எழுந்து தோளில் இருந்த சால்வையை எடுத்து கையில் வைத்துக் கொண்டு படலையடிக்கு வந்தான்.

“ரவி வரேல்லையே...?”

“உள்ளுக்கு வாருங்கோ சேர் வந்திடுவன்..”

மயில்வாகனத்தின் சைக்கிலை வாங்கிய சுந்தரலிங்கம் அதை உள்ளுக்குக் கொண்டு சென்று விட்டு விட்டுப் பாயை எடுத்து திண்ணையில் விரித்தான். பின்; “இருங்கோ சேர்...” என்றான்.

“செல்வராணி எங்கை....?”

“பிரக்கிராசிரியார் வீட்டை மா இடிக்கப் போட்டா...”

அந்த வார்த்தைகள் மயில்வாகனத்தின் நெஞ்சில் இடித்தன. தாய் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறாள். பிள்ளை குடிச்சளிக்குது.....” துக்கம் ஆத்திரமாகப் பொங்கியது.

அப்பொழுது ரவி வந்தான். மயில்வாகனத்தை அவன் எதிர் பார்க்கவில்லை.

அவனது தலை குழம்பி இருந்தது. கண்கள் சிவந்திருந்தன. மயில்வாகனம் பத்திரகாளியானார். திண்ணையால் எழுந்து முற்றத்தில் நின்ற பூவரச மரத்தில் ஒரு பெரிய தடியைப் பிடுங்கி அதிலிருந்த குழைகளை ஓடித்துவிட்டு ரவிக்கு நாலைந்து அடி அடித்தார்.

சுந்தரலிங்கம் திகைத்துப் போய் நின்றான். அக்கம் பக்கத்து வீட்டாரெல்லாரும் ஒழுங்கையில் கூடி நின்றனர்.

ஒரு நிமிடம் தான் மயில்வாகனம் தன்னை மறந்திருந்தார். அதனால் பொங்கிய கோபத்தில் ரவிக்கு கண்டபடி அடித்து விட்டார். மறு நிமிடம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு; "இவனுக்கு அடிக்க நான் யார்....? எனக்கு என்ன உரிமை இருக்கு?" என்று யோசித்தார். எனினும் அவரது அடிமனம் இவனைத் திருத்த வேண்டு மெனக் கூறியது.

"ரவி என்னிலை தானடா பிழை.... உன்னையும் என்ரை பிள்ளையெண்டு நினைச்சிட்டன்.... அது தான் என்ரை வீக்னஸ்..... உன்னை மட்டுமில்லை பள்ளிக்கூடத்திலை உள்ள எல்லாப் பிள்ளைகளையும் என்ரை பிள்ளைகள் என்று நினைக்கிறதாலை தான் எனக்கு இந்த நிலை ...அது நான் செய்த பெரிய பிழை தானே... பிழை செய்தால் மன்னிக்கக் கூடாது. தண்டனை பெற வேண்டும்..... நான் ஒண்டில்லை இரண்டு பிழை செய்திட்டன். ஒண்டு உன்னை என்ரை பிள்ளையாய் நினைச்சது. மற்றது ஒரு குடிகாரனைப் படிப்பிச்சது" என்றவர் தனது கையில் இருந்த பூவரசம் தடியை ரவீந்திரனது கையில் கொடுத்து விட்டு..., "எனக்கு அடி...." என்று கையை நீட்டினார்.

ரவீந்திரன் வெலவெலத்துப் போனான். ருத்திர மூர்த்தியாக நிற்கும் மயில்வாகனத்தை ஏறிட்டுப் பார்க்கவே அவனால் முடியவில்லை. நடுங்கிய படி நின்றான்.

ஊர்ச்சனம் குசுகுசுக்க ஆரம்பித்தது; "அப்பனே பிள்ளையாரே, இந்த மாதிரியான மனிசனுக்குத் துரோகம் செய்ய எப்படி இவனுக்கு மனம் வந்தது..... தகப்பன்ரை குணம் தான்"

"அடி... அடியடா..." உறுமினார் மயில்வாகனம்.

ரவீந்திரன் அதிர்ந்து செயலற்றுப் போனான். அவன் குடித்த பனங்கள் பயத்தால் கலங்கி காற்சட்டை வழியாக வெளியே வந்தது.

"நீ அடிக்க மாட்டாய், நானே எனக்குத் தண்டனை குடுக்கிறன்" என்றவர் ரவீந்திரனின் கையில் இருந்த கம்பை பறித்தெடுத்து, இடது கையை நீட்டி வலதுகையில் இருந்த தடியால் அடித்தார். ஒரு கணத்துள் பல அடிகள் விழுந்து விட்டன.

சனங்கள் திகைத்து நின்றனர்; "ஐயோ சேர்... நான் இனிக் குடிக்கமாட்டன், குடிக்கமாட்டன் என்னை நம்புங்கோ சேர்" என்று அவரின் காலில் விழுந்தான் ரவீந்திரன்.

"என்னப்பா வாய்க்கை முணுமுணுக்கிறியள்..." என்று கேட்டான் சுந்தர்.

திடுக்கிட்டுத் தடுமாறிய மயில்வாகனம்; "ஒண்டுமில்லை.... ரவியைப்பற்றிய பழைய நினைவுகள்" என்றார்.

"ரவியைப் பற்றி என்ன நினைக்கிறியள்..?" சுந்தர் கேட்டான்.

மயில்வாகனம் சிரித்தார்.

"சொல்லுங்கோப்பா.."

"இதென்ன விசர்க் கேள்வி"

"அர்த்தத்தோடை தான் கேட்கிறன்..."

‘‘எனக்கு விளங்கேல்லை’’ என்று இழுத்த மயில்வாகனம்; ‘‘அவனைப் பற்றி நான் என்ன நினைச்சு வைச்சிருக்கிறன் என்று உனக்குத் தெரியாதே...’’ என்றார்.

‘‘தெரியும் இருந்தாலும் கேட்க வேண்டிய ஒரு அவசியம் இப்ப ஏற்பட்டிருக்கு’’.

குழம்பினார் மயில்வாகனம்; ‘‘கலியாணப் பிரச்சினையில் ரவி தன்னையும் கலந்தாலோசித்திருக்கலாம்’’ என்று எண்ணினார்...

‘‘என்னப்பா யோசிக்கிறியள்..?’’

‘‘ஒண்டுமில்லை... நல்ல பெடியன் எண்டாலும்...’’ நிறுத்தினார் மயில்வாகனம்.

‘‘சொல்லுங்கோ அப்பா’’

‘‘முக்கியமான தீர்மானங்களை அவனே எடுத்திர்றான். சின்ன வயதிலை இருந்து அப்பிடித்தான் அவன்...’’

‘‘அவ்வளவு தானே.... கூடாத அபிப்பிராயம் இல்லைத்தானே...’’

‘‘இல்லை’’

சுந்தர் யோசித்தான். எப்படி இதைச் சொல்வது. மனதுக்குள் ஒரு முறை சொல்லிப் பார்த்தான். பின்பு; ‘‘அப்பா இராத்திரி ரவி...’’ சிறிது தடுமாறினான்.

‘‘என்ன சொன்னவன்’’

‘‘தனக்கு மாலதியைத் திருமணம் செய்ய விருப்பமாம்..’’

‘‘என்ன?’’ அதிர்ந்து போனார் மயில்வாகனம்.

‘‘மாலதிக்கும் விருப்பம். இரண்டு பேருக்குமிடையிலை கடிதத் தொடர்பும் இருக்காம்...’’

மயில்வாகனத்தால் அதை நம்ப முடியவில்லை. ‘‘ரவிதான் அப்படி யெண்டால்... மாலதி....’’

‘‘பதிலைச் சொல்லுங்கோ....’

‘‘நான் என்னத்தைச் சொல்லுறது. எனக்கு விருப்பமில்லை எண்டாப் போலை பிரிக்க முடியுமே..’’ என்றார். அவரின் உள்ளத்தில் இருந்து இப்போதும் பழைய காதல் நினைவுகள் முள்ளாய் குத்திக் கொண்டிருக்கின்றன. அந்த நிலையில் ரவியையும் மாலதியையும் பிரிக்க அவர் நினைக்கவில்லை.

‘‘ரவி இது விசயமாய்ப் பெற்றோருக்குக் கடிதம் எழுதியிருக்கிறாராம். லீவிலை வந்து கலியாணம் கட்டிக் கொண்டு திரும்பப் போய்ப் படிக்கப் போறாராம்.’’

‘‘ம்.... சரி..’’ என்றார் மயில்வாகனம்.

‘‘ரவி நல்லவன். பெற்றோரும் நல்லவர்கள். எனவே மாலதியின் வாழ்வு நன்றாக அமையும்’’ என்று எண்ணினார் மயில்வாகனம். மாப்பிளை கிடைக்காத இந்தக் காலத்தில் எவ். ஆர்.சீ.எஸ் படித்த டொக்டரரை மருமகனாக அடைவதென்றால் கொடுத்து வைத்திருக்க வேண்டும்’’ என்று நினைத்தார்.

காலைப் பூசைக்காகப் பிள்ளையார் கோயில் மணி ஒலித்தது. மனதுக்குள்ப் பிள்ளையாரை வணங்கிய மயில்வாகனம், தனக்கோர் உயர்ந்த பண்பான மருமகனைக் கொடுத்ததற்காக நன்றி செலுத்தினார்.

‘‘யார் எதைச் சொன்னாலும் நீங்கள் செய்யும் பணிக்கான பயன் எப்படியென்றாலும் கிடைத்தே தீரும். பதவி உயர்வுகள் தான் அதற்கான பயன் என்றில்லை. வாழ்க்கை என்பது நீண்ட தூரப் பயணம். அந்த நீண்ட பயணத்தில் பயன் முந்திப் பிந்திக் கிடைக்கலாம். மனதைத் தளர விடக்கூடாது’’ என்று அவர் முன்பு கற்பித்த பாடசாலை அதிபர் குருமூர்த்தி சொன்னது நினைவுக்கு வந்தது.

## *14*

‘‘இன்றைக்கு உறுதியான முடிவை எடுக்க வேண்டும். மாலதி என்னை விரும்பவில்லைத்தான். என்றாலும் கேட்டுப் பார்ப்பம். என்று நினைத்தான். பிரணவன். சில பெண்கள் முதலில் விரும்பாமல் பெரிய நடப்புக் காட்டுவார்கள். பின் பணிந்து விடுவார்கள் என அவன் அறிந்திருக்கிறான். எனவே கேட்டுத்தான் பார்ப்பமே என்று நினைத்தான். அதற்காக முதல் நாள் மனதில் பெரியதொரு திட்டம் போட்டு வைத்திருந்தான். இரவிரவாக எப்படிக் கதையைத் தொடக்க வேண்டும், எப்படிக் கதைக்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் வகுத்து மனதுள் கதைத்துப் பார்த்தான். எனினும் விடிந்ததும் அவளது துணிவில் சிறு தளர்வு ஏற்பட்டுள்ளதைப் போலத் தெரிந்தது. துணிந்து கதைக்க வேண்டியதைக் கதைக்க வேண்டுமென்றால் ஒரு ராம் அடிக்க வேண்டும் என்று நண்பர்கள் அடிக்கடி சொல்வார்கள். எனவே ஒரு ராம் அடிச்சிட்டுத்தான் கதைக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவன் மயில்வாகனத்தில் படலையடியில் வந்து இறங்கிய போது நேரத்தைப் பார்த்தான் சரியாகப் பத்துமணி. படலையைத் திறந்து சைக்கிலைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த அவனை மேலே செல்லவிடாது ஜிம்மன் மறித்தது; ‘‘பொல்லாத சனியன், வாய்வைத்திடும் போலை கிடக்கு’’ என்று எண்ணிய படி சைக்கிலை நகர்த்தினான். ஜிம் அசையவில்லை முன்னுக்கு வந்து குரைத்தது.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த மாலதி, சைக்கிலுடன் நிற்கும் பிரணவனைக் கண்டாள். அவளுக்கு அவன் வந்தது அவ்வளவு பிடிக்கவில்லை. இருந்தாலும் ஒப்புக்கு; ‘‘வாருங்கோ’’ என்றவள் ஜிம்மனைப் பார்த்து ‘‘போய்ப்படடா’’ என்றாள். ஜிம் குரைப்பதை விட்டுவிட்டு விலகிச் சென்று மாமரத்தின் கீழ்ப் படுத்திருந்து இறுமியது.

‘‘உள்ளுக்கு வந்து இருங்கோ...’’

உள்ளே வந்த பிரணவன் வெளிக்கோலில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான். பின்; ‘‘வாற திங்கட்கிழமை நான் போகப் போறன். அது தான் சொல்லிப் போட்டுப் போகலாமென்று வந்தனான்.’’ என்றான் தடுமாறியபடி.

‘‘அப்படியே... ஆறுமாதலீவெண்டியள்....’’

‘‘அப்பிடி நினைச்சுக் கொண்டு தான் வந்தானான். ஆனால் இஞ்சை உள்ள நிலைமையிலை போயிர்றது நல்லது போலை கிடக்கு...’’

மாலதி ஒன்றும் பேசவில்லை. மௌனமாக இருந்தாள். தொடர்ந்து பிரணவன் சொன்னான்; ‘‘எங்கடை சனம் சமூகத்தின்ரை பேராலை பல முடிச்சுக்களைத் தாமே போட்டுட்டு அவிழ்க்க முடியாமல் திண்டாடுதுகள். இதுகளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறத்திலும் பார்க்க கண்காணாத இடங்களிலை பரதேசியளாய் வாழ்றது நல்லது....’’ கலக்கத்துடன் பிரணவனின் குரல் ஒலித்தது.

“அப்படி ஏன் சொல்லுறியள்? நல்லது கெட்டதெல்லாம் அவரவர் மனத்தைப் பொறுத்தது.... எல்லாவற்றையும் நல்லதாய் நினைத்தால் துன்பமிராது...”

“எப்படி மாலதி நினைக்கிறது? நேற்று இராத்திரி வசந்தமாளிகை படம் பார்த்தனீங்களே அந்தப் படத்திலை வாற கதாநாயகன் மாதிரித்தான் நானும்.... என்னாலை, நான் நினைச்சவளை மறக்க முடியேல்லை” அவனது குரலில் உணர்ச்சி பொங்கியது. பொக்கற்றுக்குள் இருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்தான். பின் “பதினைஞ்சு வரிசத்துக்கு முந்தியே என்ரை இதயத்துள் நீ புகுந்திட்டாய்... இதுஉனக்குத் தெரியும்.... நினைவிருக்கா உனக்கு... அதிபரிட்டைச் சொல்லப் போறதாய் வெருட்டியது.... இந்தப் பதினைந்து வருடமும் என்னுடைய இதயத்துக்குள்ளை வைத்து உன்னை நான் பூசித்துக் கொண்டு தான் வாறன்.... அந்த நேரத்திலை அறியாப்பருவத்திலை காதல் வேகத்திலை உன்னுடைய மனம் நோகும்படி நடந்திருந்தால் என்னை மன்னித்துக் கொள் ஆனால்..... என்னை வெறுத்திடாதை...” குரல் உடைந்து.... மேலே பேசமுடியாதவாறு உணர்ச்சிப் பிழம்பாய் நின்றான் பிரணவன். அவனது கண்கள் பொங்கின.

மாலதி உணர்ச்சிவசப்பட்டாள்; “படிக்கேக்கை பகிடிகள் சொல்லிக் கேலி பண்ணியவன் வெளிநாடு சென்றதும் மறந்து விடுவான் என்று நினைத்தால், தீவிரமாக வந்து நிற்கிறானே... என்ன செய்யலாம்” அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

“மாலதீ உன்னைப் பிரிஞ்சு என்னாலை வாழேலாது..... இண்டைக்கு முடிவெடுக்கத்தான் வந்தனான்...”

மாலதி ஒரு கணம் உணர்ச்சிவசப்பட்டுப் பரிதாபப்பட்டாலும் மறுகணம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள்; “பிரணவன் உங்கடை நிலைமை எனக்குப் புரியுது. ஆனால் நான் உங்களை விரும்பேல்லை..” என்று கூறிவிட்டுத் தலைகுனிந்தால் மாலதி.

“எனக்கு அது தெரியும். ஆனால் இனி விரும்பலாம் தானே...” கெஞ்சினான் பிரணவன்.

அந்தப் பிரச்சினைக்கு அவள் முடிவுகட்ட விரும்பினாள். மறைத்து கதைத்தால் பின்பும் பிரணவன் வருவான்; பழைய புராணங்களைப் பாடுவான்; அதிற் பார்க்க உண்மையைச் சொல்லி விட்டால் நல்லது என்று நினைத்தாள்; “இனிவிரும்பலாம் தான். ஆனால் நான் ஏற்கனவே ஒருத்தரை விரும்பிவிட்டேன்” என்றாள்.

“என்ன...?” தடுமாறியவன்... “இல்லை நீ பொய் சொல்லுறாய் என்னிலை விருப்பமில்லை... அதுக்காக இப்பிடி ஒரு பொய்யைச் சொன்னால் நான் நம்பீடுவன் என்று நினைக்கிறாய். நான் நம்பமாட்டன்... அப்பிடியான பெண்ணில்லை நீ...” என்றான் அவசரமாக.

“என் காதலிக்கிற பெண்கள் கூடாதவர்களா..?”

“அப்படி நான் சொல்லேல்லை. என்ரை மனதிலை நீ ஒரு அபூர்வப் பிறவியாய்... தேவதையாய்.... வார்த்தைகளாலை வர்ணிக்க முடியாத ஒரு அணங்காய் இருக்கிறாய்... நீ காதலிக்க மாட்டாய்..”

“சத்தியமாய்ச் சொல்லுறன். நான் ஒருத்தரை விரும்புறன். அது வீட்டாருக்கும் தெரியும்...”

பிரணவன் அதிர்ந்து போனான்; “உனக்குக் காதலிக்கத் தெரியுமா மாலதி?” மேலே பேச முடியாது தடுமாறிய பிரணவன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

மாலதி அதை எதிர் பார்க்கவில்லை; “சீ இது என்ன கரைச்சல்” என்று எண்ணினாள்.

“சரி... நீ என்னை விரும்பாவிட்டால் நான் என்ன செய்ய முடியும்...? நீ விரும்பிய அந்தப் பாக்கியவான் யார்?”

உடனே அவள் பதில் சொல்லவில்லை. சிறிது தாமதித்து விட்டுச் சொன்னாள்; ‘‘எங்கடை வீட்டிலை முந்தி இருந்து படித்த ரவீந்திரன்’’.

‘‘ரவீந்திரனோ…?’’ கேலியாகக் கேட்ட பிரணவன்; ‘‘ஏன் வேறை நல்ல ஆள்கிடைக்கவில்லையா…?’’ என்று கேட்டான்.

மாலதி ஒன்றும் பேசவில்லை. அவளால் பேசமுடியவில்லை.

‘‘அவன் நல்ல தண்ணிக்காரனாச்சே’’ என்றான்.

‘‘அவர் இப்ப குடிக்கிறேல்லை…’’ என்றாள் மாலதி.

‘‘குடிக்காமற் செய்திருப்பாய்…. சத்தியம் பண்ணியிருப்பன்.. அது சரி இப்ப அவன் என்ன செய்கிறான்…?’’

‘‘டொக்ரர்…’’ என்றாள் மாலதி; ‘‘நல்லாய் இருந்தால் சரி… அப்ப நான் வரட்டே…’’

‘‘ரீ குடிச்சிட்டுப் போங்கோ….’’

விரத்தியாகச் சிரித்தான் பிரணவன்; ‘‘சரிதாங்கோ…. இனி எங்கை சந்திக்கப் போறம்… கடைசியும் முதலுமாய்த் தாற ரீயை வாங்கிக் குடித்திட்டுப் போவம்’’.

மாலதி உள்ளே சென்றாள். பிரணவனால் அந்தச் செய்தியைத் தாங்க முடியவில்லை.

‘‘இந்தாருங்கோ…’’

நிமிர்ந்து பார்த்தான் பிரணவன். ரேயில் தேநீர் நிரம்பிய ரம்ளருடன் தேவதையாக நின்றாள் மாலதி.

தேநீர் தம்பளரை கையில் எடுத்த பிரணவன் நன்றி கூற வாயைத் திறந்தான். முடியவில்லை. கஷ்டப்பட்டு ‘‘தாங்கியூ….’’ என்று கூறிவிட்டு அண்ணாந்து ஒரு முடறு குடித்து விட்டு அருகில் இருந்த ரீபோவில் டம்ளரை வைத்து விட்டுச் சொன்னான்; ‘‘நான் அடுத்த கிழமை போறன். யாரோ உங்களுடைய மாமியின் மகனை அனுப்புறதாகச் சொன்னீர்கள்.. விரும்பினால் நான் கூட்டிக் கொண்டு போறன்..’’ என்று கூறி விட்டு எழுந்தான்.

மாலதி பேசாது நின்றாள்.

‘‘சரி…வரட்டுமா?’’

‘‘ஓம்….ஓம்’’

முற்றத்தில் நின்ற சைக்கிலை தள்ளியவாறு சென்ற பிரணவன் படலையைத் திறந்து விட்டு திரும்பிப் பார்த்தான். மாலதியைக் காணவில்லை; ‘‘கையோடை நவரத்தினத்தின் வீட்டுக்கும் போயிட்டு போவம்’’ என்று நினைத்தவாறு சைக்கிலில் ஏறினான்.

நவரத்தினத்தின் படலை பூட்டு போட்டுப் பூட்டப்பட்டிருந்தது ‘‘..ம்… எங்கையாவது போட்டாரோ…’’ என்று எண்ணிய போது ‘‘என்ன தம்பி?’’ என்றவாறு காசிப்பிள்ளை சைக்கிலால் இறங்கினார்.

‘‘நவம் அண்ணை இல்லைப் போலை கிடக்கு…. படலை ஆமப்பூட்டு போட்டு பூட்டிக் கிடக்கு…’’ என்றான்.

‘‘அவன் பூட்டிப் போட்டுத்தான் உள்ளுக்கு இருக்கிறவன்..’’.என்றவர். சைக்கில் பெல்லை அடித்தார்.

சிறிது நேரத்தில் நவரத்தினம் திறப்போடு வந்து பூட்டைத் திறந்து; ‘‘தம்பீ உம்மை விளங்கேல்லை’’ என்றார்.

‘‘என்னை மறந்து போனியளே.... உங்கடை மகனின்ரை சினேகிதன் பிரணவன்..’’

‘‘எட..ட...ட ஆளே அடையாளம் தெரியாமல் மாறீட்டீர்... உள்ளுக்கு வாரும்... உள்ளுக்கு வாரும்... எப்ப வந்தனீர்..’’

‘‘போனகிழமை வந்தனான். வதனன் உங்களைப் போய்ப் பார்த்து வரச் சொன்னவன்’’.

‘‘இரும் தம்பீ..... எப்பிடி வதனன் சுகமாய் இருக்கிறானே... பிள்ளைகள் எப்பிடி படிக்கினையோ’’ ஆவலோடு கேட்டார் நவரத்தினம்.

‘‘அங்கை உள்ளவைக்கு என்ன குறை..? பிள்ளைகள் படிக்குது.... எங்கை அம்மாவைக் காணேல்லை..’’

‘‘அதையேன் தம்பி கேட்கிறாய்... இளையவன் விபத்திலை செத்தண்டைக்கு பிறைசர் கூடி கையையும் காலையும் இழுத்துப் போட்டுது.. இப்ப நான் தான் எல்லாம்...’’ அழுதார் நவரத்தினம் ‘‘வா தம்பி... உளளுக்கு வந்து பார்...’’

பிரணவன் உள்ளே சென்றான். கட்டிலில் ஒரு எலும்புக் கூடு படுத்திருப்பதைப் போலிருந்தது பிரணவனுக்கு. ஒரு காலத்தில் வீட்டுக்கு வந்தால் அன்போடு உபசரிக்கும் திலகம் எலும்பும் தோலுமாகக் கிடப்பது பிரணவனுக்கு வேதனையைக் கொடுத்தது. அத்துடன் ஒழுங்காகப் பராமரிக்காததால் துர்நாற்றம் அவ்விடத்தில் வீசியது.

பிரணவன் மூக்கைச் சுழிப்பதைக் கண்ட நவரத்தினம்; ‘‘இஞ்சை கூலிக்கு ஆட்களையும் பிடிக்கேலாது தமபி.... அரைவாசிச் சனத்துக்கு மேலை வன்னீலை இருக்குதுகள். நான் தான் பார்க்கிறது. எனக்கும் வயது போட்டுது’’ என்றார்.

‘‘என்னைத் தெரியுதாம்மா...? என்று கேட்டான் பிரணவன்.

திலகம் தெரியாதெனத் தலையை ஆட்டினாள்.

‘‘இப்ப மனிசிக்கு ஆட்களை அவ்வளவாய்த் தெரியாது.. சொல்லுறதும் விளங்காது...’’ என்றார் நவரத்தினம்.

‘‘நான் பிரணவன். உங்கடை மகன் வதனன்ரை சிநேகிதன்..’’ பலத்துச் சொன்னான் பிரணவன்.

திலகத்தின் கண்களில் ஓர் ஒளி தென்பட்டது. உதட்டில் சிரிப்பு... ‘‘வதனன் வந்திட்டானா?’’ திலகம் கேட்டாள்.

‘‘இல்லை நான் போய்ச் சொல்லி அனுப்புறன்..’’ அவளின் கண்களால் கண்ணீர் வழிந்தது..

‘‘மகனுக்கு என்ன சொல்லுறது..?’’

‘‘சாக முன்னம் பிள்ளைகளைப் பார்க்க வேணும்... இது தான் என்ரை ஆசை...’’ என்றாள் திலகம்.

‘‘தம்பீ... இஞ்சத்தேல் நிலமையை வடிவாய் சொல்லி ஒராளை யெண்டாலும் அனுப்பி விடு... மனிசி பார்த்திட்டுச் சாகட்டும்..’’ என்றார் நவரத்தினம்.

‘‘ஒரு பிள்ளை யெண்டாலும் வந்தால் இஞ்சை இருக்கலாம்..’’ என்றார் காசிப்பிள்ளை.

“இஞ்சை வந்து இருக்க வேண்டாம். பார்த்திட்டுப் போனால் காணும். இஞ்சை என்ன கிடக்குது... நாங்கள் கிழடு கட்டை துன்பங்களை அனுபவிச்சுச் சாவம்... அதுகள் இளசுகள் இஞ்சை வந்து ஏன் கஷ்டப்பட வேணும்... இந்தக் கிராமத்திலை மயில்வாகனம் மாஸ்ரரின் குடும்பம் தான் எல்லாருக்கும் உதவி செய்வது. அதுகள் இல்லாட்டில் என்ரை பாடு அதோகதிதான். தம்பி பிரணவன், வதனனிட்டைச் சொல்லு மயில்வாகனம் மாஸ்ரருக்கு நல்லதாய் ஏதாலும் ஒண்டு அனுப்பச் சொல்லி... நான் குடுத்தால் அந்தாள் ஒண்டும் வாங்காது” என்றார் நவரத்தினம்.

அப்பொழுது வெளியே, “நவமண்ணை” என்று யாரோ கூப்பிடும் ஓசை கேட்டது.

“வாபிள்ளை...” என்று நவரத்தினம் கூறிய கையோடு மாலதி உள்ளே வந்தாள். அவள் வருவாள் என்று பிரணவன் எதிர்பார்க்கவில்லை.

பிரணவனைக் கண்ட மாலதி சிறிது தயங்கினாள்; “இவர் என்ரை மூத்த மகன்ரை பிரண்ட் வெளிநாட்டிலை இருந்து வந்திருக்கிறார். நீ பார் பிள்ளை, நாங்கள் வெளீலை போறம்...” என்றவர் பிரணவனைப் பார்த்து; “கோலிலை இருந்து கதைப்பம்” என்றார். பிரணவனும் காசிப்பிள்ளையும் எழுந்து வந்து கோலில் இருந்த கதிரைகளில் அமர்ந்தனர்.

“தம்பி கலியாணம் முடிச்சிட்டீரோ..?” காசிப்பிள்ளை கேட்டார்.

“இல்லை”

“ஏன்?”

“விருப்பமில்லை..”

“இதென்ன தம்பீ வசதியானனீங்கள் விருப்பமில்லை யெண்டால் என்ன அர்த்தம்..”

தன்னுடைய கருத்தை மீண்டும் ஒரு முறை மாலதிக்கு சொல்ல விரும்பினான் பிரணவன் எனவே சற்றுப் பலமாகச் சொன்னான்; “விருப்பமில்லையெண்டில்லை. நான் ஒரு பெண்ணை விரும்பினனான். அவள் இன்னொருத்தனை விரும்பீட்டாள். எனவே அவளின்ரை நினைவாகவே வாழப் போறன்..”

“விசர்கதை கதைக்காதை. அந்தப் பெண் உம்மை விரும்பினவளே..”

“இல்லை..”

“பிறகென்ன காதல்... அவள் இன்னொருத்தனோடை இன்பமாய் வாழ நீ மட்டுமேன் துன்பத்தை அனுபவிக்க வேணும்...” என்று கேட்டார் காசிப்பிள்ளை.

“நியாயம் தான்” மனதுக்குள்ச் சொன்னான் பிரணவன்.

“காதல் என்ன தம்பீ காதல். சும்மாய் இளமையிலை வாற உணர்வு, அதுகும் உன்னைப் பொறுத்த மட்டிலை ஒரு பக்கமாக எழுந்த உணர்வு...”

“என்றாலும் அந்த உணர்வை என்னால் கட்டுப்படுத்த முடியேல்லை. அந்த நினைவுகளோடையே வாழலாம் என்றிருக்கிறன்..” துயரத்துடன் சொன்னான் பிரணவன்.

“உதை நீ இஞ்சை இருந்து சொன்னால் கேட்க நல்லாயிருக்கும். மேலை நாட்டிலை வெள்ளைக் காரரோடை வாழ்ந்திட்டு வந்து சொல்லுறியே..”

பிரணவன் கேட்டுக் கொண்டிருந்தான். மாலதியும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“இப்ப ஒண்டு நான் கேட்கிறன் பதிலைச் சொல்லு... உன்னைப் பெத்து வளர்த்த அம்மா செத்தால் கூடப் போயிடுவியோ? இல்லாட்டில் நீ செத்துப் போனால் உனது தாய் உடன்கட்டை ஏறீடுவளே...? ஒன்றும் நடக்காது. அந்த நேரம் உயிரை விர்றமாதிரி ஓலம் போடுவினை.. நாலைந்து நாளையாலை எல்லாம் சரியாய்ப் போம்..” என்றார் காசிப்பிள்ளை.

வருத்திய மனதிற்கு ஒத்தடம் கொடுப்பது போலிருந்தது அவரது பேச்சு; “சும்மாய் சொல்லக் கூடாது, சுருட்டுக் காரரோடு கதைக்கேலாது” என்று நினைத்தான் பிரணவன்.

காசிப்பிள்ளை குடித்த கள்ளுக்கு இதமாக கதைத்துக் கொண்டிருந்தார்.

“அன்பு , பண்பு பாசமென்கிறதெல்லாம் என்னைப் பொறுத்த மட்டிலை பொய்யெண்டு தான் சொல்லுவன்... நவத்தைப் பார், தங்கச்சி என்ற பாசமிருந்துதோ எண்டு.. தங்கச்சி யாருக்கு அண்ணன் எண்ட பாசமிருக்கோ..”

“சும்மாய் விசர் அலட்டாதை. தம்பி போறத்துக்கிடையிலை உருப்படியாய் ஏதாவது கதைக்க வேணும்” என்றார் நவரத்தினம்.

அப்பொழுது அங்கு வந்த மாலதி; “நவம் அண்ணை... பிறசர் கொஞ்சம் கூட இருக்கு உப்புப் போடாமல் சாப்பாட்டைக் குடுங்கோ... நான் வாறன்..”என்று சொல்லி விட்டு நடந்தாள்.

“மயில்வாகனம் மாஸ்ரற்றை பிள்ளையளெல்லாம் தங்கக் கம்பிகள். சாய்... என்ன உதவி...” என்றார் காசிப்பிள்ளை.

“கொஞ்ச நேரத்துக்கு முன்னம் அன்பு, பண்பு, பாசமெல்லாம் பொய் எண்டியள்” பிரணவன் சிரித்தான்.

“அந்தாள் காலமையே வாத்துப் போட்டுது... யோசிச்சே கதைத்தது..” என்றார் நவரத்தினம்.

“மரக்கால் இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது. எனக்கு வெறி ஏறினால் தான் ஞானம் பிறக்கும்.. தமபீ மனிசப் பிறவி இனிக்கிடைக்காது... கிடைச்சிருக்கிற இந்த நேரத்திலையே அனுபவிக்கறித்தை அனுபவிச்சுப் போட வேணும்... இப்ப நாப்பத்தைஞ்சு அம்பது வயது வந்தால் உணவைக் கட்டுப்படுத்து, சீனியைக் குறைச்சுப் பாவீ, என்றெல்லாம் டொக்டர் மார் சொல்லுவினை.. அப்ப ஐம்பது வயதுக்கு முன்னம் நல்லாய் அனுபவிச்சுப் போட வேணும்..” சிரித்தார் காசிப்பிள்ளை.

“இவன் குடிச்சுப் போட்டு வந்து அலட்டிக் கொண்டிருக்கிறான். மனிசரைக் கதைக்க விடாமல்” என்று மனதுக்குள்ப் புறுபுறுத்த நவரத்தினம்; “நீ போய் வெளீலை இரு, நான் தம்பியோடை கொஞ்சம் கதைக்க வேணும்” என்றார்.

காசிப்பிள்ளை கதிரையால் எழுந்து பிரணவனைப் பார்த்தார்; “தமபீ திறம்பனங்கள்ளுக் கிடக்கு, வெளிநாட்டிலை குடிச்சிருக்க மாட்டாய் வேணுமெண்டால் சொல்லு” என்றார்.

வெளிநாடு போகு முன் பெற்றாருக்குத் தெரியாமல் குடித்தது பிரணவனின் ஞாபகத்திற்கு வந்தது. “சரி கொஞ்சம் தாருங்கோ” என்றான்.

நவரத்தினம் சுருக்கமாக எல்லாவற்றையும் சொன்னார். சிலவற்றைச் சொல்லும் போது வாய்விட்டு அழுதார். எப்படியும் பிள்ளைகளை வந்து தாயைப் பார்த்துவிட்டுப் போகும் படி கூறினார்.

அவர் கதைத்து முடித்ததும் காசிப்பிள்ளை கள்ளுடன் அங்கே வந்தார். பிரணவன் ரசித்துக் குடித்தான். நல்ல இனிப்பாகவும் சுவையாகவும் இருந்தது. சிறிது நேரம் செல்ல லேசான ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

“நீங்கள் சொன்னது சரி... நான் வீணாய் என்ரை வாழ்க்கையைப் பாழக்கிப் போட்டன்..” என்று புலம்பினான் பிரணவன்.

“வாழ்க்கை வாழுறதுக்கு, துன்பப்படவே? என்னைப் பார் எந்த நேரமும் சந்தோசமாய்த்தான் இருக்கிறன்.” என்றார் காசிப்பிள்ளை.

“எனக்கு நேரம் போயிட்டுது. நான் போட்டு வரப் போறன்..” என்ற பிரணவன் சேட் பொக்கற்றுள் கையை விட்டுக் காசை எடுத்தான். அது ஒரு ஐந்நூறு ரூபா நோட்டு. “இந்தாங்கோ இதை வைச்சுக் கொள்ளுங்கோ..” என்று நீட்டினான்.

“சீச் சீச் சீ.... தம்பி இது கூடாத வேலை.... ஆரன் கள்ளு வாங்கித் தந்தால் குடிப்பனே தவிரக் கைநீட்டிக் காசு வாங்க மாட்டன். பொக்கற்றுக்கை வை தம்பீ.” என்றார் காசிப்பிள்ளை.

“பிடியுங்கோ.....” காசிப்பிள்ளை சேட் போடுவதில்லை. வெள்ளை வேட்டியும் தோளில் ஒரு சால்வையும் தான். எனவே பிரணவன் மடிக்குள்ச் செருக முயன்றான்.

“வேண்டாம் தம்பி, வேணுமெண்டால் வெளிநாட்டிலை இருந்து கொண்டந்த குடிவகை ஏதாவது இருந்தால் தா, காசு வேண்டாம்” என்றார்.

“சரி வாருங்கோ” என்று புறப்பட்டான் பிரணவன். காசிப்பிள்ளை அவனைப் பின் தொடர்ந்தார்.

படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்த பிரணவன் அழகான ஒரு பெண் தனக்கு சமீபமாக வருவதைக் கண்டான். நல்ல நிறம். வட்டமான முகம். அளவான இடை அவளின் வாளிப்பான உடலமைப்பு பிரணவனுக்குப் பிடித்தது. அவள் அவனைக் கடந்து சென்றதும். “இந்தப் பெம்பிளை ஆரண்ணை” என்று கேட்டான்.

அப்போது தான் அதைக் கவனித்த காசிப்பிள்ளை; “உது கல்யாணி ரீச்சர். நவரத்தினத்தின்ரை தங்கச்சியாற்ரை மோள். மயில்வாகனம் மாஸ்ரற்றை பள்ளிக்கூடத்திலை தான் படிப்பிக்கிறாள். சரியான வாய்க்காரி... ஏன் தம்பி?” என்று கேட்டார்.

“சும்மாய் கேட்டன்”

“விருப்ப மெண்டால் சொல்லு காரியத்தை முடிச்சிர்றன்... ஆனால் காசு கேக்கக் கூடாது..” என்றார் காசிப்பிள்ளை.

பிரணவன் சிரித்தான். அவளின் பின்புறத் தோற்றமும் கவர்ச்சியாகத்தான் இருந்தது. பெரியதொரு கொண்டை தாளத்துக்கேற்ற நடை.

பாவம் கஷ்டப்பட்ட குடும்பம். இவள் ஒரு மாதிரிப் படிச்சிட்டாள். இவளின்ரை தமக்கையைத்தான் நவத்தின்ரை பெடியன் ஏமாத்தினது....” அந்தக் குடும்பத்தின் முழுவிபரங்களையும் கூறினார் காசிப்பிள்ளை.

பிரணவனுக்குச் சிறிது விருப்பமாக இருந்தது. காசிப்பிள்ளையின் கதை அவ்விருப்பத்தை சிறிது சிறிதாக வளர்ந்தது.

“காதலும் கத்தரிக்காயும் தம்பி. பிரிவுத்துயர் கொஞ்ச நாளைக்கு வாட்டத்தான் செய்யும். இன்னொண்டைச் செய்திட்டால் எல்லாத்தையும் மறப்பிச்சிடும். பிறகு சொர்க்கம் தான். ஒண்டுக்கும் யோசிக்காதை, என்னட்டைப் பிரிச்சினையை விடு. நான் வெண்டு தாறன்” உற்சாகமாகச் சொன்னார் காசிப்பிள்ளை.

“இருவரும் கதைத்துக் கொண்டு பிரணவனின் வீட்டை அடைந்தனர்.”

“எங்கடை குடும்ப மெல்லாம் கனடாவிலை. மாமி வீட்டைதான் இருக்கிறன். இதிலை இருங்கோ” என்று கதிரையை இழுத்து விட்டான் பிரணவன்.

“அப்பாடா... என்ன வெய்யில்” என்றவாறு இருந்து துவாயால் விசிக்கினார் காசிப்பிள்ளை.

“இந்தாங்கோ...”

நிமிர்ந்து பார்த்தார் காசிப்பிள்ளை. பெரிய தொரு அழகான பிறண்டிப் போத்தல் பிரணவனின் கையில் இருந்தது. அதை வாங்கிக் கொண்டு “நன்றி தம்பி... இண்டைக்குத் தான் என்ரை வாழ்நாளிலை பிறநாட்டுக் குடிவகையைக் குடிக்கப் போறன். நான் வாறன் நீ ஒண்டுக்கும் யோசியாதை. இதைக் குடிச்சிட்டுக் கல்யாணீட்டைப் போய் முற்றுக் கேட்டாறன்” என்றார்.

பிரணவன் “சரி.... சரி.... கவனமாய்ப் போட்டு வாங்கோ” என்றான்.

“கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதியருள் வாயம்மா... தேவி...” காசிப்பிள்ளை பாடிக் கொண்டு புறப்பட்டார்.

## *15*

பாடசாலையால் வந்து குளித்துச் சாப்பிட்டு விட்டு ஈசிச் செயரைக் கொண்டு வந்து முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ்ப் போட்டு விட்டு அன்றைய வீரகேசரிப் பேப்பரை வாசித்துக் கொண்டிருந்தார் மயில்வாகனம். இப்பொழுது கொழும்புப் பேப்பர்கள் அன்றன்றைக்கே வந்து விடுகின்றன.

படலைதிறக்கும் சத்தம் கேட்டு ஜிம்மன் நிமிர்ந்து பார்த்து ஒரு முறை குரைத்து விட்டுப் பின் வாலை ஆட்டியது. மயில்வாகனம் பேப்பரைப் பதித்து வாசலைப் பார்த்தார். சுந்தரமூர்த்தி அதிபர் சைக்கிலை உருட்டியபடி உள்ளே வந்து கொண்டிருந்தார்.

சுந்தரமூர்த்தி பருத்திமலையைச் சேர்ந்தவர். பீஎஸ்சிக்கு மூன்று பாடங்களும் கணிதத்தைக் கற்றவர். முதலில் பருத்திமலை மத்தியகல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். கொத்தணி அமைப்பு இருந்த காலத்தில் கொத்தணி அதிபருடன் பிரச்சினைப் பட்டதால் பருத்திமலை மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றப்பட்டவர். தற்பொழுது பருத்திமலை ஆர்.சீ.ரீ.எம் பாடசாலைக்கு அதிபராக இருக்கிறார்.

சுந்தரமூர்த்தி பிரச்சினை இல்லாதவர். பிரச்சினைகளுக்குப் போக மாட்டார். மிகவும் அமைதியான சுபாவம் உடையவர். ஆனால் பிரச்சினைகள் வந்தால் விடமாட்டார். நியாயம் கதைப்பார்; வாதாடுவார். பருத்திமலை மத்தியகல்லூரியில் இருந்து இடமாற்றம் பெற்றுப் பருத்தி மலை மகாவித்தியாலயத்துக்கு வந்த பின்பு அவருக்கு மயில்வாகனத்தைப் பிடித்து விட்டதால் அடிக்கடி மயில்வாகனத்தின் வீட்டுக்கு வந்து போவார்.

பாடசாலையிலும் வெளியிலும் ஏஎல் வகுப்புக்குக் கணிதத்தைக் கற்பிக்கும் மிகமிகச் சிறந்த ஆசிரியர் அவர். காலையிலும் மாலையிலும் பிரபல கல்லூரிகளில் கற்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரது வீட்டுக்கு ரியுசனுக்காக வருவார்கள். சம்பளத்தைப் போல மூன்று மடங்கு பணம் ரியூசனில் அவர் உழைப்பார்.

இடம் பெயர்ந்து சென்ற காலங்களில் கூட மாணவர்கள் பத்துப் பதினைந்து மைல்களுக்கு அப்பால் இருந்தும் வந்து கற்றுச் சென்றனர். அந்தக் காலத்தில் அவர் மாணவர்களிடம் பணம் வாங்குவதில்லை. அவர்களுக்குத் தேனீர் கொடுப்பார்.

“இல்லை சேர்.. நீங்கள் இருங்கோ... சைக்கில் ஓடினது களைப்பாய்க் இருக்கு... உள்ளுக்குப் புழுங்கும் நான் உள்ளுக்குப் போய் கதிரை ஒன்று எடுத்தாறன்” என்றவர் சைக்கிலை நிறுத்தி விட்டு உள்ளே சென்றார்.

சுந்தரமூர்த்தி மயில்வாகனத்தின் வீட்டுக்கு வந்தால் உபசரனைகள் எதையும் எதிர்பார்க்க மாட்டார். அதிகமானவற்றைத் தானே செய்வார். தேவையேற்பட்டால் குசினிக்குள் நுழைந்து சாப்பாடும் போட்டுச் சாப்பிடுவார்.

“மயூரன்... மயூரன் கதிரை ஒன்று தூக்கியா” என்றார் மயில்வாகனம்.

கோலில் இருந்த கதிரை ஒன்றைத் தூக்கினார் சுந்தரமூர்த்தி. அதற்கிடையில் மயூரன் ஓடி வந்து “விடுங்கோ சேர் நான் தூக்கிறன்” என்று கூறி அவரின் கையில் இருந்த கதிரையைப் பிடித்து இழுத்தான்.

மயூரன் கதிரையைத் தூக்கிக் கொண்டு போய்த் தகப்பனில் அருகில் வைக்க, பின்னால் வந்த சுந்தரமூர்த்தி அதில் அமர்ந்தார்.

“சேருக்குச் சொல்லாமல் ஒரு வேலை செய்து போட்டன்” என்று வேதனையோடு சொன்ன சுந்தரமூர்த்தி சற்று நேரம் மயில்வாகனத்தை உற்றுப் பார்த்தார். அவரின் கண்கள் லேசாகக் கலங்கின. கால்சட்டைப் பொக்கற்றுள் கையை விட்டு லேஞ்சியை எடுத்து முகத்தைத் துடைத்து விட்டுச் சொன்னார்; “உங்களுக்குச் சொன்னால் விடமாட்டியள், அதோடை உங்கடை சொல்லைத் தட்டுற சக்தியும் எனக்கில்லை. அதனாலை அப்பிடிச் செய்திட்டன். மன்னிச்சுக் கொள்ளுங்கோ” என்றார்.

சுந்தரமூர்த்தியின் கதை புரியாமல் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார் மயில்வாகனம். ‘என்னவாக இருக்கும்’ என்று அவர் மனம் குழம்பியது.

மயில்வாகனத்தின் பொறுமையை மேலும் சோதிக்க விரும்பாத சுந்தரமூர்த்தி சொன்னார்; “தேட்டி போநைன்ரீ சேர்குலர் படி நான் ரிரயர் பண்ணீட்டன்”.

“என்ன?” அதிர்ச்சியுடன் கேட்ட மயில்வாகனம்; “விசர் வேலை பார்த்திட்டீர்” என்றார்.

“இல்லை சேர், நான் நல்லாய் யோசிச்சுத் தான் செய்தனான். எல்லாவற்றிற்கும் உங்களோடை ஆலோசிக்கிற நான் இதுக்கு மட்டும் ஆலோசிக்காதத்துக்குக் காரணம். நீங்கள் இதுக்குச் சம்மதிக்க மாட்டியள் எண்டு எனக்குத் தெரியும். பிழையெண்டால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ... உங்களை நான் பெரிசாய் நினைச்சு வைச்சிருக்கிறன்.... அதாலை தான் சொல்லேல்லை....” அவரின் குரல் தளதளத்தது. கண்கள் கலங்கின.

பெருமூச்சு விட்ட மயில்வாகனம்; “அவசரப்பட்டுட்டீர்... இன்னும் பத்து வரிசம் இருக்கெல்லே... மற்றப் பிரச்சினைகளை விட்டுட்டுப் பொருளாதார ரீதியாகப் பார்த்ததால் போன வரிசத்தை விட இந்த வரிசம் நாலாயிரம் ரூபா சம்பளம் கூடியிருக்கு. இதாலை பென்சனிலை எவ்வளவு தாக்கம் தெரியுமே” என்றார்.

“பென்சன் என்ன சேர் பென்சன்? நான் வெளீலை போகப் போறன்” அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார் சுந்தரமூர்த்தி

“என்னடாப்பா நீ.... புதிசு புதிசாய்ச் சொல்லுறாய்” ஆச்சரியப்பட்டார் மயில்வாகனம்.

“ஆறஅமர இருந்து யோசிச்சுப் பார்த்தன், சேர், இனி என்னாலை இந்த நாட்டிலை வாழேலாது அஞ்சாறு வரிசமாய் மனீசீன்ரை தம்பீ மார் குடும்பத்தோடை வா, குடும்பத்தோடை வா எண்டு எழுதின படி இருக்கிறாங்கள். பேசாமல் போயிடலாமெண்டு யோசிக்கிறன். மனிசிக்கு எப்பவோ விருப்பம். நான் தான் தட்டிக் கழிச்சுக் கொண்டு வந்தனான். மனிசீன்ரை தாய் தகப்பன் சகோதரங்களெல்லாம் லண்டனிலை நல்லாயிருக்குதுகள். நாங்கள் தனிய இருந்து இஞ்சை கஷ்டப்படுறம். ஏன் கஷ்டப்பட வேணும். இந்த நாட்டிலை இப்ப அறிவுள்ளவன் திறமையுள்ளவனுக் கெல்லாம் காலமில்லை” என்றார் சுந்தரமூர்த்தி.

மயில்வாகனத்திற்குச் சுந்தரமூர்த்தியின் சரித்திரம் முழுவதும் தெரியும் அதனால் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

“நன்றி இல்லாத சமூகத்திலை வாழ்ந்து நான் ஏன் கஷ்டப்பட வேணும்...? சரி நான் தான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை... என்ரை பெண்சாதி பிள்ளைகளை ஏன் கஷ்டப்படுத்துவான்.”

“அவங்கள் கெட்டிக்காரங்கள். படிக்கக்கூடியவங்கள்...” என்று மயில்வாகனம் கூறும் போது இடைமறித்துக் கூறினார். சுந்தரமூர்த்தி; “இஞ்சை படிச்சு என்னத்தைக் கண்டது. லண்டனிலையும் படிக்கலாம் தானே.... சரி கஷ்டப்பட்டு படிச்சு முடிச்சாலும் சம்பளம் ஏதோ கனக்கக் கிடைக்குதே...? சரி அது தான் பரவாயில்லை. தொழில் எடுத்த பிறகு... பரம்பரை பாப்பங்கள்... சாதிபாப்பங்கள்... சமயம் பாப்பங்கள்..... சீச்சீ...சீ...” அலுத்துக் கொண்டார் சுந்தரமூர்த்தி.

சுந்தரமூர்த்தி கொத்தணி அமைப்புப் பாடசாலைகளில் இருந்த காலத்தில் பாதிக்கப்பட்டவர். பருத்திமலை மத்திய கல்லூரி அதிபர் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினார். அவருக்கும் சுந்தரமூர்த்திக்கும் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் ஏற்படும். கொத்தணி அதிபரின் மனைவியும் அங்கு ஆசிரியையாகப் பணியாற்றியதால் நிலைமை மோசமடைந்தது. அதனால் சுந்தரமூர்த்தி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். அன்றிலிருந்து அவருக்கு பாடசாலையில் வெறுப்பேறபட்டிருந்தது; “ரிரய பண்ணீட்டு ரியூசனைச் செய்வம்” என்று அடிக்கடி கூறுவார். மயில்வாகனம் தான் அவருக்குப் புத்திமதிகள் கூறித் தொடர்ந்து வேலை செய்யப் பண்ணிக் கொண்டிருந்தார்.

“இப்பேன் அவசரப்பட்டு இந்த முடிவை எடுத்தனீர்....?” மயில்வாகனம் கேட்டார்.

“நான் அவசரப்படேல்லைச் சேர், ஆறுதலாக யோசிச்சுத்தான் இந்த முடிவை எடுத்தனான்.”

“தென்மராட்சியிலை இடம் பெயர்ந்து இருக்கேக்கை கூட உமக்கு இவ்வளவு வெறுப்பு ஏற்படேல்லை”.

“குண்டு வெடிப்பு, செல்தாக்குதல், கஷ்ரம், கரைச்சல் இதுகளாலை நான் வெறுப்படையேல்லை நான் படிச்ச படிப்பு வீனாய்ப் போகுது. மற்ஸ் ரீச்சருக்கு எல்லா இடத்திலையும் தட்டுப்பாடு, நான் டபிள்மற்சும் ஸ்ரட்ஸ்சும் செய்திட்டு ஆண்டு ஒண்டுக்கும் இரண்டுக்கும் படிப்பிக்கிறதெண்டால்..... நான் செய்த ஒரே ஒரு பிழை இந்தப் பிறின்சிப்பல் பதவிக்கு அப்பிளை பண்ணினது தான்.... ஆண்டு எட்டு மட்டும் உள்ள ஒரு பள்ளிக்கூடத்திலை அதிபராய் இருக்கிறத்தை விட ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில ஆசிரியராய் இருக்கிறது நல்லது..” உணர்ச்சிவசப்பட்டார் சுந்தரமூர்த்தி.

மயில்வாகனம் எதுவும் பேசவில்லை. இதெல்லாம் பல முறை அவர் கேட்டுப் பழக்கப்பட்டது; “இப்போ ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. நல்ல சில ஆசிரியர்களும் போனால” என்று மயில்வாகனம் சிந்தித்துப் பார்த்தார். இருள் சூழ்ந்த ஒரு எதிர் காலம் அவரின் கண்களுக்குள் தெரிந்தது.

“பல ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகக் கொழும்பில் போய் நிற்கிறார்கள். இன்னும் சிலர் பாதுகாப்பான இடங்களுக்குத் தற்காலிக இடமாற்றம் பெற்று அங்கு ரியூற்றறிகளும் வைத்து நடத்துகிறார்கள். இந்த நிலமை தொடர்ந்தால்....” மேலே மயில்வாகனத்தால் சிந்திக்க முடியவில்லை.

“முந்திக் கொத்தணி அதிபர் என்னைப் பழிவாங்கியதாய் நினைக்கலாம். ஆனால் நான் பழிவாங்குப் படேல்லை. ஏணெண்டால் அவற்ரை பாடசாலைப் பிள்ளைகளெல்லாம் என்னட்டைத் தான் வீட்டை வந்துபடிச்சவை...”

“அப்பேன் பென்சன் எடுத்தனீர்...”

“மத்திய கல்லூரி அதிபர் பென்சன் எடுத்திட்டார். நான் அப்பிளை பண்ணினனான்..... கிடைக்கேல்லை...” என்று நிறுத்திய சுந்தரமூர்த்தி சிரித்து விட்டுச் சொன்னார்; “நீங்களும்

மத்திய கல்லூரி கிடைக்காததாலை தான் பருத்தீமலையை விட்டுட்டு வந்தனீங்களெண்டு சனம் கதைக்குது.... நான் நம்பேல்லை....''

''சீச்சீ.... எனக்கு விருப்பமில்லை. சுகமில்லாத தாலைதான் நான் ரான்ஸ்பர் எடுத்தனான்.... அது உமக்குத் தெரியும் தானே...''

''ஓம் எனக்குத் தெரியும் தான்.... ஆனால்....'' நிறுத்தினார் சுந்தரமூர்த்தி.

''சொல்லும்..... சொல்லும்...'' வற்புறுத்தினார் மயில்வாகனம்.

''எனக்கும் சந்தேகமிருக்கு. உண்மையைச் சொல்லுங்கோ.... உங்களுக்கு மத்திய கல்லூரிக்குச் செல்ல விருப்பமில்லையே....?'' சிரித்தபடி கேட்டார் சுந்தரமூர்த்தி.

இப்படி சுந்தரமூர்த்தி கேட்பாரென மயில்வாகனம் எதிர்பார்க்கவில்லை. அதனால் சற்றுத் தடுமாறினார்.

அதைக் கவனித்த சுந்தரமூர்த்தி சொன்னார்; ''சேர் உங்கடை குணம் எனக்குத் தெரியும்... நீங்கள் எதையும் வாய் திறந்து கேட்க மாட்டியள்.... ஆனால் உங்களுக்குத் தான் மத்திய கல்லூரி தரவேணும்... ஏணெண்டால் நீங்கள் அந்தமாதிரி பள்ளிக் கூடத்தை நடத்துறியள்''

''நான் விரும்பேல்லை... ஏணெண்டால் என்ரை உடல் நிலை சரியில்லை. அதோடை பத்து வரிசமாய்க் கட்டிக் காத்த ஒரு பாடசாலையை அழிக்க நான் விரும்பேல்லை''.

''என்ன சேர்....?'' மயில்வாகனத்தின் பேச்சு விளங்காமல் கேட்டார் சுந்தரமூர்த்தி.

''நான் மத்திய கல்லூரிக்குப் போனால் மகாவித்தியாலயத்தின்ரை கதி என்ன...? நான் கண்ணைப் போல பாதுகாத்து, கஷ்டப்பட்டு வளர்த்ததெல்லாம் நாசமாய்ப் போயிடும்.. என்னுடன் பிள்ளைகள் முழுக்க அங்கை வந்திடும். அது நான் வளர்த்த பள்ளிக்கூடத்துக்குச் செய்யிற துரோகமாய்ப் போயிடும்.... அதாலை நான் கடைசி வரையும் விரும்பமாட்டன்'' என்றார் மயில்வாகனம். அவரது குரல் உறுதியாக ஒலித்தது.

''நான் நம்புறன் சேர். மகா பாரதத்திலை அருச்சுனன் கிருஷ்ணரைக் கர்னனின் விடயத்தில் சந்தேகிச்ச மாதிரி..... உங்களைச் சந்தேகித்திட்டன்...'' கவலைப்பட்டார் சுந்தரமூர்த்தி.

''மத்திய கல்லூரி எனக்கும் தராயினை, உமக்கும் தராயினை. ஏனென்றால் அது முத்து உடையார் கட்டின பள்ளிக்கூடம். அந்தப் பரம்பரைக்குத்தான் குடுக்க வேணுமெண்டு அந்த பள்ளிக்கூட எஸ்ரீ எஸ்சும் ஓ.எஸ் ஏயும் கேட்கும்'' என்றார் மயில்வாகனம்.

''உந்தப்பரம்பரையைச் சொல்லித்தான் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பாழாக்கிறாங்கள்... முந்தி ஆயிரத்தைஞ்நூறு அறுநூறு பிள்ளைகள் படிச்சது... இப்ப முன்நூற்றிச் சொச்சம் தானாம்... ஒருவண் ஏபீ பாடசாலையெண்டு விண்ணப்பிச்சனான். அதோடை எஸ்ரிஎஸ் செயலாளரையும் ஓஎஸ்ஏ தலைவரையும் சந்திச்சுக் கதைச்சனான்...'' என்றார் சுந்தரமூர்த்தி.

''அவை என்ன சொன்னவை..''

''நீங்கள் சொன்ன மாதிரித்தான் சொன்னவங்கள்.. நானும் அங்கை எட்டு வரிசம் படிப்பிச்சனான். அதோடை வரிசம் வரிசம் அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு டபிள் மற்ஸ் படிப்பித்தனான். அந்த நன்றி யென்றாலும் இருக்கே''

''சில பள்ளிக்கூடங்களிலை சில வழக்குகள் இருக்கு, அதை மாற்றுவதெண்டால் கஷ்ரம்''

“சட்டங்களையே நடைமுறைக்கேற்றபடி மாற்றுற போது வழக்குகளை மாற்றினால் என்ன? சரி அப்பிடி யெண்டால் எல்லா இடங்களிலு மெல்லோ அதைப்பின்பற்ற வேண்டும்....நான் அந்தப்பள்ளிக்கூடத்தின்ரை பழைய மாணவன். எனக்கெல்லோ முதலிடம் தரவேணும்”

“உதையெல்லாம் எங்களாலை திருத்தேலாது நாங்கள் தான் சந்தர்பங்களுக்கு ஏற்ற மாதிரி திருந்தி நடக்க வேணும்.... பொதுவாய் ஒவ்வொரு வரும் தன்ரை தன்ரை கடமையைச் செய்தால் சரி” என்றார் மயில்வாகனம்.

“கடமையைச் செய்ய வீடினை இல்லையே... நான் ஒழுங்காகத் தான் மத்திய கல்லூரியிலை கடமையாற்றினனான். கொத்தணி அதிபற்ரை மனைவி தேவையில்லாமல் தானே என்னோடை சண்டைக்கு வந்தவா.... உங்களோடை நான் மூன்று வரிசம் இருந்தனான்.... ஏதாவது பிரச்சினைக்கு வந்தனானே”.

மயில்வாகனம் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்ததால் சுந்தரமூர்த்தி சொன்னார்; “கடமையை ஒழுங்காய்ச் செய்தாலும் கனபேருக்கு பிடிக்கிறேல்லை. கொத்தணி அமைப்பு இருந்த காலத்திலை நீங்கள் செய்த சேவையாலை உங்கடை பள்ளிக்கூடம் நல்ல நிலைக்கு வந்தது. அதாலை எவ்வளவு பிரச்சினை...? நீங்கள் மேலதிக வகுப்புக்களை வைக்க மற்ற அதிபர்மார் எவ்வளவு கரைச்சல் குடுத்தவை...”

“பழசுகளை விடு...” என்றார் மயில்வாகனம்.

“எப்பிடி சேர் விர்றது. ஒவ்வொரு செயலும் நெருப்பாய்ச் சுட்டதாலை தானே பென்சன் எடுத்தனான்.... இந்தச் சமூகத்தைப் பழிவாங்க வேணுமெண்டு நினைச்சன்.... ஆனால் அதாலை நான் தான் வேதனைப்படுறன்”.

நிமிர்ந்து பார்த்தார் மயில்வாகனம் ‘ஏன்’? என்று கேட்பது போலிருந்தது அவரது பார்வை.

“நேற்றுப் பின்நேரம் மாணவர்களெல்லோரும் வழக்கம் போலை வீட்டை வந்தவங்கள். நான் அவங்களை இருத்தி கேக்கும் வடையும் ரீயும் குடுத்திட்டு இண்டையிலை இருந்து ரீயூசனை நிறுத்துறதாய்ச் சொன்னன். அவங்கள் திகைச்சுப் போனாங்கள்.... பரபரப்போடை ஏணெண்டு கேட்டவங்கள். நான் மத்தியகல்லூரி விஷயத்தை மட்டும் சொன்னனான். வெளிநாடு போறதைச் சொல்லேல்லை. சின்னப்பெடியள் தானே துயரத்தோடை போட்டாங்கள். பிறகு கொஞ்சத் தாய்தகப்பன்மார் வந்து அழுதினை... அது தான் கவலையாய் இருக்கு”

“அப்ப என்ன செய்யுறதாய் உத்தேசம்..”

“இனி முடிவை மாத்தேலாது.... அரைவாசிச் சாமான் வித்தாச்சு... மச்சானுக்கும் விளக்கமாய்க் கடிதம் எழுதீட்டன். இனி முடிவை மாற்றினால் குடும்பத்திலை பல பிரச்சினைகள் வரும்.... எல்லாம் கடவுள் விட்ட வழி.... யோகர் சுவாமிகள் சொன்ன மாதிரி எப்பவோ முடிந்த காரியம்.” சுந்தரமூர்த்தி சிரித்தார்.

மயூரன் இருவருக்கும் தேனீர் கொண்டு வந்து கொடுத்தான்.

மயில்வாகனத்தின் ஈசிச் செயருக்குக் கீழே படுத்திருந்த ஜிம்மன் குரைத்தபடி எழும்பி ஓடியது. மயில்வாகனம் நிமிர்ந்து பார்த்தார். நடராசாவும் காசிப்பிள்ளையும் உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

தேனீரைக் குடித்து விட்டு எழுந்த சுந்தரமூர்த்தி; “நான் போயிட்டு வாறன் சேர்” என்றார்.

மயில்வாகனம் ‘சரி’ யென்று தலையாட்டினார். அவரது மனம் கனத்தது. நல்லதொரு ஆசிரியர். அத்துடன் அவரின் நல்லதொரு நண்பன். அவரைப்பிரிவதை மயில்வாகனத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

## *16*

‘‘உள்ளுக்குப் போயிருப்பம் வாருங்கோ’’ என்று கூறிய மயில்வாகனம் ஈசிச் செயரால் எழுந்து வீட்டை நோக்கி நடந்தார். அவரைப் பின் தொடர்ந்து நடராசாவும், காசிப்பிள்ளையும் சென்றனர்.

‘‘சுந்தரமூர்த்தி நல்லதொரு மற்ஸ்ரீச்சர். அவரை அதிபர் பதவி தான் பழுதாக்கிப் போட்டுது.... அதை நினைச்சு நெடுகக் கவலைப்பட்டவர். இண்டைக்கு திடீரெண்டு வந்து பென்சன் எடுத்திட்டன் என்று சொல்லிப் போட்டுப் போறார்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘ஏன்?...’’ நடராசா பதைபதைத்தார்.

‘‘அவர் படிச்சது பீஎஸ்சி. அதிபராய் இருந்தது ஒரு எட்டாம் ஆண்டுப் பள்ளிக்கூடம்.... பல நாளாய் ரான்ஸ்பருக்கு ஓடித் திரிஞ்சார். வாய்க்கேல்லை. அது தான்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொல்லை.... எல்லாராலையும் எல்லாத்தையும் தாங்கேலாது.... இப்ப என்னைப் பாருங்கோ... எவ்வளவு பிரச்சினை.... எவ்வளவு வேதனை...’’ என்று கதைத்தபடி கோலில் இருந்த நாற்காலி யொன்றில் அமர்ந்தார் நடராசா. அவருக்குப் பக்கத்தில் காசிப்பிள்ளை போய் அமர்ந்தார். இருவருக்கும் எதிரில் இருந்த நாற்காலியில் மயில்வாகனம் அமர்ந்தார்.

‘‘பொழுது படுற நேரம் வந்திருக்கிறியள்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘கப்பலுக்கு ரிக்கற் ஓகே பண்ணி வந்திட்டுது. நாளைக்குக் கப்பல் போகுதாம். பயண அனுமதி பெற்றவர்களை நாளைக்காலை றேயில் வேஸ்ரேசனுக்கு வரட்டாம். அது தான் மகளைக் கூட்டிக் கொண்டு போய் விட்டுட்டு வரலாமெண்டிருக்கிறன். இந்தாருங்கோ லீவு லெற்ரர்’’ என்று லீவு கடிதத்தை நீட்டினார் நடராசா.

மயில்வாகனம் லீவுக்கான கடிதத்தை வாங்கினார்.

‘‘தற்செயலாய் மகளை அனுப்ப நாள்ச் சென்றால் நிண்டு தான் வருவன். மருமோன் உடனை கூப்பிடலா மென்கிறார். ஒரு வரிசம் செண்டாலும் நிண்டு அனுப்பிப் போட்டுத்தான் வருவன்.’’

‘‘ஒருவரிசமோ....?’’ வியப்புடன் கேட்டார் மயில்வாகனம்.

‘‘வெளிநாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கமாய்ச் சொல்லேலாது. வைரமுத்தற்ரை மோள் இரண்டு வரிசமாய்க் கொழும்பிலை நிக்கிறாள். நல்லாம்பியற்ரை பொடியன் கனடாவுக்குப் போறதெண்டு போய் மொஸ்கோவிலை பிடி பட்டு திரும்பி வந்து நிக்கிறான். அருளையற்ரை மோன் இரண்டு வரிசமாய் பாங்கொக்கிலை நிக்கிறான். இந்த நிலமையிலை என்ரை மகள் உடனை போக முடியுமே...? அவள் போனாலும் மருமோனைச் சென்றடைந்து ரெலிபோன் பண்ணினாப் பிறகுதான் வருவன். ஒரு மாசம் பாருங்கோ.... பிந்தினால் பென்சன் எடுப்பம்.’’

மயில்வாகனத்தின் மனம் வாடிச் சோர்ந்தது. பதினைந்து நிமிடத்துக்கு முன் நல்லதொரு மற்ஸ்ரீச்சர் பென்சன் எடுத்திட்டார். இப்ப நல்லதொரு தமிழ் ரீச்சர் பென்சன் எடுக்க ஆயத்தமாகிறார்.. அதை நினைக்க மயில்வாகனத்தால் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

‘‘தனியத்தான் போறியளோ... இல்லை மிசிசும் வாறாவோ...’’

‘‘மிசிசும் வாறா.... மகளையும் என்னையும் பிரிவதை அவராலை தாங்கிக் கொள்ளேலாது. அதோடை இருக்குமட்டுமாவது மகளோடை சந்தோசமாய் இருக்கட்டன்’’

‘‘வீட்டை ஆர்பராமரிக்கிறது’’

“என்ன சேர் வீடு..” என்று அலுத்துக் கொண்டவர்; சிறிது நேரத்தின் பின்பு சொன்னார்; “இவான்ரை ஒண்டை விட்ட தம்பியாரைப் பார்க்கச் சொல்லியிருக்கிறன். அவன் என்ன செய்யிறது.... பகலிலை பார்க்கலாம்... இரவிலை என்ரை வீட்டை படுக்க அவன்ரை வீட்டைக் கள்ளர் உடைச்சுப் போடுவங்கள்...” என்றார் நடராசா.

“இப்ப நாடு கெட்டுப் போச்சு.... பழி பாவம் பார்க்கிறாங்களோ..... நீதி ஞாயம் பார்க்கிறாங்களோ... ஒண்டுமில்லை அம்பிட்டதைச் சுருட்டுறத்துக் கெண்டு ஆயிரம் பேர் இருக்கிறாங்கள். நேற்று இராத்திரி வேலாயுதத்தின்ரை மோன் தவசீலன்ரை கண்டுத் தாச்சி மாட்டை அவிட்டுக் கொண்டு போய் இறைச்சி அடிச்சுப் போட்டாங்கள். வாற அமாவாசைக்கு கன்று போட வேணும்...” என்றார் காசிப்பிள்ளை.

அதிர்ந்து போனார் மயில்வாகனம்; “ஒழுக்கத்திற்கு ஒரு காலத்தில் பேர் போன இந்த மண்ணிலா இந்த நிலை” அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

“உப்பிடி எத்தினை பிரச்சினைகள் நடக்குது. கற்குழியிலை முந்தநாளிரவு பத்துமணிக்கு வாகனச் சத்தம் கேட்டதாம். சனங்களெல்லாம் பயந்து நடுங்கி படுத்திட்டுதுகள். இரவிரவாய் கட்டிடங்கள் உடைக்கிற மாதிரிச் சத்தம் கேட்டிருக்கு. ஒருத்தரும் வெளீலை வரேல்லை... காலமை எழும்பிப் பார்த்தால் முன்னாலை இருந்த வீட்டு ஓடெல்லாம் கழட்டிக் கொண்டு போட்டாங்களாம்... பிறகு பொலிஸ் பிடிச்ச தெண்டு கதை....” என்றார் காசிப்பிள்ளை.

“மிசிஸ் தனிய இருந்து ஒன்றும் செய்யமாட்டா. அதோடை அவாவுக்கு காவலுக்கு ஆள்வேணும்.... நடக்கிறது நடக்கட்டும்.... பேர்த்தியை இழந்திட்டன். பிள்ளை பிரியப் போகுது.... இனி என்னத்துக்கு வீடு” விரத்தியின் விளிம்பில் நின்று கதைத்தார் நடராசா.

“நீங்கள் அவரிட்டைச் சொல்லீட்டுப் போங்கோ... நான் ஆரும் அம்பிட்டால் இரவு படுக்கச் சொல்லுறன்” என்றார் மயில்வாகனம்.

“இப்போதைக்குத் தேவையில்லை. மருமோன் ஸ்பொன்சர் பண்ணி எங்களையும் கூப்பிடலாமாம். இஞ்சை வாயுறத்துக்கும் ஆயத்தமாய் வாங்கோ எண்டு எழுதியிருக்கிறார்” என்றார் நடராசா.

“அப்ப நீங்களும் போகப் போறியள்” மயில்வாகனம் கேட்டார்.

“எனக் கெண்டால் விருப்பமில்லை. மிசிஸ்தான் தன்னாலை மகளை விட்டுட்டு இருக்கேலாது. என்னையும் சேர்த்துக் கூப்பிடுங்கோ என்று எனக்குத் தெரியாமல் எழுதிப் போட்டா. அதைச் சாட்டாய் வைச்சுக் கொண்டுதான் மருமோன் எங்களையும் கூப்பிர்றதுக்கு ஆயத்தப்படுத்துறார்... ஆனால் உதுகளெல்லாம் எங்கே நடக்கப் போகுது.... எத்தினையோ பேர் உடனை வா கூப்பிர்றன் எண்டு எழுதியதை நம்பிப் போய் வரிசக் கணக்கிலை லொட்ஜ்சிலை நிக்கினை” என்றார் நடராசா.

“கனடாப் பிரச்சினை அப்பிடியில்லை. மனைவி, தாய், தகப்பன் மாரை உடனை கூப்பிலாமாம்... போன மாசம் போன சின்னையா குடும்பம் பத்து நாளிலை போட்டினை” என்றார் காசிப்பிள்ளை.

“நான் வரப்போறன் சேர்... பிறகு கடிதம் போடுறன்...” எழுந்தார் நடராசா.

“சரி சரி... சுகமாய் போட்டு வாங்கோ” என்றார் மயில்வாகனம்.

நடராசா எழுந்து சென்று சில நிமிடங்கள் கழிந்தும் மயில்வாகனம் எதுவும் பேசவில்லை. ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். அந்த நேரம் தேனீருடன் வந்த இலட்சுமியம்மாள். “நடராசா மாஸ்ரர் போட்டாரே...?” என்று கேட்டாள்.

“இப்பத்தான் போறார் கூப்பிடட்டே” என்று எழுந்தார் காசிப்பிள்ளை.

“என்னப்பா.... வீட்டுக்கு வந்த மனிசனுக்கு தேத்தண்ணி குடுக்காமல் அனுப்பிப் போட்டியள்” கவலைப்பட்டாள் இலட்சுமி.

“நான் அதை நினைக்கேல்லை. முதல் சுந்தரமூர்த்தி வந்து கலக்கினான். பிறகு நடராசா வந்து அழுதுது. இதாலை மனதிலை தோன்றேல்லை” என்றார் மயில்வாகனம்.

“பிறகாலை கூப்பிடாதைங்கோ..... நடராசா போகட்டும்” என்றாள் இலட்சுமியம்மாள்.

“எவ்வளவு சொத்துப் பத்திருக்கு பேய்ப் பொடியன் சொல்வழி கேட்கிறானில்லை நடராசாட்டைக் கிடக்கிற சொத்துக்கு அவன் காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்” என்றார் காசிப்பிள்ளை.

“அதுக்கென்ன செய்யிறது” என்று கேட்டார் மயில்வாகனம்.

“ஒரே ஒருபிள்ளை ஆசையாய் வளர்த்தது. அதோடை போகத்தான் எனக்கும் விருப்பம் எண்டு கண்கலங்கிச் சொல்லிச்சுது நடராசா.... அவையும் போனால் சொத்தெல்லாம் பாழாய்ப் போயிடும் உங்கை முழுச்சனமும் போகுது வீடுகளிலை வவ்வால் தான் குடியிருக்கப் போகுது” என்றார் காசிப்பிள்ளை.

“என்ன பொழுதுபடேக்கை வந்திருக்கிறியள். என்ன விசயம்” என்று கேட்டார் மயில்வாகனம்.

“சும்மாய் தம்பீட்டை ஒருக்கால் காட்டுவமெண்டு வந்தனான்” என்றார் காசிப்பிள்ளை.

“சுந்தர் இன்னும் வரேல்லை...... இருங்கோ வந்திடுவன்... நான் முகங் கழுவீட்டு வாறன்” என்று எழுந்தார் மயில்வாகனம்.

“உங்களுக்குத் தெரியுமே கல்யாணி ரீச்சருக்குச் சம்பந்தம் பொருத்திப் போட்டன்”

“நல்ல விஷயம் ஆர் மாப்பிளை”

“உவன் பிரணவன் தான். நாளையிண்டைக்கு றிஜிஸ்ரேசன். வாறகிழமை போகப் போயினை. தாய் தகப்பனையும் தமக்கையையும் கூட்டிக் கொண்டு போறதாய்ச் சொன்னான்.”

“நடராசா மாஸ்ரரும் கொழும்புக்குப் போறார். கல்யாணியும் பாடசாலைக்கு வரமாட்டாள். இனி என்ன செய்யிறது? இப்பவே ஆறு ஆசிரியர்கள் பற்றாக்குறை....ம்...” என்று பெருமூச்சு விட்டார் மயில்வாகனம்.

“இப்ப வாத்திப் பொட்டையள் தான் கூடுதலாய் வெளிநாடுகளுக்குப் போயினை.... உத்தியோகத்தை என்னத்துக்குப் பாருங்கோ...? வாழ்க்கை வேணுமே... இப்ப இஞ்சை பத்துப் பெம்பிளையளுக்கு ஒரு ஆம்பிளை தான் இருக்கு. கொண்வென்டிலை படிப்பிக்கிற பேரம் பலத்தாற்ரை மோள் பிரசாந்திக்கு கணபதிப்பிள்ளையின்ரை மோனுக்கு நிட்சயமாயிற்றுது..... மழைக்குக் கூட பள்ளிக் கூடத்துக்கை ஒதுக்காதவன். அவன் கனடாவுக்குப் போனாப் போலை பெரிய மனிசனாயிட்டான்.... அவள் பாவம் இங்கிலிஸ் ரெயிண்ட்...... அதை விட செல்லத்துரையற்றை குடும்பமெல்லாம் பிரான்சிலை யெல்லே... மோள் ஒருத்தி தான் இஞ்சை இருக்கிறாள். புரிசன் மாஸ்ரர். போன கிழமை தமையன் மார் இரண்டு பேர் வந்து நிக்கிறாங்கள். அவையையும் கூட்டிக் கொண்டு போறதாய்க் கதை அடிபடுது....” என்றார் காசிப்பிள்ளை.

மயில்வாகனத்துக்குத் தலை சுற்றியது. “இப்பவே தொண்டர் ஆசிரியர்களால் தான் பாடசாலை இயங்குகிறது. இப்படி ஆசிரியர்கள் போனால்....சில பாடசாலைகளில் தொண்டர்

ஆசிரியர்களுக்கு நூறு இருநூறு ரூபா கொடுக்கிறார்கள். அனேகமான பாடசாலைகளில் ஒன்றும் இல்லை'' என்று சிந்தித்தார் மயில்வாகனம்.

''மெய்யே மாஸ்ரர், உங்களுக்குப் பிள்ளைகளை வெளீலை அனுப்புற யோசினை இல்லையே'' காசிப்பிள்ளை கேட்டார்.

''சுந்தருக்கு ஒரு ஸ்கொலசிப் கிடைச்சிருக்கு கிட்டடியிலை போயிடுவன். மாலதிக்கு கலியாணம் நிச்சயமாயிட்டுது.. மற்றவை படிக்கினை'' என்றார் மயில்வாகனம்.

அப்பொழுது மோட்டார் சைக்கிலின் சத்தம் கேட்டது. கோலில் படுத்திருந்த ஜிம்மன் எழுந்து படலையை நோக்கி ஓடியது.

''சுந்தர் வந்திட்டான், காட்டிக் கொண்டு போங்கோ'' என்று கூறிவிட்டு முகம் கழுவுவதற்காகச் சென்றார் மயில்வாகனம்.

மோட்டார் சைக்கிலை நிறுத்தி விட்டு வந்த சுந்தரை அழைத்துக் கொண்டு வீட்டினுள் வந்தது ஜிம்மன்.

கோலுக்குள் இருந்த காசிப்பிள்ளையைச் சுந்தர் கண்டதும; ''என்ன காசிப்பிள்ளை அண்ணை'' என்று கேட்டான் சுந்தர். காசிப்பிள்ளையின் கவர்ச்சியான பேச்சையும், இனிமையாகப் பாடும் பாடலையும், கலகலப்பான தன்மையையும் ரசித்து விரும்புபவன். அவர் இரவு பகலென்று பாராது அவ்வூர் மக்களுக்குச் செய்யும் உதவிகளை மதிப்பவன்.

''வயிறு சரியில்லைத் தம்பீ'' என்றார் காசிப்பிள்ளை.

சிரித்த சுந்தர்; ''கொஞ்ச நாளைக்குப் பனங்கள்ளைக் குடிக்காதைங்கோ. எல்லாம் சரி வரும்.'' என்றான்.

''தம்பிக்குப் பகிடி'' என்றவாறு எழுந்த காசிப்பிள்ளை சுந்தர் வைத்தியம் பார்க்கும் அறைக்குச் சென்றார்.

சுந்தர், காசிப்பிள்ளையைச் சோதித்துப் பார்த்தான். காசிப்பிள்ளை ஊரில் உள்ள சின்னஞ் சிறுசுகளில் இருந்து குடுகுடு கிழவர் வரை அன்பாகப் பேசிக் கலகலப்பாகக் கதைத்துச் சிநேகிதம் வைத்துள்ளவர்.

மயூரன் காசிப்பிள்ளைக்கு அருகில் வந்து அமர்ந்தான்.

''இப்பவே நல்லாய்க் குடிச்சிருக்கிறியள். குடிக்கிறத்தை விட்டால் தான் வருத்தம் மாறும்'' என்றான் சுந்தர்.

''பத்து வயதிலை பனங்கள்ளுக் குடிக்கத் தொடங்கினனான். இப்ப அறுபத்தைஞ்சு வயதாச்சுது. .... ஒண்டும் செய்யேல்லைத் தம்பீ. ... முந்தநாள் பிரணவன் ஒரு போத்தல் பிறண்டி தந்தவன் அதைக் குடிச்சாப் பிறகு தான் வயித்துக்கை குத்தூது.... நோகுது சாப்பிட மனமில்லாமல் இருக்கு'' என்றார் காசிப்பிள்ளை.

''இனிக் குடியாதைங்கோ.... இந்தக் குளிசையை காலமையும் பின்நேரமும் இரண்டு இரண்டு போடுங்கோ... இதிலை மூண்டு நேரமும் ஒவ்வொண்டு போடுங்கோ.... இந்தக் குளிசையை சாப்பிட முன்னுக்குச் சப்பிச் சாப்பிடுங்கோ... , இனிக்குடிக்காதைங்கோ'' என்றான் சுந்தர்.

''இப்ப ஏழுமணியாச்சு..... காசிப்பிள்ளை அண்ணை இனிக்குடிக்கமாட்டார்.... விடிஞ்சாப்பிறகு தான் குடிப்பர்'' என்றான் மயூரன்.

''நீரும் வளர்ந்திட்டீர் பகிடி விட....'' மயூரனின் சொக்கில் நுள்ளினார் காசிப்பிள்ளை.

‘‘காசிப்பிள்ளை அண்ணேன்ரை பாட்டுக் கேட்டு கனநாளாய்ப் போச்சு..... பாட்டொண்டு பாடுங்கோ’’ என்றான் மயூரன்.

காசிப்பிள்ளை பெருமையுடன் சிரித்தபடி சுந்தரை நோக்கினார். அவருக்கு பாட நல்ல விருப்பம். ஒரு டொக்ரர் தன்னுடைய பாட்டைக் கேட்பது தனக்குப் பெருமையென நினைத்தார்.

‘‘பாடுங்கோ.... ஒரு பாட்டு.... ஒரு பாட்டு....’’ என்றான் மயூரன்.

‘‘காசிப்பிள்ளையண்ணை பாடினால் சௌந்தரராஜன் மாதிரி இருக்கும்.... பாடுங்கோ’’ என்றான் சுந்தர்.

காசிப்பிள்ளைக்கு உச்சி குளிர்ந்தது.

காசிப்பிள்ளையோடு மயூரன் கதைக்கும் சத்தம் கேட்டு மாலதியும் சுவர்ணாவும் அங்கே வந்தனர்.

‘‘பாடுங்கோ காசிப்பிள்ளை அண்ணை...’’ என்றாள் மாலதி.

‘‘பாடுங்கோ’’ என்றாள் சுவர்ணா.

‘‘அப்பா பேசாரே’’ இரகசியமாகக் கேட்டார் காசிப்பிள்ளை.

‘‘அவர் பேசமாட்டார்’’ என்றாள் மாலதி.

காசிப்பிள்ளைக்கு உற்சாகம் கரை புரண்டது; ‘‘பிள்ளை கொஞ்சம் தண்ணீர் தா வாயைக் கொப்புளிக்க வேண்டும்’’ என்றார் காசிப்பிள்ளை.

மாலதி உள்ளே சென்று செம்பில் நீர் கொண்டு வந்து கொடுத்தாள். காசிப்பிள்ளை அதை வாங்கிக் கொண்டு வெளியே போய் வாய்க்குள்ளிருந்த வெற்றிலையைத் துப்பி விட்டு வாயைக் கொப்பளித்து விட்டு வந்து செம்பை மாலதியிடம் கொடுத்து விட்டுக் கோலில் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

காசிப்பிள்ளையைச் சுற்றி மயூரன், சுந்தர், சுவர்ணா, இலட்சுமியம்மாள் ஆகியோர் அமர்ந்திருந்தனர். குரலைச் செருமிச் சரி செய்த காசிப்பிள்ளை

‘‘கற்பகவல்லி நின்பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதியருவாயம்மா- தேவி
பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயிர் சிங்காரக் கோயில் கொண்ட’’

ஒரு பெரும் சங்கீத வித்துவானைப் போல இனிமையாகப் பாடினார் காசிப்பிள்ளை. பலமுறை பாடியதால் அப்பாடல் அவருக்குப் பாடமாக இருந்தது. சௌந்தரராஜன் நேரில் வந்திருந்து பாடுவது போலிருந்தது.

காசிப்பிள்ளையின் பாடலைக் கேட்டு அயல் வீட்டுக்காரர்களான சர்மி, கிருத்தி, தவம், அச்சுதன் ஆகியோர் பொட்டுக்குள்ளால் வந்து மயில்வாகனத்தின் கோலில் கூடி நின்றனர்.

அவர்களைக் கண்டதும் காசிப்பிள்ளை உற்சாகமிகுதியால் பாடலை உரத்துப் பாடினார். பாட்டின் இனிமை மயில்வாகனத்தையும் கோலுக்கு அழைத்தது.

*17*

ஐந்தாம் ஆண்டு கொலசிப் வகுப்புக்கு மேலதிக வகுப்புக்கள் மாலை ஐந்துமணி வரை நடைபெறுவது வழக்கம். முன்னைய காலங்களில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறுவதில்லை. பல காரணங்களால் சபாபதிப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள் எல்லாப் பாடங்களிலும் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். இதனால் விஞ்ஞானம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் குறைவான மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்த ஒழுங்கு செய்திருந்தார் மயில்வாகனம். அந்த வகுப்புகள் அன்று ஆரம்பிக்கப்பட விருந்தன. அதனால் அவர் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குச் செல்லவில்லை. யாருடமாவது கொடுத்து விடச் சொல்லியிருந்தார். அதன்படி அவரது மனைவி சாப்பாட்டைக் காசிப்பிள்ளையிடம் கொடுத்து அனுப்பியிருந்தாள்.

காசிப்பிள்ளை வழமை போல வெள்ளை வேட்டியும் சால்வையுடனும் தன்னுடைய சைக்கிலில் சாப்பாட்டுடன் வந்து இறங்கி, அலுவலகத்தை நோக்கிச் சென்றார்.

பாடசாலை வழவு முழுவதும் துப்பரவாக இருந்தது. பல வர்ணச் செம்பரத்தைக் கன்றுகள் நிரையாக நாடப்பட்டிருந்தன. பலவற்றில் பலவர்ணப்பூக்கள் மலர்ந்திருந்தன. முன்பும் பல முறை அவர் அப்பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களுக்காக வந்திருக்கிறார். பார்க்கிற இடமெல்லாம் கடதாசியும் குப்பையும் தான் காணப்படும். அவர் கேலியாக; ‘‘இவங்கள் படிச்சுக் கிழிக்கிறவங்கள்’’ என்று பக்கத்தில் இருந்தவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். இப்போது பார்க்கப் புனிதஸ்தலம் போல் இருந்தது. சத்தம் சந்தடி எதுகும் இல்லை’’ ‘‘உண்மையாகப் பள்ளிக் கூடத்திற்குத்தான் வந்திருக்கிறனோ?’’ என்று சந்தேகம் அவரது மனதுள் நுழைந்தது. சுற்றிவரப் பார்த்தார். வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அலுவலகத்துக்குச் சிறிது தூரத்தில் காசிப்பிள்ளை பையுடன் வரும் போது மயில்வாகனம் கண்டு விட்டார். அலுவலகத்தை விட்டு வெளியே வந்து; ‘‘உங்களுக்குச் சிரமம் கொடுத்திட்டன்’’ என்றார்.

‘‘இதென்ன சிரமம். இலட்சுமி கனநேரமாய் ஒழுங்கையிலை நிண்டு பாத்துக் கொண்டிருந்தது. அவளாய்த் தரேல்லை. நான் தான் கேட்டு வாங்கினனான்.. பிறகு அவாவைப் பேசிப் போடாதைங்கோ...’’ காசிப்பிள்ளை சிரித்தார்.

‘‘ரொம்ப நன்றி’’ என்ற மயில்வாகனம் அலுவலகத்திற்குச் செல்ல, அவரைப் பின் தொடர்ந்தார் காசிப்பிள்ளை.

மயில்வாகனம் அலுவலகத்தை விட்டு வெளியே வந்ததே காசிப்பிள்ளையை உடனே திருப்பி அனுப்பும் நோக்கில் தான். உள்ளே வந்தால் போக மாட்டார். ஒரே பிரசங்கமாய்த் தான் இருக்கும்.

‘‘ஏன் வீட்டிலை வந்து சாப்பிட முடியாத வேலையோ...?’’ என்று கேட்டார் காசிப்பிள்ளை.

‘‘இல்லை ..... இல்லை... இன்றைக்கு எழுத்தறிவு குறைந்த மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் வைக்கிறம். அதுதான்’’.

‘‘நல்லது ..... நல்லது.... ஆண்டவன் ஒரு பொறுப்பைத் தந்தால் அதை நல்லாய்ச் செய்ய வேணும்....’’

அப்பொழுது பருத்திமலைப் பாடசாலை பழைய மாணவச் சங்கச் செயலாளர் சிவலிங்கம் மோட்டார் சைக்கிலில் வந்தார். மோட்டார் சைக்கிலைப் பாடசாலைக் கேற்றடியில் நிறுத்தி விட்டு தயங்கித் தயங்கி உள்ளே வந்தார்.

‘‘வீட்டை போனனான். பாடசாலையாலை வரவில்லை என்று அக்கா சொன்னா.... அது தான் வந்தனான்...’’ என்றார் சிவலிங்கம்.

‘‘அப்போது மதி மாஸ்ரர் வந்து எல்லாம் சரி. நீங்கள் வாங்கோ...’’ என்றார்.

‘‘இன்றிலிருந்து விசேட வகுப்புக்கள் வைக்கப் போறம்... பெற்றாரையும் வரச்சொல்லியிருக்கிறன். நீங்களும் வாங்கோ’’ என்றார் மயில்வாகனம்.

''என்னை என்னத்திற்கு... நான் ஒவ்வீசிலை இருக்கிறன்..'' என்றார் சிவலிங்கம்.

''பிரச்சினை இல்லை வாருங்கோ''

மூவரும் எழுந்து வகுப்பு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மண்டபத்தை நோக்கி நடந்தனர்.

அந்த மண்டபத்தில் மாணவர்களுடன் பெற்றோரும் ஆசிரியர்களும் இருந்தனர். மயில்வாகனத்தைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றனர்.

சம்பரதாய பூர்வமாகத் தீபமேற்றி பஞ்சபுராணங்கள் ஓதி விழா ஆரம்பமானது. முதலில் மயில்வாகனம் பேசினார்.

''அன்பான பெற்றோர்களே, மாணவச்செல்வங்களே, ஆசிரியர்களே உங்கள் அனைவரையும் வணக்கம் கூறி வரவேற்கிறேன். எமது பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி பல்வேறு காரணங்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.இதை நிவர்த்தி செய்ய வேண்டும். இதற்கு உங்களின் ஒத்துளைப்பை நான் எதிர் பார்க்கிறேன். ஒழுங்கான கற்றலுக்கு மாணவனின் வரவு மிக முக்கியம். பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புங்கள். கொப்பிகளைப் பாருங்கள்; எம்மோடு ஒத்துழையுங்கள். இதைச் செய்தாலே போதும். எட்டாம் ஆண்டில் கல்வி கற்கின்ற மாணவனுக்கு ஐந்தாம் ஆண்டு அறிவு கூட இல்லை. இப்படி ஒவ்வொரு வகுப்புக்களிலும் கல்வி அறிவின்றிப் பல மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களை இனங்கண்டு அவர்களின் தரத்திற்கேற்பக் கற்பிக்க எண்ணியுள்ளோம். உதாரணமாக 'அம்மா' என்று எழுதத் தெரியாதவனுக்குக் கட்டுரைப் பறிச்சி அவசியமில்லை. ஆசிரியர்கள் தியாக மனப்பாங்குடன் ஒரு வருடத்திற்கு இக் கைங்கரியத்தைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். தயவு செய்து நீங்களும் இதில் பங்கேற்று ஒத்துழைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இனி நீங்கள் உங்களது அபிப்பிராயத்தைச் சொல்லலாம்...'' என்று கூறிவிட்டு மயில்வாகனம் அமர்ந்தார்.

கூட்டத்தில் சிறிது பரபரப்பு, ஒருவர் எழுந்தார்; ''என்னுடைய பெயர் பழனிவேலு. என்னுடைய மூன்று பிள்ளைகள் இங்கு படிகிறார்கள். பின்நேரம் ரியுற்ரறிக்குப் போகிறார்கள். அது தான் பிரச்சினையாய் இருக்கு....''

மதி மாஸ்ரர் வந்து மயில்வாகனத்துக்கு இரகசியமாக அவரின் பிள்ளைகளின் நிலையைப் பற்றிக் கூறி விட்டுச் சென்றார்.

மயில்வாகனம் எழுந்து சொன்னார்; ''உமது மகன் தவசீலன் ஏழாம் ஆண்டு படிக்கிறான். மூன்றாம் ஆண்டு அறிவு கூட அவனுக்கு இல்லை. வகுப்பில் முப்பத்திரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அப்படி இருந்தே படிக்க முடியவில்லை. ரியூற்றறியில் ஒரு வகுப்பில் அறுபது பிள்ளைகளுக்குக் கூட இருக்கிறார்கள் எப்பிடிப் படிக்கமுடியும்....?. அத்துடன் உங்களுடைய மகனுடைய அறிவு எங்கே இருக்கோ... அந்த இடத்தில் இருந்து தான் கல்வியை ஆரம்பிக்க வேண்டும்... இப்படி நான்இருந்த பாடசாலையில் வகுப்புக்கள் வைத்து வெற்றி கண்டனான். எட்டாம் ஆண்டில் கணிதத்திற்கு ஏழு புள்ளிகளை எடுத்த ஒரு மாணவன், ஒரு வருடத்தின் பின் நூறு புள்ளிகளை எடுத்திருக்கிறான். எனவே ஒரு வருடத்திற்கு எம்முடன் நீங்கள் ஒத்துளைக்க வேண்டும்'' என்றார்.

ஒருவரும் ஒன்றும் கூறவில்லை; ''உங்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால் கூறுங்கோ'' என்றார். சபை பேசாமல் இருந்தது; ''எனவே இனி நாங்கள் செயலில் இறங்குவோம்'' என்று கூறிக் கூட்டத்தை முடித்தார் மயில்வாகனம்.

பதினைந்து நிமிடத்தில் கூட்டம் முடிந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. காசிப்பிள்ளைக்கு மயில்வாகனம் தன்னை மேடையில் இருத்தியது மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர் மகிழ்வுடன் விடைபெற்றுச் சென்றார்.

''கூட்டம் முடிந்து வரும் போது சிவலிங்கம் சொன்னார்; ''நீங்கள் சாப்பிட்டுட்டு வாருங்கோ... ஆறுதலாகக் கதைப்பம்''.

மயில்வாகனம் சாப்பிட்டு விட்டு வந்து தனது நாற்காலியில் அமர்ந்து கொண்டு, தனக்கெதிரே இருந்த சிவலிங்கத்தைப் பார்த்துச்; ‘‘சொல்லுங்கோ’’ என்றார்.

‘‘என்னுடைய எல்லாப்பிரச்சினைகளையும் உங்களோடு தான் ஆராயிறனான். இப்ப ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டியிருக்கு...’’ என்று கூறிவிட்டு நிமிர்ந்து இருந்தவர்; ‘‘நான் கொழும்போடை போக யோசிக்கிறன்...’’ என்றார்.

மயில்வாகனம் எதுவும் பேசவில்லை. பருத்திமலையில் அவர் வேலை செய்யும் போது தோளோடு தோளாய் நின்று உளைத்தவர். பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பதவி வகித்தாரே தவிர ஒரு தொண்டனாய் இருந்த பாடசாலைக்கு ஊழியம் செய்தவர். எப்போது உதவி என்று கேட்டாலும் அள்ளித் தருபவர். அப்படியானவருக்கு ஏன் இந்த யோசனை...?’’

‘‘வரவர பிள்ளையளின்ரை படிப்பு மோசமாயிருக்கு... பிள்ளைகள் படிக்க வேணு மெண்டதுக்காகத் தான் நான் இஞ்சை இருந்தனான். ஒரு காலத்திலை யாழ்ப்பாணத்திலை திறமையான ஆசிரியர்கள் இருந்தவை. இப்ப அவையெல்லாம் குடா நாட்டை விட்டுப் போயினை... இந்த நிலமையிலை மற்ஸ் கற்பித்துக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி மாஸ்ரரும் ரிரய பண்ணீட்டார். அதோடை வெளீலை போகப் போற தெண்டு ரியூசனையும் நிப்பாட்டிப் போட்டார்.. என்னுடைய இரண்டு மகன் மாரும் அவரிட்டை தான் மற்ஸ் படிச்சவங்கள்.. இனி என்ன செய்யிறது...? நல்ல வாத்திமாரெல்லாம் வவுனியா கொழும்பு எண்டு போயிட்டினை... சுந்தரமூர்த்தி மாஸ்ரரும் போனால் எல்லாம் சரி...’’

நாட்டின் கல்வி நிலையைப் பற்றி விளக்கமாகக் கூறினார் சிவலிங்கம். இதில் எவற்றையாவது மறுப்பதற்கோ அல்லது ஆலோசனை கூறவோ யாராலும் முடியாது. எனவே மயில்வாகம் யோசித்துக் கொண்டிருந்தார்.

‘‘முந்தி இவ்வளவு பிரச்சினை இருக்கேல்லை. எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கல்வி சிறப்பாக இருந்தது..... இப்ப... நான் ஒரு வியாபாரி... உங்களோடை சேர்ந்ததாலை கல்வியைப் பற்றிக் கொஞ்சம் அறிஞ்சனான். சுந்தரமூர்த்தி மாஸ்ரருக்குச் செய்தது சரியே...?’’ என்று நிறுத்தினார் சிவலிங்கம்.

‘‘இதிலை சரி பிழை என்னாலை கூற முடியாது...’’ என்றார் மயில்வாகனம்.

சிவலிங்கம் சிரித்தார்; ‘‘நீங்கள் எப்பவும் மென்மையானவர். கடமையைப் பிரதிபலன் பாராமல் செய்யிறனீங்கள் உங்களிட்டை இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கக் கூடாது.... சரி அவரை எங்கடை பள்ளிக் கூடத்துக்காவது இடமாற்றம் செய்திருக்கலாம். முந்திப் படிப்பிச்சவர். பெற்றாரையும் பிள்ளைகளையும் தெரிந்தவர்... அதை விட்டுட்டு பனிப்புலத்திலை இருந்து ஒருத்தரைப் போட்டினை. பாடசாலை நாசமாய்ப் போச்சு... நீங்கள் பத்து வரிசமாய் கட்டி எழும்பிய அனைத்தும் நாசமாய்ப் போய்ச்சு... அவற்ரை குடும்பம் கொழும்பிலை. பிள்ளைகள் கொழும்பிலை படிக்குதுகள்.... மாசத்திலை பதினைஞ்சு நாளைக்கு கொழும்பிலை நிக்கிறார். பிறகு பள்ளிக்கூடத்தை எப்பிடி நடத்துகிறது...? மத்திய கல்லூரியை எடுத்தால் உபஅதிபராக இருந்த சோமசுந்தரத்தை அதிபராய் நியமிச்சிருக்கினை... பெண்சாதிதான் பள்ளிக்கூடத்தை நடத்துறா... அவான்ரை பக்கம் நாலுபேர்? எதிர்பக்கம் ஆறுபேர்? இடையிலை வம்பளக்கிறவை கொஞ்சப் பேர்... ஒரே கூத்துத்தான்... இந்த நிலைமையிலை ஊருக்கை படிக்கேலாது.. அது தான் கொழும்போடை போகலா மெண்டிருக்கிறன். மூத்தவனை லண்டனுக்கு அனுப்பச் சொல்லி தம்பி கரைச்சல் குடுக்கிறான். அங்கை வந்தால் என்ஜினியறிங் செய்யலாமென்கிறான்’’ சிவலிங்கம் கதைத்துக் கொண்டிருந்தார்.

மயில்வாகனத்திற்கு மிகவும் வேதனையாக இருந்தது தான் கண்ணைப் போலக் கட்டிக் காத்த அப்பாடசாலையின் வீழ்ச்சி அவரை நிலை குலையச் செய்தது.

‘‘அதை விட என்னுடைய மூத்த மகள் ஒரு கிராயூரேட் ரீச்சர். முப்பத்திரண்டு வயதாகுது.. ஒரு மாப்பிளை அம்பிடுதில்லையே.... வாறதெல்லாம் பீயோனும் வாச்சருமாய்க்கிடக்கு.... இல்லாட்டில் வெளிநாட்டு மாப்பிளையைச் செய்ய வேணும். செல்லத்துரையர் தன்ரை

மோனுக்குக் கேட்டவர்... லண்டனிலை இஞ்சினியர் என்று சொல்லுறார்... நான் அறிய அவன் ஓ.எல் கூட பாஸ்பண்ணேல்லை...'' மிகவும் வேதனையோடு சொன்னார் சிவலிங்கம்.

''இப்ப மாப்பிளை எங்கை இருக்கு....? ஊரிலை முக்காவாசிக் குமருகள் வயது ஏறியும் கரை சேராமல் தானே இருக்கு'' என்றார் மயில்வாகனம்.

''அது தானே சேர், இஞ்சை இருந்தால் பிள்ளையளின்ரை எதிர்காலமே பாழாகி விடும் போலை கிடக்கு... அது தான் நான் இந்த முடிவுக்கு வந்தனான்''

''இப்ப முந்தி மாதிரிப் பெற்றோர் கல்வியில் ஆர்வம் காட்டுவது குறைவு. எல்லாரும் வெளிநாட்டு மோகத்திலை இருக்கினை. அங்கை போனால் கிண்டி அள்ளலாமெண்டு நினைப்பு அதாலை பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்புற பிரச்சினையளிலை தான் அக்கறை காட்டினை. கல்வியிலை அக்கறை உள்ள உங்களைப் போன்றவையும் கிராமத்தை விட்டு வெளிக்கிடீனை. அக்கறை இல்லாதவையும் வெளுக்கிடீனை.... இது எங்கை போய் முடியப் போகுதோ...'' கவலைப்பட்டார் மயில்வாகனம்.

''எனக்குப் பணம் பொருளைப் பற்றியெல்லாம் அக்கறை இல்லை சேர். பிள்ளைகள் படிக்க வேணும். ஏனேண்டால் வெளிநாடுகள் நிரந்தரமில்லை. இப்பவே சில நாடுகளிலை வேலையில்லை யெண்டு எங்கடை பொடியள் வேறு நாடுகளுக்குப் போறாங்கள். முந்தி மேற்கு நாடுகளிலையும் மதச் சண்டைகள் நடந்தது தானே.... அப்பிடி ஒரு நிலமை திரும்பவும் வராது என்று எப்பிடிச் சொல்லுறது...?'' கவலைப்பட்டார் சிவலிங்கம்.

மயில்வாகனம் நினைத்துக்கூடப் பாராத விடயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார் சிவலிங்கம்.

அப்பொழுது சிவராசா அலுவலகத்துக்குள் வந்தார்.

''பிளாஸ்கிலை ரீ இருக்கு. வாக்கிலை வடை இருக்கு. நீங்கள் எடுத்துக் கொண்டு போய் ஆசிரியர்களுக்குக் குடுங்கோ'' என்றார் மயில்வாகனம்.

சிவராசா பிளாஸ்கையும் வடையையும் ஐந்து டம்ளர்களையும் எடுத்துக் கொண்டு சென்றார்.

''ஒரு வெளிநாட்டில் வாழ்பவர் மாலை நேர வகுப்பு மாணவர்களுக்கு இருநூறு கொப்பிகளும் ஆசிரியர்களுக்கு ரீச்செலவுக்கும் உதவி செய்திருக்கிறார்'' என்றார் மயில்வாகனம்.

''நீங்கள் ஆட்களை வளைச்சுப் பிடிச்சுப் போடுவியள்..''

''எனக்கு இன்னும் நாலு வரிசமிருக்கு அது மட்டும் தானே சேவை செய்ய முடியும். அதுவரை செய்யக் கூடியதைச் செய்வம். ஒரு பள்ளிக்கூடத்தை நடத்திற லேசுப்பட்ட வேலை இல்லை. முந்தியெண்டால் கிராமங்களிலை பெரிய பணக்காரர் இருந்தினை. அவை பள்ளிக்கூடங்களுக்காக அள்ளி இறைச்சினை. பருத்திமலையிலை நமசிவாயகம் தன்ரை தாயின்ரை நினைவாய் இரண்டு லட்சம் ரூபா செலவழிச்சு ஒரு மண்டபம் கட்டித் தந்தார்... அவரை மாதிரிக் கட்டிடங்கள் கட்டிக் குடுக்கிறவை. கிராமங்களிலை இருந்தவை. அப்பிடிக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிறது புண்ணிய மெண்டு நினைச்சவை. இப்ப அப்பிடி ஆர் இருக்கினை... இப்ப பள்ளிக் கூடங்களிலை களவு எடுக்கறவை தான் கூட..... இந்தப் பள்ளிக் கூடத்திலை போன கிழமை நூறு ஓடுகளைக் கழட்டிப் போட்டாங்கள்..''

''என்ன?'' அதிர்ச்சியுடன் கேட்டார் சிவலிங்கம்.

''இப்ப ஊர் முழுக்கக் கசிப்பு விக்கிறாங்கள். குடிக்கிறத்துக்காகக் கழட்டுறாங்கள். ஒரு ஓடு முப்பது முப்பத்தைந்து ரூபா போகுது. பத்து ஓடு கழற்றினால் மூண்டு நாளைக் கெண்டாலும் குடிக்கலாம்... இப்ப சனம் பழிபாவத்துக்குக் கூட அஞ்சுறது கிடையாது ஆளில்லாத வீடுகளிலை ஓடு மட்டுமே கழற்றுறாங்கள். நிலை யன்னல்களைக் கூட இடிச்செடுக்கிறான்கள்..'' என்றார் மயில்வாகனம்.

“எங்கடை ஊரிலையும் உதுகள் நடக்குது தான்... நிலமையைப் பார்த்தால் கவலையாய்த் தான் கிடக்கு... நாங்கள் என்ன செய்ய முடியும்..?” இதுகளுக்கு மத்தியிலும் நாங்கள் இருக்கிறத்துக்குக் காரணம் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்பதற்காகத் தான். அதுக்கும் ஆபத்து வந்தால் என்ன செய்யிறது...?” கவலைப்பட்டார் சிவலிங்கம்.

“பருத்திமலை மகாவித்தியாலயத்திற்குச் சுந்தரமூர்த்தியைப் போட்டிருக்கலாம். எதுக் கெடுத்தாலும் பதட்டப்படுறதும், அவசரப்படுறதும், ஆத்திரப்படுறதும், ஆராயமல் கதைக்கிறதும் கூடாது. அதிபர் வேலை சாதாரண வேலை இல்லை... பொறுமை, சகிப்புத்தன்மை, கனக்கக் கதையாமை, விட்டுக்கொடுக்கிற மனப்பாண்மை, எதையும் செய்யுற துணிச்சல், மேலதிகாரி என்ற தலைக்கணம் இல்லாமல் பணிவாய் நடக்கும் தன்மை இப்படி பல நல்ல தன்மைகள் இருக்க வேணும். இவை யாவும் சுந்தரமூர்த்தியிடம் உண்டு. உமக்குத் தெரியும் தானே மிஸ் சின்னையாவை மெண்டல் என்று சொல்லி மத்தியகல்லூரியிலை இருந்து ஜீரீஎம்எஸ்சுக்கு மாத்தினவை அங்கை இன்னும் கூடிற்ருது. அதிபர் வேண்டாமெண்டவர். ஒன்றும் செய்யேலாமல் டீடீ ஒரு மாதிரி வைச்சிருக்கோ எண்டு என்னைக் கேட்டவர். இப்ப அவா தான் கோட்டத்திலை சிறந்த ஆசிரியர்..”

சிரித்த சிவலிங்கராசா சொன்னார்; “சில பள்ளிக் கூடங்களிலை வருத்தமில்லாதவர்களையும் வருத்தக்காரர் ஆக்கிப் போடுவினை... அதிலை ஒண்டு தான் அந்தப் பள்ளிக்கூடம். மிஸ்சின்னையா எவ்வளவு திறமான ஆசிரியர் என்று எங்கடை பள்ளிக் கூடத்துக்கு வந்தாப் பிறகு தான் தெரிந்தது...” என்றார் சிவலிங்கம்.

“ஒவ்வொருவரையும் நடத்திற முறையிலை தான் அவர்களின்ரை திறமை வெளிப்படுது..... போனவருடம் மாவட்ட மட்டத்திலை நடந்த கட்டுரை, பேச்சுப் போட்டிகளிலை எங்கடை பள்ளிக்கூடம் வென்றதற்கு மிஸ்சின்னையான்ரை கடுமையான உழைப்புத்தான் காரணம்...” என்றார் மயில்வாகனம்.

“பருத்திமலை மகாவித்தியாலய ஆசிரியர்கள் இப்பவும் நல்லாய் கடமை செய்யினை.. அதிபர் அடிக்கடி கொழும்புக்குப் போறது தான் பிரச்சினையாய்க் கிடக்கு... அண்டைக்கு மீற்ரிங்கிலை கேட்டனாங்கள். அவர்; நான் இடமாற்றத்துக்கு ஓடித்திரியுறன்.. தரீனை இல்லை.... தந்தால் உடனை போயிடுவன்” என்கிறார். அதிபர்ரை வரவு ஒழுங்கில்லாமல் இருக்கிறது தான் பிரச்சினையாய் இருக்கு. உங்களுக்குத் தெரியும் தானே.... செல்லப்பா மாஸ்ரரும் கண்மணி ரீச்சாரும் பிந்தி முந்தி வரீனை... டிப்புயூட்டி கண்டிக்கப் போகப் பிரச்சினையாய்க் கிடக்கு....” என்றார் சிவலிங்கம்.

“ஒவ்வொருவருக்கும் தம்முடைய பிள்ளைகளின் கல்வியில் அக்கறை இருக்கத்தான் செய்யும். அது மாதிரித்தான் உங்கடை அதிபரும் செயற்படுறார்....”

“அதை நான் ஒத்துக் கொள்ளுறன் சேர். ஆனால் இந்த ஏழைப் பிள்ளைகளின்ரை நிலை என்ன?” கவலைப்பட்டார் சிவலிங்கம்.

“அதைப்பற்றி ஆர்சிந்திக்கினை? சிந்திச்சாப் போலை சரிப்படுமே. இப்ப எங்கடை பள்ளிக்கூடத்திலை ஆறு ஆசிரியர்கள் பற்றாக்குறை... இந்தக் கிழமை இரண்டு பேர் வெளீலை போறதாய் லீவு தந்திருக்கினை... நான் என்ன செய்யிறது” ஏதோ உள்ளதை வைத்துக் கொண்டு செயல்படுறன்.. ஊரிலை படிச்ச பிள்ளைகளைக் கூட்டிவந்து படிப்பிக்கிறன்... இதுக்கு மிஞ்சி என்னாலை என்ன செய்ய முடியும்.?” பெருமூச்சு விட்டார் மயில்வாகனம்.

“சரி சேர், உங்களையும் நான் மினக்கெடுத்துறன்... அப்ப நான் வாறன்” எழுந்தார் சிவலிங்கம்.

“சரி போய்க் கடிதம் போடுங்கோ. மறந்திடாதைங்கோ....” என்றார் மயில்வாகனம்.

“உங்களை மறக்க முடியுமே...? கட்டாயம் கடிதம் போடுவன்” என்று சொல்லி விட்டு நடந்தார் சிவலிங்கம்.

மயில்வாகனத்துக்கு வேதனையாக இருந்தது. நல்ல நல்ல நண்பர்களெல்லாம் விட்டுப் போகிறார்களே என்று நினைத்தார். சிவலிங்கத்தின் மோட்டார் சைக்கில் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது.

## *18*

அன்று சனிக்கிழமை. அன்று ஐந்தாம் ஆண்டு ஸ்கொலசிப் வகுப்பு பாடசாலையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலதிக வகுப்புக்கள் நடைபெற்றால் மயில்வாகனமும் அவ்வகுப்புக்கள் முடியும் வரை பாடசாலையில் இருப்பது வழக்கம். ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கும் மாணவர்களது தேவைகளைக் கவனிப்பதற்கும் பிறர்குறை கூறாதிருப்பதற்காகவும் அவர் அங்கு இருப்பார்.

அன்று சிவராசா மாதிரி வினாத்தாள் ஒன்று தயாரித்து றோனியோ பண்ணி மணவர்களுக்குக் கொடுத்திருந்தார். அலுவலகத்திற்கு முன்னால் இருந்த மண்டபத்தில் பரீட்சை நடைபெற்றதால் சிவராசாவும் அதிபரோடு அலுவலகத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்.

பழைய மாணவர்கள் சிலர் பரீட்சையை மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர். மாணவர்களது பெற்றோர் சிலர் பிள்ளைகளைக் கூட்டி வந்து பரீட்சை எழுத விட்டு விட்டு மண்டபத்திற்கு அருகே இருந்த வேப்பமர நிழலில் அமர்ந்திருந்தனர். அலுவலகத்தில் இருந்து பார்த்தால் பரீட்சை எழுதும் மாணவர்கள் எல்லோரையும் தெரியும். இருந்தாலும் அடிக்கடி சிவராசா பரீட்சை மண்டபத்துக்குச் செல்வதும் அலுவலகத்திற்கு வருவதுமாக இருந்தார்.

“பிள்ளைகள் எப்படி...?” மயில்வாகனம் கேட்டார்.

“பிள்ளைகளை நம்பேலாது சேர். ஒவ்வொரு ரெஸ்ட்சையும் ஒவ்வொருமாதிரிச் செய்யிறாங்கள். போன முறை நூற்றி அறுபத்தைந்து மாக்ஸ் எடுத்த பகீரதன் இந்த முறை நூற்றிப்பத்தெடுத்திருக்கிறான். தயாளினி நூற்றி நாற்பது, நூற்றி ஐம்பது எண்டெடுக்கிறவா் போனமுறை தொண்ணூற்றொண்டு எடுத்திருக்கிறாள். அதை மாதிரித்தான்... லோகிதா தாட்சாயிணி, ஆரணி,...... சொல்லேலாமல் கிடக்கு” கவலைப்பட்டார் சிவராசா.

“ஏன் சலிப்படையிறியள்...”

“சீச்சீ.... சலிப்படையேல்லை..... பிள்ளைகளின்ரை நிலையைச் சொல்லுறன்...”

“சின்னப்பிள்ளைகள் தானே.... நாங்களும் அளவுக்கு மிஞ்சிக் கசக்கிறம் போலை கிடக்கு.....

“அப்படி யெண்டில்லை.... பேப்பர் அப்பிடி.... அதோடை பிள்ளை வீட்டிலை இருந்து வர்ற மனோ நிலையைப் பொறுத்தும் இருக்கு.... வளர்மதீன்ரை தகப்பன் சரியான குடிகாரன்... இராத்திரிக் குடிச்சிட்டு ஒரே அட்டகாசமாம்.... பிள்ளைகளும் தாயும் அவனுக்கு ஒளிச்சு பக்கத்து வீட்டிலை படுத்தவையாம்.. காலமை தாய்மனிசி வந்து சொல்லி அழு அழு எண்டு அழுதுது.... வளர்மதி கெட்டிக்காரி....பாஸ்பண்ணக் கூடியவள்... இராத்திரி இப்பிடி ஒரு சம்பவம் நடந்தால் பிள்ளை விடிய எப்பிடிச் சோதினை எழுதுறது....?” என்றார் சிவராசா.

சிவராசாவுக்கு எல்லாப் பிள்ளைகளினதும் குடும்ப விசயங்கள் தெரியும். பெற்றாரைத் தேடி வீடுகளுக்கும் செல்வார். அத்துடன் வழி தெருக்களில் பெற்றாரைக் கண்டால் பிள்ளைகளைப் பற்றிக் கூறுவார். இதனால் பாதையை மாற்றிச் செல்லும் பெற்றோரும் இருக்கிறார்கள். பிள்ளையிடம் கொப்பி இல்லாவிட்டால் வாங்கியும் கொடுப்பார். ஆனால் சம்பந்தப்பட்ட பெற்றாரைக் கண்டால் பேச்சும் விழும்..

பரீட்சையை மேற்பார்வை செய்த பழைய மாணவன் ஒருன் வந்து; ‘‘தயாளினிக்கு நாற்பதாவது கேள்வி விளங்கவில்லையாம்’’ என்று சொன்னான். சிவராசா எழுந்து வெளியே சென்றார்.

தபாற்காரன் அலுவலத்துள் நுளைந்து இரண்டு கடிதங்களைக் கொடுத்து விட்டுப் போனான். ஒன்று வெளிநாட்டுத் தபால். மற்றது கோட்டக்கல்வி அதிகாரியினுடையது.

கோட்டக்கல்வி அதிகாரியின் கடிதத்தைப் பிரித்தார். அது கணித விஞ்ஞானப் போட்டி சம்பந்தமானது. அதை வைத்து விட்டு வெளிநாட்டுக் கடிதத்தை எடுத்துப் பார்த்தார். நடராசா ஆசிரியர் எழுதி இருந்தார். கடிதத்தைப் பிரித்தார்.

‘‘அன்புள்ள சேர், மற்றும் குடும்பத்தினருக்கும் நாங்கள் யாபேரும் நலம். உங்கள் குடும்ப நலத்தையும் பிள்ளையார் காப்பாற்றுவார். நானும் மனைவியும் மகளும் சுகமாக கனடாவுக்கு வந்து சேர்ந்தோம். விமான நிலையத்தில் மருமகன் வந்து எங்களை அழைத்துச் சென்றார்.

நமது நாடு, சுற்றம், சமூகம் இதுகளையெல்லாம் சொல்லிக் கொண்டு உங்கு இருந்தது எவ்வளவு தவறு. நான் இங்கு வரும்வரை கண்ணீர் விட்டுக் கொண்டு தான் வந்தேன், ஆனால் இங்கு வந்த பின்பு தான் தெரிகிறது. எவ்வளவு முட்டாளாக வாழ்ந்திருக்கிறேன் என்று.... இங்குள்ள வசதிகள், வாய்ப்புக்கள், இன்பங்களுக்கு ஈடாக உலகில் ஒன்றுமே இல்லை. மனிதனின் வாழ்க்கை சொர்ப்ப காலம். அதிலும் என்னைப் போன்ற வயோதிபர்களின் வாழ்க்கை இன்றோ நாளையோ எண்டிருக்கு. எனவே பிள்ளையுடன் குதூகலமாகவே இருக்க விரும்புகிறேன். மருமகன் நல்லதொரு வீடு வாங்கி வைத்திருக்கிறார். எல்லா வசதிகளும் இருக்கு. ரெலிபோனில் எனது உற்றார் உறவினர்கள் தொடர்பு கொண்டு நலம் விசாரிக்கிறார்கள். அதை விட இங்கு ஒரு பிள்ளையார் கோயிலும் உண்டு. ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறுகின்றன. கோயிலுக்கு என்று மேளமும் இருக்கிறது. ஓய்வான நேரங்களில் போனால் சுவாமி தரிசனம் செய்வதோடு இனத்தவர் நண்பர்களையும் பார்த்துப் பேசலாம்.

மூன்று தமிழ்ப்பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஏராளமான தமிழ் நூல்கள் கடைகளில் உள்ளன. இங்கு எந்தக் குறையும் இல்லை. அத்துடன் தமிழ்ப்பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்குப் பாடசாலை ஒன்றும் உண்டு. நான் அங்கு ஆங்கிலம் மூலம் தமிழ் கற்பிக்கிறேன். பிள்ளைகள் எல்லாருக்கும் என்னைப் பிடித்துள்ளது. இரண்டாயிரம் அமரிக்க டொலர் சம்பளமாகத் தருகிறார்கள். காரில் வந்து ஏற்றிச் சென்று பின் கொண்டு வந்து விடுகிறார்கள்.

சேர் உங்களில் அக்கறை உள்ளமையால் எழுதுகிறேன். தயவு செய்து உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாழாக்க வேண்டாம். உடனே மாலதியையும் சுந்தரையுமாவது அனுப்புங்கள். மற்றும் ஆசிரியர்கள் எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லுங்கள். குறிப்பாக சிவராசா மாஸ்ரரை விசாரித்ததாகக் கூறவும் வேறு இல்லை.

இப்படிக்கு,<br>
அன்புள்ள,<br>
ச.நடராசா.

‘‘ஆற்றை சேர் கடிதம்....’’ என்ற படி உள்ளே வந்தார் சிவராசா.

‘‘நடராசாவின்ரை...’’

‘‘நடராசா சேரின்ரையோ.... என்னவாம்...’’

‘‘இந்தாரும் பாரும்..’’

‘‘உங்களுக் கெண்டு வந்திருக்கு’’

‘‘பரவாயில்லை வாசியும்....’’

சிவராசா கடிதத்தை உரத்து வாசித்தார். அவர் அப்படித்தான் கடிதங்களை வாசிப்பது. இதனால் மாணவர்கள் கேட்டுக் கொண்டு போய் வீடுகளில் சொல்வதும் உண்டு. கடிதம் வாசிப்பதைச் சற்று நிறுத்தி விட்டுச் சொன்னார்; ‘‘போன முறை வைச்ச சோதனைப் பேப்பர் திருத்தியாச்சு எடுத்துப் பாருங்கோ’’ மயில்வாகனம் விடைத்தாள்ப் பொதியைப் பிரித்தார். மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் விடைத்தாள்கள் அடுக்கப்பட்டிருந்தன. இருபத்தொரு மாணவர்கள் நூறுபுள்ளிகளுக்கு மேல் எடுத்திருந்தனர்’’ பரவாயில்லை’’ என்று எண்ணினார் மயில்வாகனம்.

‘‘போக முன்னம் சொத்து, சுகம், மண்ணெண்டெல்லாம் கவலைப்பட்டார். இப்ப? சொத்தும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம் சந்தோசமாய் வாழுறதே போதும் என்கிறார்’’ என்றார் சிவராசா.

‘‘மனிசற்றை மனம் அப்பிடித்தானே. ஒன்று கிடைக்கும் வரை அதில் ஆசைப்படும் கிடைத்துவிட்டால் சலிப்படைஞ்சிடும்... நடராசா புதியதொரு சூழ்நிலையைக் கண்டிட்டார். கொஞ்ச நாளைக்கு நல்லாயிருக்கும்...’’ என்றார் மயில்வாகனம்.

‘‘உங்களையும் வரச் சொல்லி எழுதியிருக்கிறார்... போகப் போறியளே....’’

சிரித்தார் மயில்வாகனம்; ‘‘உலகம் போற போக்கைப் பார்த்தால் நாளைக்கு என்ன நடக்குமெண்டு சொல்லேலாது’’

‘‘அப்ப உங்களுக்கும் மனமிருக்கு..’’

‘‘அப்பிடியில்லை.... இஞ்சை இருக்கு மட்டும் ஒப்பாரி வைச்ச நடராசா அங்கை போனதும் சொர்க்கத்திலை மிதப்பதாய் நினைக்குது.... மாலதிக்கு விருப்பமில்லை. மற்றவை எல்லாருக்கும் விருப்பம். மாலதிக்கும் கலியாணம் முடிஞ்சிட்டால் பிறகு புரிசன் சொல்லுறபடி தானே நடப்பாள்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘சேரின்ரை கதையை பார்த்தால் போவியள் போலை கிடக்கு...’’ சிரித்தார் சிவராசா.

‘‘இல்லையில்லை.... என்ரை மனதில் இதுவரை அப்பிடியான எண்ணமில்லை... இனி எப்பிடி போகுதோ தெரியாது.’’என்றார் மயில்வாகனம்.

‘‘சிலர் காசுக்காகப் போயினை. சிலர் மேற்படிப்புக்காகப் போகினை. சிலர் வேலையில்லாதத்தாலை போயினை. சுந்தரமூர்த்தி விரத்தியாலை போறார். நடராசா குடும்பத்தோடை இணையப் போறார்.... இப்பிடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்துக்காகப் போனால் இஞ்சை ஆர் வாழுறது’’ என்று கேட்டார் சிவராசா.

‘‘உதையேன் எங்களுக்கு? வாங்கிற சம்பளத்திற்கு ஒழுங்காக வேலையைச் செய்வம்... நடக்கிறதுகளைக் கண்டு கொள்ளுவம்..’’ சலிப்புடன் சொன்னார் மயில்வாகனம்.

அப்போது பரபரப்புடன் நவரத்தினம் அங்கே வந்தார்; ‘‘சனிக்கிழமையிலையும் பள்ளிக் கூடம் வைக்கிறியளே...? வீட்டை போய்த்தான் இஞ்சை வாறன்.... இந்தாங்கோ இந்தக் கடிதத்தை ஒருக்கால் வாசிச்சுச் சொல்லுங்கோ.... செஞ்சிலுவைச் சங்கக் காரர் கொண்டந்து தந்திட்டுப் போயினை...’’

மயில்வாகனம் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். நவரத்தினத்தின் மூத்தமகன் தாயின் சுகம் கேட்டு எழுதியிருந்தான்; ‘‘அம்மாவின் சுகம் எப்படி யென அறியத்தரவும். கடுமையான சுகவீனமா?’’ என்று கேட்டிருக்கிறான். பதிலை இதிலை எழுதிக் கொண்டு போய்க் கொடுத்தால் அவை அனுப்புவினை.

‘‘கடுமையான சுகவீனம் உடன் வரவும்’’ என்று எழுதித் தாங்கோ என்றார் நவரத்தினம்.

மயில்வாகனம் ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்து விட்டு; ‘‘உடனை கொண்டு போய்க் குடுங்கோ’’ என்றார்.

அவர் செல்லக் கல்யாணிரீச்சரும் பிரணவனும் அங்கு வந்தனர்.

‘‘வாருங்கோ....’’ என்று வரவேற்றார் மயில்வாகனம்.

பரீட்சைக்கான நேரம் முடிந்ததால் சிவராசா விடைத்தாள்களை வாங்குவதற்காகச் சென்றார்.

‘‘இருங்கோ...’’ என்றார் மயில்வாகனம்.

‘‘நாங்கள் நாளைக்கு கப்பலிலை கொழும்புக்குப் போறம். சொல்லிப் போட்டு போகலாமெண்டு வீட்டை போய்த்தான் இஞ்சை வாறம்... நான் வெளீலை போறதெண்டால் ஏதாவது கடிதம் தரவேணுமே சேர்’’ என்று கேட்டாள் கல்யாணி.

‘‘திரும்பி வாறதாயிருந்தால் தான் டிப்பாட்மன்ரின்ரை பெமிசன் தேவை.... இல்லாட்டித் தேவையில்லை..’’ என்றார் மயில்வாகனம்.

‘‘நாங்கள் ஏன் இஞ்சை வரப்போறம்?’’ என்றான் பிரணவன்.

மயில்வாகனம் எதுவும் பேசவில்லை. கல்யாணி சொன்னாள்; ‘‘பாடத்திட்டங்கள், மற்றும் எனக்குத் தரப்பட்ட பாடசாலைப் பொருட்களெல்லாம் இந்த வாக்குக்குள் இருக்கு. செக் பண்ணி எடுங்கோ’’.

மயில்வாகனம் அவற்றைக் கணக்கெடுத்தார். பின்பு; ‘‘எல்லாம் சரி’’ என்றார்.

‘‘அப்ப நாங்கள் போயிட்டு வாறம்’’ என்று எழுந்தாள் கல்யாணி.

‘‘நீங்கள் இந்த ஊரவர். பாடசாலைக்கு ஏதாவது உதவி செய்யலாம்’’ என்றார் மயில்வாகனம்.

‘‘பிரணவன் பொக்கற்றுக்குள் கையை விட்டு பேர்சை எடுத்துப் பிரித்து ஐந்து ஆயிரம் ரூபா தாள்களை எடுத்து மயில்வாகனத்திடம் நீட்டினான்.

‘‘தாங்ஸ்.... தாங்ஸ்’’ என்று இரு முறை கூறி அதைப் பெற்றுக் கொண்ட மயில்வாகனம்; ‘‘பொறுங்கோ றிசீட் தாறன்’’ என்றார்.

றிசீற் எழுதிக் கொடுத்ததும் இருவரும் புறப்பட்டனர்.

மயில்வாகனம் பாடசாலைக் கேற் வரை வந்து அவர்களை வழியனுப்பினார். பரிசளிப்பு விழாச் செய்ய என்ன செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருந்தவருக்கு நிதி கிடைத்தது பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.

மாணவர்கள் பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறினார்கள். மயில்வாகனம் அலுவலகத்தைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டார். சிவராசா அவரைப் பின் தொடர்ந்தார்.

மயில்வாகனம் வீட்டுக்கு வந்த போது, வீடு அமர்களப்பட்டுக் கொண்டிருந்தது. ரவியும் தாயும் வந்திருந்ததே அக்குதூகலத்திற்குக் காரணம்.

மயில்வாகனம் வீட்டுக்கு வந்த போது சுவரில் இருந்த மணிக்கூடு இரண்டு முறை அடித்து ஓய்ந்து முட்கள் சிறிது நகர்ந்தும் இருந்தன.

‘‘நேற்றைக்கே சொன்னனான் ரவியையும் தாயையும் இண்டைக்கு மத்தியானச் சாப்பாட்டுக்கு வரச் சொல்லியிருக்கு, இண்டைக்குப் பள்ளிக் கூடம் போகாதைங்கோ, அப்பிடிப் போனாலும் நேரத்துக்கு வந்திடுங்கோ என்று. எப்ப நீங்கள் எங்கடை சொல்லைக் கேட்டனீங்கள்.

விடியப்பிறத்திலை இருந்து நடுச்சாமம் வரை பள்ளிக்கூடமென்று பேயாய் அலைஞ்சால் வீட்டைக் கவனிக்கிறது ஆர்...? வீட்டைத்தான் நான் கவனிச்சாலும் நல்ல நாளிலை எண்டாலும் வீட்டிலை நிக்கக் கூடாதே?'' இலட்சுமியம்மாளின் நெஞ்சுள் பொங்கிய ஆத்திரம் கோபமாக மாறிச் சில கணங்கள் அதிர்ந்து பின் அழுகையாகப் பொங்கி வெடித்தது.

பாடசாலைப் பிரச்சினைகள் சில வேளைகளில் இலட்சுமியம்மாளை இப்பிடியான நிலைக்குட்படுத்துவதுண்டு. அந்த வேளைகளில் மயில்வாகனம் அமைதியைக் கடைப்பிடிப்பார். ஒரு கள்ளச் சிரிப்புச் சிரிப்பரே தவிர எதுவும் பேசமாட்டார்.

ஏதாவது பேசினால் தானே தொடர்ந்து பேசலாம், அவர் அமைதியைக் கடைப்பிடிக்க இலட்சுமியம்மாள் தண்ணீர் தெளிக்கப்பட்ட நெருப்புத்தணல் போலச் சட்டென்று அடங்கி விடுவாள்.

அன்று சிவராசாவுக்குத் தனது மருமகனைக் காட்டி அவரோடு சாப்பாடு கொடுக்கக் கூட்டி வந்திருந்தார் மயில்வாகனம்.

சிவராசா கலகலப்பாகக் கதைப்பவர். மயில்வாகனம் அப்பாடசாலைக்கு வந்த பின் அடிக்கடி அங்கு வந்து போவதால் ஜிம்மனில் இருந்து சகலருடனும் சினேகிதமாகி இருந்தனர்.

''பாருங்கோ மாஸ்ரர் இண்டைக் கெண்டு இந்தாள் சோதினையை வைச்சிருக்கு... பின்நேரம் வைச்சிருக்கலாம் தானே. மருமோனும் தாயும் பத்துமணிக்கே வந்திட்டினை. மூன்று மணிக்குப் போக வேணுமாம்... இப்ப இரண்டே காலாச்சு... இனிச் சாப்பிட்டுட்டு எப்ப போறது'' ஆத்திரப்பட்டாள் இலட்சுமியம்மாள்.

சிவராசாவுக்கு அது நியாயமாகவே தோன்றியது; ''எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தால் நேரத்தோடை அனுப்பியிருப்பன்'' என்றார்.

''வாருங்கோம்மா.... சாப்பாடு ரெடி... அப்பாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாதே... எப்பிடிப் பேசினாலும் அவர் பள்ளிக் கூடத்தை விட்டுட்டு வரார்... இது தெரியாமல் இவ்வளவு காலமும் அவரோடை வாழ்ந்திட்டியள்..'' கோபத்தைத் தாய் மீது காட்டினாள் மாலதி.

மயில்வாகனமும் சிவராசாவும் கைகழுவி விட்டு சாப்பாட்டு மேசைக்கு வந்த போது மாலதி, ரவீந்திரன், சுதா, சுந்தர், ரவியின் தாய் செல்வராணி, சுவர்ணா, மயூரன் எல்லோரும் அமர்ந்திருந்தனர். மயில்வாகனமும் சிவராசாவும் அருகருகே அமர்ந்தனர். இலட்சுமியம்மாள் எல்லோருக்கும் பரிமாறி விட்டுக் கரண்டியுடன் மயூரனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள். மயில்வாகனம் அவளை நிமிர்ந்து பார்த்தார். மயில்வாகனம் தன்னைப் பார்த்ததும் இலட்சுமியம்மாள் மறுபக்கம் திரும்பித் தனது கோபத்தைக் காட்டினாள். மயில்வாகனம் சிரித்து விட்டு மாலதியைப் பார்த்துக் கண்சிமிட்டினார்.

அதைப்புரிந்து கொண்ட மாலதி; ''அம்மா நீங்களும் இருங்கோ'' என்றாள்.
''நான் எல்லாருக்கும் போட வேணும்''

''வேண்டாம் இருங்கோ'' என்று மாலதி சொல்ல இலட்சுமியம்மாள் மயில்வாகனத்துக்கு அருகில் இருந்த கதிரையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

மயில்வாகனம் மௌனமாக இருந்து சாப்பிட்டார். அவர் சாப்பிடும் போது கதைப்பதில்லை. அத்துடன் கதைப்பதும் பிடிக்காது. மயூரன் தான் கதையைத் தொடக்கினான்; ''நான் அப்போதையே சாப்பிட்டுட்டன். இப்ப அத்தானுக்காக இருக்கிறன்''

''உன்ரை வயிறு என்ன வயிறு...'' என்றாள் சுவர்ணா.

''பானை வயிறு'' என்றான் மயூரன்.

சுவர்ணாக்குச் சிறுவயதில் 'பானை' என்றொரு பட்டப் பெயர் உண்டு. மயூரன் சொன்னதும் ''மடையா'' என்று எழுந்தாள் சுவர்ணா.

ரவியும் மாலதியும் பெரிதாகச் சிரித்தனர். சிவராசாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''இரண்டும் தொடங்கீட்டுதுகள்'' என்றாள் இலட்சுமியம்மாள்.

''சுவர்ணா, நீ தானே அவனை வம்புக்கிழுத்தனீ'' என்றான் சுந்தர்.

''பேசாமல் இருந்து சாப்பிடுங்கோ'' அதட்டினார் மயில்வாகனம்.

''இதுகளின்ரை கூத்தை ஒரு நாளெண்டாலும் நிண்டு பார்த்தால் தான் இந்தாளுக்கு விளங்கும்'' என்றாள் இலட்சுமியம்மாள்.

சாப்பிட்டு முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கப்பல் வாழைப்பழம் கொடுத்தாள் இலட்சுமியம்மாள்.

மயில்வாகனம் கோலில் செல்வராணியுடன் கதைத்துக் கொண்டிருந்தார்; ''வாற மாசம் முதல் நாளிலை முடிச்சிட்டால் கரைச்சலில்லை. உங்கடை அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார் மயில்வாகனம்.

''எனக் கெண்டு என்ன அபிப்பிராய மிருக்கு? அவர் இருந்தால்...'' அழத் தொடங்கினாள் செல்வராணி; ''இதுகளையெல்லாம் இருந்து பார்க்க அந்தாள் குடுத்து வைக்கேல்லை'' அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாலதியும் ரவீந்திரனும் அங்கே வந்தனர்.

தாய் அழுவதைக் கண்டதும் ரவிக்கும் கண்கள் கலங்கின. கைக்குட்டையால் கண்களைத் துடைத்தான்.

## *19*

இடம் பெயர்ந்து சென்று தென்மராட்சியில் உள்ள மந்துவில் என்ற சிறிய கிராமத்தில் உள்ள வைரவர் கோயில் ஒன்றில் தான் செல்வராணியும் சுந்தரலிங்கமும் தங்கியிருந்தனர். செல்வராணிக்கோ சுந்தரலிங்கத்திற்கோ தென்மராட்சியில் ஒருவரையும் தெரியாது. அதனால் இரவோடு இரவாகப் புறப்பட்டு சனங்களோடு சனங்களாகச் சென்றனர்.

இளமைக் காலம் தொடக்கம் சுந்தரலிங்கம் அளவுக்கதிகமாய்க் குடித்தால் ஏற்கனவே நோய்வாய்ப்பட்டிருந்தான். மகன் படித்த பின்பு ஓரளவு அவன் குடியைக் குறைத்திருந்தான். இருந்த போதும் அவனது உடல் நிலை மோசமாகவே இருந்தது.

ஊரவரை அவன் ஒரு போதும் மதித்து நடக்கவில்லை. ஆனால் செல்வராணி அனைவரையும் மதித்து உதவி ஒத்தாசைகள் செய்து வந்தாள். எனவே ஊரார் அவளுக்கு உதவிகள் செய்தனர். அத்துடன் ரவி டாக்ரராகி யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் போது ஊரவர் யாவற்றையும் மறந்து அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தனர்.

சிவலிங்கத்திற்கு ரவிமீது ஒருகண் இருந்தது. அன்றைய அல்லோல கல்லோல நிலையிலும் தனது காரை எடுத்துக் கொண்டு சுந்தரலிங்கத்தின் வீட்டுக்கு வந்தார். அதற்கு முன்பே அவர்கள் சென்று விட்டனர்.

நடந்து வந்த களைப்புச் சுந்தரலிங்கத்தை வெகுவாகப் பாதித்தது. மெதுவாக நடந்து வந்து சாவகச்சேரியில் ஒரு மரநிழலில் இருந்த போது பக்கத்து வீட்டுக்குக்காரனான தில்லையம்பலத்தைச் சந்தித்தனர்.

தில்லையம்பலம் தான் மந்துவிலில் உள்ள ஒரு வைரவர் கோயிலில் இருப்பதாகவும் தன்னுடைய குடும்பம் அக்கோயிலில் இருப்பதால் அங்கு வந்தால் தங்கலாமென்றும் சொன்னான். அதை நம்பி இருவரும் அங்கே சென்றனர்.

ஒரு சிறிய வைரவர் கோயில். மூலஸ்தானம் தனியே இருந்தது. முன்மண்டபம் ஓலையால் வேயப்பட்டு இருந்தது.

கோயிலுக்கு பக்கத்தில் ஒரு நீளமான மண்டபம் இருந்தது. அதுவும் மண்ணாலான மண்டபம். இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஓலையால் அடைக்கப்பட்டிருந்தது. சுற்றி வர ஒரே பனை வெளி.

சுந்தரலிங்கத்திற்குப் பெரிய தொரு மாளிகை கிடைத்த மகிழ்ச்சி. பேசாமல் படுத்திருந்தான்.

கோயில் காரர் வந்து "நாங்கள் கோயில் கிணத்திலை பெண்களை தண்ணீர் அள்ள விடுறேல்லை... ஆம்பிளைகள் அள்ளிப்பாவியுங்கோ..." என்றனர்.

அன்று பின்னேரம் சாவகச்சேரிக்குச் சென்ற தில்லையம்பலம் திரும்பி வந்து சொன்னான்; "சுந்தரலிங்கண்ணை, சாவகச்சேரிச் சந்தையிலை லஸ்பீக்கர் கட்டி காணாமல் போனவர்களின்ரை பெயர்களைக் கூறினை. மயில்வாகனம் மாஸ்ரர் உங்களுடைய பெயரைச் சொல்லியிருக்கிறார். தனங்கிளப்பிலை செல்லத்துரை மாஸ்ரர் வீட்டிலை இருக்கினையாம். உங்களைச் சாவகச்சேரி ஆஸ்பத்திரீலை வேலை செய்யிற டொக்டர் சுந்தரராஜனோடை தொடர்பு கொள்ளட்டாம்" என்று ஒலிபரப்பிச்சினை. நான் போய்ச் சுந்தரராஜனைச் சந்திச்சனான். மாலதியும் கூட நின்றவள். மாலதி நாளைக் காலமைக்கு என்னை ஆஸ்பத்திரிக்கு ஒரு கார் பிடிச்சுக் கொண்டு வரச் சொன்னவா. உங்களைக் கூட்டிக் கொண்டு போகப் போறாவாம்" என்றான்.

மறுநாள் காலை தில்லையம்பலத்துடன் மாலதி காரில் வந்து அவர்களைத் தனங்கிளப்புக்கு ஏற்றிச் சென்று விட்டாள்.

தனங்கிளப்புக்கு வந்த ஐந்தாம் நாள் சுந்தரலிங்கம் காலமாகி விட்டான். அதை நினைத்து அழுதாள் செல்வராணி.

ரவி அழுவதைக் கண்ட செல்வராணி கண்ணைத் துடைத்து விட்டுச் சொன்னாள் "வாறதிங்கட்கிழமை அவருடைய ஆண்டுத்துவசம் வருது, அது முடிஞ்சு தெண்டால் எப்பவும் வைக்கலாம்".

மயில்வாகனம் தற்செயலாகத் திரும்பிய போது மாலதியின் முகத்தைப் பார்த்தார். மிகவும் பிரகாசமாக இருந்தது. அப்பொழுது அவரது நினைவுத் திரையில் இன்னொரு முகம் குறுக்கிட்டது.

வித்தியா.... எவ்வளவு அழகானவள். மயில்வாகனம் யூனிவசிற்றிக் கல்வி முடிந்து வெளியே வந்த போது நுவரேலியா மாவட்டத்தில் உள்ள மகாவித்தியாலயம் ஒன்றிற்கு உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டாள். அங்கு வித்தியா மாணவ ஆசிரியராக நூறு ரூபா சம்பளத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தாள்.

சரியான கூச்ச சுபாவமுடையவள். எல்லோருடனும் கலகலப்பாகப் பழக மாட்டாள். பாடசாலைக்கு வந்து பல மாதங்களாகியும் மயில்வாகனம் அவளைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவரைக் கண்டால் வித்தியா லேசாக முறுவலிப்பாள். மயில்வாகனமும் சிரிப்பார். அவ்வளவு தான் நாளடைவில் அந்த மோகனச் சிரிப்பினுள் இருந்து ஒரு காந்த சக்தி புறப்பட்டு மயில்வாகனத்தின் இதயத்தை ஈர்த்தது.

சிரிப்பு 'குட்மோனிங்காக' மாறியது. இருவரும் காலையில் குட்மோனிங்கைப் பரிமாறிக் கொண்டனர்.

கூட்டங்கள், ஆராதனைகள், பொது வைபவங்களில் இருவரின் கண்களும் கலந்து உரையாடினவே தவிர அவர்கள் உரையாடவில்லை.

மயில்வாகனத்துக்கு அவளுடன் கதைக்கப் பயம். வித்தியாவுக்குக் கூச்சம். இப்படியே ஒருவருடம் ஓடியது. அதற்கிடையில் அவருக்கு ஊரோடு இடமாற்றம் கிடைத்து விட்டது.

அவள் விரும்பினாளோ விரும்பவில்லையோ என்று கூட அவருக்குத் தெரியாது ஆனால் இன்றும் கூட அவரின் இதயத்தின் ஒரு பகுதியில் அந்த நினைவுகள் இருக்கின்றன.

தனக்கில்லாத துணிவு தனது மகளுக்கு வந்ததை நினைக்க அவருக்கு இப்போதும் ஆச்சரியமாகத் தான் இருந்தது.

இடம் பெயர்ந்து தனங்கிளப்புக்கு வந்த நேரம் முதல் மாலதி சுந்தரலிங்கத்தையும் செல்வராணியையும் நினைத்துக் கவலைப்பட்டாள். அடிக்கடி சுந்தரிடமும் மயில்வாகனத்திடமும் அவர்களைப் பற்றிப் பேசினாள்; “அவர் வருத்தக்காரன் நடக்கக் கூட மாட்டார். அவரை வைத்துக் கொண்டு அவா என்ன செய்யிறாவோ... பருத்திமலையிலை தான் இருக்கினையோ...” என்று கவலைப்பட்டாள்.

மாலதி கவலைப்படுவதைப் பார்த்து சுந்தர் தான் அந்த ஏற்பாட்டைச் செய்தான்.

மயில்வாகனம் அப்பொழுது அதைப் பெரிதாக நினைக்கவில்லை. இப்போதுதான் அவருக்கு அதன் அர்த்தம் புரிந்தது.

“இந்தாங்கோ பஞ்சாங்கம். நாளைப் பாருங்கோ” என்று பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள் இலட்சுமியம்மாள்.

“பிள்ளையார் கோயில் ஐயரைக் கேளுமன்”

“எல்லாருக்கும் நீங்கள் பார்த்துச் சொல்லுவியள். உங்களுக்கு பிள்ளையார் கோயில் ஐயர் வேணுமே...” சினந்தாள் இலட்சுமியம்மாள்.

மயில்வாகனம் சிரித்தார். சுந்தர் சொன்னான்; “வைத்தியருக்கு நோய் வந்தால் அவராலை வைத்தியம் செய்யேலாது.... வேறை ஒரு டொக்ரர் தான் வைத்தியம் செய்ய வேணும்”

முகத்தைக் கடுமையாக வைத்திருந்த இலட்சுமியம்மாளுக்குச் சிரிப்பு வந்து விட்டது; “நான் பின்நேரம் போய்க் கேட்கிறன்” என்றாள்.

“ரவி, யாழ்ப்பாணத்திலை உமக்கு வேலை தருவினையே...?” மயில்வாகனம் கேட்டார்.

“நான் யாழ்ப்பாணம் கேக்கேல்லை”

“ஏன்?”

ரவி எதுவும் பேசாது இருந்தான். சிலநிமிடங்கள் மௌனமாகக் கழிந்தது.

“இப்ப இஞ்சை டொக்ரேஸ் தட்டுப்பாடு. அனேகமான ஆஸ்பத்திரிகளிலை டொக்ரர் மார் இல்லை. எங்கடை ஆஸ்பத்திரிக்கும் கிழமைக்கு இரண்டு நாள் பனிப்புல டொக்ரர் வந்து போறார்.... நீர் இஞ்சை கடமையாற்றுறது தான் நல்லது” என்றார் மயில்வாகனம்.

“தொடங்கீட்டார் புராணம் பாட. தான் தான் கெட்டழிந்து போனவர் எண்டு பார்த்தால் சின்னஞ் சிறுசுகளையு மெல்லே கெடுக்கிறார்... நீர் இஞ்சை வேலை செய்யாதையும் தம்பி.... இவர் இஞ்சை வேலை செய்து என்னத்தைக் கண்டவர்.. இராப்பகலாய் உடம்பையும் கவனியாமல் பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமெண்டு அலையுறார்... இண்டைக்கும் பாத்தியளே.... இரண்டு மணி மட்டும் பள்ளிக்கூடம். வீடு வாசலிலை நடக்கிற நன்மை தீமை ஒண்டைப் பற்றியும் தெரியாது இராப்போலாய் உழைச்சு என்னத்தைக் கண்டவர். இப்பவும் ஒரு உதவாத பள்ளிக்கூடத்திலை தான் இருக்கிறார் நல்ல பள்ளிக்கூடங்களெல்லாம் செல்வாக்குள்ளவர்களுக்கும் அதிகாரிகளின்ரை இனத்தவர்களுக்கும் தான். சேவை அர்பணிப்பெல்லாம் வெறும் போலி” ஆத்திரத்தை வார்த்தைகளால் கொட்டினாள் இலட்சுமியம்மாள்.

மயில்வாகனம் இப்படியான வேளைகளில் சிரிப்பார். அப்பொழுதும் அவர் சிரித்தார். அச்சிரிப்பு இலட்சுமியம்மாளுக்கு எரிச்சலைக் கொடுத்தது; ''எதுக்கெடுத்தாலும் ஒரு சிரிப்பு..... சிரிச்சு சிரிச்சு வாழ்க்கையைப் பாழாக்கிப் போட்டியள்''.

''வாழ்க்கையைப் பாழாக்கிப் போட்டனா....? நானா...? ஆற்றை வாழ்க்கையை....?''

''வேறை ஆற்றை? உங்கடையைத் தான், இராப்பகலாய் உழைக்கிறியள். பெரிய அதிபர் எண்டு பெயர் எடுத்திருக்கிறியள். அப்ப அமரிக்கன் மிசன் கல்லூரியைத் தந்திருக்கலாம் தானே..''

''லட்சுமி.... ஒன்றை வைத்துக் கொண்டு கணக்குப் பார்க்காதை. மொத்தமாய்ப் பார்... எங்கடை குடும்பத்துக்கு என்ன குறை.... எல்லாப் பிள்ளைகளும் நல்ல நிலைக்கு வந்திட்டுது. அதோடை நான் பருத்திமலைப் பள்ளிக்கூடத்தைச் சின்னப்பள்ளிக் கூடமெண்டு நினைச்சிருந்தால் இந்தப் பெரிய மாப்பிளை கிடைச்சிருப்பரே.... பாடசாலைகளின்ரை தரத்திலை ஒன்றுமில்லை. அதன் செயற்பாடுகளிலை தான் எல்லாம் தங்கியிருக்கு. பருத்தி மலையை எடுத்துக் கொண்டால் பட்டணத்திலை உள்ள பிரபல பாடசாலைகளிலை உள்ள அட்மிசன் பிரச்சினைகளிலும் கூடுதலாய் இஞ்சை இருக்கு. திணைக்களம் கூட ஒரு கிராம பாடசாலை அடமிசனிலை தலையிட்டு தெண்டால் அது பருத்திமலை மட்டும் தான்.. மதிப்பைப் பொறுத்த மட்டிலும் பருத்திமலைப் பாடசாலைக்கு மாவட்ட மட்டத்திலும் நல்லமதிப்பிருக்கு. பருத்திமலை ஒரு போட்டியில் கலந்து கொண்டால் பிரபல பாடசாலைகளுக்கே தொடை நடுக்கம்.. நான் இரவுப் பகலாய் பாடசாலைக்காக உழைத்தபடியால் தான் என்ரை பிள்ளைகள் எல்லாம் நல்லாய் இருக்கு..... கணக்கை ஒரு வழியிலை பாராமல் மாறியும் பார்க்க வேணும்...'' உணர்ச்சி வசப்பட்டார் மயில்வாகனம்.

இலட்சுமியம்மாள் எதுவும் பேசவில்லை. இன்று தான் அவர் உண்மையை விளக்கிக் கூறியிருந்தார். அந்த விளக்கம் அவளுக்குத் திருப்தியைக் கொடுத்தது.

''என்னைப் பொறுத்த மட்டிலை நீர் யாழ்ப்பாணத்திலை வேலை செய்யுறது தான் நல்லது..... இங்கு வசதிகள் இல்லைத்தான். என்டாலும் எங்கடை மக்களின்ரை கஷ்டத்தைக் கொஞ்ச மெண்டாலும் குறைக்க வேணும். கெதியிலை சுந்தரும் போயிடுவன். நீர் இருக்கிறதும் இரண்டொரு வரிசம் தானே...''

''முன்பு அப்பிடித்தான் நினைச்சனான்... இனி யோசிப்பம்'' என்றான் ரவி.

''அது உம்முடைய விருப்பம். மாலதிக்கு அடுத்தடுத்த கிழமையிலை வேலை குடுத்திடுவினை. இரண்டு பேரும் ஒரு இடத்திலை வேலை செய்தால் நல்லது தானே''.

'' சரி உங்கடை விருப்பம்'' என்றான் ரவி.

இலட்சுமியம்மாளுக்கு அது பிடிக்கவில்லை. எனினும் அவள் வாய்திறந்து எதுவும் சொல்லவில்லை.

''அப்ப நாங்கள் புறப்படப் போறம்'' என்ற ரவி; ''அம்மா வாருங்கோ'' என்றான்.

நவரத்தினம் யாழ்ப்பாணம் சென்று செஞ்சிலுவைச் சங்கத்திடம் கடிதத்தைக் கொடுத்து விட்டு மயில்வாகனத்தின் வீட்டுக்கு வந்த போது நேரம் இரவு ஏழு மணி ஆகிவிட்டது.

''நீ இப்பிடித் திரிந்தால் திலகத்தை ஆர் கவனிக்கிறது..?'' இலட்சுமியம்மாள் கேட்டாள்.

''நான் என்ன செய்யிறது அக்கா, வதனனுக்குக் கடிதம் அனுப்பப் போனனான். திலகத்தைப் பார்க்கிறத்துக்கு ஒருத்தரும் இல்லை. கடைசியாய் காசிப்பிள்ளை தான் தன்ரை மனிசியைக் கூட்டிவந்து விட்டது. ... பாவம் அவன் இல்லாட்டில் என்ரை பாடு அதோகதிதான்...'' என்றார் நவரத்தினம்.

''இப்ப திலகத்துக்கு எப்பிடி?'' இலட்சுமியம்மாள் கேட்டாள்.

“இரண்டு நாளாய் வயித்தாலை கொஞ்சம் கூடப் போனது. சுந்தர் வந்து பார்த்து மருந்து குடுத்தாப் பிறகு கட்டுப்பட்டுப் போச்சு.... காலமை தொடக்கம் ஒன்றும் சாப்பிடேல்லை... ஒரு மாதிரிக் கிடக்கு அது தான்”

“சுந்தர் பருத்திமலைக்குப் போட்டான். வந்திடுவன், இருங்கோ” என்றாள் இலட்சுமியம்மாள்.

“உங்களுக்குப் பெரிய கரைச்சல்” என்றார் மயில்வாகனம்.

“அதையேன் கேக்கிறியள்.. வயிற்றோட்டம் தான் என்னைக் கலக்கிப் போட்டுது. ஒரு நாளைக்கு எட்டுப் பத்துத்தரம் போனால் என்ன செய்யிறது...? அதோடை படுக்கைப் புண்ணும் வந்திட்டுது... வயது போன காலத்திலை நான் பர்றபாடு...” என்று கலங்கினார் நவரத்தினம்.

“திலகம் சுகமாயிருந்தாலாவது பிள்ளைகளோடை போயிடலாம்..” என்றார் மயில்வாகனம்.

“காசு அனுப்புறத்துக்குத் தான் பிள்ளைகள்... எல்லாம் மாயம் வாத்தியார்... எல்லாருக்கும் எழுதினனான் எங்களையும் கூப்பிடுங்கோ என்று ஒருத்தனும் அதைப்பற்றி எழுதுறானில்லை... வேறை விசயங்கள் எழுதுறான்கள். மூத்தவன் பெண்சாதியின்ரை தகப்பனையும் தாயையும் மச்சாள்காறியையும் போனவரிசம் தான் கூப்பிட்டவன்.. இரண்டு மூன்று வரிசம் பொறுத்திருங்கோ என்று எழுதினான்... கலியாணங் கட்டிக் குடுத்திட்டால் பெண்சாதிமாற்ரை சொல்லுக்குத் தான் ஆடுவங்கள். பாசமிருந்தால் முன்னுக்கு எங்களைக் கூப்பிடலாம் தானே”. என்றார் நவரத்தினம். அவரது வேதனை வார்த்தைகளில் தெரிந்தது.

“அப்படியெண்டில்லை. காசெல்லாம் அனுப்புறவங்கள் தானே. பாசமில்லாட்டில் காசு ஒழுங்காய் அனுப்புவங்களே...? அதோடை இளையவனையும் கூப்பிட்டவங்கள் தானே... அவங்களுக்கும் என்னென்ன கஷ்டமோ..” என்றார் மயில்வாகனம்.

எனினும் நவரத்தினத்தின் மனம் அமைதி அடையவில்லை. போனவரிசமே தன்னையும் மனைவியையும் இளைய மகனையும் கூப்பிட்டிருந்தால் நடந்த கொடிய நிகழ்வுகள் இடம் பெற்றிருக்காது என்று எண்ணினார். இடம் பெயர்ந்து தென்மராட்சியில் இருந்த போது எவ்வளவு அக்கறையாக மனைவியின் பெற்றோரைக் கூப்பிட்டான்... என்பதை நினைக்க அவருக்கு வேதனை அதிகரித்தது.

“எனக் கெண்டால் திலகத்திலை நம்பிக்கை இல்லை... வாக்கு மாறிப் போச்சு... கண்டபடி பிதற்றுறாள்... அவளும் போயிட்டால் பிறகு நான் தனிச்சுப் போவன்” அழுதார் நவரத்தினம். பின்; “எல்லாம் ஆண்டவன்ரை செயல்.. நாங்கள் நினைச்சபடியே நடக்குது பாத்தியளே தங்கச்சிக்கு வந்த காலத்தை பிரணவன் தங்கச்சீன்ரை குடும்பத்தையே கூட்டிக் கொண்டு போகப் போறானாம்”.

“கல்யாணி ரீச்சற்ரை தாய் தகப்பன் தமக்கை எல்லாரும் போகப் போயினையே” ஆச்சரியத்துடன் கேட்டாள் இலட்சுமியம்மாள்.

“ஓம் ....” வேதனையோடு சொன்னார் நவரத்தினம்; “போகேக்கை எண்டாலும் வந்து ஒரு சொல்லுச் சொல்லேல்லை”.

“வசதிகள் வாய்புக்கள் இருக்கும் போது ஏழை எளியவர்களைச் சொந்தம் என்று சொல்ல வெக்கம். துன்பங்கள் வந்த பின்பு சொந்தக் காரர் கவனிக்க வில்லை என்ற கவலை. எங்கடை சமூகம் இப்பிடித்தான்” என்று எண்ணினார் மயில்வாகனம்.

“நேரம் ஏழரைக்கு மேலையாச்சு நீங்கள் போங்கோவன். நான் சுந்தர் வந்தவுடனை அனுப்பி விர்றன்.” என்றார் மயில்வாகனம்.

‘‘இல்லை.... இல்லை அவன் இளம்பிள்ளை. இரவு நேரம் தனிய வர ஏதாவது நடந்தால் கரைச்சல்’’ என்று நவரத்தினம் சொல்லிக் கொண்டிருக்கும் போது மோட்டார் சைக்கில் வரும் ஓசை கேட்டது.

‘‘சுந்தர் வந்திட்டான்’’ என்ற மயில்வாகனம் எழுந்து முற்றத்துக்கு வந்தார். நவரத்தினமும் அவரைப் பின் தொடர்ந்து வந்தார்.

மோட்டார் சைக்கிலால் இறங்கிய சுந்தர் நவரத்தினத்தைப் பார்த்து; ‘‘திலகக்காக்கு எப்பிடி’’ என்று கேட்டான்.

‘‘முந்தீல் பார்க்க மோசமாய்க் கிடக்கு’’.

‘‘ஏறுங்கோ மோட்டார் சைக்கிலிலையே போவம்..’’

நவரத்தினம் மோட்டார்ச் சைக்கிலின் பிற்பக்கத்தில் ஏறி அமர்ந்ததும் மோட்டார் சைக்கில் புறப்பட்டது.

அரை மணித்தியாலத்திற்கு பின்பு தான் சுந்தர் வந்தான். தான் தனியப் போவதாக அவன் கூறியும் நவரத்தினம் விடவில்லை. பின்னால் அமர்ந்து வந்து வீட்டில் விட்டு விட்டுப் போனார்.

‘‘திலகத்துக்கு எப்பிடி?’’ இலட்சுமியம்மாள் கேட்டாள்.

‘‘கொஞ்சம் கடுமையாகத் தான் இருக்கு. மனவேதனை தான் அவாவைக் கூடுதலாய்ப் பாதிச்சிருக்கு. இன்று முழுவதும் எதுவும் சாப்பிடேல்லை.... காலமை குளுக்கோஸ் ஏத்த வேணும் என்று சொன்னனான். நவரத்தினண்ணை வாங்கிவந்து வைத்திருந்தவர். ஏத்தியிருக்கிறன்’’

‘‘துணைக்கு ஆள்த் தேவையில்லையே...’’?

‘‘ஏன் போகப் போறியளே...?’’

‘‘பாவம்.... கொடுமைகள் செய்தாலும் உயிரெல்லே...’’ என்றாள் இலட்சுமியம்மாள்.

‘‘காசிப்பிள்ளையண்ணையின் மகள் நித்தியா நிக்கிறாள். அப்பான்ரை சென்யோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவுத் தலைவியாம். எல்லாவற்றையும் கற்று வைத்திருக்கிறாள். சும்மாய் சொல்லக்கூடாது அப்பா. அப்பா தான்... அவரை நினைக்கப் பெருமையாக இருக்கு. நீங்கள் தான் அவரைக் குறை சொன்னபடி...’’ மகிழ்ந்தான் சுந்தர்.

இலட்சுமியம்மாள் பூரிப்புடன் சிரித்தாள்; ‘‘நான் ஏன் அவரைக் குறை சொல்லுறன்... அந்தாள் எவ்வளவு பொறுப்போடை பள்ளிக்கூடத்தை நடத்துதோ... அவ்வளவு பொறுப்போடை குடும்பத்தையும் நடத்தூது... வீட்டிலை பிள்ளைகளையும் பெரிசாய்க் கண்டிக்கிறேல்லை.... ஆனால் ஒருத்தரும் குழப்படியும் வீடுறேல்லை... அதிசயமான மனிசன்... ஆனால் ஒரு சின்னப்பள்ளிக் கூடத்திலை அதிபராய் இருக்கிறது தான் எனக்குப் பிடிக்கேல்லை...’’ விம்மினாள்.

‘‘காலமை அப்பா பள்ளிக் கூடங்களைப் பற்றிச் சொன்னவர் தானே..’’ என்றார் சுந்தர்.

‘‘அந்தாள் வரிசம் முழுக்க உதுகளைத் தானே சொல்லுது... ஆரையன் வாய்விட்டுக் கேளாது.... கேட்டால் குடுப்பங்கள்’’ என்றாள் இலட்சுமியம்மாள்.

‘‘அவற்றை சுபாவம் அப்பிடி... முந்திச் சபாபதிப் பிள்ளை வித்தியாலயத்தை மதிச்சவை ஆர்... இப்ப நிலமை மாறீட்டுது... அமரிக்கன் மிசன் கல்லூரியிலை இருந்து அனேகமான பிள்ளைகள் இஞ்சை வருதெண்டு குமாரசாமியர் குறைப்பட்டார்’’ என்றான் சுந்தர்.

“ஊருக்கையும் இது பற்றி பிரச்சினை போலை தான் கிடக்கு..” என்றாள் இலட்சுமியம்மாள்.

“அது கிடக்கட்டும் ரீ ஒன்று தாங்கோ.... களைப்பாய்க் இருக்கு”

இலட்சுமியம்மாள் குசினிக்குள் செல்ல, சுந்தர் உடுப்பு மாற்றுவதற்காக தன்னுடைய அறைக்குச் சென்றான்.

## *20*

இரவு முழுவதும் நவரத்தினமும் காசிப்பிள்ளையும் நித்தியாவும் உறங்கவில்லை. திலகம் வாய் புலம்பியபடி இருந்தால், குளுக்கோஸ் ஏற்றப்பட்டு இருந்த போது அவளது கால்களும் கைகளும் அசைந்தன. நித்தியாவும் நவரத்தினமும் திலகத்தின் கைகளை அசையாது மாறி மாறிப் பிடித்துக் கொண்டு இருந்தனர்.

குளுக்கோஸ் ஏறி முடிந்ததும் நித்தியா அவற்றைக் கழற்றி வைத்தாள். அதன் பின்பு திலகம் கைகால்களை அசைத்தாலும் அவர்கள் அவ்வளவு சிரமப்படவில்லை.

திலகம் அடிக்கடி கட்டிலில் உருண்டு உருண்டு படுத்தாள். இவ்வளவு நாளும் இப்படி அவள் கஷ்டம் கொடுத்ததில்லை. நவரத்தினம் அவளைத் தூக்கி நிறுத்தி, சாப்பாட்டைத் தீத்தி விடுவார். அவள் சாப்பிட்ட பின் வாயைக் கழுவி, குடிக்க நீர் கொடுத்து படுக்க விட்டால் விடியத்தான் எழும்புவாள். இடையில் மலசலம் வந்தால் கூப்பிட்டு எழுப்புவாள். இதனால் பராமரிப்பு வேலைகள் இருந்த போதும் நவரத்தினத்திற்கு ஓய்வு இருந்தது. இன்று அப்படி இல்லை. இரவு முழுவதும் படுக்க முடியாது திலகம் உருண்டு கொண்டிருந்தாள். அவர் அவளுக்குப் பக்கத்திலேயே இருந்தார்.

அவளை நினைக்க அவருக்குப் பாவமாக இருந்தது. இளமையில் குடி வெறியிலும் ஆணவத்தாலும் எவ்வளவு கொடுமைகளைச் செய்திருப்பார். அவ்வளவையும் பொறுத்து வாழ்ந்திருக்கிறாள்.

திலகம் ஆசாரம் பார்ப்பது கூட. ஊர்க் கோயில்கள் எல்லாவற்றிற்கும் விரதம் பிடிப்பாள். அதை விடச் செவ்வாய், வெள்ளி அமாவாசை, பறுவம் என்று மாதத்தில் இருபது நாட்களுக்கு மேல் விரதம் அனுட்டிப்பாள். ஆனால் நவரத்தினத்திற்கு வெள்ளிக்கிழமைகளிலும் மீன் வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் ஊர் முழுக்க விரதம் பிடிப்பதால் மீன் மலிவாக இருக்கும். அன்று தான் அவர் கூடுதலாக வாங்கி வருவார்.

அவருக்கு நல்ல நினைவு இருக்கிறது. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு திலகம் வெள்ளிக்கிழமைகளிலும் எதுவும் பேசாது மீன்கறி சமைத்துக் கொடுக்கத் தொடங்கினாள். அந்த நினைவு அவரின் மனதில் விரிந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. பகல் இரண்டரை மணிக்கு மேலிருக்கும். அன்று அவர் வேலைக்குப் போகவில்லை. மகன் வெளிநாட்டுக்குப் போய்க் கொஞ்சப் பணம் முதல் முதலாக அனுப்பியிருந்தான். வங்கிக்குப் போய்ப் பணத்தை எடுத்துக் கொண்டு வந்தவர் அப்படியே சந்தைக்குச் சென்றார்.

அன்று வெள்ளிக்கிழமை அத்துடன் எங்கோ பொம்மர் அடித்ததால் சனங்கள் மீன் சந்தைக்கு வரவில்லை. மீன் குவிந்து கிடந்தது.

பெரியதொரு விளை மீனின் விலையைக் கேட்டார். இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குப் பெறுமதியுள்ள அம்மீனை நூறு ரூபா சொன்னான் வியாபாரி. நவரத்தினம் அதற்குப் பக்கத்தில் இருந்த அதேயளவு இன்னொரு விளைமீனையும் எடுத்துக் கொண்டு நூற்றைம்பது ரூபா கொடுத்தார். மீன் வியாபாரி ஒப்புக் கொண்டான்.

அன்று வெள்ளிக்கிழமை மட்டுமல்ல விநாயக சதுர்த்தியும் கூட. திலகம் தோய்ந்து சமைத்து விட்டு, அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வந்திருந்தமைக்கடையாளமாக நெற்றியில் திருநீறும் சந்தணப் பொட்டும் துலங்கின.

படலையைத் திறந்து கொண்டு உள்ளே வரும் பொழுதே சைக்கிலில் கொழுவிய வாக்கின் மேலால் மீனின் வால் தெரிந்தது; ''பிள்ளையாரே..'' என்று கண்களை மூடினாள் திலகம். அவளின் கன்னங்களால் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

அளவுக்கு அதிகமாகக் குடித்து விட்டு வந்த நவரத்தினம் மீனைக் குசினிக்குள் கொண்டு சென்றார்.

''இன்றைக்குச் சதுர்த்தி, அதோடை வெள்ளிக்கிழமை. வெளீலை வையுங்கோ'' என்றாள் திலகம்.

''சதுர்த்தி, வெள்ளி இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று வரும்...'' என்றபடி குசினிக்குள் மீனைக் கொண்டு போய் வைத்தார் நவரத்தினம்.

அதைத் திலகத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நவரத்தினத்திற்கு விரதம் அனுட்டானங்களைப் பற்றி எடுத்துக் கூறினாலும் விளங்காது. பொதுவாக மற்றவர்களுடைய மனங்களைப் புரிந்து கொள்ள முடியாதவருடன் என்ன பேச இருக்கிறது. என்று அவள் அடங்கி விட்டாள்.

மீனைக் கழுவிக் குழம்பும் வைத்து பொரித்தும் கொடுத்தாள். நவரத்தினம் சாராயத்தைக் குடித்து விட்டு மீன் பொரியலையும் மீன்குழம்பையும் சுவைத்து சாப்பிட்டார்.

திலகம் சமைத்து முடிந்த பின் சாணகத்தால் கைகளைக் கழுவினாள். சாணாகத்தை உருண்டையாக்கி விழுங்கினாள். அன்று முழுக்க அவள் சாப்பிடவில்லை.

மறுநாள் பிள்ளைகள் சொல்லித் தான் இவையெல்லாம் நவரத்தினத்திற்குத் தெரிந்தது. அவர் அதை ஒரு பொருட்டாக எடுக்கவும் இல்லை; கவலைப்படவும் இல்லை.

முன்பு தான் திலகத்திற்குச் செய்த ஒவ்வொரு செயலையும் இப்பொழுது எண்ணிப் பார்த்தார் நவரத்தினம்; ''சீ திலகம் எவ்வளவு பொறுமை சாலி.... நான் இதை முன்பே உணராமல் விட்டுட்டன்'' என்று கவலைப்பட்டார்.

சாமக்கோழி யொன்று தொலைவில் கூவியது. தொடர்ந்து சேவல்கள் சிறகடித்துக் கூவின. தேநீர் ஒன்று குடித்தால் நல்லது போலிருந்தது. எனவே நவரத்தினம்; ''பிள்ளை நித்தியா, திலகத்தைப் பார்த்துக் கொள், நான் அடுப்பு மூட்டுறன்..... தேத்தண்ணீர் குடிச்சால் நல்லது போலை இருக்கு'' என்றார்.

''நான் பிளாஸ்கிலை சுடுதண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறன்... போட்டந்து தாறன்..'' என்று கூறி விட்டுச் சென்றாள் நித்தியா.

''வீட்டுக்குப் பெம்பிளை இருக்க வேணும். அதுகளாலை தான் வீட்டுப் பொறுப்புக்களை உணர்ந்து செய்ய முடியும்'' என்று நினைத்தார் நவரத்தினம்.

நித்தியா தேனீர் கொண்டு வந்து கொடுத்தாள். நவரத்தினம் தேனீரைக் குடித்து விட்டுச் சொன்னார்; ''நல்லாயிருக்குப் பிள்ளை... கனநாள் இப்பிடித் தேத்தண்ணி குடிச்சு சமையலும் நல்லாய்த்தான் செய்யிறாய்... இதெல்லாம் எங்கை பழகினனீ..''

''பள்ளிக்கூடத்திலை தான்'' என்றாள் நித்தியா.

''பள்ளிக்கூடத்திலையோ....? தேத்தண்ணி வைக்க, சமைக்க எல்லாம் பழக்கீனையோ?'' ஆச்சரியத்துடன் கேட்டார் நவரத்தினம்.

''ஓம் ... மாமா கோம்சயன்ஸ் என்றொரு பாடமிருக்கு. அந்தப் பாடத்திற்குச் சமையல் மட்டுமில்லை... தையல் கூடப் பழக்கிறவை..''

“இப்ப எப்பிடிப் பள்ளிக்கூடம்”

“முந்தியும் நாங்கள் படிச்சனாங்கள் தான்.. மயில்வாகனம் சேர் பிரின்சிப்பலாய் வந்தாப் பிறகு எவ்வளவு முன்னேற்றம் தெரியுமே....? அவர் ஒரு அஞ்சு வரிசத்துக்கு முந்தியே வந்திருந்தால் எவ்வளவு நல்லதாய் இருந்திருக்கும்...” என்றாள் நித்தியா.

முன்பு ஒரு முறை அமரிக்கன் மிசன் அதிபர் குமாரசாமி மாற்றலாகிச் சென்ற போது மயில்வாகனத்தை அதிபராக்குவதற்குச் சிலபேர் ஓடித்திரிந்தவர்கள். நவரத்தினமும் காசிப்பிள்ளையும் தான் அதற்குத் தடையாக இருந்தவர்கள்.

அதை நினைக்க நவரத்தினத்துக்கு துக்கமாக இருந்தது; “மாற்றலாகி வந்து ஆறு மாதத்துக்குள் கிராமம் எவ்வளவு முன்னேறிவிட்டது. நித்தியா இல்லாவிட்டால் திலகத்திற்குக் குளுக்கோஸ் ஏற்றுவது எப்படி? மயில்வாகனம் வந்து ஆறு மாதத்துக்குள் இதெல்லாவற்றையும் பழக்கிப் போட்டார். அவர் எவ்வளவு திறமைசாலி... நான் தான் மடை வேலை பார்த்திட்டன்...” அவருக்கு அதை நினைக்க துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களில் ஊறிய நீர் கன்னங்களால் பெருகி ஓடியது.... தோளில் இருந்த சால்வையால் கன்னங்களைத் துடைத்த போதும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. வாழ்நாளில் முதல் தடவையாக குலுங்கிக் குலுங்கி அழுதார் நவரத்தினம். அவரால் அழுகையைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

நித்தியா, அவர் தனது மனைவியின் நோயை நினைத்துத் தான் அழுகிறார் என்று நினைத்தாள். அவரைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது.

நவரத்தினம் அழும் சத்தம் கேட்டுக் காசிப்பிள்ளை எழும்பி அங்கே வந்தார். திலகத்திற்கு ஏதாவது நடந்து விட்டதென்று அவர் எண்ணினார்.

“என்னடாப்பா...., என்ன பிரச்சினை?” பதறினார் காசிப்பிள்ளை.

நவரத்தினம் விம்மி விம்மி அழுதாரே தவிர எதுவும் பேசவில்லை.

“என்னம்மா நடந்தது..?” என்று மகளை விசாரித்தார் காசிப்பிள்ளை.

“தேத்தண்ணி கேட்டார். கொண்டு வந்து குடுத்தன். குடிச்சிட்டு அழுறார்.. திலகம் மாமீன்ரை வருத்தத்தை நினைச்சு அழுகிறார் போலை கிடக்கு” என்றாள் நித்தியா.

“இல்லையம்மா... இப்பத்தான் நான் மனிசனாய் இருக்கிறன். மற்றவையின்ரை பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கிறன். இவ்வளவு காலமும் மிருகமாய்... இல்லை இல்லை பேயாய் வாழ்ந்திட்டன்... மனைவியை மதிக்கேல்லை.. இனசனத்தை மதிக்கேல்லை.. அயலவரை மதிக்கேல்லை.. திமிரும் ஆணவமும் பணமும்....” விக்கி விக்கி அழுதார்; “நான் தீமை செய்தவை தான் எனக்கு இப்ப நன்மை செய்யினை. மயில்வாகனம் மாஸ்ரரை சாதிப்பிரச்சினைக்காக அமரிக்கன் மிசனிலை பிரின்சிப்பலாய் வரக்கூடாதெண்டு எதிர்த்தனான்..... இண்டைக்கு அவரும் அவற்றை பிள்ளைகளும் தான் எனக்கு மட்டுமில்லை இந்த ஊருக்கும் உதவி செய்கிறார்கள். அவர் வந்து ஆறுமாதத்திலை நித்தியா குளுக்கோஸ் ஏற்றப் பழகிவிட்டாள். என்றால் மயில்வாகனம். ஆறுவரிசத்துக்கு முந்தி அமரிக்கன்மிசன் கல்லூரிக்கு அதிபராய் வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று யோசிச்சன் அழுகை வந்திட்டுது...” குலுங்கிக் குலுங்கி அழுதார் நவரத்தினம்.

தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது.... தொடர்ந்து நாய்கள் குரைத்தன...

“இப்ப ஆமிக்காரர் இரவிலை ஒழுங்கை வழிய திரியுறாங்கள்” என்றார் காசிப்பிள்ளை.

சிறிது நேரத்தில் நவரத்தினத்தினது நாய் குரைத்தது. காசிப்பிள்ளை யன்னலூடாக ஒழுங்கையைப் பார்த்தார். பல உருவங்கள் சென்று கொண்டிருப்பது தெரிந்தது.

“தண்ணீ.....ர்.....” திலகம் முனகினாள்.

நித்தியா பிளாஸ்கில் இருந்த சுடுநீரில் மாவைச் சிறிதளவு எடுத்துக் கரைத்து வந்தாள்.

நவரத்தினம் அதை வாங்கி, கரண்டியை எடுத்து கரைத்த பாலை அள்ளித் திலகத்தின் திறந்திருந்த வாய்க்குள் சிறிதளவு விட்டுவிட்டு ‘‘விழுங்கம்மா... விழுங்கு...’’ என்றார்.

கணங்கள் நிமிடங்களாகி பதினைந்து நிமிடங்கள் சென்ற போதும் திலகம் பாலை விழுங்கவில்லை.

நவரத்தினம் பரபரத்தார்; ‘‘காசிப்பிள்ளை.... இஞ்சை வந்து பாரடாப்பா... ஓடிவா.... ஓடிவா....’’

காசிப்பிள்ளை வந்து பார்த்தார். திலகத்தில் எந்தவிதமான அசுமாற்றமும் இல்லை. வாய்க்குள் இருந்த பால் கன்னங்களால் வழிந்து கொண்டிருந்தது. அவளின் உயிர் பிரிந்து விட்டதை அவர் உணர்ந்து கொண்டார். எனினும் அவர் அதைச் சொல்லவில்லை; ‘‘பிள்ளை துணியை எடுத்து வழியுற பாலைத் துடைச்சு விடு’’ என்றவர்; ‘‘நீ போய்ப்படன்... எவ்வளவு நேரமெண்டு நித்திரை முழிக்கிறது. மாறி மாறிப் பராமரிக்கிறத்தை விட்டுட்டு எல்லாரும் முழிச்சிருந்தால் எப்பிடி? நீ போய்ப்படு நித்தியா பார்க்கட்டும்’’ என்றார்.

நவரத்தினம் மறு பேச்சின்றி எழுந்து சென்று தனது கட்டிலில் படுத்தார். எனினும் அவருக்கு நித்திரை வரவில்லை.

நன்றாக விடிந்த பின்பு தான் காசிப்பிள்ளை நவரத்தினத்திற்கு விசயத்தைச் சொன்னார்.

நவரத்தினம் விம்மி விம்மி அழுதார்; ‘‘எல்லா ஏற்பாடுகளையும் நீதான் கவனிக்க வேணும்... இந்தா இதிலை பதினையாயிரம் இருக்கு வைச்சுக் கொள்.... இந்தக் கிராமத்திலை இது வரை நடக்காத மாதிரி இருக்க வேணும்....’’ என்றார் நவரத்தினம் விம்மலுடன்.

திலகம் இறந்த விசயம் ஊர் முழுக்கப் பரவி விட்டது.

வேப்பமர நிழலில் தென்னோலையில் அமர்ந்திருந்து பறை மேளமடிப்போர் பறை அடித்துக் கொண்டிருந்தனர். அக்கிராமத்தில் பறை அடிப்பவர்கள் அத்தொழிலைக் கைவிட்டதால் அக்கிராம மக்கள் பல காலமாக பறை மேளம் பிடிப்பதைக் கைவிட்டு விட்டனர். நவரத்தினத்தின் வேண்டு கோளுக்காக பத்து மைல்களுக்கு அப்பாலிருந்து பறைமேளம் அடிப்பவர்களைக் காசிப்பிள்ளை அழைத்து வந்திருந்தார்.

வீடியோ படம் பிடிப்பவர்களும், படம் எடுப்பவர்களும் பட்டணத்தில் இருந்து தான் வந்திருந்தனர். ஊரில் உள்ள வீடியோ படப் பிடிப்பாளர்களும், படம் பிடிப்பவர்களும் மரணவீடுகளுக்குப் படம் பிடிப்பதில்லை. அதனால் அதிக பணம் கொடுத்துப் பட்டணத்தில் இருந்து அவர்களை வரவழைத்திருந்தனர்.

பட்டணத்தில் இருந்து திலகத்தின் இறுதியாத்திரைக்காக மோட்டார் வண்டி வந்திருந்தது. முற்றமெங்கும் கதிரைகள் போடப்பட்டிருந்தன. காசிப்பிள்ளை வந்தவர்களுக்கு வெற்றிலை, சுருட்டு, சுருட்டுப் புகைக்காதவர்களுக்குச் சிகரட், பீடி என்பன கொடுத்துக் கொண்டிருந்தார்.

வெற்றிலை ஒன்று பதினைந்து ரூபாவுக்கு மேல் விற்றும் நூற்றுக்கணக்கான வெற்றிலைகள் தட்டங்களில் அடுக்கப்பட்டிருந்தன. மொத்தத்தில் பெரியதொரு திருமண வைபவம் போல் அம்மரண வீடு நடந்து கொண்டிருந்தது.

ஊரில் மரணவீடு நடந்தாலும் மயில்வாகனம் பாடசாலைக்குச் சென்று தனது கடமைகளை முடித்து விட்டுத்தான் அங்கு செல்வார். அன்றும் வழமை போலப் பாடசாலை விட்ட பின்பே சென்றார்.

கிரிகைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மயில்வாகனத்தைக் கண்டதும் காசிப்பிள்ளை ஓடிவந்து வரவேற்று, கதிரையில் அமர்த்தி விட்டுச் சென்றார்.

ஊர்ச்சனம் பெரிதாக வரவில்லை. திலகத்திற்காக வந்து வந்து சென்று கொண்டிருந்தனர். காசிப்பிள்ளை வீட்டார் மரணச்சடங்கில் கலந்து கொண்டமையால் இலட்சுமியம்மாள் தான் அன்று மரணவீட்டாருக்கு மதிய உணவு சமைத்திருந்தாள்.

கிரிகைகள் முடிந்து, பெட்டியைத் தூக்கி வானில் வைத்தார்கள். நாலைந்து பெண்கள் ஒப்புக்கு மார்பில் அடித்தபடி மூன்று முறை வானை வலம் வந்தனர்.

வீடியோப்படம் பிடிப்புக்களுடன் திலகம் தனது இறுதியாத்திரையைத் தொடக்கினாள். பத்துப் பதினைந்து பேர் அதில் கலந்து கொண்டனர். மயில்வாகனம் வானுக்குப் பின்னால் சென்றார்.

தற்பொழுது சுடலைக்குச் செல்ல முடியாதவாறு கம்பி வேலி அடைக்கப்பட்டிருந்தது. அதனால் சுடலைக்கு சிறிது தூரத்தில் உள்ள ஒரு வெளிக்காணியை தற்காலிகமாக சுடலையாக்கியிருந்தனர் அவ்வூர் மக்கள்.

மயில்வாகனத்துக்கு அருகில் வந்த தேவராசா ஆசிரியர்; "ஏன் சேர் நீங்கள் எங்களுடைய பாடசாலைக்கு அதிபராய் வரக்கூடாது....? எங்களுக்கு பிறின்சிப்பல் எண்டிருக்கிறவருக்கு மூளையும் இல்லை, கிறேட்டும் இல்லை. அவை இவையை வால் பிடிச்சு வந்திருக்கிறார்...." என்றார்.

மயில்வாகனம் சிரித்தார். "நானே வாறது......" என்றார் சிறிது நேரம் பொறுத்து; "ஏன் சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்துக்கு என்ன குறை?" என்று கேட்டார்.

தேவராசா அப்பதிலை எதிர்பார்க்கவில்லை. தன்னோடு சேர்ந்து குறை நிறைகளைக் கதைப்பார் என்று எதிர்பார்த்தார். மயில்வாகனத்தின் பதில் அவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

"இல்லை, பெரிய பள்ளிக்கூடம் சீரழியுது. அது தான் சொன்னனான்... எங்கடை பள்ளிக் கூடத்திலை இப்ப ஒரே பிரச்சினை..." என்று நிறுத்தினார் தேவராசா.

'என்ன' என்பதைப் போல நிமிர்ந்து பார்த்தார் மயில்வாகனம்; "இப்ப பெற்றார் வந்து சேட்பிக்கற்றைத் தரச் சொல்லி நிக்கினை. ஒருவருக்குக் கொடுத்தால் முழுக்க உங்கடை பள்ளிக் கூடத்துக்கு வந்திடும்.... இப்ப எங்கடை பள்ளிக்கூடத்திலை மட்டுமில்லை இந்தக் கிராமத்திலை உள்ள ஒன்பது பள்ளிக்கூடத்திலையும் உதே பிரச்சினை தான்... பிறின்சிப்பல் மார் முழுக்க ஆத்திரப் படுறாங்கள்.... உங்களுக்கு வேலை வெட்டியில்லையாம்" தேவராசா சொல்லிக்கொண்டிருந்தார்.

இதே பிரச்சினைகள் முன்பு பருத்திமலையிலும் ஏற்பட்டது. மயில்வாகனம் பயப்படவில்லை. அவர் தனது செயல்களைச் செய்து கொண்டிருந்தார். பக்கத்தில் உள்ள அதிபர் மார் பகைத்துக் கொண்டிருந்தனர். இதனால் பருத்திமலைப் பாடசாலைகள் தமது அயற்பாடசாலைச் சூழலில் உள்ள பிள்ளைகளைச் சேர்க்கக் கூடாது என்று ஒவ்வொரு அதிபர் கூட்டத்திலும் பிரச்சினைகள் எழுப்பினர். அன்று பருத்திமலையில் தொடங்கிய பிரச்சினை இன்று சொந்த ஊரில் தொடங்கியுள்ளது.

தொடர்ந்து தேவராசா கதைத்துக் கொண்டு வந்தார்; "சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்தை நான் குறை சொல்லேல்லைச் சேர். அமரிக்கன் மிசன் கல்லூரி ஒரு பிரபல பாடசாலை எவ்வளவு காலமாய் நல்ல நிலையிலை இருந்தது.... இப்ப நாலைஞ்சு பிறின்சிப்பல் மார் வாய்க்காதத்தாலை விழுந்திட்டுது.... நீங்கள் வர முன்னம் சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்தை ஆர்மதிச்சவை. இப்ப அயல்கிராமங்களிலை..... ஏன் அஞ்சு மைலுக்கங்காலை இருக்கிற பருத்திமலையிலை இருந்தே பிள்ளையள் வருது. உங்கடை செயற்பாட்டுக்கு உந்தப் பாடசாலை காணாதெண்டு சொல்லுறன்... அமரிக்கன் மிசனிலை கட்டிடங்களுக்கு பிள்ளைகள் இல்லை. அதாலை வழங்களெல்லாம் அனியாயமாய்ப் போகுது..."

"நீர் சொல்லுறது நியாயம் தான்.. இதற்கு நான் என்ன செய்ய முடியும்? இடமாற்றக் கடிதம் வந்தால் நான் வருவன் தானே.... சிலபிரச்சினைகளை எம்மால்ற் தீர்க்க முடியாது. அவை அவிழாத முடிச்சுக்கள்" என்றார் மயில்வாகனம்.

தேவராசா அதன் பின் எதுவும் கதைக்கவில்லை.

தற்காலிகமாகச் சுடலையாகப் பாவிக்கும் காணி வந்தது. வானை நிறுத்தி விட்டு பெட்டியைத் தூக்கி எடுத்தனர்.

''காணிகளின்ரை கதிகால் எப்பன் அரக்குப் பட்டாலும் சண்டைக்கு வர்ற எங்கடை சனம் இப்ப காணி பூமியை விட்டுட்டு ஓடுது. இந்தக் காணீன்ரை சொந்தக்காரரோ உருத்துக் காரரோ இஞ்சை இல்லாதத்தாலை சனம் இதைச் சுடலையாய்ப் பாவிக்குது.... பொன்னையர் இருந்தால் விடுவரே....'' என்றார் தேவராசா.

கொள்ளி வைத்து விட்டு தள்ளாடியபடி மெதுவாக நடந்து வந்தார் நவரத்தினம். முப்பத்தைந்து வருடப் பந்தம் அந்தக் கணத்துடன் முடிவுற்றதை நினைக்க அவருக்கு அழுகை அழுகையாக வந்தது. நிலத்தில் குந்தியிருந்து அழுதார்.

காசிப்பிள்ளை அவரைக் கைதாங்கலாக கூட்டி வந்து சின்னத்துரையின் காரில் ஏற்றி விட்டுச் சொன்னார்; ''நாளையிண்டைக்கு காலமை காடாத்து. மத்தியானம் எட்டு எல்லாரும் குறை விளங்காமல் வந்திடுங்கோ....''

சுடலைக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராகச் செல்லத் தொடங்கினர். காசிப்பிள்ளை மேளகாரரின் பிசகைத் தீர்த்து விட்டு வந்த போது மயில்வாகனமும் தேவராசாவும் மட்டும் நின்றனர்; ''நீங்கள் வாருங்கோ மாஸ்ரர் நாங்கள் போறம்'' என்று கூறிய காசிப்பிள்ளை ''சின்னத்துரை காரை எடு'' என்றார்.

சின்னத்துரையின் கார் நவரத்தினத்தின் வீட்டுப் படலையில் வந்து நின்றதும் காசிப்பிள்ளையும் நவரத்தினமும் இறங்கிப் படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர்.

காசிப்பிள்ளையின் மனைவியும் இலட்சுமியம்மாளும் ஒப்புக்கு அழுது அவர்களை வரவேற்றனர்.

''தோஞ்சிட்டு வாருங்கோ சாப்பிட'' என்றாள் காசிப்பிள்ளையின் மனைவி.

இரவு எட்டுமணியாகி விட்டது. காசிப்பிள்ளையும் நவரத்தினமும் சாப்பிடவில்லை. தோய்ந்து விட்டு கோலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

''இலட்சுமியக்கா கொண்டந்த சாப்பாடு அப்பிடியே கிடக்கு ஒருத்தரும் சாப்பிடேல்லை....'' என்றாள் காசிப்பிள்ளையின் மனைவி.

''இந்நாள் ஆற்ரையன் வீட்டை போய்ச் சாப்பிட்டாலெல்லோ ஆரன் வந்து சாப்பிடுவங்கள்.... ஊருக்கை ஒழுங்காய்ச் சீவிக்க வேணுமெண்டு இதுக்குத் தான் சொல்லுறது..... சரிசரி நடந்ததைக் கதைச்சு இனியென்ன செய்யிறது..... சாப்பாட்டைப் போடும் வாறன்'' என்றார் காசிப்பிள்ளை.

''பாரன்ராப்பா சனத்தை...... பழிவாங்கிப் போட்டுதுகள்....'' என்று பெருமூச்சு விட்டார் நவரத்தினம்.

''நீ ஒவ்வொருதற்ரை செத்த வீட்டுக்கும் நல்லாய்க் குடிச்சிட்டு அங்கை வாறவங்களோடை வலியச் சண்டைக்குப் போய் செத்த வீட்டைக் குழப்பிப் போடுவாய். இன்றைக்கு அப்பிடி யொன்றும் நடக்கேல்லைத் தானே. அதோடை நீ பிரேதம் எடுக்கிற நேரம் தானே போறனீ.... ஆனா ஊர்ச்சனம் அதொண்டையும் கணக்கெடுக்காமை வந்ததுக்கு நீ நன்றி சொல்ல வேணும்....'' என்றார் காசிப்பிள்ளை.

''அப்பா.... மாமாவையும் கூட்டிக் கொண்டு வாங்கோ... சாப்பாடு போட்டாச்சு'' என்றாள் நித்தியா.

இருவரும் எழுந்து குசினிக்குள்ச் சென்றனர்.

## *21*

மயில்வாகனத்தின் மகள் மாலதியின் திருமணத்திற்காகப் பருத்திமலைக் கிராமம் மயில்வாகனத்தின் வீட்டில் திரண்டிருந்தது. பத்து வருட காலமாக பருத்திமலை மகாவித்தியாலய அதிபராக இருந்து அப்பாடசாலையைச் சிறந்த முறையில் வழிநடத்தியதற்கான நன்றிக்கடனைத் தீர்க்க அவ்வூர் மக்கள் சாதி சமய பேதங்களை மறந்து கூடியிருந்தனர்.

மயில்வாகனம் இடமாற்றம் பெற்றுச் சென்ற போது பிரியா விடை வைபவத்தை பெரிதாகக் கொண்டாடப் பழைய மாணவர் சங்கத்தையோ பாடசாலை அபிவிருத்திச் சபையையோ அவர் விடவில்லை. நான் பெரிதாக இப்பாடசாலைக்கு எதையும் செய்யவில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்துக்காகத் தான் எனது கடமையைச் செய்தேன். அதனால் பாடசாலையோடு சேர்ந்து நானும் வளர்ந்தேன். இதில் பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை. உங்களிடம் பரிசுகளாகப் பெருந்தொகையைப் பெற்றால் எனது கடமை களங்கப்பட்டு விடும் எனவே எனக்குச் செய்ய நினைத்ததைப் பாடசாலைக்குச் செய்யுங்கோ'' என்று கூறிவிட்டார்.

மக்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மயில்வாகனத்தின் பிரியாவிடையைப் பெரிதாகச் செய்ய வேண்டு மென்று நினைத்தவர்களுக்கு மாலதியின் திருமணம் பெரியதொரு சந்தர்ப்பத்தை அமைத்துக் கொடுத்திருந்தது.

பருத்திமலையைச் சேர்ந்த பலர் நாலைந்து நாட்களாக அங்கே நின்று வேலைகளைச் செய்தனர். அவர்கள் எதையும் மயில்வாகனத்தைக் கேட்கவில்லை. மிகவும் பெரியதொரு தகரப் பந்தல் போடப்பட்டது. அந்தப் பந்தல் லொறியில் வந்து இறங்கிய போது மயில்வாகனம் திகைத்து விட்டார். தான் சொல்லாமலே பந்தல் வந்து இறங்கியது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. லொறிக்குப் பின்னால் சிவலிங்கம் மோட்டார் சைக்கிலில் வந்து இறங்கினார்; ''உங்களைக் கேட்டால் ஒன்றுக்கும் சம்மதிக்க மாட்டியள். அதனாலை உங்களுக்குத் தெரியாமலே எல்லாம் செய்து போட்டம்'' என்றார்.

மயில்வாகனம் எதுவும் சொல்லவில்லை. மாலதியின் திருமண விடயத்தைச் சுந்தரிடம் ஒப்படைத்திருந்தார். சுந்தர் தான் பெரிதாக ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

மயில்வாகனம் சுந்தரிடம்; ''பெரிதாக எதுவும் செய்ய வேண்டாம்'' என்று கூறியிருந்தும் அவன் அதைக் கேட்கவில்லை.

சோடனைகள், மணவறை, மேளக்கோஷ்டி , வீடியோ எல்லாம் அமர்த்தப்பட்டிருந்தது.

மணவறையில் மாலதி அமர்ந்திருந்தாள். அருகில் ரவீந்திரன் இருந்தான். வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிற் குருக்கள் ஓமம் வளர்த்துத் தாலி கட்டுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தார். மயில்வாகனமும் இலட்சுமியம்மாளும் மணமக்களின் அருகே குருக்களின் பக்கத்தில் அமர்ந்திருந்தனர்.

பிரபல தவில் நாதசுர வித்துவான்கள் மணவறைக்கு எதிரே இருந்து கச்சேரி நடத்திக் கொண்டிருந்தனர். காசிப்பிள்ளையுடன் சேர்ந்து பருத்திமலை மகாவித்தியாலய மாணவர்களும் சபாபதிப்பிள்ளை வித்தியாலய மாணவர்களும் வருவோரை வரவேற்றுத் திலகமிட்டு குளிர்பானம் வழங்கிக் கொண்டிருந்தனர்.

வீடியோப் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நவரத்தினம் ஓடியாடி சகல விஷயங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார். யார் வரவேற்பது, யாரைவரவேற்பது, யார் செய்வது, யார் செய்விப்பது என்ற நிலை. வருவோரை வாருங்கோ இருங்கோ என்று கூறப் போனால் ''நாங்களும் அந்த வேலையாய்த் தான் நிக்கிறம்'' எனப் பதில் வரும்.

“கெட்டிமேளம் கெட்டிமேளம்” என்று குருக்கள் சொல்ல, இனிமையான பாடலொன்றை வாசித்துக் கொண்டிருந்த மேளக் கோஷ்டியினர் அதை விட்டு அவரச அவரசமாக கெட்டிமேளம் கொட்டினர்.

குருக்கள் எடுத்துக் கொடுத்த மங்கள நாணை பயபக்தியுடன் கையில் வாங்கிய ரவீந்திரன், அதை மாலதியின் கழுத்திற் கட்டினான்.

மயில்வாகனம் ஆனந்த பரவசத்தால் கண்களை மூடினார். கண்களில் ஆனந்த முத்துக்கள் திரண்டு மின் ஒளியில் பளபளத்தன.

அந்த நேரம் திவாகரன் வந்தான். அவனைக் கண்ட ரவீந்திரன் மணவறையை விட்டு எழும்ப முயற்சித்தான். குருக்கள் குறுக்கிட்டார்; “இரும் இரும் எழும்பக் கூடாது”

“திவா, இஞ்சை வாரும்” ரவீந்திரன் அழைத்தான்.

திவாகரன் கம்பீரமாக நடந்து வந்து ரவியினது கையைப் பற்றிக் குலுக்கி விட்டு, அவனை அணைத்து முத்தமிட்டான்.

சபையில் பரபரப்பு. அளவான உயரம் எடுப்பான தோற்றம். வாட்டமான முகம், சாந்தமான விழிகள்... யாரிவன் என்று சபையோரைப் போல மயில்வாகனமும் எண்ணினார்.

“இவர் லண்டனில் என்ஜினியராய் இருக்கிறார். சொந்த இடம் கோப்பாய். லண்டனில் இவரோடு தான் நான் சேர்ந்திருந்தனான். இவரைப்பற்றி உமக்கு கனக்க எழுதியிருக்கிறன்... அதை மாதிரி உம்மைப்பற்றி அவருக்கு நிறையத் தெரியும்” என்று ரவி, திவாகரனை மாலதிக்கு அறிமுகம் செய்தான்.

மாலதியின் முகம் நாணத்தால் மேலும் சிவந்தது. மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ஒரு சிறு மின்னல் உதடுகளில் தோன்றி மறைந்தது.

திவாகரன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருளை ரவியிடமும் மாலதியிடமும் கொடுத்து விட்டு; “நேற்றுத் தான் வந்தனான்” என்று கூறி விடை பெற்றுச் சென்று கதிரையில் அமர்ந்தான்.

“வாரும் தம்பி.... இரும் இரும்” என்ற காசிப்பிள்ளை; “தம்பி, சந்தணத்தைக் கொண்டா” என்று சந்தணம் வைத்திருந்த மாணவனை அழைத்தார். அவன் சந்தணத்தைக் கொண்டு வந்ததும் காசிப்பிள்ளை சந்தணத்தை ஆள்க்காட்டி விரலால் தொட்டு திவாகரனின் நெற்றியில் வைத்து விட்டுக் கேட்டார் “தம்பி பருத்தி மலையோ....?” என்று .

“இல்லைக் கோப்பாய்....”

“ஆளைப் பார்த்தால் வெளிநாட்டாலை வந்த மாதிரித் தெரியுது”

திவாகரன் அப்பொழுது தான் காசிப்பிள்ளையைப் பார்த்தான். முழுமையாகச் சேவ் எடுக்கப்பட்ட முகம். நல்ல சிவப்பு நிறம், பட்டு வேட்டி, தோளில் ஒரு சருகைச் சால்வை நெற்றியில் சந்தணப் பொட்டு, நெஞ்சினில் சந்தணக் குறி கலியாணத்திற்கு வந்திருந்த அவ்வளவு பேரிலும் இல்லாத வித்தியாசமான தோற்றம்.

“நீங்கள் சேட்டுப் போடுறல்லையோ”

“என்ரை கலியாணத்தண்டைக்குப் போட்டனான். அதுகும் எல்லாரும் வற்பறுத்தினதாலை” என்றார் காசிப்பிள்ளை.

“நீங்கள் வித்தியாசமான ஆள்...” பெரிதாகச் சிரித்தான் திவாகரன்.

“தம்பி எந்த நாட்டிலை இருந்து வந்தனீர்...”

“லண்டனிலை இருந்து வந்தனான். ரவி இரண்டு வரிசம் என்னோடை தான் இருந்தது. கலியாணம் என்று அறிவிச்சான். இந்தச் சாட்டிலை ஊரையும் ஒருக்கால் பாப்பமெண்டு வந்தன்...”

“சரி.....சரி....” என்ற காசிப்பிள்ளையை நவரத்தினத்தின் குரல் இடைமறித்தது; “உங்கை என்ன செய்யிறாய்? தாலி கட்டு முடிஞ்சால் சபை வைக்க வேணுமெல்லே.... இஞ்சை வா”

“இரும் தம்பி வாறன்” என்று கூறி விட்டு நகர்ந்தார் காசிப்பிள்ளை.

திவாகரனின் கண்கள் முதலில் மேளக்காரரில் சிறிது நேரம் பதிந்தது. பின் சோடனைகளில் லயித்து மணவறைப் பக்கம் திரும்பிய போது இரண்டு அழகிய விழிகள் தன்னைப் பார்ப்பது போன்ற உணர்வு ஒருகணம் தான்.

திவாகரன் அவ்விழிகளுக்குரியவளைப் பார்த்தான். முகத்தில் ஒரு தெய்வீக அழகு குடி கொண்டிருந்தது. அந்த அழகு அவனது விழிகளால் இதயத்துள் நுளைந்து பின் மூளையைச் சென்றடைந்தது. “யாராக இருக்கும்?”.

சுற்றிவரப் பார்த்தான் தெரிந்த முகம் ஒன்று கூடத் தென்படவில்லை. தனக்கு பொட்டு வைத்த காசிப்பிள்ளையைத் தேடினான். அவரையும் காணவில்லை.

திரும்பிப் பார்த்தான். அவள் மாலதிக்குப் பின்னால் நின்று கதைத்து சிரித்துக் கொண்டிருந்தாள். அழகான பல்வரிசை, மயக்கத்தை உண்டு பண்ணும் கவர்ச்சியான சிரிப்பு.... லண்டனில் இதுவரை அவனது கண்களுக்குத் தென்படாத பேரழகு அவளிற் குடி கொண்டிருந்தது.

அடிக்கடி அவளின் அழகை ரசித்துப் பார்த்தான் திவாகரன். ரவியும் மாலதியும் தோழனும் தோழியும் அக்கினியை வலம் வந்து அம்மி மிதித்தனர். ரவி மாலதியின் வலது காலைத் தனது வலது கையால் தூக்கி அம்மியின் மேல் வைத்தான்.

அந்த நேரம் காசிப்பிள்ளை அங்கே வந்தார். அவரைக் கண்டதும்; “அண்ணை.... அண்ணை” என்று கூப்பிட்டான் திவாகரன். கூப்பிட்ட சத்தம் கேட்டு நின்ற காசிப்பிள்ளை “என்ன தம்பி?” என்று அவ்விடத்திலே நின்று கேட்டார்.

திவாகரன் எழுந்து அவரின் அருகில் சென்றான்; “உங்களிட்டை ஒரு அலுவல்” என்று கூறி விட்டுத் திரும்பிப் பார்த்தான். சுற்றி வர ஒரே சனம்; “வெளீலை வாருங்கோ கதைப்பம்” என்றான்.

ஆட்கள் குறைவாக இருந்த முற்பக்கத்துக்கு வந்த திவாகரன்; “ஒராளை அறிய வேண்டியிருக்கு” என்றான்.

“ஆரைத்தம்பீ....? இண்டைக்கு இஞ்சை இரண்டு கிராமம் முழுமையாய்க் கூடி நிக்கு... அதோடை வேறை ஊர்க்காரரும் நிக்கினை. இந்த ஊராட்களைத் தான் எனக்குத் தெரியும்” என்றார் காசிப்பிள்ளை

திவாகரனுக்குச் சிறிது ஏமாற்றமாயிருந்தது. எனினும் நம்பிக்கையை இழக்காமல் சொன்னான். “மாலதிக்குப் பின்னுக்கு பச்சைக் காஞ்சிபுரச் சேலை கட்டிக் கொண்டு வடிவான பெம்பிளை ஒன்று நிக்கு அது ஆர் எண்டு பார்த்துச் சொல்லுறியளே...” என்றவன் பொக்கற்றிலிருந்து ஐந்நூறு ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்து மடித்து அவரின் கைக்குள் வைத்தான்.

“சீச்சீ.... காசு நான் வாங்க மாட்டன்.... வேணுமெண்டால் பார்த்துச் சொல்லுறன்...” என்று நடந்தார் காசிப்பிள்ளை. திவாகரன் அவரின் பின்னே சென்றான்.

‘‘காசிப்பிள்ளை உன்னை எங்கையடாப்பா தேடுறது.... சபைவைக்கத் தொடக்கி விட்டுட்டு நீ அங்கையும் இஞ்சையும் திரியுறாய்...’’ என்றார் நவரத்தினம்.

‘‘பொறு பொறு வாறன். தம்பியோடை ஒரு அலுவல் இருக்கு....’’

‘‘வாற போற எல்லாரையும் சிநேகிதம் பிடிச்சுப் போடுவாய்...’’ சிரித்தார் நவரத்தினம்.

‘‘ஆர்தம்பி பெட்டை....’’ மெதுவாகக் கேட்டார் காசிப்பிள்ளை.

‘‘மாலதிக்குப் பின்னாலை பாருங்கோ, பச்சைக் காஞ்சிபுரத்தோடை..... இப்ப மாலதீன்ரை தலையிலை கிடக்கிற அரிசியைத் தட்டி விடுது....’’

காசிப்பிள்ளை திவாகரனை ஏற இறங்கப் பார்த்தார். அவருக்குச் சிறிது கோபம் கூட வந்து விட்டது. ‘‘வா தம்பி அங்காலை போவம்’’ என்றார்.

காசிப்பிள்ளையின் பேச்சிலிருந்து தான் கேட்டது அவருக்குப் பிடிக்கவில்லை. என்று திவாகரன் நினைத்தான்.

‘‘தம்பீ..... நீர்.... ஆர்... என்ன சாதி இதெல்லாம் தெரிஞ்சாத்தான் சொல்லுவன்’’

‘‘நான் லண்டனிலை இஞ்ஜினியர். ரவிக்கு எல்லாம் தெரியும். வெள்ளாளன்’’ என்றான் திவாகரன்.

‘‘ரவிக்கு எல்லாம் தெரிஞ்சால் ரவியோடை போய்க் கதை தம்பி’’ புறப்பட்டார் காசிப்பிள்ளை.

‘‘அண்ணை அண்ணை..... சொல்லிப் போட்டுப் போங்கோ...’’ கெஞ்சினான் திவாகரன்.

நின்று திரும்பிப் பார்த்தார் காசிப்பிள்ளை. அவனது கண்கள் யாசித்தன. பார்க்கப் பாவமாக இருந்தது. அவர் இரக்க சுபாவமும் உதவி செய்யும் மனப்பாங்கும் உள்ளவர். அவனின் நிலையைப் பார்த்ததும் அவரின் இதயம் கசிந்து விட்டது; ‘‘அது மயில்வாகனம் மாஸ்ரற்ரை மோள் சுவர்ணா தம்பீ... என்ஜினியருக்குப் படிக்கிறாள்’’ என்றார்.

‘‘சுவர்ணாவோ....?’’ ஆச்சரியத்துடன் கேட்டான் திவாகரன்.

‘‘ஓம்.... உமக்கு சுவர்ணாவைத் தெரியுமே...’’

‘‘ஆளைத் தெரியாது.... ரவி அடிக்கடி சொல்லுறவன்’’ என்றான் திவாகரன். அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ரவிக்கு தன்னுடைய வரலாறு முழுவதும் தெரியும். எனவே ரவிக்குச் சொன்னால் சரி என்று நினைத்துக் கொண்டான். மணமக்களுக்கு அறுகரிசி போட்டுக் கொண்டிருந்தனர். தானும் அறுகரிசி போடும் சாட்டில் கிட்டப் போய்ச் சுவர்ணாவை அருகில் நின்று பார்க்கலாமெண்டு நினைத்த அவன் அறுகரிசி போடச் சென்றான்.

சுவர்ணா மாலதியின் பின்னால் நின்றதால் மிகவும் அருகில் நின்று பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது.

ரவி ஏற்கனவே தான் தங்கியிருந்து படித்த வீட்டுக்காரனான திவாகரனைப் பற்றியும் அவனுடைய தாய் தந்தையரைப் பற்றியும் எல்லோருக்கும் கூறியிருந்தான். அவன் கூறியதில் இருந்து திவகாரன் மீது ஒரு மதிப்பு வைத்திருந்தாள் சுவர்ணா. அந்த மதிப்புடன் ஆளையும் நேரில் கண்டதால் அந்தமதிப்பு கணநேரத்தில் சற்று உயர்ந்திருந்தது. அதனால் அடிக்கடி அவனைப் பார்த்தாள்.

இரண்டு சோடி விழிகளும் ஒருகணம் சந்தித்து மிரண்டு தாழ்ந்து கொண்டன; ‘‘தம்பி தலைப்பாக் கட்டாமல் அறுகரிசி போடக்கூடாது இந்தா தம்பி சால்வை, கட்டு’’ என்று

பின்னால் நின்ற முதியவர் ஒருவர் சால்வையைக் கொடுக்க, திவாகரன் அதனை வாங்கிக் கட்டிக் கொண்டு அறுகரிசி போட்டான்.

திருமணத்துக்கு வந்தவர்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர்... ரவி சற்று ஓய்வாக இருந்த போது திவாகரன் ரவியை மெதுவாக அழைத்து வந்தான். பந்தலில் போடப்பட்டிருந்த கதிரை ஒன்றில் அவன் அமரரவி அவனின் அருகில் அமர்ந்தான்.

"நான் போயிட்டு வரட்டே...." கேட்டான் திவாகரன்.

"இப்பேன் அவசரப்படுறாய். வீட்டை போகப் போறம் வந்திட்டுப் போ"

"சரி.... சரி... ஒன்று நானுன்னைக் கேட்கப் போறன்..."

"என்ன....?"

தயங்கினான் திவாகரன்.

"சொல்லடா"

"சுவர்ணாவைப் பார்த்தனான் எனக்குச் செய்ய விருப்பம்"

பெரிதாகச் சிரித்தான் ரவி; "இவ்வளவு நாளும் கலியாணம் வேண்டா மெண்ட நீ"

"இப்ப விருப்பம் சுவர்ணாவின் அழகு என்னைக் கவர்ந்து விட்டது"

"எனக்கு விருப்பம். எதுக்கும் மாமாவைக் கேட்கவேணும்.... பின்நேரம் கேட்கிறன்.."

"சரி....சரி... நீ பிசி..... ஆட்கள் தேடீனை போ.... போ...." என்றான் திவாகரன்.

சிரித்தபடி சென்ற ரவி மாலதியின் காதுக்குள் இரகசியமாக அதைச் சொன்னான். மாலதி நிமிர்ந்து திவாகரனைப் பார்த்தாள். திவாகரன் குனிந்து கொண்டான்.

மாப்பிளை வீட்டில் வரவேற்புபசாரம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. எல்லோரும் மயில்வாகனம் வீட்டில் கலந்து கொண்டாலுல் ஒப்புக்காக மாப்பிளையின் வீட்டுக்கு வந்து சென்றனர்.

மாலை ஐந்து மணிக்கு வீடு வெளித்து விட்டது. மயில்வாகனம் வீட்டாரைத் தவிர எல்லோரும் சென்று விட்டனர். மயூரனையும் சுதாவையும் மாப்பிளை வீட்டில் விட்டு விட்டு மயில்வாகனமும் மனைவியும் சுந்தரும் சுவர்ணாவும் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்; அப்பொழுது ரவி; "மாமா வோடை ஒரு அலுவல்கதைக்க வேணும் என்றான்..."

"என்ன?" என்பதைப் போலப் பார்த்தார் மயில்வாகனம்; "கதிரையிலை இருங்கோ மாமா... மாமியும் இருங்கோ... சுந்தரும் இரு..." என்று கூறிய ரவி தானும் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டு மாலதியைப் பார்த்தான். மாலதி சிரித்தாள்; "நீரும் இரும்" என்றான் ரவி.

மயில்வாகனத்துக்கு ஒன்றும் புரியவில்லை. சுந்தர் ரவியைப் பார்த்தான்.

"நீர் சொல்லும்" என்றான் ரவி மாலதியைப் பார்த்து.

தலையாட்டிய மாலதி; "நீங்கள் தான் குடும்பத்தலைவர் சொல்லுங்கோ" என்றாள்.

மயில்வாகனம் குழப்பத்துடன் ரவியைப் பார்த்தார்.

''திவாகரனைப் பற்றி உங்களுக்கெல்லாம் சொல்லியிருக்கிறன். நல்ல பிள்ளை என்ஜினியராய் இருக்கிறான். சொந்தமாய் லண்டனிலை பிளட்ஸ் இருக்கு. நல்ல காசுக்காரன். அதைவிடத் தாயும் தகப்பனும் தங்கமானவை. நானிருந்த இரண்டு வரிசமும் அம்மாவில் பார்க்க அதிக அன்பாய் இருந்தவை.''

மயில்வாகனம் அவனது பேச்சுப் புரியாது குழம்பினார்; ''இன்று நல்ல நாள். அதுகும் கலியாண நாள் பிரயோசனமாய்க் கதைக்காமல் ஏதோ கதைக்கிறான'' என்று நினைத்தார் மயில்வாகனம்.

சுந்தருக்கு ஒன்றும் புரியவில்லை. ரவி லண்டனாலை வந்த பிறகு நாலைந்து தரம் திவகாரனது குடும்பப் புராணம் பாடியிருக்கிறான். அப்போதெல்லாம் சுந்தர் எதுவும் நினைக்கவில்லை. இப்பொழுது அதுவும் கலியாண நாளன்று ரவி திவாகரனைப் பற்றி காரணமில்லாமல் சொல்ல மாட்டன் என்று நினைத்தான்.

''ஆளையும் இண்டைக்கு நேரிலை பார்த்திட்டியள்'' என்று நிறுத்திய ரவி, சுவர்ணாவைப் பார்த்துக் கண்ணடித்துச் சிரித்தான். இதை மயில்வாகனம் கண்டு விட்டார். அவருக்கு யாவும் புரிந்து விட்டது. எனினும் தெரியாத மாதிரி; ''கேவியூக்கு முன்னம் போக வேணும்'' என்றார்.

''சாய், திவா நேற்று வந்திருந்தால் சிலவில்லாமல் சுவர்ணாவின்ரை கலியாணத்தையும் முடிச்சிருக்கலாம்'' என்றான்.

யாரும் எதுகும் பேசவில்லை. மயில்வாகனம் அவளது கல்வியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''உங்கடை விருப்பத்தைச் சொல்லுங்கோ மாமா''

மீண்டும் சிலகணம் மௌனம் சாதித்தார் மயில்வாகனம் பின்; ''அவளின்ரை படிப்பு முடியட்டும்'' என்றார்.

''படிப்புக்கு எதிரானவனில்லை மாமா நான். ஆனால் சந்தர்ப்பம் வரேக்கை பெம்பிளையளைக் கட்டிக் குடுத்திட வேணும்.... இப்ப எங்கடை கிராமத்திலை முப்பத்தைஞ்சு நாப்பது வயது கடந்தும் பெம்பிளையள் மாப்பிளை இல்லாமல் இருக்கினை. எங்கடை சிவலிங்கண்ணையின்ரை மகளைப் பாருங்கோ.... பட்டதாரி.... முப்பத்தைஞ்சு வயசுக்கு மேலையாச்சு.... லட்சம் லட்சமாய்க் காசிருக்கு.... பொருத்தமான மாப்பிளை கிடைக்கேல்லை... இப்ப வெளிநாட்டுக்காரனைத் தான் செய்யப் போயினை... அந்த மாதிரி சுவர்ணாவும் படிச்சு முடிய மாப்பிளை தேட முடியுமே?'' என்று கேட்டான் ரவி.

''நல்ல இடமப்பா.... படிக்கிறதெண்டால் லண்டனிலை போய்ப் படிக்கட்டன்'' என்றாள் மாலதி.

''மருமோன் இரண்டு வரிசம் கூட இருந்தவர். அவருக்கு அந்தக் குடும்பத்தைப் பற்றித் தெரியும். அதோடை பெம்பிளையள் படிச்சு என்னத்தைக் கண்டது..... கல்யாணியைப் பாருங்கோ.... படிச்சவள் வெளிநாட்டுக்காரனைக் கண்டவுடனை கட்டிக் கொண்டு போட்டாள். பெம்பிளையளைப் பொறுத்த மட்டிலை படிப்பை விட கலியாண வாழ்வு தான் முக்கியம்'' என்றாள் இலட்சுமியம்மாள்.

மயில்வாகனத்துக்குக் கல்வியை இடைநிறுத்துவது கவலையைக் கொடுத்தது. எனினும் நல்லதொரு மாப்பிளை கிடைத்ததையிட்டுச் சந்தோசப்பட்டார். அவரின் விழிகள் சுந்தரின் முகத்தை நோக்கின.

''என்ன தம்பி பேசாமல் இருக்கிறாய்?'' என்று சுந்தரைப் பார்த்துக் கேட்டாள் இலட்சுமியம்மாள்.

''நான் இதிலை சொல்ல என்னம்மா இருக்கு. ரவிக்கு விருப்பமெண்டால் எனக்கும் விருப்பம். ஆனால் அப்பாவும் சுவர்ணாவுமெல்லோ மறுமொழி சொல்ல வேணும்'' என்றான் சுந்தர்.

“என்னப்பா.... பேசாமல் இருக்கிறியள் சொல்லுங்கோ...” என்றாள் இலட்சுமியம்மாள்.

“நான் யோசிச்சு விடிய வந்து சொல்லுறன்” என்றார் மயில்வாகனம்.

“சுவர்ணா உம்முடைய விருப்பத்தைச் சொல்லும்” என்றான் ரவி.

சுவர்ணா தலையைக் குனிந்து கொண்டாள்.

“சொல்லம்மா” என்றாள் இலட்சுமியம்மாள்.

“மௌனம் சம்மதம்” என்றான் மயூரன்.

“போடா மடையா” என்று மயூரனின் தலையில் குட்டினாள் சுவர்ணா.

“அப்பாவைத் தவிர மற்றெல்லாருக்கும் விருப்பம். அப்பா தனது முடிவை நாளைக் காலை சொல்லுவார். கேவியூக்கு முன் வீட்டுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் இப்பொழுது சபை கலைகிறது. பாவம் ஒரு பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்ற அப்பா சம்மதிக்க வேண்டு மென்று எல்லோரின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்” என்றான் மயூரன்.

எல்லோரும் சிரித்தனர்.

## *22*

அன்று நாலாஞ்சடங்கு. திருமணம் முடிந்த மூன்றாம் நாள் நாலாஞ் சடங்கு என்று எல்லோரும் கொண்டாடுவார்கள். மணமக்கள் மாப்பிளையின் ஊரில் உள்ள கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டுப் பெண்வீடு திரும்பும் நாளை நாலாஞ் சடங்கு என்ற பெயரில் கொண்டாடுவது வழக்கம்.

அன்று பெரியதொரு கிடாய் அடித்துப் போத்தல்கள் எடுத்துக் கொண்டாடுவார்கள். மயில்வாகனத்தின் வீட்டு நாலாஞ்சடங்குப் பொறுப்பை காசிப்பிள்ளையும் நவரத்தினமும் ஏற்றியிருந்தனர்.

முதல் நாள் செவ்வாய்கிழமை நீர்வேலியில் ஏழாயிரம் ரூபாவுக்கு கிடாய் ஒன்று தீர்த்திருந்தார் காசிப்பிள்ளை. செவ்வாய்கிழமை ஆட்டைத் தரமாட்டன் என்று கூறி விட்டான் ஆட்டுக்காரன். எனவே காசிப்பிள்ளை அச்சவாரமாக நூறுரூபாய் கொடுத்து விட்டு வந்து விட்டார்.

மறுநாட் காலை சின்னத்துரையின் காரைக் கொண்டு சென்று ஆட்டை ஏற்றிக் கொண்டு நவரத்தினத்தின் வீட்டுக்கு வந்து விட்டார் காசிப்பிள்ளை.

பலபலவெண்டு விடியுமுன் காசிப்பிள்ளையின் தோழனான குருவிச்சுப்பன் ஆட்டை அறுத்து விட்டான். நவரத்தினத்தின் கிணற்றடிக்கு அருகில் நின்ற பூவரசமரத்தில் அறுத்த கிடாயைத் தலைகீழாய்க் கட்டி உரித்தான்.

கிடாய் வெட்டுவதென்றால் காசிப்பிள்ளை சாராயம் தான் குடிப்பார். கள்ளுக் குடித்தால் வயிறு ஊதிவிடும். பிறகு சாப்பிட முடியாது என்பது அவரது எண்ணம்.

குருவிச்சுப்பன் என்கின்ற சுப்பிரமணியத்துக்குக் கிடாய் வெட்டிப் பங்கு போட்டு கொடுக்க நூறுரூபா பணமும் கிடாயின் தலையையும் கூலியாகக் கொடுப்பது வழக்கம்.

கிடாய் வெட்டும் நாட்களில் கிடாய் வெட்ட முன்பே காசிப்பிள்ளை சாராயம் குடித்து விடுவார். அன்று சாராயம் விற்கும் நாதனிடம் அரைப்போத்தல் மெண்டிஸ் சாராயம் கடனுக்கு வாங்கிக் கொண்டு வந்திருந்தார்.

காசிப்பிள்ளையும் நவரத்தினமும் காசிப்பிள்ளை வாங்கி வந்த சாராயத்தை ஏற்கனவே குடித்து விட்டனர்.

"நாதனிட்டை இன்னும் ஒரு அரை எடுத்தரட்டே..." கேட்டார் காசிப்பிள்ளை.

"சீச்சீ.... என்னட்டை முழுசாய்க் கிடக்கு நான் கொண்டாறன்" என்ற நவரத்தினம் உள்ளே சென்று சிறிது நேரத்தில் முழுப் போத்தலுடன் வந்தார்.

அதை வாங்கிய காசிப்பிள்ளை அதன்மேலிருந்த பொலித்தீன் கடதாசியை நீக்கி விட்டு மூடியைத் திருகித் திறந்தார்.

"குருவிச் சுப்பனுக்கும் ஒரு கிளாஸ் குடு" என்றார் நவரத்தினம்.

"வேலை முடியட்டும், வெறி ஏறினால் விட்டுட்டுப் போயிடுவன்.."

"நீ சொல்லுறதும் சரிதான்....... இஞ்சைதா போத்திலை" என்று கேட்டு வாங்கிய நவரத்தினம் அருகில் இருந்த கிளாசை எடுத்து அதில் நிறைய ஊற்றிக் குடித்தார்.

"கனக்கக் குடியாதை..... பிறகு மயில்வாகனம் மாஸ்ரர் வீட்டை மரியாதை கெட்டுப் போம்"

"மயில்வாகனம் மாஸ்ரர் ஊருக்கே தெய்வம்.... அந்தாளின்ரை அருமை தெரியாமை முந்தி நாங்கள் இந்தப் பள்ளிக்கூட விஷயத்திலை எதித்திட்டம்....அதுக்கு இண்டைக்கு நான் மன்னிப்புக் கேட்க வேணும்...."

"இண்டைக்கு வேண்டாம்... அது பிறகு கேட்கலாம்....."

"காசிப்பிள்ளை..... நீ சொன்னால் நான் கேட்பன்.... நான் ஒரு வேலை செய்யப் போறன்.

"என்ன?"

"சபாபதிப்பிள்ளை வித்தியாலயத்துக்குத் தண்ணித் தாங்கி கட்ட இண்டைக்கு காசு குடுக்கப் போறன். அதோடை தண்ணி இறைக்கிறத்துக்கு மிசினையும் குடுக்கப் போறன்.....

"முந்தி சொன்னனீ தானே...."

"சொன்னனான் என்ன....? இண்டைக்கே குடுத்திட வேணும்...."

"குடுத்தாய் போச்சுது....." என்றார் காசிப்பிள்ளை.

"சுப்பா.... டேய் குருவி இறைச்சியை வடிவாய் வெட்டு..... விளங்கிச்சுதோ?" கேட்டார் நவரத்தினம்.

"ஓம் ஓம்....." என்றான் குருவிச்சுப்பன்.

இறைச்சியைக் கொண்டு போய்க் குடுத்திட்டு, கோலுக்கை தண்ணீர் இறைக்கிற மிசின் நிக்குது அதையும் கொண்டு போய்க் குடு..."

"சரி....."

"காசிப்பிள்ளை..... காசிப்பிள்ளை...."

"சொல்லடாப்பா..."

“சொல்லப்போறன்.... சொல்லப் போறன்..... நீ இப்ப என்ரை சம்மந்தி”

“என்ன?” அதிர்ச்சியுடன் கேட்டார் காசிப்பிள்ளை. அவருக்குக் குடித்த சாராய வெறி முறிந்து விட்டது.

“ஓம்.... நித்தியாவை என்ரை நடுவிலானுக்குச் செய்யப் போறன். மூத்தவன் அவனுக்குப் பொம்பிளை பார்க்கச் சொல்லி நெடுக எழுதுறான். நான் உங்கை நாலைஞ்சு இடத்திலை பார்த்தனான்... பிடிக்கேல்லை தாய் செத்ததுக்காக மூத்தவனும் நடுவிலானும் வாறகிழமை வாறாங்கள்....”

“நீ வெறீலை கதைக்கிறாய்...” தடுமாறியபடி சொன்னார் காசிப்பிள்ளை.

“காசிப்பிள்ளை..... உனக்கு என்னைப் பற்றித் தெரியும்... சொன்னால் சொன்னது தான் பணம் பொருளைத் தான் நான் பெரிசாய் மதிச்சனான். ஆனால் அதாலை ஒரு பிரியோசனமும் இல்லை யெண்டதை என்ரை கண்ணாலை கண்டிட்டன்... மயில்வாகனம் மாஸ்ரர் வீட்டுக் கலியாணத்தைப் பாத்தியே எத்தினையாயிரம் பேர்.... இது தானப்பா புகழ்.... மயில்வாகனம் மாஸ்ரரும் நீயும் தான் எனக்குதவி.... மயில்வாகனம் மாஸ்ரருக்கு என்னாலை முடிந்ததைச் செய்திட்டன்..... இனி உனக்குத் தான் செய்ய வேணும்.....” என்றவர் போத்தலை எடுத்து சாராயத்தை ஊற்றி மீண்டும் குடித்தார்.

“அவள் நித்தியா அருமையான பிள்ளை.... தங்கக் கம்பி.... திலகத்தின்ரை மலசலமெல்லாம் எடுத்து உடுப்புத் துணி யெல்லாம் தோய்ச்சு வைச்சவள்... நாளைக்கு நான் படுத்தாலும் பாப்பள்...”

“வேலை முடிஞ்சதண்ணை..” என்றாள் சுப்பிரமணியம்.

“இறைச்சியை சுத்திக் கட்டி என்னட்டைத் தந்திட்டு.... கோலுக்கை மிசின் நிக்குது இழுத்துக் கொண்டுவா. காசிப்பிள்ளை நீ எடுக்கிற தெண்டால் எடுத்துட்டு மிச்சத்தை மூடிக் கொண்டு போய் வைச்சிட்டு கதவைப் பூட்டிக் கொண்டுவா” என்றார் நவரத்தினம்.

நீர் இறைக்கும் இயந்திரத்தை மயில்வாகனத்தின் வீட்டு முற்றத்தில் விட்ட சுப்பிரமணியம் நவரத்தினம் கொண்டு வந்த இறைச்சியை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

“மாஸ்ரர்..... மாஸ்ரர்.” நவரத்தினம் கூப்பிட்டார்.

மயில்வாகனம் வெளியே வந்தார்.

“இந்தாருங்கோ.... இதிலை இருபத்தையாயிரம் ரூபாய் இருக்கு... தண்ணித் தாங்கியொன்று கட்டுங்கோ காணாட்டில் மிச்சம் நான் தருவன். இந்த மிசினும் உங்களுக்குத் தான் தொட்டிக்குத் தண்ணீர் இறைக்க” என்றார் நவரத்தினம்.

ஏற்கனவே அவர் நீர்த்தாங்கி கட்டித் தருவதாகச் சொல்லியிருந்தார். அபிவிருத்திச் சங்கக் கூட்டத்திலும் இதைப் பற்றி மயில்வாகனம் கதைத்திருந்தார். எனவே அவற்றை நன்றியுடன் பெற்றுக் கொண்டார் மயில்வாகனம்.

“மிகவும் நன்றி...” என்றார் மயில்வாகனம்.

சிரித்த நவரத்தினம்; “மாப்பிளை பெம்பிளை வந்திட்டினையே...” என்று கேட்டாள்.

“சுந்தர் போயிட்டான் கூட்டிவர.... ஏன் நிக்கிறியள் உள்ளுக்கு வாருங்கோ...” என்றார்.

கலியாண வீட்டிற்குப் போடப் பட்ட தகரப் பந்தல் கழற்றப்படாமல் இருந்தது. அதற்குள் இருந்த நாற்காலியொன்றில் சென்று அமர்ந்தார் நவரத்தினம். காசிப்பிள்ளையும் மயில்வாகனமும் அவரின் அருகில் அமர்ந்தனர்.

நித்தியா இருவருக்கும் தேநீர் கொண்டு வந்தாள்.

“நித்தியா என்ரை மருமோள்” என்று சிரித்த நவரத்தினம்; “மாஸ்ரர் நித்தியாவை என்ரை நடுவிலானுக்குச் செய்ய முடிவு செய்திட்டன்” என்றார் நவரத்தினம்.

நித்தியா மிரண்டபடி தகப்பனைப் பார்த்தாள்.

“தேத்தண்ணியை எடுங்கோ....” என்றார் மயில்வாகனம்.

“வேண்டாம் பிள்ளை கொண்டுபோ” என்றார் காசிப்பிள்ளை.

கிடாய் வெட்டினால் அப்பா விடியுமுன்பே குடிச்சிடுவாரெனறுடு அவளுக்குத் தெரியும்.

அப்பொழுது கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

“வந்திட்டினை” என்று எழுந்தார் மயில்வாகனம்.

மாலதி, ரவி, ரவியினுடைய தாய், திவாகரன் ஆகியோர் வந்து கொண்டிருந்தனர்.

மாப்பிளை பொம்பிளைக்கு ஆராத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

“எப்பிடித்தம்பீ....” உரிமையோடு கேட்டார் காசிப்பிள்ளை.

“நல்லது” என்று சிரித்தான் திவாகரன்.

“அப்ப எப்ப உம்முடைய கலியாணம்”

தீடீரென்று அந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. சற்று வெக்கப்பட்டு தடுமாறினான்.

“சரி.... சரி.... நல்லாயிருங்கோ” வாழ்த்தினார் காசிப்பிள்ளை.

கோலுக்குள் சென்ற திவாகரனை தலை குனிந்தபடி; “வாருங்கோ” என்று வரவேற்றாள் சுவர்ணா.

அவ்விடத்தில் ஒருவரும் இல்லை. அதைச் சாதகமாகப் பயன்படுத்திய திவாகரன் “உமக்கு என்னைப் பிடித்திருக்கா?” என்று கேட்டான்.

தலையை மெதுவாக நிமிர்த்திய சுவர்ணா உதடுபிரியாமற் சிரித்தாள்.

மறுநாள் முடிவு சொல்வதாகக் கூறி விட்டு வந்த மயில்வாகனம் இரவு முழுவதும் நித்திரையின்றித் தவித்தார். அவரால் எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை. படிப்பைப் பற்றித் தான் அவர் அதிகமாகக் கவலைப்பட்டார்; “பல்கலைக்கழகங்களுக்கு புகுந்த பின்பும், பல்கலைக்கழகங்களால் வெளியேறிய பின்பும் கற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் எவ்வளவு நட்டம் ஏற்படும். அதை விட இன்னொருவருடைய அனுமதியையும் அது தடை செய்கிறது” என்று யோசித்தார்.

ஆனால் இலட்சுமியம்மாள் விடாப்பிடியாக சுவர்ணாவுக்குத் திருமணத்தை முடிக்க வேண்டும் என்று சொன்னாள்.

கடைசியாக எல்லோருடைய விருப்பத்தையும் ஏற்றுத் தனது சம்மதத்தைத் மயில்வாகனம் தெரிவித்த போதும் அவரது மனம் அதை ஏற்காது கலங்கித் தவித்தது.

வெளியே சமையல் மும்மரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொக்ஸ்சில் சினிமாப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

காசிப்பிள்ளை அன்று மிகவும் சந்தோசமாக இருந்தார்; ‘‘நவரத்தினத்தின் மகனை ஒருசதமும் சீதனமில்லாமல் செய்வதென்றால்’’ அந்தச் சிந்தனை கரும்பாக அவருக்கு இனித்தது.

பந்தலில் இருந்த காசிப்பிள்ளைக்கு அருகில் வந்த மயூரன்; ‘‘அண்ணை இண்டைக்கு உங்கடை பாட்டை ஒலிப்பதிவு செய்யப் போறம்’’ என்றான்.

பூரிப்புடன் சிரித்தார் காசிப்பிள்ளை. அவரை, தனது பாடசாலை நண்பர்களுக்கு அறிமுகம் செய்தான் மயூரன் பின்; ‘‘எழும்பி வாருங்கோ’’ என்றான்.

காசிப்பிள்ளை எழுந்து அவனின் பின்னே சென்றார். சுந்தர் வைத்தியம் பார்க்கும் அறைக்குச் சென்ற காசிப்பிள்ளை அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

‘‘பத்துப்பாட்டுப் பாடவேணும் என்னென்ன பாட்டுப் பாடப் போறியள்’’ என்று கேட்டான் மயூரன்.

‘‘கற்பகவல்லி, போனால் போகட்டும் போடா... வசந்தமாளிகையிலை இரண்டு நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்.... நீயும் பொம்மை நானும் பொம்மை....’’ யோசித்தார் காசிப்பிள்ளை.

‘‘சரி பாடுங்கோ...’’ மைக்கைக் கொடுத்தான் மயூரன்.

பாடல் ஒலிப்பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மத்தியானம் சபை நடந்து கொண்டிருந்தது. இனத்தவர்களும் சில நண்பர்களும் வந்திருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். காசிப்பிள்ளையின் அருகில் திவாகரனும் அவனுக்கருகில் சுந்தரும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

பொக்சில் புதிய சினிமாப் பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. அது முடிந்ததும் காசிப்பிள்ளை பாடிய; ‘‘இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன்’’ என்ற பாடல் ஒலித்தது.

மிகவும் நன்றாகச் சௌந்தரராஜன் பாடுவது போலப் பாடலை ரசித்து சுவைத்துப் பாடினார் காசிப்பிள்ளை.

‘‘நல்லாய் இருக்கு ஆர்பாடினது’’ திவாகரன் கேட்டான்.

‘‘உவர்தான்’’ சாப்பிடுவதை விட்டு விட்டுக் காசிப்பிள்ளையைச் சுட்டிக் காட்டினான் சுந்தர்.

‘‘நல்லாயிருக்கு’’ என்று பாராட்டினான் திவாகன்.

காசிப்பிள்ளைக்கு உச்சி குளிர்ந்தது. மகிழ்வின் எல்லையில் நின்றார் அவர்.

இரவு எட்டுமணிக்கு மேல் இருக்கும். நவரத்தினத்தின் வீட்டுக் கோலில் நல்ல வெறியில் படுத்திருந்தார் காசிப்பிள்ளை. அவருக்கு என்ன நடைபெறுகிறது என்று அறிய முடியாதளவு வெறி.

‘‘எனக்கினி எந்தப் பொறுப்பும் இல்லை நித்தியா.... நித்தியா...’’ அலட்டினார் காசிப்பிள்ளை.

‘‘பேசாமல் படு’’ அதட்டினார் நவரத்தினம்.

‘‘படுக்கிறதோ.... ‘‘ என்று கஷ்டப்பட்டு எழும்பிய காசிப்பிள்ளை தடுமாறியபடி மீண்டும் விழுந்தார்; ‘‘என்ரை நாப்பது வரிசக்குடும்ப வாழ்க்கையிலை ஒரு நாளெண்டாலும் நான்

மனிசியைப் பிரிஞ்சு இருக்கேல்லை... நான் வீட்டை போகாட்டில் மனிசி சாப்பிட மாட்டுது'' என்றார் காசிப்பிள்ளை தடுமாறியபடி.

"இந்த வெறீலை எங்கைபோகப் போறாய் பேசாமல் படு''

"கொத்தான்.... அதை மட்டும் சொல்லாதை... மனிசி சாப்பிடாது...''

"நான் கூட்டிக் கொண்டு போய் விட்டுட்டு வரட்டே''

"வேண்டாம் வேண்டாம், கொஞ்ச நேரத்தாலை நான் போறன்...''

"இப்ப எட்டரைக்கு கேவியூ.... கேவியூ நேரத்திலை வெளுக்கிட வேண்டா மெண்டு அடிக்கடி றேடியோவிலை சொல்லுறாங்கள்'' .

"நீ படு.... நீ படு....'' என்றார் காசிப்பிள்ளை.

இரவு பத்துமணியாகியும் காசிப்பிள்ளை எழும்பவில்லை. நித்திரையாவதும் பின் எழும்பிப் புலம்புவதுமாக இருந்தார்.

நவரத்தினத்துக்கும் நல்ல வெறி. நித்திரை கண்ணைச் சுழற்றியது. கோலில் இருந்த செற்றியில் சரிந்தார். சிறிது நேரத்தில் குறட்டை விட ஆரம்பித்தார்.

விடிய ஆறுமணிக்கு காசிப்பிள்ளையின் மனைவி செல்லம்மாவும் மகள் நித்தியாவும் பரபரப்புடன் நவரத்தினத்தின் வீட்டுக்கு வந்தனர். படலை திறந்திருந்தது. முன்கோல் கதவும் திறந்திருந்தது.

"மாமா... மாமா....'' கூப்பிட்டபடி உள்ளே சென்றாள் நித்தியா.

கோலுள், நிலத்தில் படுத்திருந்தார் நவரத்தினம்.

"மாமா.... மாமா....'' நவரத்தினத்தைத் தட்டி எழுப்பினாள் நித்தியா.

பலமுறை தட்டிய பின்; "ஆரது'' என்றபடி எழுந்த நவரத்தினம் செல்லம்மாவும் நித்தியாவும் நிற்பதைக் கண்டு திகைத்து விட்டார். "என்ன?'' என்று கேட்டார்.

"அப்பா எங்கை..?''

அப்போது தான் நவரத்தினம் கோலைப் பார்த்தார். கோலுக்குள் காசிப்பிள்ளை இல்லை. "உதிலை தான் இராத்திரிப் படுத்திருந்தவன். வீட்டை வரேல்லை யெண்டால்'' அவரது மனதில் பயம் குடி கொண்டது; "இரவு இவன்வெழுக்கிட்டு போய் ஏதாவது நடந்திட்டுதோ...?''

என்னண்ணை யோசிக்கிறியள் இராமுழுக்க வெடிச்சத்தம் கேட்டது. அது தான் பயமாய் கிடக்கு'' என்றாள் செல்லம்மா.

"ஒண்டுமில்லை இராத்திரி கொஞ்சம் கூடக்குடிச்சிட்டான்... கோலுக்கை படுக்கச் சொன்னனான்.... தான் போகாட்டில் மனிசி சாப்பிடாமல் காவல் இருக்கும் போக வேணுமெண்டவன்... நானும் அயந்திட்டன்''.

செல்லம்மாவுக்குப் பயமாக இருந்தது.

"வாருங்கோ பாப்பம்'' என்று புறப்பட்டார் நவரத்தினம்.

மூவரும் படலையைச் சாத்தி விட்டு ஒழுங்கைக்கு வந்த போது இரத்தின சிங்கம் பரபரப்போடு ஓடி வந்தான்; ‘‘சுடலைப் பனேக்கை காசிப்பிள்ளையண்ணை கிடக்கிறார்.... எப்பிடி அங்கை போனவர்....’’

‘‘வெறீலை வடக்கை திரும்பாமல் மாறி தெற்கை திரும்பீட்டான் போலை கிடக்கு...’’ என்றார் நவரத்தினம். செல்லம்மாவும் நித்தியாவும் தெற்கே போகும் ஒழுங்கையால் திரும்பினர்.

‘‘அண்ணை நான் போய்ப் பார்த்தனான் ஆள் சரி...’’ என்று நவரத்தினத்தின் காதுக்குள் சொன்னான் இரத்தினசிங்கம்.

நவரத்தினத்திற்குத் தலைசுற்றியது. மயக்கம் வருவது போல் இருந்தது; ‘‘இரத்தினசிங்கம் என்னைப் பிடியடாப்பா’’ என்றார். அதற்கு மேல் அவர் பேசவில்லை. இரத்தினசிங்கத்தின் மீது மயங்கிச் சாய்ந்தார்.

*முற்றும்*